
பார்த்த முதல் நாளே
அருணா நந்தினி
பார்த்த முதல் நாளே * அருணா நந்தினி
பார்த்த முதல் நாளே
அருணா நந்தினி

# பார்த்த முதல் நாளே

**அருணா நந்தினி**

அறிவாலயம்
தபால் பெட்டி எண்: 667
புதிய எண்: 32/7, பழைய எண்: 107/7,
கொடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.
போன்: 28353520

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பார்த்த முதல் நாளே |
| ஆசிரியர் | : அருணா நந்தினி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : மே, 2008 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 304 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம்<br>பு.எண்.32/7, ப.எண்: 107/7,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர் ☏ 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ☏ 28480166 |

**விலை: ரூ.100.00**




# பார்த்த
# முதல்
# நாளே

# பார்த்த முதல் நாளே

## 1

வசுதாவின் கண்கள் இமைக்காமல் எதிரே அமர்ந்திருந்த சிவராம் அங்கிளின் மீதே பதிந்திருந்தன... ஒரு தவிப்புடன்... என்ன சொல்லப் போகிறாரோ...

சிவராம் ஏதோ யோசனையுடன் மேஜை மீது இருந்த 'பேப்பர் வெயிட்டை' உருட்டிக் கொண்டிருந்தார்.

வசுதா கொண்டு வந்திருப்பது பெரிய பிரச்சனை ஆயிற்றே.. அதை எப்படித் தீர்த்து வைப்பது.

மின் விசிறியின் வேகச் சுழற்சியினால் மேஜை மீது இருந்த காகிதங்கள் சடசடத்தன... 'பேப்பர் வெயிட்டை' அதன் மேல் வைத்துவிட்டு... மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தார் சிவராம்...

காற்றின் வேகத்தில் தன் அழகிய நெற்றி மீது விழுந்த கேசக் கற்றைகளை ஒதுக்கியவாறே ''என்ன... அங்கிள்.. உங்களால் உதவ முடியுமா... முடியாதா... முடியாது என்

றால் சொல்லி விடுங்கள்... நான் வேறு எங்கேயாவது..." என்று சொல்லி முடிக்கு முன்... அவர் கையமர்த்தி நிறுத்தினார்.

"அம்மாடி... நான் உங்கள் வீட்டுக்கு... ஊகூம்.. உங்க கம்பெனி.. மத்த சொத்துகள் விஷயமாய் எடுத்துச் சொல்கிற 'லீகல் அட்வைஸர்' மட்டுமல்ல.. உன் தந்தைக்கு 'தோஸ்த்'தும் நான்... சின்ன வயசிலேயிருந்து நாங்க ரெண்டு பேரும் இணை பிரியா சிநேகிதர்கள்... எல்லா விஷயத்திலும் என் 'சஜஷனைக்' கேட்டு முடிவு எடுப்பான் அந்த 'ராஸ்கல்'... சாரிம்மா... எனக்கு அவ்வளவு கோபம் வர்றது... அதான்... ஒரு விஷயத்தில் என் பேச்சைக் காதில் போட்டுக்காமல் அவசரப்பட்டு விட்டான்... அதன் பலன் தான் இது... அவனையும் குத்தம் சொல்ல முடியாது... செக்ரட்ரியா வந்த மேனா மினுக்கி.. இவனோட சொத்துக்களையும் வசதிகளையும் பார்த்து விட்டு... மெல்ல மெல்ல அவனை மயக்கித் தன் கைக்குள்ள போட்டுட்டா... அவனைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும்... எதற்கும் அசைந்து கொடுக்காதவன்... இத்தனை ஆண்டுகளில்... அவன் சபலமோ... சஞ்சலமோ அடைந்ததில்லை... மனைவி இருந்த இடத்திற்கு இன்னொருத்தியா... நெவர்னு எங்கிட்ட சொல்லுவான்... எனக்கும் அதைக் கேட்க பெருமையா இருக்கும்... ஆனா... திடீர் என்று 'எனக்கும் என் காரியதரிசி விலாசினிக்கும் கல்யாணம் ஆச்சு.. சிம்பிளாய் பதிவுத் திருமணம் பண்ணிக் கொண்டு விட்டேன் சிவா...' என்று சொன்னான் பார்... அன்னிக்கு என் மண்டையில் ஓங்கி அடிச்சது மாதிரி அதிர்ச்சி... அவனோட அந்தரங்கக் காரியதரிசியை நானும் பார்த்திருந்ததால் வந்த அதிர்ச்சி... அய்யோ... வயசு வந்த ஒரு பெண்ணை வைத்துக்



கொண்டு இப்படி ஒரு காரியத்தை செய்து விட்டானே பாவி என்கிற கவலையை விட... ஒரு தகுதியில்லாத.. தரம் குறைந்தவளை மனைவியாக்கிக் கொண்டானே என்ற வேதனைதான் அதிகம்... குத்து விளக்கு இருந்த இடத்தில் கொள்ளியை கொண்டு வச்சுட்டானே... என்ன ஆகப் போகிறதோன்னு வருத்தப்பட்டேன்... நான் நினைச்ச மாதிரியே ஆகி விட்டது... ஒரு பணப் பிசாசைக் கட்டிக் கொண்டோமே என்ற தவிப்பில் அவனது இதயமே 'ஷட் டவுன்' ஆகிவிட்டது... அதைவிட... ஒரு மோகினிப் பிசாசின் வலையில் விழுந்து மோசம் போயிட்டோமே... மகளை ஏமாத்திட்டோமேங்கற பரிதவிப்பில்தான் இதயம் நின்னு போயிருக்கணும்... அந்தச் சாகசக்காரி தான் நினைச்சதை சாதிச்சுட்டா... சொத்துக்களை தன் பெயருக்கு எழுதி வாங்கிட்டா... இந்த முட்டாளும் ஆரம்ப மயக்கத்தில் உயிலை மாத்தி எழுதி வச்சுட்டான். நான் படிச்சுப் படிச்சுச் சொன்னேன்ம்மா... வசுதா இருக்கா... அவளையும் நினைவில் வைன்னு... மனுஷன்... மந்திரிச்சு விட்டக் கோழி மாதிரி புதுப் பொண்டாட்டி நினைப்பிலேயே இருந்தான். ஒருவேளை அவள் ஏதாவது மாய்மாலம் பண்ணி புத்தி மழுங்கச் செய்திருப்பாளோ என்னவோ, மொத்தத்தில் பெத்த மகளுக்கு பட்டை நாமம்... ஒட்ட வந்தவளுக்கு ராஜபோகம்... ஆனா... கெட்டதிலும் நல்லது ஒண்ணு செஞ்சிருக்கான்ம்மா... இந்த சொத்தை உன் சித்தியால்..."

"அய்யோ... வேண்டாம் அங்கிள்... எனக்கு எந்த சித்தியும் இல்லை... கண்டவர்கள் எல்லாம் எனக்கு சித்தியாக முடியாது. அந்த வார்த்தையைச் சொல்லாதீர்கள் ப்ளீஸ்..."

கண்களில் கண்ணீர் பொங்கச் சொன்னாள் வசுதா... இன்னும் அவளால் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை... ஒன்றா இரண்டா...

அடிமேல் அடி... அதிர்ச்சி மேல் அதிர்ச்சி...

டாடி... தன்னை உயிராய் நேசித்த தந்தை... திடீரென்று கல்யாணம் செய்து கொண்டது முதல் அடி...

அம்மா ஸ்தானத்திற்கு வந்த ஒருத்தி... தன் தாயைப் போல மென்மையாக இல்லாமல்... அந்த இடத்தையே களங்கப்படுத்துவதுபோல... பகட்டாயும் அடாவடித் தனமாயும் இருந்தது அடுத்த அடி...

வந்தவள்... மறைமுகமாகவும்... வெளிப்படையாக வும்... வெறுப்பைக் காட்டி... உனக்கு இந்த வீட்டில் உரிமை ஏதும் இல்லை என்று விஷமாய் கக்கியது பெரிய அடி...

தன்னைப் பெற்று வளர்த்த தந்தை... தான் செய்து விட்ட தவற்றை உணர்ந்து கூனிக் குறுகிப் போய்... திடீரென்று மார்பைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தது அசுர அடி...

அந்த அடியிலிருந்து எழும் முன்... எல்லா சொத்தை யும் வந்த மகராசி வாரிச் சுருட்டிக் கொண்டு விட்டாள் என்பதை அங்கிள் மூலம் தெரிய வந்ததே... அது மரண அடி....

இப்போது அதை விட மோசமாய்... சே...

"உன் மனநிலை புரியுதம்மா வசு... அத்தனை சொத் துக்கும் ஒரே வாரிசு நீ... ராஜகுமாரி மாதிரி உன்னை வளர்த்து விட்டு... கடைசியில் உனக்கு..."

"வேண்டாம் அங்கிள்... எனக்கு எந்தச் சொத்தும் வேண்டாம்... எல்லாம் அவளே அனுபவிக்கட்டும்.



எனக்கு நான் படித்த படிப்பு இருக்கு... தன்னம்பிக்கை இருக்கு... அது போதும்... வாழ்க்கையில் ஜெயிச்சிடு வேன்... இப்பவும் என் அப்பா மேல் எனக்குத் துளியும் கோபம் இல்லை அங்கிள்... இத்தனை வருடமும் தனக் காக வாழாமல்... 'மகள்... மகள்'னு இருந்தாரே... அதற்காக பெருமைப்படுகிறேன்... கடைசியில்தானே தன்னைப் பற்றி யோசித்து... தன் சுகத்திற்காக வாழ்ந்தார்... பாவம்... டாடி... அவர் கல்யாணம் செய்து கொண்டதில் எந்தத் தப்பும் இல்லை... என் ஒரே ஆதங்கம்... ஒரு பண்புள்ள... நற்குணவதியை தேர்ந்தெடுக்கவில்லையே என்பது தான்... நான் படிப்புக்காக ஹாஸ்டலில் சேர்ந்திருக்கக் கூடாது தான்... தனிமையின் கொடுமையைத் தாங்க முடியாமல் தான் இப்படி யாரோ ஒருத்தியைப் பார்த்ததும் மயங்கி.. அவளது சாகசத்தில் புத்தி பேதலித்து விட்டார்... ப்ச்சு.. அதை விட்டுத் தள்ளுங்கள் அங்கிள்... இப்ப வந்திருக்கும் பிரச்சனையே வேறு... பூதாகாரமான பிரச் சனை... அதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை... அதற்கு ஒரே வழி இங்கிருந்து தப்பித்துப் போவது ஒண்ணுதான்னு படுகிறது அங்கிள்... எனக்கு என்று பெரியவங்க யாரும் இல்லை... அதான்... அப்பாவோட நண்பர் என்று உங்களிடம் வந்திருக்கிறேன்..." வசுதாவின் குரல் கம்மியது...

"இதோ பாரும்மா வசு... எதிலும் அவசரப்படக் கூடாது. ஆர அமர யோசித்து முடிவு எடுக்கணும்... ஒத்துக்கறேன்... உன் சித்தி பணத்துக்காக எதுவும் செய்வாள்னு. உன் அப்பா சொத்து முழுக்க கிடைச்சும் திருப்தி இல்லை. உன் அம்மாவோட நகைகள்... அம்மா பேர்ல உங்கப்பா வாங்கியிருக்கும் ஃபார்ம் ஹவுஸ்... அப்புறம் உங்கம்மா வுக்கு வந்திருக்கும் மஞ்சக் காணி சொத்துன்னு தோப்பு...

நிலம் எல்லாம் உனக்குத் தெரிஞ்சு அதையும் எப்படிப் பிடுங்கலாம்னு பார்க்கிறாள்... அதுக்காகத் தான் இந்தப் பிளான்... சட்டப்படி அவ செய்யறது... செய்ய நினைக்கிறது குற்றம்... ஆனால் அதுக்கு பயந்து நீ எம்மா ஊரை விட்டுப் போகனும்... பேசாமல் ஏதாவது ஒரு விடுதியில் இருந்துக்கோ... அங்கே வார்டன்... சக தோழிகள் என்று துணையா இருப்பாங்க... நானும் உன்மீது கண் வைத்துக் கொள்ள முடியும்..."

"நோ அங்கிள்... அக்காவும் தம்பியும் பேசினதைக் கேட்டு நான் ஆடிப்போய் விட்டேன்... எப்படியாவது என்னை வளைத்துப்போட வேண்டும்... அப்படியே மசியா விட்டால்... மயக்கமருந்து கொடுத்து... சே... சொல்லவே அருவருப்பா இருக்கு அங்கிள்... இப்படி... கேடு செய்ய நினைக்கிற கிராதகர்களை எப்படி எங்கப்பா சகித்துக் கொண்டாரோ... ஒரு வேளை... இவர்களுடைய சுயரூபம் அப்பாவிற்குத் தெரியாமல் போனதோ... என்னவோ... அப்பா போன உடனே அங்கிருந்து கிளம்பியிருக்கனும் அங்கிள்... தப்புச் செய்து விட்டேன். இனியும் இருந்தால் எனக்கு அது மெண்டல் டார்ச்சரா இருக்கும்... அவர்கள் இருக்கும் இடத்தை விட்டுத் தூர அவர்கள் வர முடியாத தொலைவுக்குப் போயிடனும்னு துடிக்கிறேன்... அவர்களோட கண்ணில் படவே கூடாதுங்கறது தான் என் ஆசை... அடியாளை வைத்து என்னை அடித்துத் தூக்கிக் கொண்டு போனாலும் ஆச்சர்யமில்லை... அதுதான்... எங்கேயாவது வெளியூரில்.. ஏதாவது வேலை வாங்கிக் கொடுங்க என்று கேட்டேன்... நீங்கள் மனது வைத்தால் நடக்கும் அங்கிள்... உங்களுக்குத் தெரிந்த பெரிய மனிதர்கள் இருப்பார்களே..." என்று கேட்டாள் வசுதா...

"இருக்கிறார்களம்மா... வேலைக்கு சிபாரிசு செய்யலாம் தான்... ஆனால் நித்தியானந்தத்தின் செல்வ மகள்



யாரோ ஒருத்தரிடம் கைகட்டி சேவகம் செய்வதா என்கிற தயக்கம்தான்..."

"நான் இப்போ நித்யானந்தத்தின் செல்வ மகள் இல்லை அங்கிள்... தன் காலில்... சொந்தக் காலில் நிற்க வேண்டிய நிலையில் இருக்கும் ஒரு சாதாரண வசுதா... 'தன் கையே தனக்கு உதவி' என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கும் வசதியில்லாத வசுதா... அம்மாவோட சொத்து இருக்குதான்... அதுக்காக உட்கார்ந்திருக்க முடியாதே... அம்மாவோட சொத்து அசையா சொத்து... அசைந்தால் தான் வயிற்றுப் பாடு தீரும் அங்கிள்... எனக்கு உடனே ஒரு வேலை வேண்டும்... மறைந்து வாழ ஒரு இடம்... ப்ளீஸ்... நான் படித்த படிப்புக்கு பலன்... முடியுமா... முடியாதா."

அழுத்தமாய் கேட்டாள் அவள்.

"இந்தக் காலத்துப் பசங்க... முடிவு பண்ணிட்டா... அவ்வளவுதான்... நடத்தி முடிக்கனும்... எனக்கென்னவோ... எலிக்கு பயந்து வீட்டைக் கொளுத்த நினைக்கிற மாதிரி இருக்கு... சரி... உன் இஷ்டப்படியே உனக்கு வேலை கிடைக்க முயற்சி பண்ணுகிறேன்" என்றவர்... போனின் ரிஸீவரை எடுத்துக் கொண்டு ஏதோ எண்களை அழுத்தினார்... மறுமுனையில் 'ரிங்' சத்தம் கேட்டது... "ஊகூம்... யாரும் எடுக்கிற மாதிரி தெரியல்ல... இரு..." இந்த முறை நண்பர் எடுத்துப் பேசினார்.

என்ன பேசினாரோ... இவர் விஷயத்தைச் சொன்ன பின்பு... வெறும் சரி... உம்... ஓகே என்று ஒற்றை வார்த்தைகளிலே பேசினார்... மத்தியில் வசுதாவைப் பார்த்து கண் சிமிட்டல் வேறு...

வசுதாவுக்கு எதுவும் புரியவில்லை... காரியம் பழமா... காயா தெரியவில்லையே...

போனை வைத்து விட்டுச் சின்னச் சிரிப்புடன் சிவராம் சொன்னார்... "வேலை கிடைத்த மாதிரிதான்..."

"அப்படீன்னா... அங்கிள்..." குழப்பத்துடன் கேட்டாள் அவள்...

"அவருடைய கம்பெனியில் உன் படிப்புக்கு ஏற்ற வேலை இருக்கிறதாம்... ஆனால் அதற்கு ஏற்கனவே இன்டர்வ்யூ ஆகி... 'செலக்ட்'டும் பண்ணியாகி விட்டது... ஆனால் அந்த 'கேன்டிடேட்' இன்னும் ட்யூட்டி ரிப்போர்ட் பண்ணவில்லை... ஒரு வேளை... நீ அனுப்பும் பெண்ணிற்குத் தான் அந்த வேலை காத்திருக்கிறதோ என்னவோ... அனுப்பி வை என்றான்."

அதைக் கேட்டதும் வசுதாவின் முகத்தில் பிரகாசம்... அப்பா... தன் எதிர்காலத்திற்கு ஒரு வழி கிடைத்து விட்டது... அது போதும்... பாதுகாப்பான இடமாக இருந்து விட்டால்... கவலை தீர்ந்தது... மனம் என்னென்னவோ கணக்குப் போட்டது...

மனப்பறவை சிறகடிக்கத் தொடங்கியது.

அதை உணர்ந்தவராய் தொடர்ந்தார் அந்தப் பெரியவர்.

"இரும்மா... சில நிபந்தனைகளை சொல்லியிருக்கிறார். அதைச் சொல்லி விடுகிறேன்... முதல்ல... நல்ல பண்புள்ள சொல்லுகிற வேலையை சுணங்காமல் செய்து முடிக்கிற ஆளாக இருக்க வேண்டுமாம்... அந்த விஷயத்தில் நீ ஓகே... மிடில் கிளாஸ் பெண்ணா என்று கேட்டார். ஆமாம் என்றேன். ஏன்னா... வயிற்றுப் பாடுக்காக சிரத்தையா வேலைப் பார்ப்பார்களாம்... அப்புறம் அலட்டல்... ஆடம்பரம் எதுவும் இல்லாமல் 'சிம்பிளாக' இருக்க வேண்டுமாம்... உன்னால் இதற்கு ஒப்புக் கொள்ள முடியும்... நீதான் அப்படிப்பட்டப் பெண்ணில்லையே...



ஆனா... நீ வசதியா வாழ்ந்த பொண்ணு எளிமையா இருக்க முடியுமா... யோசித்து முடிவு எடும்மா..."

"இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது அங்கிள்... ஒரே ஒரு கதவு திறந்திருக்கிறது.. அந்த வழியை விட்டா வேறு இல்லை என்றால்... அது வழியாகத்தானேப் போக வேண்டும்... போக முடிவு செய்து விட்டேன் அங்கிள்... அவருக்கு சொல்லி விடுங்கள்..."

பெருமூச்சு விட்டார் சிவராம்...

'கடவுளே... இந்தச் சின்னப் பெண்ணிற்கு இப்படி ஒரு நிலைமையா... மூன்று மாதங்களுக்கு முன் பெரிய செல்வந்தரின் ஒரே செல்ல மகளாய்... சீமாட்டியாக இருந்தவள்... இன்று யாரும் இல்லாத அனாதையாக நிற்கிறாள்... இப்படி ஒரு நிலைமை தனக்கு வரும் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டாள்... பாவம்... குருவி மீது பிரம்மாஸ்தரம் விட்ட மாதிரி... இந்தச் சின்ன வயதில் எத்தனை சோதனைகள்! எல்லாம் விதியின் விளையாட்டு... இன்னும் எப்படியெல்லாம் ஆட இருக்கிறதோ...'

புது இடம்... புது மனிதர்கள்... பாவம்... ஒண்டியாக எப்படிச் சமாளிக்கப் போகிறாளோ...

நித்தியா... என் நண்பா... வசுமதிக்கு ஒரு வழி பண்ணாமல் போய்விட்டாயே... இது நியாயமா... குழந்தையை தனியாளாய் தவிக்கச் செய்துவிட்டு எப்படி நிம்மதியாய் போய் சேர்ந்தே... என்னதான் நான் ஆதரவு தந்தாலும்... பெத்த தந்தையாகி விட முடியுமா... நான்... "அங்கிள்... அங்கிள்..." வசுதா அழைப்பது கேட்டு அவரது கவனம் திரும்பியது.

"என்னம்மா கேட்டே..."

"நான் போக வேண்டிய ஊர் என்ன... கம்பெனி எது... உங்க நண்பர் பெயர் எல்லா விவரமும் வேண்டுமே..."

''நண்பனின் பெயர் சிங்காரவேலு... தமிழர்தான்... கம்பெனி பெயர்... ஆமா... அதைக் கேட்கவில்லை... அதைக் கேட்டுச் சொல்கிறேன்... அப்புறம் நீ போக வேண்டிய ஊர் மங்களூர்...''

''மங்களூரா...'' கண்கள் விரியக் கேட்டாள்...

''நீதானே... தூரமாய் போகணும்னே... அதான்... அங்கே ஏற்பாடு பண்ணினேன்... என்னமா... தயக்கமா...'' என்று கேட்டார் அவர்.

இல்லை என்று தலையசைத்து விட்டு... ''அப்போ புறப்படுகிறேன் அங்கிள்... கம்பெனி டீடெயில்லை மறக்காமல் போன் பண்ணிச் சொல்லுங்கள்... என் 'செல்' நம்பர் தெரியும் தானே...'' என்று எழுந்தாள். ''வசுதா.. பீ கேர் ஃபுல்... என் நண்பரை பொறுத்த வரை நீ நடுத்தர வர்க்கம்... புரிஞ்சதா... மறந்தும் நீ பணக்காரின்னு காட்டிடாதே... அப்புறம் அவனை ஏமாற்றி விட்டேன் என்று அவனுக்குக் கோபம் வந்து விடும்... தவிர... கொஞ்ச நாள் நீ 'செல்'லை எடுத்து வைக்கிறது நல்லதுன்னு தோணுகிறது... ஜாக்கிரதையா இரும்மா... தனியா... கண்காணாத இடத்திற்கு போகிறே... உஷார்...'' கரிசனத்துடன் சொன்னார் சிவராம்.

''என்ன அங்கிள்... இப்பல்லாம் பெண்கள் தைரியமா விண்வெளிக்கே போகிறார்கள்... இங்கே இருக்கும் மங்களூர் போகிறதுக்கு என்ன பயம்... எல்லாம் சமாளித்துக் கொள்வேன் அங்கிள்... நான் போகிறது 'ஸீக்ரெட்'டாக இருக்கட்டும் அங்கிள்...''

''பயப்படாதேம்மா... அவசரம்னா எனக்கு 'கால்' போடு. நானும் அப்பப்போ பேசறேன்.. ஆல் தி பெஸ்ட்...'' என்றவர்... ''ஆமாம் எப்படி போகப் போறே... ப்ளஸா..



டிரெயினா... என் காரியதரிசியை விட்டு ரிஸர்வேஷன் பண்ணிக் கொடுக்கிறேன்...'' என்று சொன்னார்.

''வேண்டாம் அங்கிள்... என் கார் இருக்கே... அதில் போய்க் கொள்கிறேன்...''

''போச்சுடா... நீ பணக்காரி இல்லை... சாதாரண மிடில் க்ளாஸ் வசுதா... மறந்து விட்டாயா...''

''ஆமாம் இல்லே... என் காரை இங்கேயே விட்டு விடுகிறேன். அங்கிள்... என் 'டாடி' என் பிறந்த நாளுக்கு வாங்கித் தந்தது... அதை விட்டு இருந்ததே இல்லை... முதன் முதலா பிரிகிறேன்... ப்ச்சு... ரயிலில் போகிறேன்... ரிஸர்வேஷன் செய்து விடுங்கள் அங்கிள்... வரட்டுமா...'' நண்பனின் மகளை பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந்தார்...

தலைவிதி எப்படியெல்லாம் மாறி விடுகிறது. இப்படி ஆகும் என்று கனவிலும் நினைத்திருக்குமா இந்தக் குழந்தை...

வாழ்க்கை என்பது மர்ம நாவல் மாதிரிதான்.

திடீர் மாற்றங்கள்! திடீர் திருப்பங்கள்!

இன்னும் என்ன மாற்றங்களோ...

பெருமூச்சு விட்டார் அவர்...

உண்மைதான்... வசுதாவின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமையப்போகிறது இந்தப் பயணம்...

அதுவும் சுவாரஸ்யமான திருப்புமுனை!

## 2

வாழ்க்கைதான் திடீரென்று என்னமாய் தடம் புரண்டு விடுகிறது...!

ஒரு வருடத்துக்குள் எத்தனை மாற்றம்!

பெருமூச்சு விட்டாள் வசுதா.

ரயில் 'தடக்... தடக்' என்ற சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது... அவளது இதயத்தின் சத்தத்தை எதிரொலிக்கின்றதோ என்னவோ...

பெரியதாய்... சிவராம் அங்கிளிடம் பயம் ஏதும் இல்லை என்று ஜம்பமாய் சொன்னாலும்... ஏதோ திக்குத் திசை தெரியாத இடத்திற்குப் போகிறோமே... எதிர் காலம் எப்படி இருக்கப் போகிறதோ என்ற படபடப்பு நெஞ்சுக்குள் வந்தது உண்மை...

அத்தனையிலும் ஒரு நிம்மதி... சித்தி என்ற பெயரில் வந்திருக்கும் ஆக்டோபஸிடம் இருந்து தப்பி வந்தாயிற்று. அவளது திட்டத்தை... சதியை கெட்டிக்காரத்தனமாய் முறியடித்தாகி விட்டது... இனி பயம் இல்லை என்ற நிம்மதி...

ஜன்னல் வழியே நகர்ந்து செல்லும் இயற்கையை பார்த்தவளுக்கு சலிப்புத் தட்டியது... இதே வேறு சமயமாக இருந்திருந்தால் அணு அணுவாய் ரசித்து மகிழ்ந்திருப்பாள்... இப்போது ரசிக்கும் மனநிலையில் இல்லை... சிந்தை முழுக்க வண்டுகளாய் குடையும் யோசனைகள்... மனம் நிறைய கொக்கிகளாய் எழுந்து நிற்கும் கேள்விகள், உள்ளத்தை அழுத்திப் பிசையும் வேதனை...

நிறைய எதிர்பார்ப்புகள்... அவை நடக்குமா என்ற நப்பாசையும்... நடக்காதோ... என்ற பயமும் கலவையாய் வர... அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை. இறந்த காலத்தின் வேதனையை விட எதிர்காலத்தின் பீதி தான் அதிகம்... எப்படி இருக்கப் போகிறதோ என்ற கலக்கம்... இதுநாள் வரை தந்தையின் நிழலில் பாதுகாப்பாக இருந்து விட்டு... இப்போது... தன்னந்தனியாய்...



ஒண்டிப் பறவையாய்... அனாதையாய்... 'அய்யோ... டாடி...' நெஞ்சுக்குள் அழுகை முட்டியது.

'சட்'டென்று கண்களை இறுக மூடிக் கொண்டாள் வசுதா.

தான் அழுவதை யாரும் பார்த்துவிடக் கூடாது... ஆனால் சக பயணிகள் அவரவர் வேலையில் மும்முரமாய் இருந்தனர்.

இரண்டாம் வகுப்பு... 'பெர்த்'தில் ரிஸர்வேஷன் செய்து கொடுத்திருந்தார்... சிவராம்... இப்போது நடுத்தர வர்க்கம் வசுதாவாயிற்றே... அவளை அழைத்துப் போக யாராவது வரலாம்... அவர்கள் புருவங்களை உயர்த்தக் கூடாது என்று தான்..

இதுவும் புது அனுபவமாக இருந்தது. இதுவரை... காரில் அல்லது விமானத்தில் தான் பயணம் செய்திருக்கிறாள்... இதில் வசதியில்லைதான்... இருந்தும்... போகத் தான் வேண்டும்.. பழகிக் கொள்ளத்தான் வேண்டும்...

'ஏர்பேக்'கில் இருந்து ஆங்கில நவீனத்தை எடுத்து பிரித்தாள்... அதிலும் நாயகிக்கு ஏதோ பிரச்சனை... நாலு பக்கங்களுக்கு மேல் படிக்க ஆர்வம் இல்லை... கண்களை மூடிக் கொண்டு சாய்ந்து கொண்டாள்...

'என்னை மன்னித்து விடுடா...' அப்பாவின் குரல் காதில் ஒலிப்பது போலப் பிரமை...

'டாடி... டாடி... ஏன் என்னைத் தவிக்க விட்டுட்டுப் போனீங்க.. என்னை விட்டுப் போக உங்களுக்கு எப்படி மனம் வந்தது... நீங்கள் இல்லாத இந்த வாழ்க்கை எனக்குப் பயமாக இருக்கிறது டாடி...' மனம் புலம்பியது.

'இல்லேடா.. நான் உன்னோடுதான் இருக்கிறேன்.. எப்போதும் உனக்குத் துணையாய்... பயப்படாதே..'

என்பது போல காற்றின் ஊடே கிசுகிசுப்பாய்... ஒரு வேளை... மனப்பிராந்தியோ... தந்தையையே நினைப்பதால் அவர் குரல் கேட்பது போல ஒரு மாயத் தோற்றம்...

ஆனாலும்... தந்தையின் மறைவு ஒரு பேரிழப்புதான். அவர் அப்பாவாக மட்டும் இல்லையே... அப்பாவாய்... அம்மாவாய்... ஆசானாய்... தோழனாய்... சகலமும் அவர் தான்.

மகள் என்றால் உயிர்...

அப்படி இருந்தவர் திடீர் என்று ஒருத்தியை மனைவி என்று அழைத்துக் கொண்டு வந்தது... பேரதிர்ச்சிதான். பத்து மாதங்களுக்கு முன் இப்படி நடக்கும் என்று யாராவது சொல்லியிருந்தால்... அவள் நம்பியும் இருக்க மாட்டாள்...

எல்லாமே தலைகீழ்.

விலாசினி இளைய தாரமாய் காலடி வைத்ததிலிருந்து சந்தோஷம் அனைத்தும் மாயமாகிவிட்டது...

அந்த வீட்டில் அவளது ராஜ்ஜியம் நடந்தது... அவள் வைத்ததே சட்டம்... தலை விரித்தாடியது அவளது கொட்டம்!

அவளது ஆர்ப்பாட்டமும்... அலட்டலும் சொல்லாமல் சொன்னது அப்பனுக்கு பவிசு வந்த கதையை...

வேலைக்காரர்கள் முணுமுணுத்தார்கள்... ஊழியர்கள் முகம் சுளித்தார்கள்...

எல்லாவற்றையும் விட முள்ளாய் இதயத்தைக் கிழித்த விஷயம்... வீட்டில் நடுநாயகமாய் மாட்டியிருந்த போட்டோவைக் கழட்டி மூலையில் போடச் சொன்னது தான்... வசுதாவின் தாயோட படம்...



தினமும் அந்தப் புன்னகை தவழும் முகத்தைப் பார்த்துவிட்டுச் செல்லும் நித்யானந்தமும் வாயை மூடிக் கொண்டிருந்ததுதான் கொடுமை... வாயிருந்தும் ஊமையாகிப் போனார்.

அந்த இடத்தில் அமர்த்தலாய் அமர்ந்து... அழகாய் 'போஸ்' கொடுத்து... கர்வத்துடன் சிரிக்கும் விலாசினியின் படம் வந்தது...

தாயின் படத்தை பத்திரமாய் எடுத்து வைத்த வசுதாவிற்கு கண் கலங்கியது...

தந்தை ஏன் எதுவும் கேட்காமல் இருக்கிறார்... தட்டிக் கேட்காமல் மௌனமாய் இருப்பது ஏன்... புரியாமல் விழித்தாள் அவள்... அது மட்டுமா..

நான் இந்த வீட்டு மகாராணி என்பது போல் அவள் அனைவரையும் நடத்தியபோதும் மௌனம்... ஏன்.. இந்த வீட்டில் உனக்கு உரிமை ஏதுமில்லை என்று சொன்ன போதும் மௌனம்... ஏன்... ஏன் அப்படித் தந்தையிடம் திடீர் மாற்றம் எப்படி வந்தது...

இதெல்லாம் விடை தெரியாத கேள்விகள்.

எம்.பி.ஏ. படிக்க அவள் ஹாஸ்டலுக்குச் சென்றதுதான் தப்பானதோ... வெளியூருக்குச் செல்லாமல் இருந்திருந்தால் அப்பாவுக்குத் துணையாக இருந்திருப்போம்... அப்பா அந்த விலாசினி வலையில் வீழ்ந்திருக்க மாட்டார்...

தனிமையின் கொடுமை... ஆதரவாக... பேச்சு துணைக்கும் யாரில்லை... அதான் இப்படித் தவறு செய்து விட்டார்... அவள் மனம் இரங்கியது.

ஆனால் என்ன செய்ய முடியும்... மகள் மன்னித்து விட்டாலும்... குற்றம் செய்த மனம் குறுகியே கிடந்ததே...

மகளை நிமிர்ந்து பார்க்கவும் துணிவில்லை...

வசம்மா... வசக்குட்டி... செல்லம் என்று நொடிக்கு நூறு தடவை அழைக்கும் பாசமுள்ள தந்தை காணாமல் போனார்.

மகளைக் கண்டதும் தலை குனிந்து... உடல் குறுகி... ஒதுங்கிப் போகும் அவரைக் காண்கையில் இதயம் வலித்தது...

அப்படியே வலியப் போய் அவள் பேசினாலும்... பதில் வார்த்தை கிடையாது... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாய் தெரிந்தது... அவர் எதையோ சொல்லத் துடிப்பது போலத் தோன்றும்... அந்தக் கண்களில் உயிர் இல்லாமல்... வெறும் வேதனை மட்டும் சுமந்திருப்பது போலத் தெரியும்...

கம்பீரமாய் இருந்த தந்தைக்கு பதிலாய் களை இழந்து... தொய்ந்து போன தந்தை தான் கண்ணில் பட்டார்... திடீரென்று நெஞ்சை அழுத்திக் கொண்டு அவர் விழுந்த போது... அருகே மகள் இல்லை... பணம் கட்ட யுனிவர்சிடிக்குப் போயிருந்தாள். சிவராம் மாமா அவளது 'செல்'லுக்குப் போன் பண்ணி விஷயத்தைச் சொன்னபோது... அவள் அடைந்த அதிர்ச்சி... மயங்கி விழாத குறையாய் அப்படியே அமர்ந்து விட்டாள்...

தந்தை இனி இல்லை என்ற விஷயத்தை அவளால் ஜீரணிக்கவும் முடியவில்லை...

அதற்குப் பின் நடந்ததெல்லாமே ஏதோ கனவில் நடப்பது போல... மனதில் எதுவும் தெளிவாகப் படாமல் நடந்தேறியது...

அப்பா போனது மட்டும் தான் ஆணியடித்தாற் போல பதிந்து போனது...



அப்பா எழுதிய உயில்... அதில் இருந்த விஷயங்கள்... சித்தியின் உரிமைக்குரல்... அதற்கு தாளம் போட்ட தம்பி... இது நாள் வரை தலைக்காட்டாத அந்தத் தம்பியின் அலட்டல்... இருவரின் ஆர்ப்பாட்டங்கள் எதுவுமே அவளை அசைக்கவில்லை.

அவர்களின் போக்கைக் கண்டு... இனியும் அந்த வீட்டில் இருக்கக் கூடாது... ஏதாவது மகளிர் விடுதியில் சேர்ந்து விடலாம்... ஏதாவது வேலையில் சேர்ந்து தன் வழி தனி வழி என்று இருந்து விடலாம் என்று தோன்றியது. உண்மைதான்...

ஆனால் முந்தைய நாளில் விலாசினி தன் தம்பி என்னும் ரௌடியிடம் பேசுவதை எதேச்சையாய் கேட்டு விட்ட வசுதாவிற்கு உடம்பெல்லாம் எரிந்தது...

அட கிராதகர்களா... படுபாவிகளா... கிடைத்த மட்டில் திருப்தியில்லாமல்... இன்னும் என்ன கிடைக்கும்... எப்படிப் பறித்துக் கொள்ளலாம் என்று துராசையில் அலையும் இவர்களை... மனம் கொதித்தது...

'டேய்... கோதண்டம்... எப்படியோ அந்தக் கிழவனை வளைத்து சொத்தை வாங்கியாச்சு... என் பேச்சுக்கு தலையாட்டி பொண்ணுக்கு எதுவும் எழுதி வைக்கவில்லை. ஆனா... கல்லு கல்லான நகையெல்லாம் கைவிட்டுப் போச்சேடா... அந்தக் கழுதைக்கு வந்துடுச்சே... எல்லாம் வைரமும்... மாணிக்கமும் பதிச்சது... எனக்கு விட் மனசில்லை... கணக்குப் போட்டா பல லட்சம் தேறும். அதுக்கு ஏதாவது பண்ணனுமே... பேரில் இருக்கிற மாதிரி வெறும் தண்டமா இல்லாம... ஏதாவது வழி இருந்தா சொல்லு...'' விலாசினி சொல்வது கேட்டது.

அந்தக் கோதண்டம் ஹி... ஹி என்று சிரித்துவிட்டு ''இருக்கு... விலாசினி... நல்ல வழி இருக்கு... ஆனா

அதை எப்படி நடத்துவது... பேசாம அவளை எனக்குக் கட்டி வச்சிட்டா... அவ சொத்து என் சொத்தாயிடும்... அப்புறம் கொடுன்னா அவ கொடுக்கணும்... அப்பனையே மடக்கிட்டோம்.. இது பிள்ளைப் பூச்சி... விடு... நம் வழிக்குக் கொண்டு வந்துட்டா அப்புறம் எல்லாமே நமக்குத் தான்..." என்றான்.

"அடிசக்கை... உனக்கு அப்படி ஒரு ஆசையா... டேய்... மூதேவி.. அவ எங்கே... நீயெங்கே... மழைக்குக் கூட பள்ளிப் பக்கம் நீ ஒதுங்கினது இல்லே... அவ படிச்சவ... உன்னைக் கட்டிப்பாளா... போடா... கிறுக்கா.. வேற 'பிளான்' இருந்தா சொல்லு..." கேலியுடன் சொன்னாள் தமக்கை.

"ஆமாம்.. மயிலே மயிலே இறகு போடுன்னு கெஞ்சி கேட்கப் போறோம்னு நினைப்பாக்கும்... நம்ம வேலையெல்லாம் அடாவடிதான்... தோ பாரு... அவ குடிக்கிற பால்ல தூக்க மாத்திரையைக் கலந்து கொடுத்திடு... அவளை 'ரேப்' பண்ணிட்டா... அப்புறம் மசிஞ்சு தானே ஆகணும். அப்புறம் என்ன... நகையெல்லாம் உனக்கு... அந்தப் பொண்ணோட மத்ததெல்லாம் எனக்கு..."

"அடி ஆத்தாடி... சரியான கிரிமினல் தான்... இது நடந்தா நீயும் நானும் கம்பி எண்ணணும்... தெரியுமா... அவ போலீஸுக்குப் போக மாட்டான்னு என்ன கேரண்டி..."

"போனாதானே... ஹவுஸ்.. அது என்ன சொல்லு வாங்க.. ஆங்.. வீட்டுக் கைதியா வச்சுடலாம்... முதல்ல... பழைய வேலைக்காரர்களைத் தூக்கிடு விலாசினி... நமக்குத் தோதான வேலைக்காரர்களை வச்சுடலாம். அப்புறம்.. பாரு.. அவளது மூச்சுக் காற்று கூட வெளியே போகாது.. சும்மா சொல்லக்கூடாது.. விலாசினி... உன் ஆள்...



அதான் செத்த உன் புருஷன் அம்சமா பொண்ணைப் பெத்து வச்சிருக்கிறான்... தங்கப் பதுமைதான். அவளைப் பார்த்ததும் எப்படியாவது அடையணும்னு ஆசை வந்துடுச்சு... நானும் அவளுக்கு முறைமாமன் ஆச்சே... ஹி... ஹி...!"

மேலும் கேட்கப் பிடிக்காமல் அங்கிருந்து ஓடினாள் வசுதா... அவளுக்கு வயிற்றைப் புரட்டியது. இப்படியும் நடக்கும் என்று நினைத்தும் பார்க்கவில்லையே... அய்யோ... இந்தப் பாவிகள் எதற்கும் துணிந்தவர்களாக இருக்கிறார்களே...

முதலில் சிவராம் அங்கிளிடம் விஷயத்தைச் சொல்லி எங்கேயாவது கிளம்பிடணும்... அவர் தனக்குத் தெரிந்த இடத்தில் சிபாரிசு பண்ணி வேலை வாங்கித் தர மாட்டாரா...

செய்தித் தாளைப் படித்து... விளம்பரம் பார்த்து எழுதிப் போட்டு... வரும் வரைக் காத்திருக்க முடியாது. என் படிப்புக்கேத்த வேலை வேண்டும் என்று எதிர்பார்க்கவும் கூடாது... எந்த வேலை கிடைத்தாலும் ஒப்புக் கொள்ள வேண்டும்... இருக்க இடம்... வயித்துக்கு உணவு இது இருந்தால் போதும் சமாளித்து விடலாம்...

அம்மா பேரில் இருக்கும் ஃபார்ம் ஹவுஸ்... நிலம்... தோப்பு எல்லாம் இப்போதைக்கு தோதுபடாது... முதலில் இவர்கள் கண்ணில் படாமல் இருந்துவிட வேண்டும்... அப்புறம் மற்றதைப் பற்றி நிதானமாய் யோசித்து முடிவு எடுக்கலாம்...

இரவில் தூக்கம் வராமல்... யோசித்து... மூளையை குடாக்கியதுதான் மிச்சம்.

மறுநாள் எப்போது விடியும் என்று காத்திருந்தவள் அதிகாலையிலேயே அங்கிளைத் தேடிப் போனாள்.

எப்படியோ அவர்களுக்குச் சந்தேகம் வராமல் சில உடைகளை மட்டும் 'பேக்' பண்ணி வைத்துக் கொண்டு... விலாசினி ஷாப்பிங் போன நேரம் பார்த்து வெளியேறினாள். அந்த தண்ட தம்பியும் ஊர்மேயப் போயிருந்தான் போலும்...

ரயிலில் உட்கார்ந்து ரயில் புறப்படும் வரை மூச்சை இழுத்துப் பிடித்து வைத்தவள்... ரயில் புறப்பட்டதும் நிம்மதியாக மூச்சை விட்டாள்...

சிலந்தி வலையிலிருந்து தப்பித்ததும் பூச்சி அடையுமே விடுதலை உணர்வு...

கூண்டிலிருந்து வெளியேப் பறக்கத் தொடங்கிய பறவையின் ஆனந்தம்... இப்படித்தான் இருக்குமோ...

நானும் என் சிறகுகளை விரிக்கப் போகிறேன்... ஆனால் போகும் இடம் எப்படியோ...

ஏதோ ஒரு உணர்வு... அது கலக்கமா... அல்லது படபடப்பா தெரியவில்லை மனதைப் பிராண்டியது...

கண்களை மூடிக்கொண்டு தூங்க முயற்சித்தாள் வசுதா. ரயில் 'என் கடமை... பணி செய்வதே' என்பது போல 'தடக் தடக்' என்ற ஓசையுடன் விரைந்து கொண்டு இருந்தது...

## 3

நினைப்பதெல்லாம் நடந்து விடுகிறதா என்ன... தெய்வத்தின் கணக்கே வேறாயிற்றே...

ரயில் நிலையத்தில் தன்னை அழைத்துப் போக யாரும் வராத போதே வசுதாவிற்கு ஏமாற்றம்... சிவராம் அங்கிள் சொன்னபடி... ஒருவரும் வரவில்லையே... ஒருவேளை வேறு ரயிலில்



வருவேன் என்ற நினைப்பில் இருந்து விட்டார்களா... குழம்பிய நிலையில் தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு நடந்தாள்...

முற்றிலும் புதிய சூழ்நிலை... எல்லாம் புதுமுகங்கள்... புரியாத புதுமொழி... கொங்கணியோ... துளுவோ... தன் ஆங்கிலப் புலமையின் உதவியால் படித்தவரிடம் சென்று சிவராம் அங்கிள் கொடுத்திருந்த கம்பெனியின் விலாசத்தைக் காட்டினாள்...

அவர் சொன்னதை வைத்து... ஆட்டோ ஒன்றை அமர்த்திக் கொண்டு நேரே அந்த நிறுவனத்திற்குச் சென்றாள்... ரயிலிலேயே முகம் கழுவி... கூந்தலை சீவி.. 'கிளிப்'பில் அடக்கி... லேசாய் பவுடரைத் தடவி தயாராகி விட்டாள்...

புடவையும் எளிமையான 'சின்தெடிக்' சேலை என்பதால் கசங்கல் இல்லை...

அவளுக்கு இந்தப் புடவையெல்லாம் பழக்கம் இல்லாததால் எப்போதடா இதை மாற்றுவோம் என்ற தவிப்பு... சுரிதாரோ... இல்லை ஜீன்ஸ்... டீ ஷர்ட்டோ தோதாக இருக்கும்... ம்ம்... என்ன செய்வது... நாய் வேஷம் என்றால் குரைத்தாக வேண்டும்.

வேதாளம் என்றால் முருங்கை மரத்தில் தாவ வேண்டும்.

வேறு வழியில்லையே...

நேரே... அந்தக் கம்பெனிக்குச் சென்றவளுக்கு இன்னொரு அதிர்ச்சி... அந்த வேலைக்கு ஆள் வந்தாயிற்று... ஏற்கனவே 'செலக்ட்' ஆகியிருந்த 'கேண்டிடேட்... வந்து வேலையை ஒப்புக் கொண்டு விட்டாராம்...' என்ற செய்தியை அறிந்ததும் 'திக்' என்றது அவளுக்கு...

தெய்வமே... இந்த வேலையை நம்பித்தானே இங்கு வந்தேன்... அதுவும் இல்லையென்றால்... எங்கே போவது என்ன செய்வது...

திரும்பவும் ஊருக்கேவா... அய்யோ...

உள்ளம் பதறியது...

சிவராம் அங்கிளின் நண்பர் சிங்காரவேலுவை சந்தித்துப் பேசிப் பார்க்கலாமே... ஒரு வேளை... வேறு ஏதாவது வேலைக்கு ஏற்பாடு செய்து தரலாம் இல்லையா...

நம்பிக்கைத் துளிர் விட... அவரைச் சந்திக்க வேண்டும் என்று சொன்னாள்...

அங்கிருந்த ஊழியர் உதட்டைப் பிதுக்கினார்... அதாவது அவர் தொழில் சம்பந்தமாய் வெளிநாடு போயிருக்கிறாராம்... ஒரு ஐந்து நாட்கள் ஆகலாம்...

சே... எங்கே போனாலும் துர் அதிர்ஷ்டம் துரத்தியடிக்கிறதே...

ஐந்து நாட்கள் காத்திருக்க முடியுமா... காத்திருந்தாலும் பயன் இருக்குமா... சரி... எங்கே இருப்பது... கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலல்லவா இருக்கிறது...

முன் பின் தெரியாத ஊரில் ஓட்டலில் தங்குவது என்பது... வேண்டவே வேண்டாம்...

ஏதோ சிங்காரவேலு உதவுவார் என்ற நம்பிக்கையில் வந்தாயிற்று... அது இல்லை என்று ஆனதும் திரும்பிப் போவதுதான் புத்திசாலித்தனம்...

மறுபடியும் அங்கிளிடம் கெஞ்சி... மங்களூர் இல்லையென்றால் பெங்களூரில் பாருங்கள் என்று கேட்க வேண்டும்... சலிப்புடன் நினைத்தாள் அவள்...

தன் வாழ்க்கை இப்படி நாடோடி வாழ்க்கையாகி விட்டதே என்று வருத்தத்துடன் நடந்தாள்.



மழை கொட்டோ கொட்டு என்று கொட்டியது.

வானமே பொத்துக் கொண்டதோ என்னும்படி பெரும் மழை...

சாரலில் உடையெல்லாம் நனைந்து விட்டது வசுதாவிற்கு... போதாததற்கு சில்லென்று காற்று வேறு...

உடம்பு நடுங்கியது...

அந்த பஸ் நிறுத்தத்தில் அவளுடன் சேர்த்து நான்கு பேர்... மற்ற மூவரும் ஆண்கள்...

ஒருத்தன் கல்லூரி மாணவன்... இன்னொருவர் முதியவர். மற்றொருவன் ஸ்கூட்டர் பயணி.... மழைக்காக ஒதுங்கியவர். பஸ் நிலையத்திற்குச் செல்லும் பஸ் இன்னும் வரவில்லை.

ஆகாசத்தைப் பார்த்தாள் வசுதா...

மினி அம்புகளாய் பாய்ந்து வரும் மழை... இப்போதைக்கு நிற்காது போலத் தோன்றியது.

பெருமூச்சு விட்டாள் அவள்...

அப்போதுதான் எதிர்பாராதது நடந்தது... 'சர்' என்று வந்து நின்றது ஒரு பெரிய கார்... அதிலிருந்து இறங்கி வந்தான் ஒரு இளைஞன்... வயது இருபத்தைந்து இருக்கலாம்...

''ஹலோ... இங்கே இருக்கிறீர்களா... வாங்கள் போகலாம்.'' என்று அழைத்தான்... ஆங்கிலத்தில்...

யாரை அழைக்கிறான்... என்று பார்த்திருக்கும்போதே அவளது உடைமைகளை எடுத்துக் கொண்டான்.

வசுதாவிற்கு திகைப்பு... யார் இவன்... திடீர் என்று வந்து இப்படி எடுத்துச் செல்கிறானே... ஒரு வேளை இந்த ஊரில் இந்த மாதிரியும் கொள்ளை நடக்கிறதோ...

மற்றவர்களுக்கு சந்தேகம் வரக்கூடாது என்று உரிமையுடன் அழைத்து ஏமாற்றும் புது யுத்தியோ...

"ஹலோ... நீங்கள் யார்... என் சாமான்களை ஏன்..." என்று அவள் கேட்க...

"உஷ்... இந்த மழையில் பேசிக் கொண்டிருக்க நேரம் இல்லை... வண்டியில் போகும்போது பேசலாம் வாங்கள்..."

"நோ.. நீங்க யாரென்று தெரியாமல்... எப்படி..."

"ஓ காட்... மேடம்... முதல்ல காரில் உட்காருங்க... உங்களால நானும் முழுவதும் நனைந்து விட்டேன். உங்களை எங்கேயெல்லாம் தேடினேன் தெரியுமா. பஸ் நிலையம்... ரயில் நிலையம் எல்லாம் சுத்தி விட்டு வர்றப்போ பெட்டி... படுக்கையுடன் உங்களைப் பார்க்கிறேன்... இனியும் பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை... எனக்கு அவசர வேலை இருக்கிறது... சீக்கிரம் ஏறுங்கள்..."

அவனது ஆங்கில உச்சரிப்பு அவளை ஈர்த்தது.

நல்ல படிப்பு படித்திருப்பான்... உயர்ந்த பள்ளியில்...

கல்லூரியில் இருக்கலாம்... பணக்காரன் ஆயிற்றே... காரைப் பார்த்தால் தெரிகிறது...

சரி... இருக்கட்டும்... இவன் யார்... என்று யோசித்த போது தான் பளிச்சிட்டது...

ஓ! சிங்காரவேலு சார் தான் இவனை அனுப்பி இருக்க வேண்டும்... அதான் சிவராம் அங்கிள் சொன்னாரே... என் நண்பர் சிங்காரவேலு கவனித்துக் கொள்வார் என்று... பாவம்... வெளிநாட்டிற்குப் போகுமுன்... யாரையோ ஏற்பாடு செய்து என்னை அழைத்து வரச் செய்திருக்கிறார்... வேலைதான் இல்லை... இப்படி உதவியாவது



செய்யலாம் என்ற நல்லெண்ணம்... ஒருவேளை மகனாக இருக்கலாமோ... பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளையாகத் தெரிகிறது...

நல்லவேளை... ஊருக்குத் திரும்பிப் போகும் அவசியமில்லை... மனம் சமனப்பட்டது.

மகிழ்ச்சியுடன் காருக்குள் அமர்ந்து கொண்டாள்.

"சாரி... என்னென்னவோ பேசிவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளங்கள்... மிஸ்டர்..." என்றதும்...

"என் பெயர் நிரஞ்சன்... மன்னிப்பு எதற்கு... புது ஊர் என்ற பயம்... அதான் கொஞ்சம் படபடத்து விட்டீர்கள்... பரவாயில்லை... விடுங்கள்..." புன்னகையுடன் சொன்னான் அவன்.

"உங்களை அலைய விட்டு விட்டேன்... மிஸ்டர் சிங்காரவேலு வெளிநாடு போயிருக்கிறார் என்று சொன்னார்கள். அடுத்து என்ன செய்வது என்ற தடுமாற்றத்தில் இருந்து விட்டேன்..."

"சிங்காரவேலுவா... அவர் யார்..." என்று அவன் கேட்டதும் அவள் திகைத்தாள்.

"கொஞ்சம் நிறுத்துங்கள்..." என்று அவள் உரக்கச் சொன்னதும்... 'கிறீச்' என்று 'பிரேக்' போட்டான் அந்த இளைஞன்.

"நீங்க வேறு யாரையோ தேடி வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது... என்னை இறக்கி விடுங்கள்" என்றாள் அவள்...

"ஹலோ... எனக்கு இது பற்றி எதுவும் தெரியாது... விவரங்கள் எல்லாம் என் அண்ணனுக்குத் தான் தெரியும்... அவர் சொல்லித் தான் நான் வந்தது... அவருக்கு

ஒரு வேளை நீங்கள் சொல்கிற சிங்கார வேலுவைத் தெரிந்திருக்கலாம்... நீங்க கோவையிலிருந்துதானே வந்தது..." என்று கேட்டான் அந்த நிரஞ்சன்.

"ஆமாம்..."

"வேலைக்காகத்தானே நீங்க வந்தது..."

"யெஸ்... வேலை தேடித்தான்..."

"அப்போ நீங்க சரியான ஆள்தான்... எந்தத் தவறும் நடக்கவில்லை... வாங்கள்..."

காரை மறுபடியும் உசுப்பினான்.

குழம்பிய நிலையில் அமர்ந்திருந்தாள் வசுதா.

அரைமணி நேரம் கழிந்தது...

கார் அழகான வெள்ளை நிற கட்டிடத்தின் போர்டிகோவில் வந்து நின்றது.

அழகான வீடு... இல்லை... பங்களா என்று சொல்லலாம்... ஆனால் பல வருடங்களுக்கு முன் கட்டியிருக்க வேண்டும்... பங்களாவின் அமைப்பு அப்படி இருந்தது.

சூட்கேஸையும்... ஏர்பேக்கையும் அவன் எடுத்துக் கொள்ள... அவள் அவன் பின்னே நடந்தாள்.

கடவுளே... ஏதேதோ நடக்கிறதே... இது நல்லதற்கா என்று தெரியவில்லையே... மனம் 'படபட'வென்று அடித்துக் கொண்டது.

ஹால் பெரியதாக... விசாலமாய் இருந்தது... தரையெல்லாம் வழவழப்பாய் இருந்தது... மெரூன் நிற மார்பிள் பளபளப்பு...

சோபா செட்... அலங்காரச் சர விளக்கு... தேக்கு ஊஞ்சல். சுவரில் தெரிந்த ஓவியங்கள்... உள்ளிருந்து மேலே ஏறும் மாடிப் படிகள்... கைப்பிடியின் வேலைப்பாடு... எல்லாவற்றிலும் பணக்காரத்தனம் தெரிந்தது.



"உட்காருங்கள் மிஸ்..." என்று நிறுத்தினான் நிரஞ்சன்.

"வசுதா..."

"ஓகே... மிஸ் வசுதா... களைப்புடன் இருப்பீர்கள்... நான் போய் உங்களுக்கு குடிக்க சூடாய் காபி கொண்டு வருகிறேன்... அப்புறம் நிதானமாய் இது விஷயமாய் என் அண்ணா பேசுவார்... ஓகே... இதோ வருகிறேன்" என்று சென்றான் அவன்.

இத்தனை பெரிய வீட்டில் பணியாட்கள் யாரும் இல்லையா என்ன... யோசனையுடன் கண்களைச் சுற்றிலும் அலைய விட்டாள் வசுதா...

பசி வயிற்றைக் கிள்ளியது. இருந்த டென்ஷனில் 'கப்சிப்' என்று அடங்கிக் கிடந்ததோ... இப்போது மெல்ல தலைத் தூக்குகிறது போலும்...

'கமகம'வென்று காபியின் மணம் நாசியில் நுழைந்ததும்... வயிறு கொண்டு வா என்று அலறியது.

"இந்தாருங்கள்... வசுதா... பில்டர் காபி இல்லை... இன்ஸ்டன்ட் காபி.. அவசரத்துக்கு இதுதான்... சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்... ஏன்னா இது நான் கலந்தது..." என்றான் நிரஞ்சன்...

"ஓ! நன்றாக இருக்கிறது... ஆமாம்... வேலை செய்ய... சாரி... சமையலுக்கு யாருமில்லையா என்ன... நீங்க செய்திருக்கீங்க..." காபியை குடித்தவாறு கேட்டாள் வசுதா.

"அட... பிரச்சனையே அதுதானே... அதுக்குத்தானே உங்களை அழைத்தது... இந்த வீட்டில் நான்... என் அண்ணன்.. அப்புறம் தம்பி எல்லாமே ஆண் பிள்ளைகள் தான்... வேலைக்காரி ஒருத்தி தான் பெண் இனம்... அதனால் தான் வீட்டைக் கவனித்துக் கொள்ள ஒருத்தர்... ஊரும்... ஒருத்தி கண்டிப்பாய் அவசியம் என்று உங்களை

வர் சொல்லியிருக்கிறான் என் அண்ணான்னு நினைக்கிறேன்... என்னா... இப்போதைக்கு எங்களுக்கு ஒரு ஹவுஸ் கீப்பர் அவசியமாக இருக்கிறது... வசுதா... அதான் நீங்க வந்து விட்டீர்களே..."

வசுதாவிற்கு புரை ஏறியது... சுதாரித்துக் கொண்டு "வாட்! ஹவுஸ் கீப்பரா..." என்று உரக்கக் கேட்டாள்... எல்லாமே குழப்பமாகத் தெரிகிறதே...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகப் புரிகிறது... இவர்கள் எதிர்பார்த்த நபர் நான் அல்ல... இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது...

அதைச் சொல்லிவிட்டுப் பேசாமல் புறப்பட்டு விட வேண்டியதுதான்... 'ஹவுஸ் கீப்பிங்' விஷயத்தில் நான் பூஜ்யம் என்று இவர்களுக்குத் தெரியாதே...

காபி டம்ளரை வைத்து விட்டு... "வந்து... நீங்கள் நினைக்கிற மாதிரி..." என்று சொல்லிக் கொண்டிருந்த போது யாரோ தொண்டையைக் கனைப்பது தெரிந்து திரும்பிப் பார்த்தாள் வசுதா...

வாட்ட சாட்டமாய்... அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் ஒருவன் நின்றிருந்தான். நிரஞ்சனின் சாயலில்...

அவனுடைய அண்ணாவோ...

அவளையே உற்றுப் பார்த்தவாறு நின்றிருந்தான்... ஊசியாய் துளைக்கும் பார்வை... அவளை எடை போடுவது போல...

"அண்ணா... இவங்க மிஸ் வசுதா... இங்கே வீட்டை கவனித்துக் கொள்ள வந்திருக்கிறார்கள்..." என்ற நிரஞ்சனை அடக்கிவிட்டு அவன் புறம் திரும்பினாள் வசுதா...



வசுதாவின் மனசுக்குள் சிரிப்பு வந்தது... சமையல்காரி... வேலைக்காரி என்று சொல்லலாமே... அந்த வேலை தானே...

'ஓ! ஒட்டு மொத்த வேலைக்கும் சேர்த்து அழகாய் 'ஹவுஸ் கீப்பிங்' என்ற சொல்லாக்கும்...'

மனதின் நினைவோட்டத்தை முகம் காட்டிக் கொடுத்ததோ... அவளது இதழ்களின் ஓரத்தில் உதித்த சுழிப்போ... எதுவோ... அவன் முகத்தில் கடுமைத் தோன்றியது.

"உன்னைப் பார்த்தால்... இந்த வேலைக்கு வந்த மாதிரி தெரியவில்லையே... பார்த்தால் அதிகம் படித்தவள் போலத் தெரிகிறது. உண்மையில் இந்த வேலைக்குத் தான் வந்ததா... ஏனென்றால் நான் எதிர்பார்த்த நபர் வேறு... முப்பதுக்கு மேல்... ஏழ்மைத் தோற்றத்துடன்... அதிகப் படிப்பு இல்லாதவராய் இருப்பார் என்று எதிர் பார்த்தேன்... பெயர் கூட... ஏதோ..." நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்...

"ஆங்... ஃபோனில் பேசியதில் பெயருக்கு முக்கியத் துவம் கொடுக்கவில்லை... ஓகே... லீவ் இட்... எனக்கு இந்த வேலைக்கு திறமையான... சுத்தமான ஆள் தேவை... சுத்தம் என்று சொன்னது கை சுத்தத்தையும் சேர்த்துதான்... உன் ஊர் கோயமுத்தூர் தானே... கேரளா சமையல்... தமிழ் நாடு சமையல்... கொங்கு நாட்டு சமையல் எல்லாம் தெரியும் தானே... அதற்கு தான் அங்கிருந்து வரவழைத்தது..." அவனது தமிழ் உச்சரிப்பு சுத்தமாய் இருந்தது. இந்த ஊரில் இப்படித் தெளிவாய் தமிழ் பேசுகிறானே!

"இன்றையிலிருந்து நீ வேலைக்கு சேர்ந்த மாதிரி தான்!" என்றான் அவன்.

மைகாட்! என் சம்மதத்தை இன்னும் சொல்லவே இல்லை... அதற்குள் முடிவே செய்து விட்டானா என்ன...

'சாரி... எனக்கு இந்த வேலையெல்லாம் வராது என்று சொல்ல வாயெடுத்தவளை...' கையசைவில் அமர்த்தி விட்டுத் தொடர்ந்தான்.

''சம்பளம் பற்றி யோசிக்க வேண்டாம்... தாராளமாய் கொடுக்கப்படும்... இட வசதி... சாப்பாடு எல்லாம் சேர்த்து தான் எங்களுக்கு துணையாய் இருந்த அத்தைக்கு காலில் ஃப்ராக்சர் ஆகி விட்டது. எங்கள் தூரத்து உறவு. அவர் இரண்டு மாதம் படுக்கையில் இருக்க வேண்டும் என்று டாக்டர் சொல்லி விட்டதால்... இந்த 'டெம்ரரி' வேலைக்கு ஒரு ஆள் வேண்டும் என்று சொல்லியிருந்தேன்.. ஆனால் ஒரு வயதுப் பெண்ணை அனுப்பி வைப்பார் என்று எதிர்பார்க்கவில்லை...'' கடைசி வார்த்தை முணு முணுப்பாய் வந்தது.

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

வயதுப் பொண்ணா... அலோ... எனக்கு ஒரு வய தில்லை... இருபத்திரண்டு வயதாக்கும் என்று சொன் னால்... அது போகட்டும்... இந்த வேலைக்கு... ஏன் கூடாது... யோசிக்கத் தொடங்கினாள் வசுதா. தங்க இடம்... சாப்பாட்டு வசதி... கூடவே சம்பளம்... ஏன் ஒப்புக் கொள்ளக் கூடாது... மனம் அலை பாய்ந்தது... ஆனால் அந்த வேலைகள்... பழக்கமில்லாத பணிகள்... தன்னால் முடியுமா...

சமையலில் அ... ஆ தெரியாது. அரிசிக்கவடியும் தெரியாத நான் எப்படி அருமையாய் சமைக்க முடியும்... இன்றும்... வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது... வாஷிங் மெஷின்... அது இருக்கிறதோ இல்லையோ... உதவிக்கு



வேலைக்காரி இருந்தால் நல்லது... இருக்கிறாள் என்றானே நிரஞ்சன்.... எப்படியோ சமாளிக்கலாம் தான்... ஆனால் இந்த சமையல் வேலைதான் உதைக்கிறது... நிமிர்ந்து பார்த் தவள் திகைத்தாள்... அவனது பார்வை அவளை கூர்மை யாய் பார்த்துக் கொண்டிருந்தது... சந்தேகமோ...

''என்ன... செகண்ட் தாட்ஸா... இன்னும் என்ன வேண்டும் என்று வெளிப்படையாய் சொல்... பரவா யில்லை... ஏன் என்றால் எங்களால் எங்கள் பணியில் முழுமையாய் ஈடுபட முடியவில்லை... வீட்டுப் பிரச்னைகளை சமாளிக்க ஒரு பெண்ணால் தான் முடியும் என்பதை இந்த ஒரு வாரத்தில் நன்றாகத் தெரிந்து விட்டது... ஒரு இரண்டு மூன்று மாதம்தான்... சம்மதம் தானே மிஸ்... வசுதா... மிஸ்தானே...''

அவனது கண்கள் கழுத்தை ஆராய்ந்தன.

'மிஸ்ஸாகத்தான் இருக்க வேண்டும்.. ஒரு பெண் ணால் தன் குடும்பத்தை விட்டு... கணவனை விட்டு வர முடியாதே...' ''நிரஞ்சன்... இவங்களுக்கு அறையைக் காட்டு... அப்புறம் ஒரு விஷயம்... இன்றைக்கு பயண அலுப்பு உனக்கும் இருக்கும்... நாளையிலிருந்து வேலையைத் தொடங்கலாம்... இன்றைக்கு ஓட்டலில் இருந்து சாப்பாட்டைக் கொண்டு வந்தால் ஆயிற்று... ஓகே...'' அவன் மிடுக்காய் நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வசுதா.

இருந்த கொஞ்ச நஞ்ச தயக்கமும் போய் விட்டது.

எல்லாம் நன்மைக்கே... நடப்பது நல்லதாகவே இருக்கும் என்பது சரிதான்...

கடவுள்தான் வழியமைத்துக் கொடுத்திருக்கிறாரோ... அதற்குதான் இங்கு அனுப்பியிருக்கிறாரோ என்னவோ...

எனக்குத் தேவை ஒரு புகலிடம்... இவர்களுக்கு வேண்டியது வீட்டை கவனித்துக் கொள்ள ஒரு பெண்... இரண்டும் ஒத்துப் போன பின்பு என்ன தயக்கம்... என்ன சமையல்தான் கஷ்டம்.. அதையும் சமாளித்து விடலாம் தான்.

இப்போதுதான் தினுசு தினுசாய் சமையல் புத்தகங்கள் வருகிறதே... அதைப் படித்து விட்டுச் சமையலில் ஜமாய்த்து விடலாம்தான்...

மீன் குஞ்சுவிற்கு நீந்தக் கத்துக் கொடுக்க வேண்டுமா என்ன...

கொஞ்சம் கொஞ்சமாய் துணிவு வளர்ந்து... எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையும் வந்து விட்டது அவளுக்கு.

இரவில்... ஓட்டலில் இருந்து வாங்கி வந்த உணவு பதார்த்தங்களை அனைவருக்கும் பரிமாறியவள்... பாலைக் காய்ச்சி எல்லோருக்கும் கொடுத்து விட்டு... பாத்திரங்களைக் கழுவி வைத்தபோது முதுகெல்லாம் 'வின்' என்ற வலி...

படுத்தால் போதும் என்று இருந்தது.

படுத்தவுடன் தூக்கமும் வந்து விட்டது... அலுப்பு தான்! தந்தை இறந்த பின்பு... நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்த நிம்மதியான உறக்கம்...

பாதுகாப்பான ஒரு இடத்திற்கு வந்து விட்டோம் என்றதாலோ... இருக்கலாம்...

## 4

வேலைக்காரி சொர்ணம் மெல்ல அறைக்குள் எட்டிப் பார்த்தாள்... சின்ன அம்மணியின் உறக்கம் இன்றும் கலையவில்லையோ...



அசைவது தெரிகிறதே... எழுப்பி கொண்டு வந்த காபியை கொடுக்கலாமா... இல்லை... சத்தமில்லாமல் திரும்பி விடலாமா...

''சொர்ணம்...'' என்று சின்னம்மாளின் அழைப்புக் கேட்டதும் அருகே 'ட்ரே'யுடன் சென்றாள்.

''சொர்ணம்... காபி கொடேன் ப்ளீஸ்...''

''அலோ... நீ எழுந்து காபி கலந்து கொடுக்கவேண்டும். அதுக்காக எல்லோரும் காத்திருக்கிறோம்... பெட் காபி கேட்குதாக்கும்...'' ஆண்குரல் ஒன்று அதட்டலாய் ஒலிக்க... 'விலுக்' என்று எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டாள்...

நான் இருப்பது எங்கே...

நான் கண்டது கனவா... சொர்ணம் வந்தது என் கனவிலா... இந்தப் புது இடம்... அப்போதுதான் அவளுக்கு உறைத்தது.

''மகாராணி மாதிரி இங்கே படுத்துக் கொண்டிருந்தால் யார் டிபன் எல்லாம் செய்வதாம்... கெட் அப்...'' தனக்கு சம்பளம் கொடுக்கப் போகும் முதலாளியின் குரல் உலுக்கியதும்... படுக்கையிலிருந்து எழுந்து ஓடினாள்...

விரைவில் குளித்துவிட்டு வந்தவள் அவசரமாய் உடை உடுத்திக் கொண்டு... தலையை வாரியெடுத்து 'கிளிப்' போட்டு... ஒரு பிந்தியை ஒட்டிக் கொண்டு சமையலறைக்குள் விரைந்தாள்.

விசாலமான... வசதியான சமையலறைதான்... எந்தக் குறையும் சொல்ல முடியாது. ஃபிரிஜ்ஜில் இருந்த பாக்கெட் பாலை பாத்திரத்தில் ஊற்றி... அதைக் காய்ச்சி.. அலமாரியில் இருந்த 'உதயா' காபிப் பொடியைக் கலந்து...

அதை டம்ளர்களில் ஊற்றிக் கொண்டு வந்து அண்ணன் தம்பிக்குக் கொடுத்தாள்.

குடித்த இருவரின் முகமும் கோணியது.

ஏதும் சொல்லாமல் அப்படியே டம்ளர்களை சாப்பாட்டு மேஜையில் வைத்தார்கள்.

ஏன்... சரியில்லையா என்று குழப்பத்துடன் தன் காபியை குடித்துப் பார்த்தாள்...

கசந்து வழிந்தது... சர்க்கரை போடவில்லை...

ஓடிப் போய் சர்க்கரையைக் கொண்டு வந்து அதில் சேர்த்து ஸ்பூனால் கலந்தாள்... பரபரப்பில் வியர்வை வழிந்தது.

கடவுளே... ஆரம்பமே சரியில்லையே...

அவன் ஒரு மாதிரியாய் அவளைப் பார்த்தவாறு டம்ளரை வாங்கிக் குடித்தான்...

ஏதும் பேசாமல் அவன் எழுந்து சென்றதும் நிரஞ்சனிடம் கேட்டாள்...

"நிரஞ்சன்... உன் அண்ணாவிற்கு கோபம் அதிகமோ..." அவன் சிரித்தான்.

"ஆதித்யாவிற்கு எல்லாமே 'பெர்ஃபெக்டா' இருக்க வேண்டும்... இல்லா விட்டால் கோபம் வரும்..."

"ஓ' அவன் பெயர் ஆதித்யாவா..."

ஆதித்யா... சூரியன் என்று அர்த்தம்... அதான் அப்பப்போ சுட்டு எரிக்கிற மாதிரி பார்க்கிறான்...

"உன் தம்பியைக் காணோமே நிரஞ்சன். அவன் எங்கே" என்று வினவினாள்.

"இங்கே சாப்பாடு சரியில்லைன்னு... தன் நெருங்கிய நண்பன் வீட்டுக்குப் போயிருக்கிறான்... இப்போ வர்ற



நேரம் தான்... காலேஜுக்குப் போக வேண்டும்... ஆமாம். அதற்குள் டிபன் ரெடியாகி விடுமா... வசுதா..."

'திக்'கென்றது அவளுக்கு.. அடடா... டிபன் செய்ய வேண்டும் இல்லையா... கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டு... பரபரவென்று செயல்பட்டாள்.

அவசரத்துக்கு என்ன டிபன் செய்யலாம்... உப்புமா... ஊகூம்... ஏற்கனவே காபி விஷயத்தில் குறை வந்து விட்டது... உப்புமா செய்யப் போய் அது களியாகவோ... கஞ்சியாகவோ மாறி விட்டால்... வேண்டாம் இந்த விஷப் பரீட்சை... வேறு ஏதாவது... சொர்ணம் என்ன செய்து தருவாள்... இட்லி... தோசை... சப்பாத்தி... அட சப்பாத்தி பண்ணிவிடலாமே... மாமாவைப் பிசைய வேண்டும்... உருண்டை பண்ணிக் கட்டையால் உருட்டி... வட்டமாய் செய்தால் ஆச்சு... தொட்டுக்க... உருளைக் கிழங்கு மசாலா பண்ணலாமே... உற்சாகத்துடன் கோதுமை மாவைத் தேடி எடுத்தாள்.

அடுத்த கேள்வி எழுந்தது. எத்தனை சப்பாத்தி இடுவது. அண்ணன் தம்பி மூன்று பேரும் தலா மூன்று சாப்பிடுவார்களா... நன்றாக இருந்தால் சப்பு கொட்டி நாலு கூட சாப்பிடலாம்... மொத்தம் பதினைந்து...

அளவு தெரியாததால்... ஒரு சப்பாத்திக்கு இத்தனை மாவு என்ற அளவில் பதினைந்து முறை எடுத்து பாத்திரத்தில் போட்டு நீர் விட்டுப் பிசைந்தாள்... கெட்டியாகப் பிசைந்து... பதினைந்து உருண்டைகளை சரியாக உருட்டி வைத்து விட்டுக் கழுவிக் கொண்டாள்.

உருளைக்கிழங்குகளை ஒரு பாத்திரத்தில் போட்டு தண்ணீர் விட்டுக் கழுவியபின்... குக்கரில் வேக வைத்தாள்... சொர்ணம் செய்து கொடுத்த உருளைக் கிழங்கு

மசாலாவை நினைவுக்குக் கொண்டு வந்தாள்... வெங்காய வாசனையும்... பூண்டு மணமும் கமகம என்று வந்ததே...

யெஸ்... அதையும் சேர்க்க வேண்டும்... உத்தேசமாய் அனைத்தையும் சேர்த்து ஒரு வழியாய் மசாலாவும் சப்பாத்தியும் ரெடி...

சந்தோஷத்துடன் சாப்பாட்டு மேஜையில் டிபனை தயாராய் வைத்து விட்டு... அடுக்கி வைத்திருந்த பீங்கான் தட்டுகளை எடுத்து வந்தாள்.

சப்பாத்தியின் நெய் மணமும்... கிழங்கு மசாலாவின் 'கம்'மென்ற வாசனையும் நாவை ஊறச் செய்தன.

அவளுக்கே பெருமையாக இருந்தது... பரவாயில்லையே... எனக்கும் சமைக்க வருகிறதே... இதென்ன பிரம்ம வித்தையாக்கும்... எளிதாக கற்றுக் கொள்ளலாம் தான்... இனியென்ன... இது கைவந்த கலைதான்... வரட்டும்... மிஸ்டர் ஆதித்யா... தி கிரேட்... அவன் வாயால் பாராட்டு வாங்கி விடணும்... காலையில் காபி குடித்து விட்டு முகம் சுளித்தானே... அந்த முகத்தில் சந்தோஷம் தெரியணும்... நல்ல சிற்றுண்டி கிடைத்த சந்தோஷம்...

"ஹலோ... நீங்கதான் புது ஹவுஸ் கீப்பரா... அப்பாடி கவலை விட்டது... நீங்க நல்லா சமைப்பீங்கள் தானே..." ஒரு உற்சாகக் குரல் அவளைத் திரும்பிப் பார்க்க வைத்தது...

"நீ ரோஹன்... ஆம் ஐ கரெக்ட்...." புன்னகையுடன் கேட்டாள் வசுதா.

"யெஸ்... அதற்குள் என்னைப் பற்றி சொல்லியாச்சா... நிரஞ்சனாகத்தான் இருக்கும்... எனக்குப் பயங்கரப் பசி... என்ன இருக்கு சாப்பிட... கொடுங்களேன் ப்ளீஸ்..." என்று அவன் கெஞ்ச...



அங்கு வந்த ஆதித்யா "என்னடா... மூக்கில் வேர்த்து விட்டதா... வீட்டில் டிபன் ரெடி என்று... வா.... உட்கார்ந்து சாப்பிடு..." என்று சொல்லியவாறு மேஜை முன் அமர்ந்தான். அவனைத் தொடர்ந்து நிரஞ்சனும் அமர...

தான் கஷ்டப்பட்டு செய்த சப்பாத்தியை பெருமிதத்துடன் எடுத்து மூன்று தட்டிலும் வைத்தாள்... கிழங்கு மசாலாவையும் பக்கத்தில் பரிமாறினாள்...

"நாங்கப் போட்டுக் கொள்கிறோம் மிஸ்... வசுதா... நீ போய் பால் காய்ச்சி எங்களுக்குக் கொண்டு வந்து கொடு... இப்பவே 'லேட்... ம்... க்விக்..." என்று ஆதித்யா சொல்லவும்... வசுதா அங்கிருந்து நகர்ந்தாள்...

பாலை சூடு பண்ணி... மறக்காமல் சர்க்கரை சேர்த்துக் கொண்டு வந்து வைத்தவளின் கண்களில் திகைப்பு... சப்பாத்தி அத்தனையும் காலி... மசாலாவும் தான்... ரோஹன் தன் தட்டில் இருந்த கடைசி விள்ளலை எடுத்து வாயில் திணித்துக் கொண்டிருந்தான்.

அய்யோ... அதற்குள்ளாகவா...

அவர்கள் இன்னும் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு பாலை அவர்கள் முன் வைத்தாள்...

"சப்பாத்தியை முதலில் கொண்டு வந்து வை... அப்புறம் பால் சாப்பிடுகிறோம்... இனிமேல் செய்தவற்றை கொஞ்சமாய் கொண்டு வர வேண்டாம்... எல்லாவற்றையும் மேஜைமேல் வைத்து விடு... வேண்டியதை நாங்கள் போட்டுக் கொள்கிறோம்..."

கொஞ்சமா... இருக்கிற சப்பாத்திகளையெல்லாம் கபளீகரம் செய்துவிட்டு... இன்னும் வேண்டுமாமே... உள்ளுக்குள் மிரண்டாள்... ஒவ்வொருத்தரும் என்ன பகாசுரனா...

இப்போது என்ன செய்வது... கையைப் பிசைந்து கொண்டாள் அவள்...

அவள் விழிப்பது கண்ட ஆதித்யா "என்ன... என்ன பிரச்சனை... மாவு இல்லையா..." என்று எரிச்சலுடன் கேட்டதும்...

"இருக்கிறது... ஆனால் நீங்கள் இத்தனை சாப்பிடுவீர்கள் என்று தெரியாது... எண்ணிப் பதினைந்து சப்பாத்தி செய்தேன்... எனக்கும் வைக்காமல்..." என்றாள் தயங்கியவாறு...

'சட்...' என்று எதையோ முணுமுணுத்தவாறு எழுந்து சென்று ஃபிரிஜ்ஜில் இருந்து சீஸையும்... ஷெல்பில் இருந்த பிரெட்டையும் எடுத்து வந்து அமர்ந்தான் மூவரும் அதை உண்டு விட்டு... வைத்திருந்த பாலையும் அருந்தி விட்டுப் புறப்பட்டனர்.

அவர்கள் சென்றதும் அப்படியே தொய்ந்து போய் இருக்கையில் அமர்ந்தாள் வசுதா...

அவளுக்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது.

இவர்களுக்கு சாப்பாடு செய்தே கை தேய்ந்து விடும் போல. டிபனே இப்படி... மதிய உணவை அண்டா விலும், குண்டாவிலும் பண்ண வேண்டுமோ என்னவோ... கை ஒடிந்து விடுமே... ஒருவேளை... சமையல் செய்து வந்த பெண்மணிக்கு கையில் 'பிராக்சர்' ஆகியிருக் கிறதோ என்னவோ... இவர்களுக்கு கிண்டிப் போட்டே அப்படி ஆகியிருக்க வேண்டும்...

மறந்துபோய் காலில் என்றார்கள் போலும்...

'என்னை மறந்தேன்' என்று வயிற்றுப் பசி ராகம் பட... ஏதாவது கிடைக்குமா என்று தேடினாள். நல்ல வேளை... ஒரே ஒரு ஆப்பிள் கண்ணில் பட... அதை எடுத்து சாப்பிடத் தொடங்கினாள்.



அவர்கள் சென்ற அரைமணி நேரத்தில் டெலிபோன் ஒலித்தது.

ஆதித்யாதான்..

மதிய சாப்பாட்டிற்கு யாரும் வராததால்... அவளுக்கு மட்டும் செய்து கொள்ளும்படி சொன்னான்!

யாரும் வரவில்லையா... 'ஹை' என்று கத்தினாள்..

அடுத்து இரவு ஒன்று இருக்கிறதே... அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே...

சரி... வெளியே போய் ஏதாவது சமையல் புத்தகம் கிடைத்தால் வாங்கி வரலாம்... 'லைட்'டாக வெளியே ஓட்டலில் சாப்பிட்டால் ஆயிற்று...

உடனே சுறுசுறுப்புடன் செயல்பட்டாள்...

"என்ன... 'டின்னர்' ரெடியா... எல்லோருக்கும் நல்ல பசி... சீக்கிரம் கொண்டு வந்து வை... வசுதா..."

'மிஸ்' மிஸ்ஸாகியதை வசுதா கவனித்தாள்... அதைப் பொருட்படுத்தவும் இல்லை.

மத்தியானம் சமையல் செய்வது எப்படி... வட இந்திய... தென் இந்திய சமையல் 'ரெஸிப்பீஸ்..' இன்ஸ்டன்ட் பதார்த்தங்கள் செய்யும் விதம் போன்ற புத்தகங்களை வாரிக் கொண்டு வந்தவளுக்கு... அன்றைக்கு என்ன செய்வது என்ற குழப்பத்தில் எல்லாப் புத்தகங்களையும் புரட்டிப் பார்த்தாள்...

அவர்களது பசிக்கு கனமானதாய் இருக்க வேண்டும்... ரவா இட்லி... கட்லட் எல்லாம்... ஊரும் யானைப் பசிக்கு சோளப் பொரிதான்...

'புலவ்' செய்தால்... காய்கறிகளை அள்ளிப் போட்டு மசாலா அரைத்து சேர்த்து... ஈஸியாகத்தான் இருக்கிறது... செய்து விடலாமே...

அந்த 'ரெஸ்பீயை மறுபடியும் படித்து மனதில் தங்க வைத்துக் கொண்டவள்... மளமளவென்று வாங்கி வந்திருந்த காய்கறிகளை நறுக்க ஆரம்பித்தாள்...

மறுபடியும் சந்தேகம்... எந்த அளவில் நறுக்குவது... ஓட்டலில் நாம் சாப்பிட்டிருக்கோமே... காஷ்மீரி புலவ்... வெஜ் புலவ் என்று... அதில் காரட்... பீன்ஸ் எல்லாம் எந்த 'சைஸில்' இருந்தது... மூளையைக் கசக்கினாள். பின் தோராயமாய் காய்கறிகளை நறுக்கினாள்.

அடுத்து மசாலா... மிக்ஸியில் அரைத்தாயிற்று. குக்கரில் எண்ணெய் விட்டு சோம்பு போட்டு வெங்காயம் சேர்த்து வதக்கியவளுக்கு கொஞ்சம் சந்தேகம் வர... புத்தகத்தைத் திருப்பிப் பார்த்தாள். அரிசியை எப்போது போடுவது...

ஆக... ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்தவளுக்கு குக்கரைத் திறந்து பார்த்ததும் ஒரே குஷி...

மசாலா வாசனை தூக்கலாய் இருக்க... புலவ் அவளைப் பார்த்து வெற்றியுடன் கண் சிமிட்டியது... வெரிகுட்...

உன்னாலும் முடியும் என்று சொல்ல நான் இருக்கிறேன் என்பது போல...

டைனிங் டேபிளில் புலவ்வையும்... தயிர் பச்சடியும் வைத்தவளுக்குப் பெருமிதம்!

சித்திரமும் கைப்பழக்கம் தான்... செய்ய செய்ய சுவை வந்திடும்...

பசியில் அனைவரும் அள்ளித் தின்பதைப் பார்த்தவளுக்கு பாவமாய் இருந்தது...

அதுவும் நிரஞ்சனும் ரோகனும் குனிந்த தலை நிமிரவில்லை.



அத்தனை பசியோ...

ஆதித்யா எதுவும் சொல்லாமல் உண்டு விட்டு...

அருகில் இருந்த 'ஜக்' நீரை மளமளவென்று குடித்து விட்டு எழுந்தான்...

தம்பிகள் இருவரும் உண்டு முடித்ததும் நிமிர்ந்து அவளைப் பார்த்துச் சிரித்தனர்... வயிறு நிறைந்த சந்தோஷம் போலும்... பசியில்... பாவம்... கண்ணீர் கூட வந்து விட்டது அவர்களுக்கு... ஒரு வேளை இத்தனை நாள் இந்த மாதிரி அருமையான சாப்பாடு கிடைக்காமல் போனதே என்ற நினைப்பில் கண் கலங்கியதோ என்னவோ... இருக்கலாம்...

தினமும் இந்த மாதிரி விதம் விதமாய் சமைத்துப் போட வேண்டும்... பாவம்... இத்தனை நாள் நாக்கு செத்து இருந்திருக்கிறார்கள்...

வீட்டில் ஒரு பெண் இல்லாவிட்டால் கஷ்டம்தான்... ஒரு தட்டில் மீதி இருந்த 'புலவ்'வை போட்டுக் கொண்டு அதை முகர்ந்து பார்த்தவள் 'வாவ்... யம்மி...' என்று முணுமுணுத்தவாறு ஒரு கவளத்தை வாயில் போட்டுக் கொண்டாள்...

'சுர்' என்று காரம் தலைக்கேறியது... நெருப்பில் பட்டது போல முகம் எல்லாம் தகித்தது... கண்களில் அருவியாய் நீர் கொட்டியது... 'ஆ... ஆ' என்று நாயைப் போல நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு சமயலறைக்குள் எழுந்து ஓடியவள் ஒரு ஸ்பூன் சர்க்கரையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்... நாக்கு பட்ட அவஸ்தைக்கு கண்களும் மூக்கும் அழுததுதான் விசித்திரம்...

அப்பாடா... ஒருவாறு எரிச்சல் அடங்கியதும் தான் மூளை வேலை செய்தது.

மூவரும் எதுவும் சொல்லாமல் போனார்களே... ஆதித்யா மாமாவென்று 'ஜக்' நீர் குடித்தது இதனாலா...

நிரஞ்சனும் ரோகனும் கண் கலங்கியது. இந்த விஷயத் திற்காகவா...

ஏதேதோ நினைத்துப் பெருமையடைந்தேனே... மறு படியும் அவர்கள் முகத்தை எப்படிப் பார்ப்பது... வேறு யாராவதாக இருந்திருந்தால் தட்டுப் பறந்திருக்கும்... இப்படியா செய்வது என்று 'வள்'ளெனக் கத்தியிருப்பார்கள்.

பெருமூச்சு விட்டாள்...

எனக்கு சமையலே வராது போல... பேசாமல் ஊருக் குப் புறப்படுவதே மேல்... இதே மாதிரி சமைத்துப் போட்டால் பத்து நாளில் இவர்களுக்கு 'அல்சர்' வந்தாலும் வியப்பில்லை. இதுதேவையா...

வயிற்று வலியில் தவித்து... நீ புறப்படும்மா தாயி என்று அவர்கள் சொல்வதற்கு முன்... கிளம்பிவிட வேண்டியது தான்.

அவளுக்கு அழுகையாக வந்தது... இதிலும் தோல் வியா... பாத்திரங்களைக் கழுவி வைத்தவள்... பாலைக் காய்ச்சி கப்களில் ஊற்றி... ட்ரேயில் வைத்து... பூனை மாதிரி மெல்ல அடியெடுத்து வைத்து வந்து எட்டிப் பார்த்தாள்.

நிரஞ்சன்... தம்பிக்கு 'காட்பரீஸ்' சாக்லெட்டை கொடுத்துவிட்டு... தானும் வாயில் போட்டுக் கொள் வதைப் பார்த்தாள்...

காரத்தை எப்படித்தான் சகித்துக் கொண்டார்களோ... பாவம்...

"நிரஞ்சன்... பால் கொண்டு வந்திருக்கிறேன்... குடிங்க... ரோகன்... நீயும் எடுத்துக் கொள்... சாரி... 'புலவ்' கொஞ்சம் காரம் இல்லே..."



இருவரும் ஒருவரையொருவரைப் பார்த்துக் கொண் டனர்.

''கொஞ்சமா... அம்மாடி...'' என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டான் ரோஹன்..

''இந்த ஊர் மிளகாய் இவ்வளவு காரம் இருக்கும் என்று தெரியாமல் போய் விட்டது... இனிமேல் கம்மி பண்ணி விடுகிறேன்... ஆமாம்... உங்கள் அண்ணா எங்கே காணோம்...'' என்று வினவினாள்.

''நாங்க... சாக்லேட் சாப்பிட்டோம்... அண்ணா ஐஸ்கிரீம் சாபிட்டுக் கொண்டிருக்கிறானோ... யார் கண் டது.. வசுதா... எங்கள் மீது ஏதாவது கோபமா... இருந்தால் சொல்லி விடுங்கள்... இப்படிச் சமையலில் காட்டாதீர்கள் ப்ளீஸ்...'' என்று நிரஞ்சன் வேடிக்கையாய் சொல்ல 'பக்' என்று சிரித்து விட்டாள் அவள்.

நல்ல வேளை... யாருக்கும் கோபம் வரவில்லை...

கோபத்தைக் காட்டியிருந்தால் என்னால் தாங்க முடியாதுதான்...

''ஒன்னு சொல்ல மறந்து விட்டேன் வசுதா... நாளைக்கு கற்பகம் ஆன்ட்டி... டிஸ்சார்ஜ் ஆகி விடுகிறார்கள். அவருக்கு கீழேயே அறை ஒன்று ஏற்பாடு செய்திடுங்க.. என்னைப் பார்க்கறீங்க வசுதா... இதை நான் சொல்ல வில்லை.

இது... ஆதித்யா.. தி கிரேட்டோட ஆர்டர்...'' என்று நிரஞ்சன் சொல்ல..

கற்பகம் ஆன்ட்டி..? இங்கு எல்லாவற்றையும் கவ னித்துக் கொள்ளும் அந்த தூரத்து சொந்தமா? மனதுக்குள் கேள்வி எழுந்தது... இதை அவனே என்னிடம் நேரிடை யாய் சொல்லியிருக்கலாமே... ஒரு வேளை காரமாய்

சாப்பிட்டதால் நாக்கு மரத்துப் போனதோ... கேலியாய் நினைத்தாள் வசுதா.

எப்படியோ... நீ வேலைக்கு லாயக்கில்லை போய் விடு என்று சொல்லவில்லை.. அது போதும்...

அவளுக்கு வைத்திருந்த பாலை அவள் குடித்தாள்...

"சரி.. மிஸ்டர் ஆதித்யா... இன்று உங்களுக்கு பால் இல்லை..." உள்ளுக்குள் சொல்லிக் கொண்டாள். பால் 'ஜில்'லென்று தொண்டையில் இறங்கி வயிற்றை நிரப்பியது...

சமையலறையை ஒழுங்கு படுத்தி விட்டுத் தன் அறைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்தவளுக்கு... ஏதோ ஒரு நிம்மதி... இந்த வீட்டை விட்டுப் போகத் தேவையில்லை என்ற எண்ணம் தந்த நிம்மதியா.. அப்படித்தான் இருக்கும்.

அதே நேரம்...

ஆதித்யாவின் 'செல்' குழந்தையாய் கொஞ்சியது.

"அலோ... ஆதி... நான்.. கோயமுத்தூரிலிருந்து சரவணன் பேசறேன்ப்பா..."

"ஆங் அங்கிள்... என்ன விஷயம்..." என்றான் அவன்...

"அதான்.. நான் அனுப்பறேன்னு சொன்னேன்.. வீட்டை கவனித்துக் கொள்ள... அந்த விஷயமாய் பேசத்தான் அங்க..."

"ஓ.. வந்தாச்சே அங்கிள்..."

"வந்தாச்சா... எப்படி... அவங்களுக்கு இங்கே ஏதோ பிரச்சனை ஆதி.. புறப்படவே இல்லையே... திடீர் என்று வைரல் ஜுரம் வந்து ஆஸ்பத்திரியில் இருக்காங்கப்பா...



பத்து நாட்களாகலாம்... அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன்... பரவாயில்லை... நீயே ஒருத்தரை ஏற்பாடு பண்ணிவிட்டாயா... அப்ப சரி... அப்போ... இவங்களுக்கு சொல்லி விடுகிறேன்... என்ன..."

அவர் பேசியது எதுவும் அவனது காதில் விழவில்லை. அவர் சொல்லிய நபர் வரவில்லையா... அப்படி என்றால்... இங்கே... வந்திருக்கும் பெண் யார்... இதென்ன மோசடி... பற்களைக் கடித்தான்...

உடனே சென்று... அவளை உலுக்கி உண்மையைக் கக்க வேண்டும்...

இவள் யார்... எதற்காக இங்கு வந்திருக்கிறாள்... இவளது பின்னணியில் யார் யார்... அவளது உள் நோக்கம் என்ன... சங்கிலிப் பின்னலாய் சந்தேகங்கள்... தொழில் ரீதியான எதிரியா.... இல்லை... வீட்டில் இருப்பதையெல்லாம் சுருட்டிக் கொண்டு போக வந்திருக்கும் பகற் கொள்ளைக்காரியா... ஒத்தையாளா... இல்லை... ஒரு கும்பலே இருக்கிறதா... பாவி... என்னமாய் நடித்திருக்கிறாள்... ஆளைப் பார்த்தால் நல்லவளாய்... படித்தவளாய் தெரிகிறாளே... இந்தக் காலத்தில் படித்தவர்கள்தான் அறிவு ஜீவிகளாய்... இந்த மாதிரி களவில்... கையாடலில் ஈடுபடுகிறார்கள்... தோற்றத்தைப் பார்த்து ஏமாறவும் கூடாது. பாம்பு கூடத்தான் பளபளவென்று அழகாக இருக்கிறது. அதற்காக அதைப் பக்கத்தில் சேர்க்க முடியுமா.. என்ன... அவனுக்கு இரத்தம் கொதித்தது. அவளை இழுத்து வைத்து நாலு அடிப்போட்டு... போலீஸிடம் ஒப்படைக்க வேண்டும்...

இப்போ தெரிகிறது... அவளுக்கு ஏன் சமைக்கத் தெரியவில்லையென்று... திருடிப் பிழைப்பவளுக்கு... எப்படி சமையல் செய்ய வரும்...

ஆத்திரத்தில் தாடை இறுகியது... ஆனால் அறிவோ எச்சரித்தது...

அவசரப்படாதே ஆதி... முதலில் அவள் இந்த வீட்டுக்குள் நுழைந்த காரணத்தைக் கண்டுபிடி... அவளை அனுப்பி வைத்தது உன் தொழில் எதிரியாக கூட இருக்கலாம்... எதையாவது எடுக்கவோ... இல்லை வைக்கவோ கூட வரலாம்... ஏன்... அண்ணன் தம்பி பாசத்தை உடைத்து... பிரிக்க வைக்கும் எண்ணமாக இருக்கலாம்... அப்போதானே தொழிலும் படுக்கும்... என்ன என்பதை முதலில் கண்டுபிடிப்பது புத்திசாலித்தனம்... அவளை அனுப்பி விடாதே.. அவள் மீது ஒரு கண் வை... அவளது பின்னணியைத் துப்பறி... அவளைக் கையும் களவுமாய் பிடித்து... அவளது சுயரூபத்தை அறிந்து கொள்வதுதான் முக்கியமான செயல். முகத்திரையை கிழித்து எறியும் வரை பொறுமையாக இரு. அதுவரைக்கும் மூச்...

ஆத்திரம் மெல்ல மெல்ல அடங்கியது.

வீட்டினுள் நுழைந்ததும் கண்கள் வளைய வந்தன.

அந்த சாகசக்காரி எங்கே...

நிரஞ்சனிடம் கேட்டான்...

"வசுதாவா... வேலையை முடித்து விட்டுப் படுக்க போயாகி விட்டதே... நமக்கு ஒரு நல்ல ஹவுஸ்கீப்பர் கிடைத்தது நம் புண்ணியம்... இல்லையாண்ணா..." என்றான் தம்பி... அவனை முறைத்து விட்டு நடந்தான் ஆதித்யா... எத்தனை நாள் உன் ஆட்டம்... பார்க்கிறேன் என்று உள்ளுக்குள் கறுவியபடி தன் அறையை நோக்கிச் சென்றான் அவன்.



# 5

வசுதாவிற்கு முதுகெலும்பு ஒடிந்து விழுந்து விடும் போல வலித்தது...

அடுத்து அடுத்து வந்த வேலைகளால் மூச்சு விடவும் நேரமில்லை... எதைப் பற்றியும் யோசிக்க பொழுதும் இல்லை...

தன் வீட்டில் இளவரசியைப் போல எந்த வேலையும் செய்யாமல் வளைய வந்தவளுக்கு இது புது அனுபவமாக இருந்தது.

அப்பொழுதுதான் வேலையாட்களின் கஷ்டத்தை உணரவும் முடிந்தது...

பாவம்... எத்தனை வேலைகளைத் திணித்தாலும்... எதுவும் பேசாமல்... வாயை மூடிக் கொண்டு செய்கிறார்களே... அதை மெச்ச வேண்டும்...

வீட்டில் வெறுமனே பொழுதைக் கழித்துக் கொண்டு... நகத்துக்கு சாயம் பூசுவதிலும்... ஹோம் தியேட்டரில் புதுப் படத்தைப் பார்ப்பதிலும்... அநியாயமாய் வீணாய் காலத்தைக் கடத்தியதை நினைக்கவே வெட்கமாக இருந்தது அவளுக்கு... வாழ்க்கையில் ஏதாவது பயனுள்ளதாய் செய்ய வேண்டும். அப்போதுதான் ஒரு அர்த்தம் இருக்கும் என்பதை இப்போது தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டாள்.

இதோ... இங்கே... மூவரின் வயிற்றுப் பாட்டுக்கு என்னால் உதவ முடிகிறது... ஒரு வயதான பெண்மணிக்கு பணிவிடை செய்ய முடிகிறது... அதை விட என்ன வேண்டும். கோடிப் பணம் இருந்தாலும் கிடைக்காத

சுகம்! என்ன... இரவில்தான் உடம்பு துவண்டு போகிறது... படுத்தவுடன் உறக்கம்தான்... அடித்துப் போட்டது போல...

தன் வீட்டில் ஏ.ஸி. அறையில்... பஞ்சு மெத்தையில் வராத தூக்கம்... இந்தச் சின்ன அறையில் சாதாரண படுக்கையில் ஓடி வந்து தழுவிக் கொள்வது ஆச்சர்யம் தான்...

துணிகளுக்கு சோப்பு போட்டு... கசக்கிக் கொண்டிருந்தவள் ஒரு நிமிடம் தன் கைகளைப் பார்த்தாள். வேலைகள் செய்வதால் பூப்போன்று மெத்தென்று இருந்த உள்ளங்கை இப்போது வரட்டென்று ஆகியிருந்தது. நகங்களில் பூசியிருந்த நகப் பூச்சு எல்லாம் மாயமாய்.. நீளமாய் வளர்த்திருந்த நகங்கள் அசிங்கமாய் உடைந்து போயிருந்தன...

அது மட்டுமா... அழகிய பாதங்கள் இப்போது நிறம் மாறி... உலர்ந்து போயிருந்தன...

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள் வசுதா...

செல்வச் சீமானாகிய நித்தியானந்தத்தின் செல்வ மகள்... என்று சொன்னாலும் யாரும் நம்ப மாட்டார்கள்...

அத்தனை மாற்றம் அவளிடம்...

ஒரு சாமானியப் பெண் போலத் தோற்றம்...

அதுவும் நல்லதற்குதான்... யாருக்கும் சந்தேகம் வரக் கூடாது... முக்கியம் ஆதித்யாவிற்கு.

இப்போதெல்லாம் ஏனோ அவன் பார்வையில் வித்தியாசம் தெரிகிறது... எங்கு சென்றாலும் பின் தொடர்கின்றதே... ஏன் என்று தெரியவில்லை... இன்னும் நம்பிக்கை வரவில்லையோ... அப்படித்தான் இருக்கும்...

நிரஞ்சன் சொன்னானே... அவ்வளவு சீக்கிரத்தில் தன் அண்ணன் யாரையும் நம்ப மாட்டான் என்று



இரண்டு மாதம் தான்... அதுவரை பொறுமையாக இருக்க வேண்டும்... அப்புறம் கற்பகம்மாள் எழுந்து நடமாட ஆரம்பித்தால்...

'அய்யோ... அவருக்கு மாத்திரை தர வேண்டுமே... மறந்து விட்டேனே...' கைகளை உதறிக் கொண்டு எழுந்தாள்...

அவரை அழைத்து வந்து மூன்று நாட்கள் ஆகி விட்டன... இருந்த வேலைகளுடன் நோயாளியை கவனித்துக் கொள்வதும் சேர்ந்து கொள்ள... பம்பரமாய் சுழன்றாள் வசுதா.

கற்பகம்மாவின் மென்மையான சுபாவம் அவளுக்கு பிடித்துப் போனது... நீண்ட நாள் பழகியவரைப் போல ஒரு ஒட்டுதல் அவரிடம் இருந்தது.

வந்த அன்றே அவரது பார்வை வசுதாவை எடை போட்டது... அன்று இரவு கற்பகம்மாளுக்கு சாப்பாடு கொடுக்கையில்... அவர் அவளை அருகே உட்கார்த்திக் கொண்டார்...

"உன்னைப் பற்றி எதுவும் சொல்லவில்லையேம்மா... நீ எப்படி இங்கு வந்தே... உனக்கு இந்த வேலையில் முன் அனுபவம் எப்படி... இது பழகிய வேலையா... நீயா விரும்பி சேர்ந்தாயா... சொல்லும்மா..." என்று பரிவுடன் வினவ...

"வந்து... என்னைப் பற்றி சொல்ல எதுவும் இல்லைம்மா... நான் ஒரு அனாதை... எனக்கு என்று யாரும் இல்லை... திடீர் என்று அப்பாவும் இறந்து விட்டதால்... வயிற்றுப் பாட்டிற்கு வேலை வேண்டியிருந்தது..." ஏறக்குறைய உண்மையைத் தான் சொல்கிறோம் என்று நினைத்து மகிழ்ந்தாள் அவள்.

''ஓ! அதனால் தான் பழக்கமே இல்லாத வேலையில் சேர்ந்தாயாக்கும்...'' இளம் சிரிப்புடன் கேட்டார் கற்பகம்.

''அம்மா...'' அதிர்ச்சியுடன் பார்த்தாள் வசுதா...

''உனக்கு இந்த வேலைகள் செய்து பழக்கமில்லை என்பதை உடனே தெரிந்து கொண்டேன்... பாம்பறியும் பாம்பின் கால் என்பார்களே... அது மாதிரிதான்... இன்னும் சமையலில் பக்குவம் வரவில்லை... ஒரு தேர்ந்த சமையற்காரரின் கைப்பக்குவம் உன் சமையலில் இல்லை... அடுத்தது பரிமாறும்போது வரும் பதற்றம்... தப்பு எதுவும் செய்து விடக் கூடாது என்பதை விட.... நான் கத்துக்குட்டி என்பது தெரிந்து விடுமோ என்ற பதற்றம்... அடுத்து இதர வேலைகளைச் செய்யும்போது நீ படுகிற தவிப்பு... எடுத்துக் கொள்கிற கால அவகாசம்... சீக்கிரமே நீ அடையும் சோர்வு... படுக்கையில் விழுந்தால் போதும் என்பது போல தளர்வு எல்லாமே இந்த விஷயத்தில் நீ புதுசு என்று சொல்லாமல் சொல்லிவிட்டது... நான் சொல்வதெல்லாம் சரிதானே...'' புன்னகையுடன் கேட்டார் கற்பகம். வசுதாவிற்கு முகம் கன்றிப் போனது... தன்னைப் பற்றித் தவறான எண்ணம் அவருக்கு வந்திருக்குமோ என்ற நினைப்பில் உடல் கூனிக் குறுகியது...

''நான்... வந்து... எனக்கு... என்னை மன்னிக்கனும்... தப்புதான்... ஆனால்...'' தடுமாறினாள் அவள்.

''எம்மா... சங்கடப்படுறே... உனக்குப் பழக்கமில்லை என்று தானே சொன்னேன்... வேலைக்கு லாயக்கில்லை என்று சொல்லவில்லையே... உன்னைப் போன்ற அழகான... படித்தப் பெண்... இப்படி இந்த மாதிரி வேலைக்கு வர வேண்டியிருக்கு என்றால் ஏதோ ஒரு வலுவான காரணம் இருக்கனும். மனம் விட்டுப் பேச



விரும்பினால்... என்னிடம் சொல்லும்மா... உன் பிரச்சனை என்ன என்று... உன் ரகசியம் என்னிடம் பத்திரமாக இருக்கும்...''

முதலில் தயங்கிய வசுதா... நடந்ததையெல்லாம் அவரிடம் கொட்டினாள்... தந்தையின் திடீர் மணம்... சித்தியின் பேராசை... தன் தம்பியுடன் சேர்ந்து செய்த சதித்திட்டம்... அதற்காக ஒரு வேலை தேடி மங்களூருக்கு வந்தது... அந்த வேலை கிடைக்காமல் போனது... பஸ் நிலையத்தில் நின்ற அவளை நிரஞ்சன் வேலைக்குச் சேர வந்தவள் என தவறாகப் புரிந்து அழைத்து வந்தது... முதலில் விழித்தாள்... மெல்ல மெல்ல சமாளித்தது... ஒன்று விடாமல் சொன்னாள் அவள்... மனதில் அழுத்தியிருந்த பாரம் இறங்கினது போலப் பிரமை... அதைக் கேட்டு விட்டுச் சிரித்த கற்பகம் ''இதென்ன... சினிமாக் கதை மாதிரியல்லவா இருக்கு... இப்படியும் துஷ்டர்கள் இருப்பார்களா என்ன... பயப்படாதேம்மா... என்னால் உனக்குத் தொந்திரவு வராது... இங்கே நீ ஹாயாக இருக்கலாம். அதுவரைக்கும் யாரிடமும் நான் இதைச் சொல்ல மாட்டேன்... சமையலைப் பத்தி யோசிக்காதே. நான் கத்துக் கொடுக்கறேன்... இப்படி... இப்படிச் செய்யணும்னு சொல்றேன்... அந்த மாதிரியே செய்துடு... அந்தப் பசங்களுக்கு வாய்க்கு ருசியா சமைத்துப் போட்டா போதும். வாயைத் திறக்க மாட்டார்கள். ரொம்ப நல்ல பசங்கள்...'' என்றார் வாத்சல்யத்துடன்...

''நன்றிம்மா... அவர்களிடமிருந்து ஒளிந்து வாழ ஒரு பத்திரமான இடம் வேண்டி இருந்தது... கடவுளே எனக்கு வழிகாட்டியிருக்கிறார் என்று ஒப்புக் கொண்டு விட்டேன். உண்மையை சொல்லியிருக்க வேண்டும். ஆனால் நீ

விடுவாரோ என்ற பயம்... போகலாம் என்று அனுப்பி அதுதான் தயங்கிவிட்டேன்..."

"ஒரு வயசுப் பொண்ணு... எப்படிம்மா வெளியே வேலை தேடிக் கொண்டு... தங்கும் இடம் இல்லாம அலைய முடியும். பொய் செல்வது தப்புதான்... ஆனா... சொல்ல வேண்டிய அவசியம் வந்தபோது தப்பில்லை... விடு.. எல்லாம் நல்லபடியாக நடக்கும்... கவலையை விடும்மா..." என்றார் ஆதரவாக...

அதற்குப் பிறகு வசுதாவிற்கு குற்ற உணர்வு நெருட வில்லை. கற்பகம்மாள் ஆதித்யாவிற்கு தூரத்து சொந்தம் என்பதால் வீட்டில் ஒருத்தருக்காவது உண்மை தெரிந் ததே என்ற நிம்மதி வந்தது...

அப்புறம் என்ன... கற்பகம் சொன்ன சமையல் குறிப்பு களிலிருந்து சமையல் கலையைத் தெரிந்து கொண்டு தூள் கிளப்பினாள்...

விதவிதமான சிற்றுண்டிகள்... திறுக திறுசாய் பதார்த்தங்கள்... சீக்கிரமே. அவரிடம் 'சபாஷ்' வாங்கினாள்...

ஏன்... முகம் கோணும் ஆதித்யா கூட முகம் மலர்ந்து பதார்த்தங்களை சுவைத்துச் சாப்பிட்டானே... அது போதாதா... நினைக்கவே மனசுக்குள் பரம திருப்தியாக இருந்தது.

வாங்கும் சம்பளத்திற்கு குந்தகம் இல்லாமல் செய் கிறோம் என்ற திருப்தியோ... இருக்கலாம்.

அன்று இரவு அனைவருக்கும் சுடச் சுட பூரியும் குருமாவும் செய்து கொடுத்துவிட்டு... அனைவரும் உண்ட பின்பு சமையலறையை ஒழுங்கு படுத்திவிட்டு படுக்கையில் உடம்பு மரக்கட்டையாய் போனது.



அப்பா... எத்தனை வேலைகள்...

உடம்பெல்லாம் வலித்தது... ஆனால் ஆரம்பத்தில் இருந்தது போல இப்போது வேதனை தெரியவில்லை... பழகி விட்டது.

உடம்பும் 'சிக்'கென்று உறுதியாகிப் போனது... 'ஜிம்' மிற்குப் போகாமலே... உடற்பயிற்சிகள்!

அடடா... வீட்டு வேலைகளை சரியாகச் செய்தாலே போதும். போல் உள்ளதே... 'ஜிம்'மிற்கு தண்டம் அழ வேண்டியதில்லை...

வீட்டில் அசையாமல் இருந்துவிட்டு.. 'ஜிம்'மிற்கு ஓடிப்போய் 'ட்ரெட்மில்'லில் வியர்க்க... விறுவிறுக்க ஓடுவதும்... 'சைக்கிளிங்' செய்வதும்... தேவையா... அவளுக்குச் சிரிப்பு வந்தது... கூடவே விக்கலும்தான். 'ஹிக்... ஹிக்' சே.. இதென்ன... திடீர் என்று விக்கல்... சாப்பிட்டதும் தண்ணீர் குடிக்காததாலா... அதுவும் பூரி... எண்ணெய் பதார்த்தம் வேறு... தொண்டை வரண்டு... விக்கல் வந்து விட்டது.

எழுந்து போய் 'ஜக்'கை சாய்க்க... அதில் நீரில்லை. அடடா... எடுத்து வர மறந்து விட்டேனே...

ஜக்கை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் சென்று 'அக்வா'வில் பிடித்து வைத்திருந்த நீரை நிரப்பிக் கொண்டு வந்தவள் கற்பகம் அத்தையின் அறையில் இன்னும் விளக்கெரிவது கண்டு வியந்தாள்.

ஏன் இன்னும் அவர் தூங்கவில்லை... கால் வலியா... மெல்ல அறையை நோக்கி நடந்தாள்.

ஒருவேளை விளக்கை அணைக்காமல் தூங்கி இருக் கலாம்... அறைக்கதவை திறக்க கைவைத்தவள் உள்ளே ஆதித்யாவின் குரல் கேட்டு 'சட்'டென்று நின்றாள்.

பேசாமல் திரும்பி விடலாம் என்று நினைத்தவள் தன் பெயர் அடிபடுவதைக் கண்டு தயங்கினாள்... ஒட்டுக் கேட்பது தவறுதான்... ஆனால் தன்னைப் பற்றி பேசுகிறான் என்றால்... அதுவும் இந்த நடு நிசியில் என்னவாக இருக்கும்...

"மறுபடியும் சொல்கிறேன் அத்தை... யாரையும் சீக்கிரம் நம்பிடக்கூடாது... அது நல்லதில்லை.. நீங்கள் அவளுக்காக பரிந்து பேசுவதும் சரியில்லை.. நான் யாரையும் அத்தனை சீக்கிரம் நம்பிட மாட்டேன்... அதுவும் எங்கிருந்தோ வந்திருப்பவளை அவ்வளவு சுலபத்தில் நல்லவள்... நாணயமானவள்... முழுவதும் நம்பலாம் என்பது எல்லாம் பிதற்றல்... அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்... எதற்கும் அவள் மீது கண் வைத்திருங்கள்... அவ்வளவுதான் சொல்வேன்... நீங்கள் சொல்வீர்களே... எந்தப் புற்றில் எந்தப் பாம்போ என்று... அது மாதிரித்தான்.. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன்... இன்னும் ஒரு மாத ஓய்வு உங்களுக்கு போதும் தானே... அது வரைக்கும் அவள் இருக்கட்டும்... அதுக்கப்புறம் அவளை அனுப்பி விட வேண்டியது தான்... இது 'டெம்ப்ரரி' வேலைன்னு அவளுக்குத் தெரியும்... இனியும்..." அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்காமல் தன் அறைக்கு ஓடி வந்தாள் வசுதா...

அவளுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. தன் மீது சந்தேகமா... திருடி என்றா... அத்தனைக் கீழான எண்ணமா... தன்னைப் பற்றி... அதனால் தான் தான் எங்கே போனாலும் கூர்மையான பார்வையால் தொடர்கிறானா... நினைக்கவே உடம்பு கூசிப் போனது...

இங்கே எதைத்திருடிப் போவேன்... ஒரு செல்வச் சீமானின் மகளுக்கு திருடவும் தோன்றுமா.. கடவுளே...



எத்தனை இழிவான நினைப்பு... எத்தகைய தாழ்வான கணிப்பு...

தலையணையில் முகம் புதைத்து விம்மினாள்...

இந்த வார்த்தைகளை கேட்கும்படி ஆகி விட்டதே... ஆதரவற்ற பெண் என்றால் திருடியாகி விடுவாளா... வேலைக்காக வந்தவள் என்பதால் என்ன வேண்டுமானாலும் சொல்லுவதா... எவ்வளவு எளிதாக பழி சுமத்துகிறான்... சே...

ஆதித்யா மீது அவளுக்கிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்து போனது. பதிலாய் ஆத்திரம் வந்தது.

இனிமேல் இந்த வீட்டில் இருப்பது கூடாது. இனியும் அவனது பார்வையில் உடம்பெல்லாம் பூரான் ஊறுவது போல இருக்கும்... நாளைக்கே இங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும்...

இன்னும் ஒரு மாதமாமே.. ஒரு நிமிஷமும் இருக்க முடியாது. இவர்களுக்கு சாப்பிட வழியில்லையென்றால் போகட்டும்... யாராவது நல்லவளாய்... நாணயமானவளாய் பார்த்துத் தேடி வேலைக்கு வைத்துக் கொள்ளட்டும்...

அந்த நினைப்பில் எழுந்து தன் துணிமணிகளை எடுத்து சூட்கேஸில் அடுக்கினாள்...

அப்போதுதான் அவளுக்கு உறைத்தது... நிராதரவான பெண்களுக்கு எத்தனை சோதனைகள்...

கடவுளே... படித்த பெண்களுக்கு இந்த நிலைமை என்றால்... படிக்காத... ஆதரவே இல்லாத பெண்களின் கதி... நினைக்கவே நெஞ்சு பதறியது...

இரவெல்லாம் தூக்கம் வராமல் தவித்தாள். எப்போது விடியும் என்று காத்திருந்தவள்... பறவைகளின் கீச்... மூச்

ஒலி கேட்டதும் பரபரப்புடன் எழுந்து செயல்பட்டாள்...

ஆதித்யாவின் கண்களில் படாமல் புறப்பட்டு விட வேண்டும். அவனைப் பார்க்கவும் பிடிக்கவில்லை...

வேலைக்கு வந்தவள் என்பதால் என்ன வேண்டுமானாலும் கீழ்த்தரமாய் நினைத்து விடுவதா...

கண்ணியமானவன் என்று நினைத்தேனே... என் கணிப்பில் தாழ்ந்து போய் விட்டானே...

இயந்திரமாய் காபி கலந்து கற்பகம் இருந்த அறைக்குச் சென்றாள் வசுதா.

"நானே உன்னிடம் காபி வேணும்னு கேட்க நினைத்தேன் வசு... நீயே கொண்டு வந்துட்டே..." என்ற கற்பகம் சிவந்திருந்த அவளது முகத்தைப் பார்த்துத் திகைத்தார்.

"வசு... என்னம்மா... உடம்பு சரியில்லையா என்ன... என் ஒரு மாதிரியா இருக்கே..." என்று கரிசனத்துடன் கேட்க...

"ப்ச... மனசுதான் சரியில்லை ஆன்ட்டி... இனியும் இங்கே இருக்கப் பிடிக்கவில்லை... நான் புறப்படுகிறேன். உங்கிட்டே சொல்லிட்டுப் போகலாம் என்று வந்தேன்" தொண்டை அடைக்கச் சொன்னாள் வசுதா.

"ஏம்மா.. என் திடீர் என்று புறப்படுகிறே... என்ன என்று சொல்லும்மா... ஏதோ நடந்திருக்கு என்று புரிகிறது. அது என்னென்று தெரியவில்லை... நீ சொன்னாதானே புரியும்..." அக்கறையுடன் அவர் கேட்க...

"ஆதித்யாவிற்கு என் மேல் நல்ல அபிப்ராயம் இல்லை என்று தெரிந்து கொண்டேன்... என் மீது அவருக்கு நம்பிக்கை இல்லை..." மனத்தாங்கலுடன் சொன்னாள் வசுதா.



''ஓ! ராத்திரி அவன் என்கிட்டே பேசினதை சொல்கிறாயா வசு...''

''சாரி... ஆன்ட்டி... எதேச்சையா என் காதில் பட்டது. நான் ஒட்டுக் கேட்கவில்லை...''

''நீ அப்படிப்பட்ட பொண்ணும் இல்லைம்மா... நீ என்னவோ தவறுதலாய் இந்த வேலைக்கு வந்தாலும்... நீ தப்புப் பண்ண மாட்டேன்னு எனக்குத் தெரியும். ஆனா... ஆதித்யாவிற்கு உன்னைப் பற்றி எதும் தெரியாதேம்மா... திடீர்னு வேலைக்கு வந்தவளாயிற்றே... அவளை நம்புவதா... கூடாதா... எந்த அளவிற்கு நம்புவது இந்தக் குழப்பத்தில்தான் அவன் அப்படிப் பேசுகிறான் வசு... இந்த அளவுக்கு அவனுக்கு சந்தேக புத்தி என்றால் அதுக்குக் காரணமும் இருக்கு... அவனோட அப்பா தொழிலில் திறமைசாலி... காபிக் கொட்டை வியாபாரத்திலும் சரி... உதயா காபிப் பொடி.. இன்ஸ்டன்ட் காபித்தூள் என்ற கால் வைத்த போதிலும் சரி.. அதிர்ஷ்ட தேவதை அவர் பக்கம் தான்... அவரது உழைப்பு அப்படி... நல்ல தரமானதை வியாபாரம் செய்து தொழிலில் முதலிடம் பிடித்தார்... இது பிடிக்காத எதிராளி ஒருவன்... தன் தொழிலுக்கு போட்டியாக இருந்த அவரைக் கவிழ்க்கிறதுக்கு சதி செய்தான்... தனக்கு வேண்டிய ஒருவனை... ஆதியோட அப்பாவின் ஆபீஸில் வேலைக்கு அனுப்பி... மெல்லத் தொழில் ரகசியங்களை தெரிந்து கொண்டானாம்... அது மட்டும் இல்லாமல்... இவங்களோட வாடிக்கையாளர்களையும் வளைத்துப் போட்டுக் கொண்டு விட்டான்... மெல்ல மெல்ல அவன் தலையெடுக்க... ஆதியோட அப்பா தலைகுனிய ஆரம்பித்து விட்டார்... அவருக்கு விழிப்பு வந்தபோது எல்லாம் கைமீறிப்போன நிலை... கிட்டத் தட்ட தொழில் தேங்கிப்போன நிலை... யாரையோ நம்பி

மோசம் போனோமே என்ற எண்ணமே அவரை நிலை குலையச் செய்து விட்டது... ஒரு நாள் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டு படுத்து விட்டார்...''

இந்த இடத்தில் நிதானித்தாள் கற்பகம்.

இந்த இடத்தில் 'திக்' என்றது... ஒரு திறமை மிக்க வசுதாவிற்கு தொழிலதிபர் இப்படி ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்றால்... எந்த அளவு அவர் கலங்கிப் போயிருக்க வேண்டும்... தன் அப்பாவின் நினைவு வந்தது. அவரும் இப்படித்தானே... யாரோ ஒருத்தியை நம்பி மோசம் போனதை எண்ணி... இடிந்து போனவர் மாரடைப்பால் உயிர் விட்டாரே. துன்பம் என்பது எல்லோருக்கும் வருவது தான்... ஆனால் நன்றாக வாழ்ந்து விட்டு... செல்வாக்கும்... சீரும் சிறப்புமாய் இருந்துவிட்டு திடீர் என்று தாழ்ந்து போனால்... முக்கியமாய் ஏமாந்து போனோமே என்று தெரிந்தால்... அதுவே அடித்துக் கொன்று விடும் தான்...

பாவம் ஆதித்யாவோட அப்பா... அவருக்காக மனம் வேதனைப்பட்டது... அவருக்காக மட்டுமா... ஆதித்யாவுக்காகவும் தான். தலைப் பிள்ளை ஆயிற்றே!

அதை வெளிப்படையாகவே பேசினாள்.

''பாவம் ஆதித்யா சார்.... அப்போ அவருக்கு என்ன வயசு ஆன்ட்டீ... எப்படித் தாங்கிக் கொண்டார் இதை...'' என்று கேட்டாள்.

''ப்ச... தந்தை இறந்தபோது அவனுக்கு வயசு பதினைந்து. விவரம் புரிந்த வயசு. அவனுக்கப்புறம் எல்லாமே சிறுசுகள்... குருவி தலையில் பனங்காயை வச்ச மாதிரி ஆதித்யாவோட தோள்மீது பெருஞ்சுமை விழுந்தது... படித்துக் கொண்டிருந்தவனுக்கு குடும்பத்



தையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு... எதைச் செய்வான் இளம் பிள்ளை... காபித் தோட்டத்தை குத்தகைக்கு விட்டு விட்டு குடும்பமே கோயமுத்தூருக்குப் போய்விட்டது... சந்திராவோட... அதாவது.. ஆதியோட அம்மாவோட பிறந்த வீட்டுக்குப் போய் விட்டார்கள். தங்களோட நிலைமை இப்படி ஆகிவிட்டதே என்ற வேதனை... தன் புருஷன் இப்படித் தவிக்க விட்டு விட்டுப் போய் விட்டாரே என்ற கவலை... மெல்ல மெல்ல சந்திராவின் மனதையும் தேகத்தையும் அழித்து விட்டது. அவளும் போய் சேர்ந்து விட்டாள். அதற்குள் ஆதித்யாவும் தன் படிப்பை முடித்து விட்டான். அப்பா நடத்திய தொழிலை படுத்து விட்ட 'பிஸினஸை' எடுத்து நடத்த வேண்டும் என்கிற வெறி அவனுள் இருந்து கொண்டே இருந்தது. படிப்பு முடிந்ததும் நேரே இங்கே வந்து விட்டான். தன் உடன் பிறந்தவர்களையும் அழைத்துக் கொண்டு... சந்திராவுக்கு தூரத்துச் சொந்தம் என்பதால் எனக்கும் இந்த விஷயம் தெரிந்திருந்தது... எனக்கும் யாரும் இல்லை... தம்பி தங்கைகளுக்காக கல்யாணம் பண்ணிக்காமல் இருந்து விட்டேன்... கடைசி காலத்தில் அவர்களுக்குப் பாரமாக இருக்கப் பிடிக்காமல்... இந்தப் பிள்ளைகளுக்கு துணையா வந்து விட்டேன். ஆதித்யா நல்ல பிள்ளைதாம்மா...

என்ன... கொஞ்சம் சந்தேக புத்தி... சட்டென்று யாரையும் நம்பிவிட மாட்டான்... மற்றபடி அவனுக்கு எந்த துர்குணமும் கிடையாது... உனக்கு இங்கே இருக்கும் பாதுகாப்பு எங்கேயும் இருக்காது... நிரஞ்சனும் தங்கக் கம்பிதான்...''

வசுதா யோசித்தாள்.

''என்னம்மா யோசிக்கிறே... எனக்காகவோ... இந்தப் பிள்ளைகளுக்காகவோ நான் இதைச் சொல்லலை... உன் நன்மைக்குத் தான் சொல்கிறேன்.'' என்றார் கற்பகம்...

அவர் சொல்வதும் உண்மைதான்... நமக்கு ஒரு பாதுகாப்பான இடம் கிடைத்திருக்கிறது... ஏன் அதைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்.

என்ன... ஆதியைத்தான் சமாளிக்க வேண்டும்.. மற்றபடி எந்தக் கவலையும் இல்லையே... பார்ப்போம்.. அவளுடைய தயக்கத்தை கவனித்து விட்டு மேலும் சொன்னாள்.

"ஆங்... சொல்ல மறந்து விட்டேனே... இன்றைக்கு உதயா புறப்பட்டு வருகிறாள்... இதைச் சொல்லத்தான் அவன் என் அறைக்கு வந்ததே... என் வாய் சும்மா இல்லாமல் உன்னை மெச்சிப் பேசினதும் வந்ததே அவனுக்குக் கோபம்... அதான்... ஏதேதோ பேசி விட்டான்... விடு..."

"யார் இந்த உதயா ஆன்ட்டி..."

"அட... பசங்க சொல்லலையா... உனக்குத் தெரிந்திருக்கும் என்று நினைச்சேன்... ஆதித்யாவோட தங்கை... இந்த வீட்டின் இளவரசியம்மா... 'உதயா காபி' அவள் பெயரில் தான் நடக்கிறது... பெண் குழந்தை என்பதால் தோதுபடாது என்று ஹாஸ்டலில் சேர்த்திருக்கிறார்கள்... லீவு விட்டிருக்கிறார்களாம்... அதான் வருகிறாள்... மாடியில் அவளது அறைம்மா... வசு... அதை தயார் பண்ணிடு... சாயந்திரம் வருவா... அவளுக்குப் பிடித்தது குழாய் புட்டு... குழிப் பணியாரம்... செய்து வை... பாவம் நாக்கு செத்து வந்திருப்பா... பயப்படாதே வசு... நான் சொல்லச் சொல்ல செய்துவிடு... கஷ்டம் ஒன்னும் இல்லை..."

எப்படியோ இங்கேயே தங்கும்படி செய்து விட்டாள் கற்பகம் ஆன்ட்டி...



மறுபடியும் ஆதித்யாவின் நிழலில்... அவனது வெறித்த பார்வையின் கீழ்... அவனுடைய புருவ சுளிப்பையும்... இறுகிய முகத்தையும் சகித்துக் கொண்டு இருக்க வேண்டும்...

கடவுளே!

பெருமூச்சு விட்டாள் வசுதா.

## 6

பீங்கான் தட்டுக்களைக் கழுவிக் கொண்டிருந்த வசுதாவிற்கு முதுகில் உறுத்தல்...

திரும்பிப் பார்த்தாள்...

உதயா! கதவில் சாய்ந்தவாறு எதையோ கொறித்துக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்து நட்புடன் சிரித்தாள் வசுதா.

ஆனால் அவளிடமிருந்து பதிலுக்கு சின்னப் புன்னகையும் இல்லை...

''என்ன உதயா... ஏதாவது வேண்டுமா...'' என்று கேட்டாள்.. தட்டுகளை உலர்ந்த துணியால் துடைத்தவாறே...

நிதானமாக அருகில் வந்தவள்... ''ஆமாம்...'' என்றாள் உதயா.

''என்ன வேண்டும்... பால்... ஹார்லிக்ஸ்... எது கலந்து தர வேண்டும்...''

''ப்ச... நான் சொன்னது குடிக்க அல்ல... தெரிய... அதாவது உன்னைப் பற்றி உன்னுடைய நடை உடை பாவனையைப் பார்த்தால்... வேலைக்காரி போலத் தெரியவில்லையே... உண்மையிலே நீ 'செர்வெண்ட்'டா...

ஊகும்... உதைக்கிறதே...'' சந்தேகக் குரலில் உதயா கேட்கவும்... அதிர்ந்து போனாள் வசுதா...

''என்ன... என்ன சொல்கிறாய்... உதயா...''

''இல்லை... நீ பேசும் விதம்... வார்த்தைகளின் உச்சரிப்பு உன்னைப் படித்தவள் என்று சொல்கிறது... நீ உடை உடுத்தும் விதம்... நீ 'மாடர்ன் கேர்ள்' என்பதை உணர்த்துகிறது... அப்புறம்... உணவு பரிமாறும் விதம்... டேபிள் மேனர்ஸ்... இதையெல்லாம் பார்க்கும்போது நீ சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள் இல்லையோ என்று தோன்றுகிறது... மொத்தத்தில் ஒரு வேலைக்காரிக்கு உள்ள அம்சங்கள் உன்னிடம் தெரியலையே... அதை கேட்கத் தான் வந்தேன்...''

''இல்லை... இல்லையே... இதற்கு முன் பெரிய பணக்கார வீட்டில் இருந்ததால் ஒட்டிக் கொண்ட பழக்கம். அதனால் அப்படித் தோன்றுகிறது'' லேசான தடுமாற்றத்துடன் சொன்னாள் வசுதா...

பொய் இல்லை... செல்வந்தரான தன் தந்தையுடன் இருந்தபோது கற்றவை ஆயிற்றே...

''பின்னே... அந்த வேலையை ஏன் விட்டு விட்டு வந்தாய்... அதுவும் முன்னே பின்னே தெரியாத இந்த இடத்திற்கு.. நீ கோவையிலிருந்து வந்திருக்கேன்னு ஆண்டி சொன்னாங்க... ரைட்...''

அவளது விசாரணையில் வசுதா ஆடிப் போனாள்.

அண்ணனை விட இவளுக்கு இன்னும் அதிக சந்தேக புத்தியோ... ஏதேதோ கேட்டுத் துளைக்கின்றாளே...

''ஏய் உதயா... அங்கே என்ன... தொண தொணவென்று பேசிக் கொண்டு... வசுதாவை வேலை செய்ய



விடாமல்... வா வெளியே...'' ஆதித்யாவின் அதட்டலான குரல் கேட்டதும்...

உதட்டைச் சுழித்தவாறு வெளியேறினாள் உதயா...

''இல்லேண்ணா... வசுதா யார்... எங்கிருந்து வந்திருக்கிறாள் என்பதை விசாரித்தேன்...'' என்றாள் தங்கை.

''ஸ்டுபிட்.... அவள் வந்திருப்பது நம் வீட்டில் வேலை செய்ய... அதுவும் 'டெம்ரேரி'யாக... அவளுக்கு சமமா நின்று பேசுவதை நிறுத்து... என்ன... தெரிந்ததா...''

ஆதித்யாவின் கண்டிப்பான குரலும் அதில் தெறித்த அலட்சியமும்... ஸ்டவ்வைத் துடைத்துக் கொண்டிருந்த வசுதாவின் மனதை வலிக்கச் செய்தது.

வேலைக்காரியை அவள் இடத்தில் வை... சரிக்கு சரியாக வாயாடாதே என்கிறான்...

பெருமூச்சு விட்டாள்... உண்மைதான்... இப்போதைய நிலை அதுதானே... அவன் சொன்னதற்காக எதற்கு வேதனைப்பட வேண்டும்...

இங்கு இருக்கும் வரை வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டும்... பொறுமையைக் காக்க வேண்டும். ஏனோ தெரியவில்லை... உதயாவிற்கு தன்னைப் பிடிக்கவில்லை என்பதை நன்கு உணர்ந்தாள் வசுதா. நிரஞ்சனும் ரோஹனும் தன்னை வேலைக்கு வந்தவள் என்று இளப்பமாகப் பார்க்கவில்லையே...

ஏன் இவள் மட்டும்... ஆதித்யாவைப் போல...

இறுதி ஆண்டு தேர்வுக்காக அவளுக்கு 'ஸ்டடி ஹாலிடேஸ்' விட்டிருந்தது... அவளது படிப்புக்கு இடையூறு இருக்கக் கூடாது... அவளது அறைக்கே டியன்... காபி

வெல்லாம் கொண்டு போய் தர வேண்டும் என்பது ஆதித்யாவின் உத்திரவு... கூடுதலாய் இந்த வேலையும்... பெருமூச்சு விட்டாள் வசுதா...

ஒரு நன்றி வார்த்தை... சின்னப் புன்னகை... ஊஹூம்... வெகு அலட்சியமாய் தட்டை வாங்கிக் கொள்வாள்... அசட்டையாக டம்ளரை வாங்கிப் பருகுவாள் உதயா. உன் வேலை அது... செய் என்பதுபோல... அண்ணனைப் போலவே திமிர்... பற்களைக் கடித்தாள். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை... அது முடியுமா... வேலைக்காரிக்கு கோபதாபம் இருக்கக் கூடாதே...

பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும்... தனக்குள் சொல்லிக் கொண்டாள்.. வசுதா.

இதெல்லாம் தேவை இல்லைதான்... நீயாச்சு... உன் வேலையாச்சு என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடலாம் தான்.

ஆனால் மனசாட்சி இடம் தரவில்லையே...

கற்பகம் ஆன்ட்டி கால் ஒடிந்து கிடக்கும்போது...

எப்படி இவர்களை 'அம்போ' என்று விட்டுச் செல்வது

அது முறையல்ல தான்.. இவர்களுக்காக வேண்டாம்... ஆன்ட்டிக்காக... அவரது வேண்டுகோளுக்காகவாவது இருக்க வேண்டும்தான்.

அது மட்டுமல்ல... வேலைக்கு சேர்ந்து விட்டு... சட்டென்று என்னால் முடியாது... விலகுகிறேன் என்று சொன்னால் அது என்னால் சமாளிக்க முடியவில்லை என்று ஆகும். மகா கேவலம்.. வேண்டாமே... நிரஞ்சனும்... ரோசனும் பாவம்... அவர்களுக்காக பார்க்க வேண்டாமா...



நாய் வேஷம் போட்டால் 'ச்சூ...' என்றாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும்... 'ச்சீ' என்றாலும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்...

போட்டாச்சு... சுடும் வார்த்தைகளை கேட்டுக் கொள்ளத் தான் ஆகணும்... அலட்சியத்தை லட்சியம் செய்யக் கூடாது. இன்னும் ஒரு மாதம் தானே...

என்ன... ஆதித்யாவோடு உதயாவும் கூட்டணி... சமாளிக்கலாம்.

அங்கே... வீட்டில் என்ன நிலையோ... அது தெரியாமல் ஊருக்குத் திரும்புவது முடியாதே... பெருமூச்சு விட்டாள் அவள்...

அப்போதுதான் உறைத்தது... சிவராம் அங்கிளுக்கு போன் பண்ணவே இல்லையே...

சூட்கேஸில் 'செல்ஃபோன்' தூங்கிக் கொண்டிருக்கிறது. அதை அணைத்து வைத்திருப்பதால்... பேச இங்கே வழியில்லை... சந்தேகம் வந்துவிடும்.

வெளியில் போய்தான் பேச வேண்டும்... பாவம்... எங்கே போனேன் என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருப்பார்... எனக்காக... என் நலனுக்காக அக்கறைக் காட்டும் ஒரே உயிர்... அவரை விட்டால் எனக்கென்று யாரும் இல்லையே...

ஏங்கியது அவள் மனம்.

'ஷாப்பிங்' என்று சொல்லி வெளிவந்தாள் வசுதா.. கொஞ்சம் தூரம் சென்றதும் ஃபோன் பூத் ஒன்று கண்ணில் பட்டது...

நுழைந்தாள்.

சிவராம் பரபரப்பாய் கேட்டார்

''எங்கேம்மா இருக்கே வசு... பத்திரமாய் இருக்கிறாய் தானே... என் நண்பனுக்கு போன் செய்து கேட்டதில் அந்த வேலைக்கு யாரோ வந்தாச்சு என்றான். உன்னைப் பற்றி எதுவும் தெரியாதுன்னுட்டான். நான் ஆடிப் போயிட்டேன்ம்மா. நான்தானே உன்னை அங்கு அனுப்பி வைத்தது. உனக்கு ஏதேனும் ஆனா அதுக்கு நான் தான் பொறுப்பாவேன்... அந்தப் பதட்டம் தான்... உன் 'செல்'லுக்கு 'டிரை' பண்ணினேன்... அது 'ஸ்விட்ச் ஆப்' செய்யப்பட்டிருந்தது. நான் சொல்லிக் கொடுத்தது தான்... விடு... போகட்டும்.. இப்ப எங்கே இருக்கே... என்ன செய்துகிட்டு இருக்கே... உனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை தானே... ஏதாவது இருந்தால் சொல்லும்மா.. உடனே ஓடி வந்து விடுகிறேன்..''

அவரது குரலில் தெரிந்த அக்கறையும்.. அன்பும் அவளை நெகிழ வைத்தது.

''கவலைப்படாதீங்க அங்கிள்... இங்கு எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை... நிம்மதியாக இருக்கேன். இங்கே எனக்கு வேறு வேலை கிடைத்திருக்கிறது...'' என்றாள் அவள்.

''என்ன வேலை.''

''ஹவுஸ் கீப்பர் ஆக இருக்கேன் அங்கிள்...''

''என்ன... ஹவுஸ் கீப்பர் வேலையா.. சமைக்கணும்.. பரிமாறணும்... வீட்டைக் 'க்ளீன்' பண்ணணும்.. அந்த வேலை தானே.. உனக்கு அதைப் பற்றி 'ஏபிசிடி' கூடத் தெரியாதேம்மா.. நீ என்ன செய்யப் போறே... இதெல்லாம் உன் தலையெழுத்தில்லை... உடனே புறப்பட்டு வாம்மா.. நானே ஒரு நல்ல கௌரவமான வேலையை வாங்கித் தருகிறேன்'' சிவராம் பொறுமையிழந்து சொன்னார்.



அதைக் கேட்டுச் சிரித்த வசுதா... நிதானமாய் விவரித்தாள்.. அந்த வேலை எப்படி வந்தது என்று சொன்னவள் ''அங்கிள்... ஒண்ணும் பயப்படாதீங்க. இங்கே எல்லோரும் என்னிடம் பிரியமாக இருக்கிறார்கள்... எனக்கும் இங்கே நிம்மதியாக இருக்கிறது.

ஒரு மாதம் முடிந்ததும்.. அந்தக் கற்பகம் ஆன்ட்டி தெம்பாகி விடுவார்... அவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வந்து விடுகிறேன்.. ஓகே...'' என்றாள்.

''என்னவோம்மா... நீ வர்றவரைக்கும் எனக்கு நிம்மதியில்லை. அப்புறம்... ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேனே.. உன் சித்தியும்... அவளோட தம்பி.. அந்த தண்டச்சோறு தடியனும் டூர் போயிருக்கிறார்கள் வசு. சிங்கப்பூருக்கு... கிடைத்த பணத்தை கரைக்க வேண்டுமே... அதான்... அப்பப்போ... எனக்குப் போன் பண்ணும்மா... அப்போத்தான் நானும் நிம்மதியா இருப்பேன்... புரிந்ததா...''

''கண்டிப்பாய் அங்கிள்... வச்சுடட்டுமா...''

அவள் அத்தனை நேரம் போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்ததை தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஆதித்யா... அவனது புருவ மத்தியில் முடிச்சு... யாருடன் பேசுகிறாள்... சிரித்துப் பேசுகிறாளே! அவள் வெளி வருவதைப் பார்த்ததும் சட்டென்று தன் காரைக் கிளப்பி அடுத்து சந்து வழியாகச் சென்றான். அதை உணராமல்... எதையோ நினைத்து புன்னகைத்தவாறு நடந்தாள் வசுதா...

வீட்டினுள் நுழைந்தபோது வீடு 'கப்சிப்' என்று இருந்தது...

ஓ... ஆதித்யா வந்து விட்டான்... அதுதான் இந்த அமைதி...

நிரஞ்சன் தொலைக்காட்சி முன் அமர்ந்து... டிஸ்கவரி சானலைப் பார்த்துக் கொண்டிருந்தான். வசுதாவைப் பார்த்ததும் புன்னகையை சிந்திவிட்டு சைகையில் சொன்னான்...

'தலைவருக்கு மூட் அவுட்... கோபம்! உஷார்' அவளது மனதில் படபடப்பு... என்ன சொல்வானோ. ரோஹன் இன்றும் வந்திருக்கவில்லை... இப்போதெல்லாம் அவன் தாமதமாக வருகிறான்... வரும்போதே அவனிடம் சோர்வு தெரிகிறது... பாவம்... அப்புறம் அடித்துப் போட்ட மாதிரி தூக்கம் வேறு... அந்த அளவு படிப்பு... உதயா தன் அறையில் எதையோ எழுதிக் கொண்டிருப்பது தெரிந்தது...

பரபரவென்று செயல்பட்டாள்... இன்றைக்கு 'மெனு' என்ன செய்யலாம்...

திரும்பத் திரும்ப குழம்பு... கூட்டு... என்று இல்லாமல் கொஞ்சம் வித்தியாசமாய் ஏதாவது...

சென்னாமசாலா... நான்... அதாவது சோளாப் பூரி...

அப்புறம் ரைத்தா... டெஸ்... சம்திங் டிபரண்ட்...

இப்போது அவளுக்கு சமையல் கை வந்த கலையாகி விட்டது புதிது புதிதாய் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் வேறு... அனைவரும் ருசித்துச் சாப்பிடும்போது வரும் மகிழ்ச்சி... அதுவும் ஆதித்யா பாராட்டை வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் விரும்பி எடுத்துப் போட்டுக் கொள்வானே... அது போதாதா... அன்றும் அப்படித்தான்... 'ஆகா... சூப்பர் டின்னர்' என்று மெச்சி உண்டாலும்... அண்ணன் மௌனமாகவே உண்டான்...

கோபம் என்றாலே நிரஞ்சன்... அந்தக் கோபத்திலும் வயிற்றுக்கு வஞ்சனை பண்ணவில்லை... எடுத்துத் தன்



தட்டில் போட்டுக் கொண்டு சுவைத்தான்.. ''ஆமாம்... ரோஹன் எங்கே...'' என்று கேட்க... ''தலைவலி என்று படுத்துக் கொண்டு விட்டான்... அவனை எழுப்பித் தரணும்...'' என்றாள் அவள். ஆனால்... ரோஹன் அடித்துப் போட்டது மாதிரி தூங்கினான்... அவன் முகத்தில் சோர்வு தெரிந்தது... ஏன் இந்தச் சோர்வு.. வீட்டில் சரியாகவும் சாப்பிடுவதில்லை... முன்னைப் போல அள்ளி எடுத்துச் சாப்பிடாமல் சும்மா கொறிக்கிறான் என்றால்... உடம்பு சரியில்லையோ... இது விஷயமாய் ஆதித்யாவிடம் பேச வேண்டும்...

ஆனால் இப்போது முடியுமா... அய்யாவுக்கு மூடு சரியில்லையே... யோசனையில் ஆழ்ந்தாள்.

பாலைக் காய்ச்சி அனைவருக்கும் கொடுத்தவள்... ரோஹனை எழுப்பிக் கொடுத்தாள்...

ஆனால் அவன் குடிக்கும் நிலையில் இல்லை...

எதுவுமே வேண்டாம் என்று படுத்து விட்டான்.

பால் டம்ளருடன் ஆதித்யாவின் அறைக்குச் சென்றாள் கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றவள்... லாப் டாப்பை வைத்துக்கொண்டு அமர்ந்திருந்த ஆதித்யாவின் முன் வைத்தாள்.

''ரோஹன் விஷயமா கொஞ்சம் உங்களிடம் பேச வேண்டும்'' அவள் சொன்னதும் நிமிர்ந்தான்.

''என்ன விஷயம்...'' என்றான்.

''முன்னே மாதிரி அவன் சரியாகச் சாப்பிடுவதில்லை... தினமும் வீட்டுக்கு லேட்டாக வருகிறான்... வந்ததும் களைப்பா இருக்கிறது என்று படுத்து விடுகிறான். இப்பவும் அப்படித்தான்...''

"இதில் என்ன இருக்கிறது... பள்ளிக் கூடத்தில் கிரிக்கெட் ஆடிவிட்டு வந்திருப்பான்... பசிக்கு ஃபிரெண்ட்ஸோட ஓட்டலில் சாப்பிட்டிருப்பான்... ஆடின களைப்பு இருக்கலாம்... பசித்தால் எழுந்து சாப்பிடுவான் 'லீவ் இட்...'"

வசுதாவின் மனமும் நிம்மதியடைந்தது. அப்படியும் இருக்கலாம்தான்... எதற்கு வீண் கவலையடைந்தேன்... புறப்பட்டவளை அவனது குரல் நிறுத்தியது.

"தாங்க்ஸ்..."

"எதற்கு..." புரியாமல் கேட்டாள் அவள்.

"என் தம்பி மேல் இருக்கும் அக்கறைக்கு."

"ஓ..." அவன் குரலில் இருந்தது கிண்டலோ...

"இன்னொரு விஷயம் கேட்க வேண்டும்..."

என்ன என்பது போலப் பார்த்தாள்.

"உனக்கும் தெரிந்தவர் இருக்கிறார்கள் போல... யார்... உறவினரா... நண்பர்களா..."

எதற்கு இந்தக் கேள்வி என்று குழப்பத்துடன் பார்த்தாள். திடீர் என்று இந்த வினா ஏன்... சந்தேகத்தின் களஞ்சியம் தான்!

"இல்லை... இன்று வீடு திரும்பும் போது... வழியில் 'பூத்'தில் நீ வெகு சுவாரசியமாய் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்... ஒருவேளை லோகலில் யாராவது உனக்கு நெருங்கியவர்... ஸாரி... பழக்கமானவர் இருக்கிறாரோ என்று தெரிந்துகொள்ளும் ஆர்வம்..." உதட்டோரம் வழிந்த சுழிப்பு... நிச்சயமாய் ஆர்வம் இல்லை... நக்கல் மட்டுமே என்று உணர்த்த...



எரிச்சலுடன் பதில் சொன்னாள்...

''இது என் பர்சனல் விஷயம்... உங்களுக்கு சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை சார்... சொல்லவும் மாட்டேன்...''

''ஓ... ஆண் நண்பர்... ம்ம்... இல்லை... காதலனா...'' கிண்டலாய் ஒலித்தது அவன் குரல்.

''திஸ் இஸ் த லிமிட்... உங்கள் ஊகத்தை 'க்ளியர்' பண்ணப் போவதில்லை... என் வேலைகளில் ஏதாவது அதிருப்தி இருந்தால் அதைச் சொல்லுங்கள்... காது கொடுத்துக் கேட்கிறேன்.. இந்த மாதிரி... ஃப்பூ...'' என்றவள் தலையை நிமிர்த்திக் கொண்டு அங்கிருந்து விரைந்தாள்...

ஓ! காட்! சம்பளம் தரும் முதலாளி என்றால்... எது வேண்டுமானாலும் பேசிவிடுவதா.. எதற்கும் ஒரு எல்லை உண்டு... இவன்... இப்படி என் பொறுமைக்கு சவால் விடுகிறானே... உள்ளம் கொதித்தது. அங்கே ஆதித்யாவும் கொதித்துக் கொண்டிருந்தான்...

தான் நினைத்தது சரிதான்... இவள் உளவாடத்தான் வந்திருக்கிறாள்... தான் அறிந்து கொண்ட விஷயங்களை ஒப்புவிக்கத்தான் யாருக்கோ போன் செய்து பேசியிருக்கிறாள்... அது யாராக இருக்கும்... இவள் அம்பு... இவளை ஏவிவிட்டவன் யார்?

எனக்கு எதிரியா... தொழிலில் என்னை முடக்கப் பார்க்கும் போட்டியாளரா... என் தந்தையை அழித்தது போல என்னையும் செய்யப் பார்க்கிறார்களா... 'உதயா காபி'க்குப் போட்டியாய் எத்தனையோ காபி தயாரிப்புகள் வந்து விட்டன... எதைச் சந்தேகிப்பது. ஆனந்த் காபியா...

சிக்மகளூர் காபி வொர்க்ஸா... இல்லை ஜீவா இன்ஸ்டண்ட் காபியா... யாரைச் சொல்வது... சே...

இவள் வந்ததில் இருந்து மண்டைக் காய்ச்சல் வந்து விட்டது... இவளைத் துரத்திவிட வேண்டும். ஊகூம்... முடியாது அது உடனே சாத்தியமில்லை... இவள் போனால் இன்னொருவர் வேறு வழியில் வந்து விடலாம். முதலில் இவளை 'ரெட் ஹாண்ட்'டாக பிடித்து விட்டால் அப்புறம் எதிரியை மடக்கி விடலாம் தான்...

இனி இவளது ஒவ்வொரு அசைவையும் கவனிக்க வேண்டும்... இவளது சூட்கேஸை 'செக்' பண்ணினால் விலாசம் விவரம் தெரியலாமே.

மனசுக்குள் சின்ன நெருடல்... அது நாகரீகம் இல்லையே என்ற முணுமுணுப்பு வேறு.

ஆனால் ஆபத்துக்கு பாவம் இல்லை என்று பட்டது. தக்க சந்தர்ப்பம் வர... காத்திருக்கும் கொக்காய் எதிர் நோக்கி இருந்தான் ஆதித்யா.

## 7

வசுதாவிற்கு விருந்தினர்கள் வரப் போகிறார்கள் என்ற செய்தி கலவரத்தைத் தந்தாலும்... அவர்கள் யார்... எதற்கு இந்த திடீர் வருகை என்ற ஆர்வம் துளைத்தது... கற்பகத்திடம் விசாரித்தாள்.

''இவர்களும் சொந்தக்காரர்கள் தான் வசு... தூரத்து சொந்தம்... சந்திராவுக்கு... அதான்... ஆதியோட அம்மாவுக்கு சகோதரன் முறை என்று சொல்லிக் கொண்டு வருவது உண்டு. எப்படியாவது தன் மகளை ஆதிக்குக் கட்டி வைக்கணும்னு அவர்களது ஆசை... மல்லிகா படி



சோம்பேறி... உடல் வளைத்து வேலை செய்ய மாட்டாள். சின்னத் துரும்பையும் அசைக்க மாட்டாள். இந்த வீட்டுக்கு அவள் எஜமானியா வந்து விட்டால்... வீடு உருப்பட்ட மாதிரிதான்'' என்றார் கற்பகம்... சிறு சலிப்புடன்.

''ஆதித்யாவிற்கும் இதில் விருப்பமா ஆன்ட்டி..'' என்று கேட்டாள் வசுதா.

அவளுக்கு வியப்பு! 'ரிங் மாஸ்டர்' மாதிரி விரட்டும் ஆதித்யாவுக்கும் சோம்பேறியான மல்லிகா ஜோடி! ஆகா! என்ன பொருத்தம்...

''யாருக்குத் தெரியும். அவன் எதையும் வெளிக்காட்ட மாட்டான். அவனுக்கு மல்லிகாவைப் பிடிச்சதா... இல்லையான்னு தெரியல்லே... மல்லிகாதான் இவனிடம் வழிவாள். ஆனா... உதயாவிற்கு மல்லிகா மீது கொள்ளைப் பிரியம். தன் வருங்கால அண்ணி அவள் தான் என்பதை முடிவே பண்ணிவிட்டாள். நிரஞ்சனுக்கு மல்லிகாவின் சோம்பேறித்தனமும்... ஆதிக்கிட்டே வழியறதையும் பார்க்க எரிச்சலா வரும்... எப்படா தொலைவார்கள் என்று முணுமுணுப்பான்... ரோஹனுக்கும் அவளைச் சுத்தமா பிடிக்காது. சள்ளென்று விழுவான். என் அண்ணியா வர இவளுக்கு எந்தத் தகுதியும் இல்லவே இல்லை ஆன்ட்டி என்று என்கிட்டே சொல்வான். அவளையும் குற்றம் சொல்ல முடியாதும்மா... ஆதி இருந்தால் தேனொழுகப் பேசும் மல்லிகா... ஆதி இல்லா விட்டால் ரோஹனிடம் சிடுசிடுப்பாள்... அவனை ஏதாவது குற்றம் சொல்லுவாள்... இந்தப் பிள்ளைகளிடம் அவளுக்கு சுத்தமா பாசம் இல்லை... இவள் வந்து என்னத்தைக் கிழிக்கப் போகிறாள்... அவளுக்கு ஆதி

மட்டும் போதும்.. இவர்கள் எல்லாம் துச்சம்தான்... இது புரிஞ்சிக்காமல் உதயா அவனிடம் இளிவாள்... இப் போதும் கூட இவர்களது திடீர் வருகைக்கு ஏதோ காரணம் இருக்கும் என்று நினைக்கிறேன். ஏன்னா... முந்தா நேத்து உதயா போனில் ரொம்ப நேரம் பேசியதைக் கவனித்தேன். இவள் எதையோ மூட்டியிருப்பாள் போல... அதான்... ஓடி வருகிறார்கள்..."

"மூட்டியா... அப்படின்னா..." புரியாமல் கேட்டாள் அவள்.

"அப்படின்னா... ஒன்னுமில்லாத விஷயத்திற்கு உப்பு... காரம் சேர்த்து சொல்லியிருக்கா... அதாவது ஒன்னுக்கு இரண்டா பேசி இங்கே வரவழைத்திருப் பான்னு சொல்கிறேன்... உன்னைப் பார்த்ததும் உதயா விற்கு பயம் வந்து விட்டது... எங்கே தன் அண்ணனை வளைத்துப் போட்டு விடுவாயோன்னு."

"சே... இதென்ன அபத்தம் ஆன்ட்டி... நான் இங்கே வேலைக்கு என்று வந்தவள்..."

"ஆனா... அழகாக இருக்கியே... மல்லிகாவை விட அழகு... ஊஹும்... மல்லிகாவை அழகின்னும் சொல்ல முடியாது..."

"இல்லே ஆன்ட்டி... உதயா கிட்டத் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன்... பயப்படவே வேண்டாம். நான் தங்கப் போவது இன்னும் ஒரே மாதம் தான். அப்புறம் புறப்பட்டு விடுவேன். உன் அண்ணனுக்கு அந்த மல்லிகாவே வரட்டும். நிச்சயம் உன் ஆசை நிறை வேறும் என்று..." படபடவென்று பொரிந்த வசுதாவை வியப்புடன் பார்த்தார் கற்பகம்.



"உண்மையிலேயே இந்த இடத்தை விட்டுப் போக அத்தனை அவசரமா உனக்கு வசுதா. நான் என்னென் னவோ கனவு கண்டு கொண்டிருக்கிறேன்... அது புரியாமல்... போவதிலேயே குறியாக இருக்கியே..." ஆதங்கத்துடன் சொன்னார் கற்பகம்.

"கனவா... அதென்னது ஆன்ட்டி..." குழப்பத்துடன் கேட்டாள் வசுதா.

நான் போவதற்கும்... இவரது கனவுக்கும் என்ன சம்பந்தம்...

"ப்ச்சு... அதைவிடும்மா... நீ இங்கு இருக்கனும் வசு. உனக்கு உண்மையிலேயே நிரஞ்சன் மீதும் ரோஹன் மீதும் அக்கறை இருக்கிறது என்று நினைக்கிறேன். ஏன் ஆதித்யாவின் நலன் மீதும் உனக்கு சிரத்தை இருக் கிறதுன்னு தெரிகிறது... அதைப் பார்க்கிறப்போ எனக்கு மகிழ்ச்சியா இருக்கு... இந்தத் தாயில்லாப் பிள்ளைகளுக்கு அன்பான கவனிப்பும்... அரவணைத்துப் போகும் சுபாவ மும் அவசியம் வசு... அது உன்கிட்டே இருக்கு... இந்த வீட்டில் நீ வளைய வர்றதும் பொருத்தமா இருக்கும்மா... இங்கேயே இருந்துடேன் வசு..."

கற்பகத்தின் அன்பில் நெகிழ்ந்து போனாள் வசுதா.

அவளுக்கும் தான்... அதே வீட்டில் ஏதோ காலம் காலமாய் இருந்தது போல பாந்தமாய் இருந்தது. ஆன்ட்டி சொல்வது நிஜமே...

நிரஞ்சனும் ரோஹனும் உடன்பிறவா சகோதரர்களைப் போலப் பழகுகிறார்கள்... வேலைக்கு வந்தவள் என்று இளப்பமாய் நினைப்பதில்லை.

ஆனால்... ஆதி... அவளை ஏதோ எதிரியாக அல்லவா

இவர்களுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்ய வந்தது மாதிரி... இவர்களுடன் அந்த மல்லிகாவும் சேர்ந்து விட்டால்... அய்யோ... சொல்லவே வேண்டாம் அவர் காது வெப்பப் பார்வையில் மூச்சு முட்டும். பெருமூச்சு விட்டாள் அவள்.

"ஆன்ட்டீ... இப்ப நடக்க வேண்டியதை கவனிப் போமே. நான் போய் என் வேலைகளைப் பார்க்கிறேன். நிறைய வேலைகள் எனக்காக கையைக் கட்டிக் காத் திருக்கின்றன... அதையெல்லாம் முடிக்கணும். முதல்ல சமையலை முடித்துவிட்டு... மத்ததைச் செய்யறேன்..." என்று கிளம்பினாள் வசுதா.

"சும்மா... எனக்கும் வேலை தா... ஒண்டியா நீ அல்லாட வேண்டாம்... உட்கார்ந்த வாக்கில் காய்கறி நறுக்கித் தர்றேன்..."

"தேவையில்லை ஆன்ட்டி... ஹாயா டி.வி. பாருங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்... இந்த ஓய்வு மறுபடியும் உங்களுக்குக் கிடைக்காது. இப்பவே நன்றாய் அனு பவியுங்கள் ஆன்ட்டீ..." சிரித்தவாறு சொல்லி விட்டுச் சென்றாள் வசுதா.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த கற்பகத்தின் மனதில் சின்ன நப்பாசை... "நான் நினைத்தது நடந்து விட்டால்... கடவுளே நிறைவேத்துப்பா..." என்ற மானசீகமான வேண்டுதல் வேறு...

'[illegible]' என்று கூவிய குக்கரை அடக்கிய அதே நேரம் போன் அழைத்தது.

போன் எடுத்தாள்.

"மிஸ்டர் ஆதித்யா இருக்கிறாரா..." ஆங்கிலத்தில் கேட்டது ஒரு குரல்.



"இப்போது இங்கு அவர் இல்லை... என்ன விஷயம் என்று சொன்னால்..." ஆங்கிலத்தில் பதில் சொன்னாள்.

"நீங்க யார் என்று சொல்ல முடியுமா..."

"நான்... அவரது வீட்டில் இருப்பவள் தான்..."

"ஓ.கே... நான் பிரின்ஸிபால் ஜோசப் பேசுகிறேன். ஆதித்யாவின் தம்பி ரோஹனைப் பற்றிச் சொல்லத்தான் போன் செய்தேன்... ஒருவாரமாய் ரோஹன் பள்ளிக்கு வரவில்லை... லீவு லெட்டரும் தரவில்லை. உடம்பு சரியில்லையோ என்று விசாரிக்கத்தான் அழைத்தது... அவனுக்கு ஏதுமில்லையே..."

'துணுக்' என்றது அவளுக்கு.

ரோஹன் பள்ளிக்குப் போகவே இல்லையா... அதுவும் ஒரு வாரமாய்... ஏன்... எதனால்...

தினமும் ஸ்கூலுக்கு என்று புறப்படுகிறான். போவது எங்கே... என்னவோ சரியில்லை போலத் தெரிகிறதே...

"ஹலோ... உங்களது மௌனத்தைப் பார்க்கிறபோது இது உங்களுக்கும் அதிர்ச்சிதான் என்று புரிகிறது. ரோஹன் நன்கு படிக்கிற பையன்... ராங்க் லிஸ்டில் வந்து 'இன்ஸ்டிட்யூட்'க்கு பெருமை தேடித் தருவான்னு நம்பிக் கொண்டிருக்கிறோம்... உடம்பு சரியில்லை என்றால் பரவாயில்லை... ஆனால் சமீபமாய் படிப்பில் கூட ஆர்வம் குறைந்தது போலத் தெரிகிறது... அவனுக்கு ஏதாவது புது சகவாசம்... புதுப் பழக்கம் வந்திருக்கிறதா என்று விசாரியுங்கள்... ஆனால் இதமாய் கேளுங்கள்... இந்த விஷயத்தை மிஸ்டர் ஆதித்யாவின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்றுதான் போன் பண்ணி னேன்... அவர் வந்ததும் விஷயத்தைச் சொல்லி விடுங்கள்."

சிலீவளை இயந்திரமாய் வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள்...

கடவுளே.. ரோஹனுக்கு என்ன ஆயிற்று... நல்ல பையனாய் இருந்தவன்... படிப்பு.. படிப்பு என்று இருந்தவனிடம் திடீர் மாற்றம் என்றால்... ஏதாவது புதுப் பிரச்சனையில் மாட்டிக் கொண்டிருக்கிறானோ. இப்போது தான் மாணவர்கள் ஏதேதோ விநோதமாய் செய்கிறார்களே... அந்த மாதிரி..

ஒருவேளை... கேர்ள் ஃப்ரெண்ட் என்று... தலையை உதறிக் கொண்டாள்... ச்சீ... இதென்ன விபரீத கற்பனைகள். ஏதேதோ நினைத்து மனதை உழப்பிக் கொள்கிறாளே... அந்த மாதிரி எதுவும் இருக்காது...

ஆனால் இந்த விஷயம் ஆதித்யாவிற்கு தெரியவும் கூடாது. அவருக்கு 'முணுக்' என்றால் கோபம் வந்து விடும். அந்தக் கோபத்தில் தம்பியை அடித்தும் விடுவார்.

முதலில் ரோஹனைப் பார்க்க வேண்டும்.. அவன் எங்கே இருக்கிறான் என்று தெரியவில்லையே...

பதட்டத்துடன் சமையலை முடித்தவள்... கற்பகத்திடம் வந்து... கொஞ்சம் மளிகை சாமான்கள் வாங்க வேண்டும் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

நல்லவேளையாய்... அவனது பள்ளியைப் பற்றி கேட்டு வைத்திருந்தது இப்போது கைக் கொடுத்தது. மங்களூரில் பெயர் பெற்ற கல்விக் கூடம்... அதில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க பெற்றோர் துடியாய் துடிப்பார்கள் என்று நிரஞ்சனும் சொல்லியிருந்தான்... பள்ளியின் பெயரைச் சொன்னதும் ஆட்டோ டிரைவரும் எதுவும் சொல்லாமல் அழைத்துச் சென்றான்.



பள்ளி வளாகத்தில் நுழைந்ததுமே அந்த பள்ளிச் சாலை... கல்வியில் மட்டுமல்ல... ஒழுங்கு கட்டுப் பாட்டிலும் முதல் தான் என்று தெரிந்தது.

மாணவன் ஒருவனிடம் ரோஹனின் வகுப்பைக் கூறி அதன் ஆசிரியையை சந்திக்க வேண்டும் என்று சொன்னதும்... அவனும் 'ஓ... தெரஸா மிஸ்... வாருங்கள்' என்று அழைத்துச் சென்றான்.

ஐம்பது வயதில்... எளிமையான தோற்றத்தில் இருந்த அந்தப் பெண்மணியைப் பார்த்ததும் அவரிடம் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது வசுதாவிற்கு...

''யெஸ்... வாட் கேன் ஐ டூ ஃபார் யூ'' என்று அமைதியான குரலில் கேட்டார் அவர்.

வசுதா ரோஹனைப் பற்றி விசாரித்ததும்... அவரது முகத்தில் மாற்றம்... வருத்தமோ...

''நைஸ் பாய்... படிப்பில் ரொம்ப சுட்டிதான்... ஏனோ... கொஞ்ச நாட்களாய் அவனிடம் ஒரு சேன்ஜ் வந்திருக்கிறது. படிப்பில் முன்னைய முனைப்பு இல்லை... ஏதோ சோர்வு.. எங்கேயோ வெறிப்பு... ஒரு வாரம் கிளாஸுக்கு வராததால் பிரின்ஸியிடம் சொல்ல வேண்டி வந்தது. ஆமாம்... ரோஹனுக்கு நீங்கள் என்ன வேண்டும்... ஸிஸ்டரா...''

இல்லை என்று தலையசைத்தவள் ''ஸிஸ்டர் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள் மேடம். அவன் தினமும் ஸ்கூலுக்கு வருகிறான் என்று நினைத்தேன்... ஆனால் இப்படிச் செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை... அவனது நெருங்கிய நண்பன் என்று யார் இருக்கிறார்கள் மேடம்... அவனிடம் விசாரிக்கலாம்னு...'' என்றதும்...

"நானே விசாரித்து விட்டேன்... அவனுக்குச் சில புது நண்பர்கள் கிடைத்திருக்கிறார்களாம். பணக்கார வர்க்கம்... அவர்களுடன் திரிவதாய்த் தெரிந்தது... ஆனால் அவர்கள் இந்தப் பள்ளி மாணவர்கள் இல்லை... மேலும்..." என்று அவர் தயங்க...

"மறைக்காமல் சொல்லுங்கள் மேடம்..."

"இது என் ஊகம்தான்... 'டிரக்' பழக்கத்தில் சிக்கியிருக்கலாமோன்னு நினைக்கிறேன்..."

"அய்யோ..." அதிர்ந்து போனாள் வசுதா.

"பயப்படாதீர்கள்... ஆரம்பமாக இருந்தால் உடனே நிறுத்திவிடலாம். இதை நான் பிரின்ஸிபாலிடம் சொல்லவில்லை... சொன்னால் பள்ளியிலிருந்து வெளியேற்றி விடுவார் என்ற பயம்தான்... அவருக்கு 'டிஸிப்பிளின்' தான் முக்கியம்..." என்றார் மேடம் தெரஸா.

"தாங்க்யூ மேடம்."

"என் கடமையைத்தான் நான் செய்தேன்... ஒரு நல்ல மாணவனோட எதிர்காலம் பாழாகக் கூடாது என்பதுதான் என் எண்ணம்..."

"இப்போது அவனை எங்கு போய் தேடமுடியும்னு தெரியவில்லையே..."

"எனக்குத் தெரிந்த மட்டில் இந்த மாதிரி 'டிரக்' அடிக்ட்களுக்கு மரங்கள் அடர்ந்த பூங்காக்கள் தான் சொர்க்கபுரி... அங்கெல்லாம் தேடிப் பாருங்களேன்."

அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் வசுதா.

அவளுக்கு மலைப்பாக இருந்தது.



ஒவ்வொரு பூங்காவாகத் தேடி... இன்ச்.. இன்ச்சாக சுற்றிப் பார்த்து... ம்ம்... இது நடக்கிற காரியமாகத் தெரியவில்லையே...

வீட்டில் அத்தனை வேலைகளையும் புறக்கணித்து விட்டு அலைந்து திரிவது என்பது சாத்தியமா... சலிப்புடன் புறப்பட்டாள் அவள்.

ரோஹன் எப்போது வருவான் என்று காத்திருந்தாள்.

சரியாய் ஐந்தரை மணிக்கு அவன் வந்தான்.

எதுவும் பேசாமல் தன் அறைக்குள் சென்று படுத்துக் கொண்டான்.

வசுதாவிற்கு தெரஸா மேடம் சொன்னது உண்மைதான் என்று ஊர்ஜிதமாயிற்று.

இது எங்கே போய் முடியுமோ என்ற தவிப்பும் வந்தது. சொல்லவொண்ணா வேதனையில்... இதயம் சுருண்டு கொண்டு விட்டதைப் போல வலித்தது.

பாவம்... சின்னப் பிள்ளை... இப்படிச் சீரழிந்து போகிறானே... எப்படியாவது இதைத் தடுக்க வேண்டும்... அதுவும் ஆதித்யாவிற்குத் தெரியாமல்... எப்படி... வழிதான் தெரியவில்லை...

தெய்வமே... இந்தச் சிக்கலுக்கு ஒரு வழிகாட்டு... நூல் சிக்கலாய் இருக்கும் இந்தப் பிரச்சனையின் நுனியை மட்டும் காட்டி விடு போதும்... முயற்சி பண்ணி அதைத் தீர்த்து விடுகிறேன்... உள்ளம் உருகலாய் வேண்டியது...

## 8

வசுதாவிற்கு உள்ளுக்குள் கேள்விகள் குடைந்தன. இன்றைக்கு 'ஸ்பெஷல்

கிளாஸ்' என்று சொல்லி... புறப்பட்டுக் கொண்டிருக் கிறானே ரோஹன்... உண்மையில் 'ஸ்பெஷல் கிளாஸ்' இருக்கிறதா... இல்லை... இதுவும் ஒரு பொய்தானா... எதற்காக இந்தப் பொய்... இதை எப்படிக் கண்டு பிடிப்பது...

அடிக்கடி அவனது பார்வை மாடி மீதே தாவின...

''வசுதா... டிபன் ரெடியா...'' சட்டையின் பட்டனை மாட்டியவாறு வந்த நிரஞ்சன் கேட்க...

இயந்திரத்தனமாய் சிற்றுண்டியை எடுத்து வந்து சாப்பாட்டு மேஜை மீது வைத்தாள்.

ரோஹன் புறப்பட்டு விடுவானா... அவனை எப்படித் தடுப்பது... இல்லை... அவனைத் தொடர்ந்து சென்று எங்கே போகிறான்... என்ன செய்கிறான் என்று பார்த்து விடலாமா...

நிரஞ்சனிடம் சொல்லி அவனது உதவியைப் பெற் றால்... வேண்டாம்... கூடாது... அவன் ஆண் பிள்ளை... அவசரப்பட்டு ரோஹனைக் கடுமையாகப் பேசி விடுவான்.. இது நிதானமாய் செயல்படும் விஷயம்...

ரோஹனுக்கும் என் மீது கோபம் வரக்கூடாது.

தவிர... வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் இவனிடம் இதைச் சொல்லி... தலை கெடுக்க வேண் டாமே...

''என்ன வசுதா... இன்னிக்கு எதுவும் பேசாமல் மௌன மாய் இருக்கே... மௌன விரதமாக்கும்...'' பரிகாசமாய் கேட்டான் நிரஞ்சன்.

அவனது கேள்விக்கு சின்னதாய் சிரித்தவள் ''ஊரி லிருந்து 'கெஸ்ட்' வருகிறார்களே... அவர்களை வர



வேற்க... எல்லாம் தயாராக இருக்க வேண்டும் இல்லையா... அந்த யோசனை தான்... அவர்கள் எப்படி நிரஞ்சன்...'' என்று கேட்க...

''எப்படியென்றால்... அவர்களும் மனிதர்கள் தான்... தலையில் கொம்போ... முதுகில் இறக்கைகளோ... கிடை யாது... நம்மைப் போலவே சாட்சாத் மனிதப் பிறவிகள் தான்...''

''அய்யோ... நான் அதைக் கேட்கவில்லை... அவர்கள் எப்படிப் பழகுவார்கள்... எந்த மாதிரி குணம் என்ற அர்த்தத்தில் கேட்டேன். அவர்களின் சுபாவத்தைப் பற்றித் தெரிந்து கொண்டால்... அதற்கு ஏற்ற மாதிரி நடந்து கொள்ளலாம் இல்லையா...''

''அதுசரி... முதல்ல நம்ம சீப் கெஸ்ட்... ஸாரி... சீஃப் கெஸ்ட் மல்லிகாவைப் பத்திச் சொல்லணும்னா... அவளைப் பார்க்கிறபோது ஒரு பழமொழியை நினைத்துக் கொள்ள வேண்டும் வசுதா... துஷ்டனைக் கண்டால் தூர.. தூர ஓடு... கடுகடுப்பு... சிடுசிடுப்பு... அவள் முகத்தில் சிரிப்பு வருவதே ஆதியைப் பார்த்ததும் தான்... மற்ற நேரத்தில் இஞ்சி தின்ன குரங்கு...''

''நிரஞ்சன்....''

''இரு... வசுதா... இன்னும் இருக்கிறது... அவளோட அப்பாவைப் பத்தி சொல்லணும்னா... அடடா... இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கற மாதிரி பார்க்க சாது... பேச்சில் வெண்ணெய்... மனதில் அத்தனையும் விஷம்... பொண்ணு குரங்குன்னா... அப்பா நரின்னு சொல்ல வேண்டும்... யாரை... எப்போ ஏமாத்தலாம்னு நினைக்கும் குள்ள நரி... தன் மகளை இந்த வீட்டிற்கு எஜமானி ஆக்கிவிட வேண்டும் என்பது அவரது நீண்ட

நான் கனவு. அப்புறம் இங்கேயே தங்கி கொட்டம் அடிக்கலாம் என்ற ஆசை...''

''மை காட்...!''

''அதற்குள் கடவுளை அழைக்கிறாயே... இன்னும் தாய் குலத்தைப் பற்றி சொல்ல வேண்டி இருக்கிறது... அவங்களுக்கு ஒரு பொருத்தமான பழமொழி சொல்ல வேண்டும்னா... ம்... அத்தை சொல்லுவார்களே... ஆர் ஒய்யாரக் கொண்டையாம்... உள்ளே ஈறும் பேனாம்... வசதி இல்லாத போதும்... டாம்பீகம் ஆடம்பரம்... பணக்காரத்தனம்... ஏதோ ராஜ பரம்பரையச் சேர்ந்தவர்கள் மாதிரி அலட்டல் வேறு. நல்ல பண்பாடோ... குணமோ... சத்தமோ கிடையாது... எல்லாமே குட்டையில் ஊறிய மட்டைகள்...''

''அவர்களோட சுபாவத்தைத் தானே கேட்டேன் நிரஞ்சன். அவர்களோட துர்குணங்களைப் பட்டியல் போடுகிறாயே...''

''இருக்கிறதை தானே சொல்ல முடியும்... இல்லாததை எப்படிச் சொல்வது...''

''இதெல்லாம் தெரிந்துதான் உங்க அண்ணா மல்லிகாவை மணக்க சம்மதித்தாரா நிரஞ்சன்...''

''ஆதி மனதில் என்ன இருக்கிறது என்று சத்தியமா எனக்குத் தெரியாது வசுதா... அவன் வெளிப்படையா சொல்லா விட்டாலும்... அவர்களிடம் பழகுவதை வைத்துப் பார்த்தால் அவனுக்கும் சம்மதமே என்று படுகிறது... ம்ம்... பட்டால் தான் புரியும் பரதேசிக்கு...''

'களுக்' என்று சிரித்தாள் வசுதா...

''பரவாயில்லை... பழமொழிகளை சரமாரியாக அடுக்கிறீங்களே... மெச்சத்தான் வேண்டும்'' என்றாள் அவள்.



''எல்லாம் அத்தையின் உபயம்... அப்பப்போ பழமொழிகளையும்... பொன்மொழிகளையும் உதிர்ப்பார்கள்... அதைப் பொறுக்கி வைத்துக் கொள்வது உண்டு... நேரம் கிடைக்கிறப்போ எடுத்து விடுவேன். என் அண்ணனுக்கும் ஒரு பழமொழி வைத்திருக்கிறேன் சொல்லட்டுமா...

''அப்படியா.. சொல்லுங்களேன்... பார்க்கலாம்.''

''சிறுத்தை தன் புள்ளிகளை மாற்றிக் கொள்ளாது...''

''தான் பிடித்த முயலுக்கு மூணே கால்... அத்தனை பிடிவாதம்..''

''ஓ! அப்படியென்றால் எனக்கும் சொல்வீர்கள் போல...'' கேலியாய் கேட்டாள் அவள்.

''ஏனில்லை... உன்னைப் பார்த்ததும் உடனே நினைவுக்கு வந்தது...''

''ம்ம்... சொல்லுங்க...''

''ஊகூம்... வேண்டாம்... விடு...''

''நோ... அதைச் சொல்லி விடுங்கள் நிரஞ்சன்... ப்ளீஸ்...''

''அது.... மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கற மாதிரிதான்.... ஏன்னா... உன்னைப் பார்த்தா சமையல் வருபவள் மாதிரி தெரியல்லையா... உன்னை நம்பி கிச்சன் பொறுப்பைத் தர்றாங்களேன்னு...''

''ஏய்...ய்...'' பொய்க் கோபத்துடன் தன் கையில் இருந்த ப்ளாஸ்டிக் மூடியை அவன் மீது எறிந்தாள். அது தன் மீது விழாமல் இருக்க... நிரஞ்சன் விலகிக் கொள்ள... அது அவனைத் தாண்டி தூரப் பாய்ந்தது. அந்த நேரத்தில்தானா ஆதித்யா வரவேண்டும்... அந்த மூடி அவனது மார்பை முத்தமிட்டு... பின்பு கீழே விழ... ஆதித்யா கோபத்துடன் பார்த்தான்.

“என்ன இது.. விளையாடும் நேரமா இது... வெட்டியாய் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்காமல்... வேலை செய்வது தானே... ஏய்... நிரஞ்சன்... உனக்கு ஒரு வேலையைக் கொடுத்திருந்தேனே... அதை மறந்து விட்டு... இங்கே என்ன வம்பு... போ... இன்றைக்கு பாங்கில் 'காஷ்' போட்டேயாகனும்... இல்லே 'செக்' 'பவுன்ஸ்' ஆகிவிடும். உடனே கிளம்பு... அவரவர் வேலையை சரியாக செய்யப் பாருங்கள்...”

கடைசி வார்த்தை தனக்குத்தான் என்பதை நன்கு உணர்ந்தாள் வசுதா...

'சர்' என்று எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

வேலை எதுவும் செய்யாமல் வீணாய் வம்பளப்பது போலப் பேசுகிறான்... சிற்றுண்டி... சாப்பாடு எல்லாம் என்ன... மாயாபஜார் மாதிரி தவழ்ந்து வருகிறதாக்கும்...

பற்களைக் கடித்தாள் அவள்.

நிரஞ்சன்... பாவம்... அண்ணனுக்கு அடங்கியவனாய் “இதோ... புறப்பட்டாச்சு...” என்று கிளம்பி விட்டான். அவன் செல்வதை ஒரு பரிதாபப் பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளை அவனது விரல் சொடுக்கல் திரும்பச் செய்தது.

“ஹலோ... நானும் கிளம்பியாச்சு... டிபன் ரெடியா...” என்றான் முகத்தைச் சுளித்தவாறு...

நிரஞ்சனுடன் அரட்டை அடித்ததற்கு இந்த முகச் சுளிப்போ... அது சரி... என்றைக்கு மந்தஹாச வதனமாய் இருந்திருக்கிறது... எப்போதும் கடுகடுதான். சரியான சிடுமூஞ்சி... உர்ரான் கோட்டான்... கடுவன் பூனை... சூர்ப்பா...

“சட்னியில் உப்பில்லை... சாம்பாரில் உறைப்பில்லை... 'சப்'பென்று இருக்கிறது... வேலையில் கவனம் இருந்தால் தானே சாப்பாட்டில் ருசி இருக்கும்... சே... வாயில் வைக்க முடியவில்லை...” கையை உதறினான் அவன்...

வேண்டும் என்றே குறை சொல்கிறான்... நிரஞ்சன் சாப்பிட்டபோது எதுவும் சொல்லவில்லை... எரிச்சலை இப்படிக் காட்டுகிறான் போலும்.

பொங்கி வந்த ஆத்திரத்தை கஷ்டப்பட்டு அடக்கியவள்....

“தூக்கலாய் காரம் வேண்டாமே என்று அளவாய் சேர்த்தேன்... உங்களுக்கு அது 'சப்'பென்று இருக்கிறது.” என்றாள்.

“சாப்பிடுவது நான்... என் ருசிக்கு ஏற்ற மாதிரி சாப்பாடு இருக்கட்டும்... அதற்குத்தான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்... தெரிகிறதா...” கொஞ்சம் அதட்டலாகவே ஒலித்தது அவனது குரல்.

அதுவரை சுருண்டு கிடந்த கோபம்... இனியும் மாட்டேன் என்று உச்சிக்கு ஏறியது.

என்ன அதிகாரம்... வேலைக்கு வந்தவள் என்றால் மட்டமா என்ன... ஏதோ அடிமை மாதிரி அடக்குகிறானே...

தன் கோபத்தை வார்த்தைகளில் காட்டினாள். அதுவும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல...

“அடடா...' முணுக்கென்றால் உங்களுக்குக் கோபம் வருகிறதே... ஒரு வேளை... இரத்த அழுத்தமாய் இருக்கலாம் என்று நினைத்து உப்பு... காரத்தைக் குறைத்தேன்... இப்படி எதற்கெடுத்தாலும் 'வள்வள்' என்று

சுத்துவது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல... எதற்கும் ஒரு தடவை உங்க பி.பி.யை 'செக்' செய்யுங்கள்... பயப்பட வேண்டாம். ஒரு மாதத்திற்கு இப்படி உப்பும் உறைப்பும் இல்லாமல் சாப்பிட்டால் நார்மலுக்கு வந்துவிடும்..."

உதட்டில் போலிப் புன்னகையுடன் சொன்னவள்... அவனது முறைப்பை சட்டை செய்யாமல் 'ஹாட்' 'பேக்'கை எடுத்துக் கொண்டு சென்றாள்.

'டண்' என்ற சத்தம்... டம்ளர் மேஜை மீது வைத்த சத்தம்...

அய்யாவிற்குக் கோபம்! இருக்கட்டும்... எனக்கும் கோபம் வரும் என்பதை அவனும் தெரிந்து கொள்ளட்டும்.

எல்லோரையும் போல இவரது உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயப்படுவேன் என்ற நினைப்பாக்கும்.. நெவர்...

நான் ஒன்றும் நிரஞ்சனோ... ரோஹனோ இல்லை... பயத்தில் பணிந்து போக...

பாவம் நிரஞ்சன்... எப்படி அடித்துப் பிடித்துக் கொண்டு புறப்பட்டான்...

எல்லோரும் தன் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டும்... தன்னைப் பார்த்து நடுங்க வேண்டும் என்ற எண்ணம்... ஆணவம்... சர்வாதிகாரம்...

சின்னப் பிள்ளை ரோஹன்...

ஆமாம்... இன்னும் ஏன் ரோஹன் கீழே வரவில்லை...

ஸ்பெஷல் க்ளாஸ் என்றானே... போகவில்லையா...

இல்லை போல...



அவன் எண்ணமிட்டபோதே... அவன் இறங்கி வருவது தெரிந்தது.

அவனது முகம் இயல்பாய் இல்லை... ஏதோ பரபரப்பு... ஒரு தவிப்பு...

நான்கு படிகள் இறங்கியிருப்பான்...

டெலிபோன் ஒலிக்க... அதே பரபரப்புடன் மறுபடியும் மேலே ஓடினான்.

அவனது நடவடிக்கை சந்தேகத்தைத் தருகிறதே... வசுதாவின் புருவ மத்தியில் முடிச்சு...

என்னவோ இருக்கிறது என்று மனப்பட்சி முணுமுணுத்தது.

யார் போனில்... நேரே சென்று ரிஸீவரை எடுத்து காதில் வைத்தாள்... மாடியில் அவன் எடுத்து பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"எங்கேன்னு சொல்... அதே இடம் தானே..."

"ஆமாம்... சுத்ரி பார்க்... வந்துவிடு..."

"சதீஷ்க்கு தெரியாதே..."

"சொல்லிடு... ஆல் இண்டியா ரேடியோ ஆபீஸுக்கு கிட்டேன்னு... ஓகே... நாம அங்கே மீட் பண்ணுவோம். அப்புறம்... மறக்காம பணம் கொண்டு வந்துவிடு... என்ன..." அழகான கான்வென்ட் ஆங்கில உச்சரிப்பில் பேசியது குரல்... இவனுடன் படிக்கும் மாணவனா...

கீழே இறங்கி வந்த ரோஹனை உற்றுப் பார்த்தாள் வசுதா. அவளது கண்களை நேராகப் பார்க்காமல் கேட்டான் அவன்.

"அண்ணா... எங்கே... போயாச்சா..."

''அவரது அறையில்தான் இருக்கிறார்.. என்ன விஷயம் ரோஹன்... ஏதாவது சொல்ல வேண்டுமா...'' என்று விசாரித்தாள் அவள்...

அவனது வாயிலிருந்து என்ன வருகிறது என்று பார்க்கலாம் என்ற நினைப்பில்..

''வந்து... ஸ்கூல்ல 'ப்ராஜெக்ட்' பண்ணணும்... பணம் வேண்டும்... அதான்...''

பொய்... பணம் கொண்டு வர மறக்காதே என்றானே அந்தச் சிநேகிதன்... ஏதோ தப்பு செய்கிறான்.. அதை மறைக்கப் பார்க்கிறான்...

பள்ளிக்குச் செல்லாமல் 'கத்ரி' பார்க்கிற்கு செல்பவன் 'ப்ராஜெக்ட்' என்றெல்லாம் அளக்கிறான்...

ஒரு வேளை... அவனது மேடம் சொல்வது போல போதைப் பொருளோ... ஆதித்யாவிடம் பணம் வாங்கிக் கொண்டு இப்படி அவசரமாய் புறப்படுவதைப் பார்த்தால்... என்னவோ நெருடலாய் படுகிறது...

இனி சும்மா இருப்பது தப்பு...

உடனே செயல்பட்டாள் வசுதா...

கற்பகத்திடம் ஓடிச் சென்று 'ஆன்ட்டி... ஒரு அரை மணி நேரம் வெளியில் வேலை இருக்கு... துரை கேட்டால்... மார்க்கெட் போயிருக்கிறேன் என்று சொல்லுங்கள்...'' என்று சொல்ல... கற்பகம் விழித்தாள்.

''என்ன ஆச்சு வசு... ஏன் இந்தப் பதட்டம்.. என்ன அப்படி அவசர வேலை... சொல்லேன்...'' என்று வியப்புடன் கேட்டாள் கற்பகம்.

''நேரமாய் நின்று பேச எனக்கு அவகாசம் இல்லை ஆன்ட்டி... ப்ளீஸ் வந்து சொல்கிறேனே...'' என்று பரபரப்பாய் சென்றவளைத் திகைப்புடன் பார்த்தாள்.



இப்படி அரக்கப் பரக்க ஓடும்படி என்ன ஆச்சு... அதுவும் ஆதிகிட்டே பொய் சொல்லிவிட்டுப் போற மாதிரி... யாரையாவது சந்திக்கவா... இந்தப் புது ஊரில்... 'அவளுக்கு யாரைத் தெரியும்...

பெருமூச்சு விட்டாள் கற்பகம்...

இந்தக் காலத்துப் பசங்கள் எல்லாம் அமுக்குனிகள்... எதையும் வெளிப்படையா சொல்ல மாட்டார்கள்.

வந்து சொல்கிறேன் என்றிருக்கிறாள்... பார்க்கலாம். ஆனால் பழக்கமில்லாத ஊர். திசை தெரியாமல் தவிக்காமல் வந்து சேரணும்...

வசுதாவின் மீது இருந்த அக்கறையில் மனம் அடித்துக் கொண்டது.

ரோஹன் ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு செல்வதைக் கண்டு... வசுதாவும் ஆட்டோவைத் தேடினாள்.

நல்லவேளையாய் உடனே கிடைத்து விட்டது.

'கத்ரி பார்க்...' என்றவள் 'அந்த ஆட்டோவை தொடருங்களேன்' என்று ஆங்கிலத்தில் கூறவும்... ஆட்டோ டிரைவர் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''என் தம்பி... பர்ஸ் விட்டுவிட்டுச் செல்கிறான். அதைக் கொடுக்க வேண்டும்..'' என்று சமாளிக்க... அவன் சமாதானம் அடைந்து ஆட்டோவின் மீட்டரைத் திருப்பினான்.

அதற்குள் ரோஹன் இருந்த ஆட்டோ வெகு தூரத்திற்குச் சென்று விட்டது...

நடுவில் மடக்க முடியாதபடி டிராபிக்... ஆட்டோ வேகம்...

கத்ரி பார்க் முன் ஆட்டோ நின்றதும் டிரைவருக்கு பணம் கொடுத்துவிட்டுப் பார்க்கிற்குள் சென்றாள்.

அவளது கண்கள் ரோஹனைத் தேடின.

எங்கே போனான்... பார்வை துளாவியது. அதோ... சற்று தூரத்தில் யாரோ ஒருவனுடன் நின்று பேசிக் கொண்டிருக்கிறான்.

இல்லையே... அந்த தாடிவாலாவிடம் இருந்து எதையோ வாங்குகிறான்... பணத்தையும் தருகிறான்...

என்னவாக இருக்கும்.

யாருக்கும் தெரியாமல் வந்து... இப்படிக் கள்ளத்தனமாய் வாங்குவது என்றால்...

இனியும் தாமதம் கூடாது என்று நினைத்து விரைந்தாள் அவள்.

"ரோஹன்" என்ற அவளது கூவலைக் கேட்டு அந்த தாடிவாலா நாலுகால் பாய்ச்சலில் ஓடிவிட... வசுதாவை சற்றும் எதிர்பார்க்காத ரோஹனுக்குப் படு அதிர்ச்சி...

கண்கள் நிலை குத்தி இருக்க சிலையாகி நின்றிருந்தான். கால்கள் வேரூன்றியது போல அசைக்கவும் முடியவில்லை. கையும் களவுமாய் பிடிபட்டோமே என்ற அதிர்ச்சி! பேந்த விழித்துக் கொண்டு நின்றிருந்தவனின் அருகே சென்று! "என்ன அது ரோஹன்... எங்கே காட்டு..." என்று கேட்கவும்...

அவனது முகம் வெளுத்தது.

அவனது கையில் இருந்த பாக்கெட்டை பறித்துப் பார்த்தவளுக்கு திகைப்பு...

ஸ்மேக்! ஹெராயின்... அபாயகரமான லாகிரி வஸ்து.



மனோ சக்தியை அழித்து... மனிதனை உருக்குலையச் செய்யும் போதைப் பொருள்....

அவ்வளவு எளிதாக இது கிடைக்கிறது... அந்த அளவுக்கு சட்டமும் ஒழுங்கும் மோசமாகவா இருக்கிறது...

கடவுளே!

ரோஹனை உறுத்துப் பார்த்தாள்.

''எத்தனை நாளாய் இந்தப் பழக்கம்...!'' அதட்டும் குரலில் அவள் கேட்டதும்...

முகத்தைப் பொத்தி அழ ஆரம்பித்தான் அவன்.

போதை வஸ்துவிற்கு ஆளாகி விட்டால் கோழையாகி விடுவார்கள் என்பது தெரிந்ததுதான்.

குழந்தையைப் போல அழும் அவனை அரவணைத்து முதுகில் தட்டினாள்.

''நீ இந்த மாதிரி கோழையைப் போல அழுவதை நான் பார்த்ததில்லையே ரோஹன்... இதென்ன... பெண் பிள்ளை மாதிரி அழுது கொண்டு... முதலில் கண்களைத் துடை....''

கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டான் அவன்.

''வா... அந்த பெஞ்ச்சில் அமர்ந்து பேசலாம்... உன்னிடம் நிறைய பேச வேண்டும் ரோஹன்...'' என்றவள்,

அவன் தயங்குவதைப் பார்த்துவிட்டு... ''பயப்படாதே கண்ணா... நான் உன்னைத் திட்டப் போவதில்லை... ஆனால் கண்டிப்பாய் ஒன்று சொல்ல வேண்டும்... அது உன் நன்மைக்குத்தான்... கம் ஆன்.. ரோஹன். அவனது கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள் வசுதா...

மகிழ மரத்தின் அடர்ந்த நிழலில் போடப்பட்டிருந்த இருக்கையில் இருவரும் அமர்ந்தனர்.

''ம்ம்... இப்ப சொல்லு... உனக்கு இந்தப் பழக்கம் எப்படி வந்தது... யார் இதை உனக்குப் பழக்கினார்கள்.. மறைக்காமல் சொல்ல வேண்டும்..'' குரலில் கண்டிப்பு தெரிய அவள் கேட்டாள்.

''நான் கிரிக்கெட் பிராக்டீஸ்-க்கு போனபோது அங்கே விளையாட வந்த ப்ரவீண்... நரேன் இரண்டு பேரும் 'ப்ரெண்ட்ஸ்' ஆனார்கள். கோகுல்வா வீட்டுப் பிள்ளைகள். அவர்களுக்கு இந்தப் பழக்கம் இருந்தது. இதைப் பற்றி அவர்கள் பேசுவார்கள்...

ஆச்சர்யத்துடன் கேட்கும் என்னிடம் 'அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும்... உனக்கு அந்த 'தில்' இல்லைடா... சும்மா 'ஜில்' என்று ஆகாசத்தில் பறக்கற மாதிரி இருக்கும். அந்த மஜாவே 'த்ரில்' தான் என்றெல்லாம் ஏத்தி விட்டு... உண்மையில் அது அப்படித்தானா என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் எனக்கு வந்தது. ஒரு நாள் நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டேன். என்னை எங்கேயோ இழுத்துக் கொண்டு போன மாதிரி இருந்தது. பயந்து விட்டேன். இனி அதைத் தொடவும் கூடாது என்று முடிவு செய்தேன்... ஆனால் எனக்கு 'கட்ஸ்' இல்லை என்று கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள்... அதைத் தாங்க முடியாமல்...''

''திரும்ப அவர்களுடன் போனேயாக்கும்.... ஒன்று புரிந்து கொள் ரோஹன். அவர்கள் படிப்பின் அவசியத்தை அறியாமல்... பணத்திமிரில் அப்படி நடக்கிறார்கள். ஆனால் நீ அப்படி இல்லை... இந்த அளவு வாழ்க்கையில் ஒரு உயர் மட்டத்திற்கு வர உன் அண்ணா எத்தனைக் கஷ்டப்பட்டிருக்கிறார் என்று உனக்குத் தெரியும் தானே.



சின்ன வயசில் அப்பாவை இழந்தாலும்... அதையே நினைத்து கலங்காமல்... உங்களை அரவணைத்து... அன்பாய் வளர்த்து ஆளாக்கி இருக்கிறார் உன் அண்ணா... அவர் நினைத்திருந்தால்... என் வாழ்வை நான் பார்த்துக் கொள்கிறேன்... உங்க வழியை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சுயநலமாய் இருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி இல்லாமல்... தந்தை ஸ்தானத்தில் இருந்து உன்னைப் பொறுப்பாய் கவனித்துக் கொள்கிறார்... நீ வளர்ந்து... ஆளாகி... அவருக்கு உதவியாய் இருப்பாய் என்ற எதிர்பார்ப்பும் அவருக்கு இருக்கும் தானே... நீ இப்படி படிப்பில் ஆர்வம் இல்லாமல் கெட்டுச் சீரழிந்தால்... அவருக்கு வேதனை தராதா ரோஹன்... சொல்லு...''

அவன் எதுவும் பேசாமல் தலை குனிந்து அமர்ந்திருந்தான்.

வசுதாவின் மனதில் பரிதாபம் சுரந்தது.

அவனது கேசத்தை வருடியவாறு இதமாய் எடுத்துரைத்தாள். ''நீ நன்றாகப் படிக்கணும் ரோஹன். உன் அண்ணனின் வேலைச் சுமையைக் குறைக்கணும். அவர் உங்களுக்காகப் பட்ட கஷ்டங்களுக்கு நீ செய்யும் பிரதி உபகாரம் அது தான்... தெரிந்ததா... இப்படிக் கெட்டுப் போய்... அவருக்கு தலைகுனிவை தேடித் தரக்கூடாது... 'சொஸைட்டி'யில் அவருக்கு இருக்கும் நல்ல பெயரைக் கெடுத்து... கௌரவத்தைக் குலைத்து விடக்கூடாது. நீ சாதிக்கணும் ரோஹன்... அதுக்காக கஷ்டப்பட்டுப் படி... முதன் முதலா உன்னை நான் பார்த்தப்போ எனக்குத் தோன்றியது என்ன தெரியுமா... நீ புத்திசாலியா... நினைச்சதை சாதிப்பே என்றுதான்... அதைப் பொய்யாக்கி விடாதே கண்ணா...!''

கண்களில் நீர் மல்க தலையசைத்தான் ரோஹன்.

"குட்... வெரிகுட்... இப்பப் போகலாமா... போகிற வழியில் இந்த விஷத்தை சாக்கடையில் கொட்டி விடலாம்... இனிமே அந்த நண்பர்களோட சகவாசம் வேண்டாம்... என்ன... ஒரு பழமொழி இருக்கு ரோஹன்... உன் நண்பர்களைக் காட்டு... உன்னைப் பற்றி சொல்கிறேன் என்று... நீ நல்ல பிள்ளைகளோடு நட்பு வைத்துக் கொள்... அது உனக்கு உதவும். ஓகே... சரி... எழுந்திரு... போகலாம்..."

"நான் செய்ததை அண்ணனிடம் சொல்ல மாட்டீங்க தானே..." தப்பு செய்த குழந்தையைப் போல் வினவிய அவனைப் பார்த்து மனம் இளகியது.

"நிச்சயம் மாட்டேன் கண்ணா... இனிமே ஒழுங்கா பள்ளிக்குப் போவாய் என்று எனக்கு வாக்குத் தரணும்... நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு பழைய ரோஹன் மாதிரி இருக்க வேண்டும்... என்ன.. செய்வாயா..."

"கண்டிப்பாய்... காட் பிராமிஸ்..."

"தட்ஸ் மை ரோஹன்..." அவனது தோளை அணைத்தவாறு நடந்தாள் வசுதா.

பாறையாய் அழுத்திக் கொண்டிருந்த பிரச்சனைக்கு தீர்வு கண்ட நிம்மதியுடன் புறப்பட்டாள்.

## 9

கற்பகத்திற்கு மண்டைக்குள் நண்டாய் குடைந்தது.

விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம்...

திடீர் என்று வெளியே போனாள்... வரும்போது ரோஹனுடன் வந்தாள்.



எதற்காகப் போனாள்.. என்ன நடந்தது... ஒன்றும் புரியவில்லை.

சரி... வந்ததும் விஷயத்தைச் சொல்கிறேன் என்றாள்... வாயைத் திறக்கவே இல்லை...

ரோஹன் ஏன் வாட்டமாய் இருக்கிறான்... பள்ளியில் ஏதாவது பிரச்சனையா... கிளாஸ் டீச்சரிடம் திட்டு வாங்கினானா.. இல்லை... சக மாணவனோடு சண்டைப் போட்டானா... முகத்தைப் பார்த்தால் அழுதிருப்பான் போலத் தெரிகிறது. முகம் கன்றிப்போய்... கண்கள் சிவந்து... என்ன நடந்தது என்று சொல்லக் கூடாதா...

அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகிப் போன கற்பகத்தின் மனம் தவித்தது.

நிற்கவும் நேரமில்லாமல் பம்பரமாய் சுழன்று வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கும் வசுதாவை என்ன ஏது என்று நச்சரிக்கவும் விருப்பம் இல்லை...

வேலைகளை முடித்துவிட்டு வரட்டுமே... என்று காத்திருந்தாள்.

மதியம்... சாப்பாட்டு வேளையில் தான் அவளிடம் விசாரிக்க முடிந்தது.

"அம்மா... வசு... வீட்டுக்குப் பெரியவள்னு நான் இருக்கிறேன்... என்னன்னு சொல்லேன்..."

"ஓ... அதுவா... ஊரிலிருந்து விருந்தாளிகள் வருகிறார்கள்... அவர்களுக்கு எந்த அறை கொடுத்தால் சௌகரியம் என்று யோசிக்கிறேன். அப்புறம் அவர்கள் வருகிறபோது என்ன ரெடி பண்ணலாம்... 'மெனு' என்ன என்று சிந்தனை... நீங்க ஐடியா கொடுங்களேன் ஆன்ட்டி..." எதுவும் புரியாத மாதிரி அவள் சொல்ல...

''நான் கேட்டது அதையா... காலையில் நீ அவசரமா எங்கேயோ போனாயே... அதைச் சொல்லம்மா'' என்றாள் கற்பகம்.

'களுக்' என்று சிரித்தவள் ''அதே நினைப்பில் இருந்தீர்களாக்கும்..... நானும் நீங்கள் கேட்ட பிறகு சொல்லலாம் என்று இருந்தேன்...'' என்றாள் குறும்பாக.

''அப்போ... என்னவோ விஷயம் இருக்கு... அப்படித் தானே... அதைச் சீக்கிரம் சொல்லேன் வசு...''

''ஆன்ட்டி... இப்ப நான் சொல்லப் போகிற விஷயம் பரம ரகசியமாய் இருக்க வேண்டும்... அது உங்களால் முடியுமா.. முக்கியமா ஆதித்யாவின் காதுக்கு அது போகக் கூடாது...''

''அய்யோ... என்னம்மா இந்தப் பீடிகை... ஏதாவது தப்பு தண்டா நடந்ததா.. இப்பவே என் வயிற்றில் கலக்குகிறதே வா...'' கற்பகம் பதட்டத்துடன் கேட்க...

''பார்த்தீர்களா... இதற்குதான் சொல்ல வேண்டாம் என்று கூட யோசித்தேன். ஆனால்... நான் இங்கே இருப்பது ஒரு மாதம் தான் என்பதால்... இந்த விஷயம் உங்களுக்குத் தெரிந்திருப்பது நல்லது என்று சொன்னேன். ரோஹனின் பள்ளியிலிருந்து பிரின்ஸில் ஃபோன் பண்ணியிருந்தார். ரோஹன் சரியாக ஸ்கூலுக்கு வருவதில்லை என்று. பள்ளிக்குப் போய் அவனது வகுப் பாசிரியரை சந்தித்து விசாரித்ததில்... அவன் ஒரு வாரமாய் வரவில்லை என்றார்... தவிர... அவன் சரியாக சாப்பிடுவதும் இல்லை... எப்பவும் சோர்வாய் படுத்திருப்பதும் சரியாகப் படிவில்லை. இன்று அவனுடைய நண்பன் யாரோ ஒருத்தன் ஃபோனில் அழைத்து... ஏதோ கதிரி பார்க்காமே... அங்கே வரச் சொன்னபோது எனக்கு



சந்தேகம் வந்தது... ரோஹன் ஆதித்யாவிடம் ஏதோ 'ப்ராஜெக்ட்' செய்ய பணம் வேண்டும் என்று பணத்தை வாங்கிக் கொண்டு போனதும் சந்தேகம் வலுத்தது. அவனைத் தொடர்ந்து ஆட்டோவில் போனேன்.''

அவள் சொல்வதை திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள் அத்தை...

''அப்புறம்...''

''அந்தப் பார்க்கில் யாரோ ஒருத்தனிடம் பணம் கொடுத்து 'ஹெராயின்' வாங்கிக் கொண்டிருந்தான் ரோஹன்...''

''அப்படீன்னா...''

''போதை வஸ்து ஆன்ட்டி... என்னைப் பார்த்ததும் நடுங்கிப் போயிட்டான். ஒப்புக் கொண்டு விட்டான். அவனுடைய் சிநேகிதர்கள் சரியில்லை ஆன்ட்டி.... அதான் புத்தி தடுமாறிப் போயிட்டான். நல்லவேளை... ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து... நல்ல புத்தியும் சொல்லியாகி விட்டது. இனி அந்தத் தப்பை செய்ய மாட்டேன் என்று சத்தியம் செய்து விட்டான்...''

''நினைக்கவே பகீர் என்று இருக்கும்மா.... இந்தப் பிள்ளை மீது ஆதி உசிரையே வச்சிருக்கான். வசு... இவன் கெட்டுப் போனா தாள மாட்டான். நல்ல வேளையாய் அவனுக்கு புத்தி சொல்லி வழிக்குக் கொண்டு வந்து விட்டே.... இனிமே அந்தத் தப்பைச் செய்ய மாட்டான் தானே...'' ஆதங்கத்துடன் கேட்டாள் கற்பகம்.

''மாட்டான் ஆன்ட்டி.... ஏதோ சகவாச தோஷம்... அதுதான் கொஞ்சம் தடுமாறி விட்டான். கவலையேப் படாதீங்க ஆன்ட்டி... 'மெடிடேஷன்' கிளாஸில் அவனைச்

சேர்த்து விடுகிறேன்... இனி வழி தவறிப் போக மாட்டான்... பாருங்கள்...''

பெருமூச்சு விட்டாள் கற்பகம்.

''என்னவோம்மா வசு... நீ சொல்றது என் மனசில் பாலை வார்க்கிற மாதிரி இருக்கு... இந்தப் பிள்ளைகளை என் பிள்ளைகளாய் நினைச்சு பாசம் காட்டுகிறேன். நான் இங்கு வர்றப்போ ரோஹனுக்கு வயசு பத்து இருக்கும். அவனை என் செல்லப் பிள்ளையாட்டம் பார்த்தேன்... அவன் இப்படி செய்திருக்கிறான் என்பதை என்னால் நம்பவும் முடியவில்லை... நீ மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்... வயசானவ நான்... எதைக் கண்டேன்... எனக்கு எதுவும் தெரிந்திருக்காது. நீ இங்கிருந்து போயிட்டா என்ன ஆகும்னு தெரியல்லையே வசு... அந்த மல்லிகாவும் அவளது அப்பனும் ஆத்தாவும் வந்து கூத்தடிக்கப் போகிறார்கள். நிரஞ்சன் பெரியவனா யிட்டான்... ஆனா... ரோஹன்... சிறுசு... பாவம்... உதயாவைப் பத்திக் கவலை இல்லை... அவ பிழைச்சுப்பா... அவ வேறு வீட்டுக்குப் போறவ... ஆனா...''

''அய்யோ... ஆன்ட்டி... ஏன் இல்லாததை நினைத்துக் கவலைப்பட வேண்டும். எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று நம்பிக்கையோடு இருங்கள். அந்த மல்லிகா ஆதித்யாவை மணந்ததும்... அன்பான அடக்கமான... சுறுசுறுப்பான பெண்ணாக மாறலாமே...''

''அப்படி நடக்கும் என்கிறே... எனக்கு அந்த நம்பிக்கை இல்லேம்மா வசு... ஆதிக்கு மனைவி... இந்த வீட்டுக்கு எஜமானி... அந்த நினைப்பு மட்டும் தான் அவளுக்கு இருக்கும்... இந்தக் குடும்பத்தின் பொறுப்பு முழுக்க தன் தலைமேல் இருக்கிறது என்று எண்ண



மாட்டாள். ஒரு பாசமான அண்ணியா நடந்துக்கணும்னு அவளுக்குத் தோணாது... அவளோட குணம் உனக்குத் தெரியாதும்மா...''

கற்பகம் ஆன்ட்டி சொல்வது உண்மையோ... மல்லிகா இந்தக் குடும்பத்திற்கு ஏற்றவள் இல்லையோ...

ஆதித்யாவின் மனைவியாய்...

நிரஞ்சன்... உதயா... ரோஹனுக்கு அண்ணியாய்... நினைக்கவே அவளுக்கு எரிச்சலாய் வந்தது...

ஏன்... அவளது குணம் தெரிந்ததாலா... அப்படித்தான் இருக்கும்... ஒரு குணக்கேடான ஒருத்தியை நிரஞ்சனுக்கும் ரோஹனுக்கும் அண்ணி என்று எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை.

உதயாவின் குணம் அண்ணிக்கு ஒத்துப் போகலாம். அவள் தங்கிய இரண்டு நாளிலேயே அவளின் சுபாவம் தெரிந்து விட்டது... எதையும் தப்பான கண்ணோட்டத்தில் பார்ப்பது... சந்தேக புத்தி... சிரிப்பை மறந்த முகம்... குத்தல் பேச்சு...

ஆதித்யாவின் தங்கை என்பதை அழகாய் நிரூபிக்கிறாள்... அவளுக்கு மல்லிகாவைப் பிடித்ததில் வியப்பு இல்லை... இனம்... இனத்தோட என்கின்ற மாதிரி... ஆனால் நிரஞ்சனுக்கும் ரோஹனுக்கும் பிடிக்க வேண்டுமே... நினைக்கிறபோதே மல்லிகாவின் மீது கோபம் வந்தது... எரிச்சலும் தான்...

அடுத்த கணமே... தன் தலையை உதறிக் கொண்டாள். எந்த ஆதித்யா... எந்த மல்லிகாவை மணந்தால் எனக்கென்ன... இது அவரவர் தலையெழுத்து. நான் தற்காலிகப் பணிக்கு வந்தவள்... பணி காலம் முடிந்ததும் புறப்பட வேண்டியதுதான்...

எதற்கு வேண்டாததை நினைத்து மனதை உழப்பிக் கொள்ள வேண்டும்.

ஏதோ... இந்த வீட்டின் உப்பைத் தின்றதற்கு நன்றிக் கடனாய் சில நல்ல காரியங்களைச் செய்தாயிற்று... அது போதும்...

அதே நேரம் மனதின் ஒரு மூலையில் சின்னக் குரல் கேட்டது... 'அவ்வளவுதானா... வெறும் நன்றிக் கடன் மட்டும் தானா... அதில் அன்பு இல்லையா...'

பெருமூச்சு விட்டாள் வசுதா...

ஒரு வழிப்பாதை மாதிரி... அன்பைக் காட்ட வேண்டும்...

பதிலுக்கு எதிர்பார்க்கக் கூடாது.

வந்தோம்... இருந்தோம்... வாங்கிய கூலிக்கு கடமைகளை செய்துவிட்ட திருப்தியுடன் கிளம்பி விட வேண்டியதுதான்.

அதற்கப்புறம்... இவர்கள் யாரோ... நான் யாரோ... சித்தி என்ற பெயரில் வந்திருக்கும் சதிகாரியிடம் இருந்தும்... அவளது தம்பி தடியனின் கழுகுப் பார்வையிலிருந்தும் தப்ப ஒரு ஒளிவிடம் தேவையாக இருந்தது. இந்த இடம் பாதுகாப்பான... பத்திரமான இடமாய் இருந்தது என் நல்ல நேரம் தான்.

அது மட்டுமல்ல... கூடுதல் போனஸாய் வீட்டை அழகாய் நிர்வகிக்கும் திறனும் வந்து விட்டது மகிழ்ச்சி தான்...

இந்த வசுதாவும் கெட்டிக்காரி என்று நிரூபணம் ஆகி விட்டது... எந்த வேலையும் என்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் வந்தாச்சு...



எல்லாம் நன்மைக்குத்தான் என்று அப்பா சொல்வது நிஜம் தான்... கற்பகம் ஆன்ட்டியின் உதவியால் சமையல் கலை நிபுணி ஆகிவிட்டோம். வீட்டு அலங்காரம். லாண்டரி... இஸ்திரி இத்யாதி விஷயங்களும் அத்துப்படி ஆகிவிட்டதே!

அதைவிட மேலான விஷயம்... என்னாலும் ஒரு நான்கு பேர்களுக்கு நன்மை செய்ய முடிந்த ஆத்ம திருப்தி வேறு... இந்த சந்தோஷத்துடன் புறப்படலாம் தான்... இருந்தும்...

ரொம்பக் காலமாய் பழகியவர்களைப் போல அன்பு காட்டும் இவர்களைப் பிரிவதும் மனதிற்கு கஷ்டம்தான்.

ஆதித்யா... உதயாவைத் தவிர...

கற்பகம் ஆன்ட்டி... நிரஞ்சன்... ரோஹன்...

இவர்களின் அன்பும்... பிரியமும் அவளை நெகிழ வைத்தது... இவர்களை விட்டுச் செல்கிறோமே என்ற வேதனையும் கூட....

ஆனால் ஆதித்யா... அந்த சிடுசிடு மூஞ்சியும்... கண் கொத்திப் பாம்பாய் துரத்தும் கண்களும்... இறுகிக் கிடக்கும் உதடுகளும்... சே... நினைக்கவே எரிச்சல் தான் வருகிறது...

இவனை விட்டுப் பிரிந்து செல்வது வருத்தமாகவும் இல்லை.

அடடா... இதென்ன வீண் ஆராய்ச்சி...

எலிக்கும் பூனைக்கும் சுமுகமான உறவு இருக்குமா என்ன... பாம்புக்கும் கீரிக்கும் ஒத்துப் போகுமா என்ன... ஊகூம்...

வந்ததில் இருந்து என்னைப் பார்க்கும் போதெல்லாம் குர் என்றிருக்கும் இவனை விட்டுத் தூரப் போனால் போதும்.

கொஞ்ச நாளில் சுத்தமாய் அவன் நினைவு மங்கி மறைந்து விடும்...

இது ரயில் பயணம் மாதிரிதான். சந்தித்தோம்... பிரிந்தோம்... அவ்வளவே...

அறையில் படுக்கைக்கு விரிப்பை உதறிப் போட்டவளின் மனதில் நினைவோட்டம்...

ரோஹனுக்கு காம்ப்ளான் கலந்து எடுத்துச் சென்றாள் வசுதா.

அவன் படுக்கையில் கவிழ்ந்து படுத்திருந்தான்.

தூங்குகிறானா...

இல்லை... அழுகிறான் போலும்... முதுகு அதிர்கிறதே... எதற்கு... ஏன் அழுகிறான்....

"ரோஹன்" வாஞ்சையாய் அவனது முதுகை தடவியவாறு அவள் அழைத்தாள்.

அவன் திரும்பாமல் இருந்தான்.

"ரோஹன்... என்னைப் பாரேன்... என்ன விஷயம்.. உடம்புக்கு சரியில்லையாடா கண்ணா... ப்ச்சு... இங்கே பாரேன்..."

எழுந்து அமர்ந்தான் அவன்... முகத்தில் கண்ணீர் வழிசல்...

"ம்ம்... சொல்... ஏன் அழுகிறாய் என்று... ஹோம் வொர்க் இருக்கிறதா... நோட்ஸ் நிறைய எழுத வேண்டுமா... நான் ஹெல்ப் பண்ணுகிறேன்... ரோஹன்."

இல்லை என்பது போல் தலையசைத்தான்.

"அப்போ... வேறு என்ன... சொல்லேன்..."

சொன்னான் அவன்.



அவனுடைய நண்பன் ஃபோன் பண்ணியிருந்தானாம் அவன் சொன்ன விஷயம் அவனை நடுங்க வைத்து விட்டது. போலிஸுக்கு எப்படியோ தகவல் கிடைத்து... அவர்கள் திடீர் என்று கத்ரி பார்க்கை வளைத்து விட்டார்களாம்.. போதை மயக்கத்தில் இருந்த பையன்களை அள்ளிக் கொண்டு போய் விசாரணையில் வைத்து விட்டார்கள். பெற்றவர்களுக்கு செய்தி கொடுத்துவிட... அவர்களும் அலறியடித்துக் கொண்டு வந்தார்களாம். இந்த விஷயம் வெளியே கசிந்துவிட சானல் ரிப்போர்ட்டர்களும் அங்கே ஆஜர்... நாளை செய்தியில்... சானல்களில் வருவது உறுதி...

திக்கித் திணறி அவன் சொல்லுவதைக் கேட்டவள் நிதானமாய் அவனிடம் வினவினாள்.

"ஓ! அது சரி... உன் நண்பர்கள் அகப்பட்டு விட்டார்களே என்று அழுகிறாயா ரோஹன்..."

இல்லை என்று தலையசைத்தான் அவன்.

"பின்னே..."

"நானும் அங்கிருந்தால்... அசிங்கமாகியிருக்கும் இல்லையா... அண்ணாவுக்கு எத்தனை அவமானம்... போலீஸ் ஸ்டேஷனில் கூனிக் குறுகி அமர்ந்திருக்கணும்... அண்ணாவும் தலைகுனிந்திருப்பார்... காட்! எத்தகைய தப்பைப் பண்ணினேன்... இப்போ அதை உணருகிறேன். நல்லாவே உணருகிறேன். நீங்க மட்டும் வராமல் இருந்திருந்தால்... அய்யோ... நினைக்கவே பயமா இருக்கு... என்னைக் காப்பாத்தினது நீங்கதான்... உங்களுக்கு நன்றி சொல்லணும்..." அவன் தழுதழுத்த குரலில் சொல்ல...

அவனது கேசத்தை வருடியவாறு சொன்னாள் வசுதா.

"நீ செய்த தப்பைப் புரிந்து கொண்டாய் தானே... குட்... எப்போது அண்ணாவுக்கு தலைகுனிவு என்று நினைத் தாயோ அப்போதே உன் மனசில் தெளிவு வந்துவிட்டது என்பது நிச்சயம்... இனி அந்த வழிக்கு போக மாட்டாய் என்ற நம்பிக்கையும் வந்து விட்டது ரோஹன். அது போதும்... போகட்டும் நடந்ததெல்லாம் கெட்ட கனவு என்று அதை மறந்து விட்டு... பழைய ரோஹனாய் கலகலப்பாய்... உற்சாகத்தோடு படிக்க ஆரம்பிக்கணும்... காலம் இன்னும் மிஞ்சவில்லை... நல்லா படித்து ரேங்கில் பாஸ் பண்ணு... உன் அண்ணனுக்கும் அது பெருமை தரும்... செய்வாய் தானே ரோஹன்.."

தலையாட்டினான் அவன்.

"ஊகும்... இந்த தலையாட்டல் எல்லாம் வேண்டாம். வாயைத் திறந்து சொல்... அப்போதான் நான் நம்புவேன்..."

"நிச்சயம் செய்வேன்... ஐ ஸ்வேர்..."

"குட்... முதல்ல கண்ணைத் துடை.... இந்தா.. இதைக் குடி... இனிமே நல்லா சாப்பிட வேண்டும்... தெரிந்ததா... வயிறு நிறைந்தால் தான் தலைக்கு படிப்பு ஏறும். இன்னிக்கு உனக்குப் பிடித்த ஐட்டமா செய்கிறேன் நல்லா சாப்பிடு... ஓ.கே.."

டம்ளரை வாங்கிக் கொண்டாள் வசுதா.

"சரி... நல்லா ரெஸ்ட் எடுத்துக்கோ.. நடந்ததை நினைத்து நினைத்து மனதைக் குழப்பிக் கொள்ளாதே. உனக்கு இப்ப மன அமைதியும்... தெளிவான புத்தியும் அவசியம்... உன்னை மெடிட்டேஷன்... யோகா க்ளாஸில் சேர்த்து விடுகிறேன்... மனசும், சுத்தமா இருக்கும்... ஞாபக சக்தியும் வளரும்..."



கதவருகே சென்ற அவள் ரோஹன் சொன்னதைக் கேட்டு திகைப்புடன் மெல்லத் திரும்பினாள்.

"என்ன சொன்னே ரோஹன்..."

"நீங்க... எனக்கு அண்ணியாக வந்தால் நல்லா இருக்கும் என்றேன்..."

அண்ணியா... நானா...

"ரோஹன்... என்ன பேச்சு இது... இப்படியெல்லாம் பேசக் கூடாதுப்பா..." என்றாள் இதமாய்.

"கற்பகம் அத்தை சொல்லுவாங்க... அண்ணின்னா அம்மா மாதிரின்னு.. நீங்க என்னிடம் பிரியமாய் இருக் கிறதைப் பார்க்கிறப்போ என் அம்மா இருந்திருந்தால் இப்படித்தான் பாசம் காட்டுவாங்கன்னு தோணுகிறது. அம்மா இல்லையே என்கிற ஏக்கம் அண்ணி வந்தால் சரியாகி விடும் தானே... அது ஏன் நீங்களாக இருக்கக் கூடாது..." கண்கள் பளபளக்க ஆசையுடன் அவன் கேட்க...

புன்னகையுடன் சொன்னாள் அவள்.

"நோ... ரோஹன்... இப்படிப் பேசறது சரியில்லை கண்ணா... நான் இங்கே வேலைக்குன்னு வந்திருக் கிறேன்... நிரந்தரம் இல்லை... என்னை... இதோ பார் ரோஹன். நீ சின்னப் பிள்ளை... உனக்கு என் மீது அன்பு என்பதால் மட்டும் நான் உனக்கு அண்ணியாகி விட முடியாதுப்பா... இது உன் அண்ணனின் வாழ்க்கைக்கு சம்பந்தப்பட்டது. தன்னோட வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கிற உரிமை அவருக்கு மட்டும் தான் இருக்கிறது. முதல்ல அதை நீ புரிந்து கொள்ள வேண்டும்... இப்படி யாரிடமாவது உளறி விடாதே... என்ன..."

''எனக்கு அந்த மல்லிகாவைப் பிடிக்கவில்லை... அவளுக்கும் என்னைக் கண்டால் பிடிக்காது... அண்ணாவும் அத்தையும் எனக்கு ரொம்பவும் செல்லம் கொடுத்து கெடுத்து விட்டார்களாம்...''

கேட்டுவிட்டுச் சிரித்தாள் வசுதா...

"இப்ப உனக்கு வயது பத்தாது ரோஹன்... 'மென்டல் மெச்சூரிட்டி' வந்தால் எல்லாம் வேறே விதமாய் படும்... இப்போதைக்கு உனக்குப் படிப்பில் மட்டுமே கவனம் இருக்க வேண்டும். அதை மட்டும் நினை... என்ன..."

என்று கிளம்பினாள் வசுதா.

"தாங்க்ஸ்" என்றான் ரோஹன்.

''எதுக்கு...''

''ஒரு நல்ல ஃபிரெண்டாக இருந்து எனக்கு 'அட்வைஸ்' தந்தீங்களே அதுக்கு... தாங்க்ஸ்... ப்ரெண்ட்.'' அவள் புன்னகையுடன் வெளியேறினாள்.

அன்று இரவு ஏனோ அவளுக்கு உறக்கம் வரவில்லை. ரோஹனின் பேச்சுதான் காரணமா... தெரியவில்லை.. மனம் குட்டையாய் குழம்பித் தவித்தது.

## 10

விருந்தாளிகள் வீட்டினுள் நுழையும் போதே ஆர்ப்பாட்டம்... வசுதாவிற்கு நிரஞ்சன் சொன்னதுதான் நினைவுக்கு வந்தது...

மல்லிகாவின் முகத்தில் துளியும் சிரிப்பு இல்லை... சதா கடுகடுப்பும்... வார்த்தைகளில் வெடுவெடுப்பும் தான்.



அடடா... ஜாடிக்கேத்த மூடிதான்... சிடுமூஞ்சிக்கும்... கடுவன் பூனைக்கும் என்ன பொருத்தம்! நினைக்கும் போதே அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது...

ஆனால் ஆதித்யாவைப் பார்த்ததும்... ஆகா... முகம் சூரியகாந்தியாய் மலர்ந்து போனதும்.. உதட்டில் புன்னகைத்ததும்... வார்த்தைகளில் சர்க்கரைப் பாகு கலந்ததும் தான் அதிசயம்...

அவளையும் அறியாமல் கண்கள் நிரஞ்சன் பக்கம் தாவ... 'என்ன சொன்னேன்... இப்ப பார்த்தாயா' என்பது போல கண்களைச் சிமிட்டினான் அவன். மல்லிகாவின் தந்தை பசுபதி பேசும்போது உடம்பில் நெளியலும்... குரலில் குழைவும்... ஆகா என்ன வினயமான மனிதர் என்று சொல்லத் தோன்றும்... ஆனால் மனிதர் காரியவாதி என்பது சொல்லாமலே தெரிந்தது.

''அடடா... எத்தனை வீட்டிற்குப் போயிருக்கிறேன்... ஆதி... இந்த வீட்டில் வர்ற ஆனந்தம் வேறே எங்கேயும் இல்லை தான்... விசாலமான இடம்... 'ஜில்'லென்ற காத்து... பளிச் என்று வெளிச்சம்... கட்டினா இந்த மாதிரி வீடு கட்டணும். நீ என்ன சொல்றே... சுந்தரி...'' மனைவி பக்கம் திரும்பிச் சொல்ல...

''உண்மைதான்... நம்ம வீட்டில் ஏ.ஸி... எல்லாம் இருந்தாலும்... இந்த மாதிரி இயற்கை காத்தாட்டம் வருமா... பேசாம அந்த வீட்டை இடிச்சிட்டு... கொஞ்சம் காத்தோட்டமா இருக்கிற மாதிரி கட்டுங்க... அப்பப்பா... முதல்ல இந்த நகைகளையெல்லாம் கழட்டிட்டு... பட்டுப் புடவை மாத்திட்டு வர்றேன்... உடம்பெல்லாம் கசகசன்னு இருக்கு... உஸ்...'' என்று அலட்டலாகவே பேசினாள் அவரது மனைவி.

நிரஞ்சன் நெற்றியை அழுத்தியவாறு 'தலைவலி ஆரம்பம்' என்று முணுமுணுத்துக் கொண்டு அங்கிருந்து விரைந்தான்.

வந்த நாளிலே இப்படி என்றால்... கடவுளே... போகப் போக எப்படியோ... அவளுக்கும் லேசாய் தலைவலி வந்தது போல இருந்தது.

ரோஹன் முகம் சுளித்தான்... "வந்தாச்சு... காகா கூட்டம்... இனி வாட்டுக் கத்தல் தான் வீட்டில்... அண்ணன் கேட்டால் எக்ஸாமிற்குப் படிக்கிறேன்னு சொல்லி விடுங்கள்... சாப்பாடும் அங்கேதான்... கீழே வரவே மாட்டேன்..." என்று சொல்லிப் போய் விட்டான்.

கற்பகம் அவரது பங்குக்கு சலித்துக் கொண்டாள்.

"வந்தாச்சா... இனி வீடு அல்லோல கல்லோலம் தான். உட்கார்ந்த இடத்தில் அதிகாரம் நடக்கும். இவர்கள் ஏன் தான் வருகிறார்களோன்னு தோணுகிறது. உனக்கும் தலைவலி ஆரம்பம்தான் வசுதா.. இவர்களுக்கு ஆக்கிப் போட்டு... கையில் கொடுத்து... பார்த்துப் பார்த்து உபசரிக்கையில் முதுகு விண்டிடும் பாரேன்... வித விதமாய் சமைச்சுப் போட்டா... சப்பு கொட்டிச் சாப்பிடுவாங்க... அப்புறம் லொட்டு... லொசுக்குன்னு குறை சொல்லுவாங்க... நீயும் பார்க்கத்தானே போறே..."

பயமுறுத்துவதைப் போலச் சொன்னாள் கற்பகம்.

அவர்களின் வரவில் மகிழ்ந்து போனது உதயா மட்டுமே... மல்லிகாவுடன் ஈஷிக் கொண்டு திரிந்தாள்... அவளிடம் ஏதோ 'ஜோக்' சொல்லிச் சிரிப்பதும்... புதிதாய் வாங்கியிருக்கும் சுரிதார்... நகைகளைக் கொண்டு வந்து காட்டுவதும்... ஆகா... உதயாவிற்கு இப்படியும் வேடிக்கையாய் பேச வருமா என்ன என்று வியந்தாள்



வசுதா... அவளுக்கு மல்லிகா தன் அண்ணியாக வர வேண்டும் என்ற ஆசை என்று ஆன்ட்டி சொன்னது சரி தான்...

குளித்துவிட்டு வந்த சுந்தரி வசுதாவிடம் அதட்டலாகவே பேசினாள். "நீதான் புதுசா வேலைக்கு வந்தவளா... பார்த்தா வேலை செய்ய வந்தவளாட்டம் தெரியலையே... நாசூக்கா இருக்கே... சமையல் எல்லாம் நல்லா வரும் தானே. சரி... இப்ப என்ன செய்திருக்கே... பசி வயித்தைப் பிடுங்குது... மசமசன்னு இருக்காம போய் எல்லாத்தையும் எடுத்து சாப்பாட்டு மேசையில் வை... நாங்களே எடுத்துப் போட்டுக்கறோம். அப்புறம் இன்னொரு விஷயம் வயசுப் பொண்ணா இருக்கே... கண்ணுக்கு அழகா வேற தெரியறே... ஆதி முன்னால அப்படியும் இப்படியுமா அலையாதே... என்ன புரிஞ்சுதா... ஏன்னா... ஆதி ஆம்பளை... சட்டுன்னு மனசு தாவிடும்... இந்த வீட்டுக்கு என் பொண்ணுதான் மருமகன்னு முடிவாயிருக்கு... அதனால கொஞ்சம் ஒதுங்கியே இரு... இந்த ஆதி தம்பிக்காவது புத்தி வேண்டாம்... இப்படி ஒரு வயசு வந்தப் பெண்ணை வேலைல சேர்த்துகிட்டு... ஒண்ணுகிடக்க ஒண்ணு ஆச்சன்னா.. யார் பொறுப்பு... போகட்டும்.... வயசான அத்தைக்காரிக்காவது புத்தி வேண்டாமா..."

கடவுளே... வாயிலிருந்து வருவது வார்த்தைகளா... இல்லை... சாக்கடைக் கழிவா... என்ன அசிங்கமான எண்ணம்... என்ன மோசமான கற்பனை... தலை வீங்கி வெடித்து விடும்போல இருந்தது வசுதாவிற்கு. தகர டப்பாவில் எலி நுழைந்தது மாதிரியல்லவா பேசுகிறாள். இவள் ஆதித்யாவிற்கு மாமியார் என்றானால்... இப்படி

பேசியே தலை வீங்க வைத்திடுவாள்... ஆனால்... அவ ளுக்கு இதுவும் வேண்டும் தான்...

'டைனிங்' டேபிளைச் சுற்றி அமர்ந்து வளவள என்று பேசிக் கொண்டிருந்தவர்களின் வார்த்தைகள் காதில் விழாத தூரத்துக்கு நகர்ந்து போனாள். அது மட்டுமா... அந்த மல்லிகா கொஞ்சம் குரலில் ஆதியுடன் பேசு வதையும் கேட்கச் சகிக்கவில்லை... இழிவதற்கு ஒரு அளவு வேண்டாம்.

ரோஹன் மாடியில் இருந்து விட்டான். கற்பகம் ஆன்ட்டி அவனது அறையில்... நிரஞ்சன் எனக்கு எதுவும் வேண்டாம். ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்கிறேன்.. ஆளை விடு என்று ஓடிவிட்டான்.

"ஏ... பொண்ணு.. நாங்க சாப்பிட்டு முடிச்சாச்சு... வந்து க்ளீன் பண்ணு..." சுந்தரி அம்மாளின் வெண்கலக் குரல் அதட்டி அழைக்க...

பற்களைக் கடித்துக் கொண்டு சென்றாள் வசுதா. அவர்கள் சாப்பிட்ட தட்டுகளை எடுத்து... மேஜையை சுத்தப் படுத்திக் கொண்டிருந்தவளின் காதில் அவர்களின் அரட்டைப் பேச்சு அனுமதி கேட்காமல் காதில் நுழைந்தது.

"அண்ணா... இந்தத் தடவையாவது இவங்களை அழைத்துக் கொண்டு சுத்திக் காட்டணும். போன தடவை தான் வேலை வேலைன்னு இருந்துட்டே.... இப்பவாவது கொஞ்சம் இவர்களுக்காக நேரத்தைச் செலவிடு... உட்கார்ந்து சும்மா பொழுது கழிக்க ஒண்ணும் இவங்க வரல்லை.

தங்கை சொல்ல...



"அதானே... உதயா சொல்வதும் சரி... எனக்கும் பீச்... பார்க் எல்லாம் பார்க்கணும்னு ஆசை... இந்த தடவை சாக்கு போக்கு எதுவும் சொல்லாம அழைத்துப் போங்க ஆதி..." சிணுங்கும் குரலில் பேசினாள் மல்லிகா...

"நாளைக்கு நிச்சயமா என்னால் முடியாது... காஃபி போர்டில் ஒரு முக்கியமான வேலை இருக்கிறது... நாளை மறுநாள் கண்டிப்பா போகலாம்.. மாமா... தமிழ்நாட்டில் காபிக் கொட்டை மார்க்கெட் நிலவரம் எல்லாம் எப்படி... மேட்டுப்பாளையம் கிட்ட நல்ல தரமான தேயிலை விளைகிறது என்று நண்பன் சொல்கிறான்... எக்ஸ்போர்ட் க்வாலிட்டி என்றால் அதை வாங்கி ஏன் பிஸினஸ் பண்ணக் கூடாது என்று யோசனை... கொஞ்சம் விசாரித்து சொல்கிறீர்களா..." திடீர் என்று பிஸினஸ் பக்கம் சாய்ந் தான் ஆதித்யா.

"அட.... நீங்க ஒண்ணு தம்பி... எக்ஸ்போர்ட் க்வா லிட்டி தான் வெளிநாட்டுக்கு வித்து விடுகிறார்களே... எங்கே லோகலில் விக்கிறார்கள்.. இருந்தாலும் விசாரித் துப் பார்க்கிறேன்... காபி வியாபாரத்தை விட தேயிலை யில்தான் விதவிதமான யுத்திகளை அறிமுகப்படுத்தலாம்... என்னென்னவோ புதுசு புதுசா... இஞ்சி டீ.. சுக்கு டீ.. துளசி டீன்னு கொண்டு வர்றாங்க... ஜனங்களும் புதுமை விரும்பிகளாச்சே... உடனே வாங்கிக் குடிக்கிறார்கள். நாம கூட அந்த மாதிரி செய்யலாம்... வல்லாரை டீ... தூது வளை டீ... மூலிகை டீன்னு அறிமுகப்படுத்தினாப் போச்சு... என்ன சொல்றீங்க தம்பி..." பசுபதியின் பேச்சைக் கேட்டு அவரது மனைவி 'வெடுக்' என்று சொன்னாள்.

"போதும் நிறுத்துங்க... வந்த இடத்திலும் உங்க பிஸினஸ் தொல்லை... காது கொடுத்துக் கேட்க

முடியல்லே... வேறே விஷயமாய் பேசுவோம்... தம்பி... நம்ம மல்லிகாவிற்கு ஒரு செட் நகை வாங்கணும் இங்கே எந்தக் கடை நம்பர் ஒன்... சொல்லுங்க... போய் வாங்கிடலாம்... கல்யாணத்திற்கு இப்பவே சேர்க்க ஆரம்பிக்கணுமே...'' ஜம்பமாய் சொன்னாலும்... பூடகமாய் உணர்த்தினாள்... நாங்க திருமணத்திற்கு ரெடி என்று.

டேபிளைத் துடைத்துக் கொண்டிருந்த வசுதா ஆதித்யாவின் முகத்தைக் கவனித்தாள்.

துரை என்ன சொல்கிறார். அவருக்கு இதில் விருப்பம் தானா... ஒரு மலர்ச்சி... ஒரு புன்னகை... சந்தோஷப் பார்வை... ஏதாவது...

ஊகும்... இல்லையே... ஜடம்!

பாவம்... மல்லிகா தான் வெட்கத்தை மறந்து இழைகிறாள். அய்யோ பாவம்... கல்யாணம் என்றதும் நாணிக் கோணுகிறாளே. அவளது பார்வை ஆதியின் மீதே...

ஆதித்யாவின் பதிலில் நழுவல் தெரிந்தது.

''என்னைக் கேட்டால்... தங்க நகைகளை தமிழ் நாட்டில் வாங்குவதுதான் நல்லது. சேதாரம்... செய்கூலி எல்லாம் குறைவு... இங்கே எல்லாம் அதிகம்தான்... என்ன... புதுவித டிசைன்களைப் பார்க்கலாம்... அவ்வளவுதான்.''

''அட... விலை அதிகம்னா என்ன தம்பி... அதைப் பத்தியெல்லாம் கவலை இல்லை. பணம் நிறையவே இருக்கு. மங்களூருக்குப் போனோம்... கோல்டு வாங்கினோம் என்ற பெருமை இருக்குமே... அதான்... இந்த வருஷமாவது மல்லிகா திருமணத்தை முடிச்சிடலாம்ங்கற எண்ணம்'' விடாமல் தூண்டில் போட்டாள் சுந்தரி.



அதற்கு ஆதித்யா பதில் சொல்லுமுன் உதயாதான் பேசினாள். ''அத்தை... இதை அப்புறம் பாத்துக்கலாம். நாளன்னைக்கு என்ன ப்ரோக்ராம் என்று பேசுவோம்... இப்ப சொல்லண்ணா... எங்கேயெல்லாம் போகப் போகிறோம். யார் யாரெல்லாம்... எந்தக் காரில்... சாப்பாடு எங்கே... ஓட்டலிலா... இங்கிருந்து பேக்கிங்கா... இங்கிருந்து என்றால் என்ன மெனு... இதையெல்லாம் பேச வேண்டாமா...''

''உதயா கண்ணு... ஏன் அவசரப் பட்றே... நாளை முழுக்க 'டைம்' இருக்கு... பேசிக்கலாமே... எல்லோரும் போகிறோம்... என்ன சொல்றே சுந்தரி...'' பசுபதி சொல்ல...

''எல்லோருமா... அது எப்படி... அத்தையால் வர முடியாது. ரோஹனுக்குப் படிக்கணும்... நிரஞ்சனுக்கு வேலை இருக்கோ என்னவோ...'' மல்லிகா புத்திசாலித் தனமாய் ஒவ்வொருத்தரையும் கழிக்கப் பார்த்தாள்.

''ஆமாம்... ஆமாம்... மல்லிகா சொல்வதும் சரிதான். நாம போகலாம்... அத்தையை கவனிக்கக இங்கேதான் ஆள் இருக்கே...'' என்று ஒத்து ஊதினாள் உதயா.

ஆதித்யா யோசித்தான்.. வசுதாவை விட்டு விட்டுப் போவதா... அவளை நம்பிவிட முடியுமா.. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வந்த நோக்கத்தை முடித்துக் கொண்டால்... இந்த அத்தையும் அவளை முழுவதுமாய் நம்பி விட்டார்... என்ன செய்கிறாள் என்றும் பார்க்க மாட்டார். எதை சுருட்டிப் போக வந்திருக்கிறாளோ... யார் கண்டது... வேண்டாம்... அவளையும் அழைத்துச் செல்வது தான் நிம்மதி...

''என்னண்ணா... நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டு இருக்கிறேன். நீ ஏதோ யோசித்துக் கொண்டு இருக்கயே...

இதுதான் எனக்கு உன்கிட்டே பிடிக்காத விஷயம்... எதையும் சரியா காதில் வாங்கிக்க மாட்டே...'' மனத்தாங்கலுடன் சொன்னாள் தங்கை.

''இல்லை.. வசுதாவையும் அழைத்துப் போகலாமேன்று யோசித்தேன்...' என்றான் ஆதித்யா.

அனைவருக்கும் திகைப்பு... 'வசுதாவையா...' ஏன், வசுதாவுக்கும் திகைப்புதான். அனைவருக்கும் பாதாம் பால் கலந்து அதை ஒரு தட்டில் ஏந்தி வந்தவளின் காதில் ஆதித்யாவின் வார்த்தைகள் விழ... வியப்பின் எல்லைக்கே போய் விட்டாள்.

ஆதித்யாவா சொல்வது... அட... நம்ப முடியவில்லையே... சுந்தரி பொங்கி வந்த கோபத்தை அடக்கியவாறு சொன்னாள். ''இந்தப் பொண்ணு எதுக்கு தம்பி... வீட்டைக் காவல்காக்க வேண்டுமே...'' அவளது குரலில் எரிச்சல் எட்டிப் பார்த்தது.

வீட்டைக் காவல் காக்கவா... நான் என்ன கூர்க்காவா. இல்லை... நாயா... உதடுகளை அழுத்திக் கொண்டு, கொண்டு வந்த பாலை விநியோகம் செய்தாள்.

''என்ன அத்தை... போகிற இடங்களில் நமக்கு உணவு பரிமாறி... பாத்திரத்தைக் கழுவி வைக்க வேண்டாமா... வசுதா வந்தால் பரவாயில்லை...'' ஆதித்யா சமாளிக்க... ''அட... ஆமாம் இது எனக்குத் தோணலையே நாம சுத்திப் பார்த்த அலுப்பில் இருப்போம்... நான் வயசானவ... என்னால் எந்த வேலையும் முடியாது... மல்லிகாவுக்கும் அதெல்லாம் பழக்கமில்லை... உதயாவும் அதே மாதிரி தான்... நீங்க சொல்றதும் நல்ல யோசனை தான்..'' வேறே வழியின்றி இறங்கி வந்தாள் சுந்தரி.



''எனக்கு வர விருப்பமில்லை'' 'படக்'கென்று சொல்லி விடலாமா என்று தோன்றியது வசுதாவிற்கு.

ஆனால் வார்த்தைகள் தொண்டையை விட்டு வர மறுத்தன.

தயக்கம்... வேலை செய்பவருக்கு அந்த உரிமை ஏது. அதே சமயம் மனம் இடித்துக் கூறியது... 'இதையெல்லாம் கேட்டுக் கொண்டு மௌனமாய் இருக்கிறாயே... உன் தலையெழுத்தா என்ன... உதறிவிட்டுப் புறப்படு...'

புறப்பட்டு விடலாமா என்று தோன்றினாலும்... மிஞ்சிப் போனால் இருபத்தைந்து நாட்கள்... அன்பு காட்டும் கற்பகம் ஆன்ட்டிக்காகவாவது இருந்தாக வேண்டும்... அவர் எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டால் 'குட்பை' சொல்லிவிட்டுப் போய் விடலாம் தான்... தவிர... ரோஹனுக்கும் பரிட்சை நெருங்குகிறது. சாப்பாடு எல்லாம் நேரம் பார்த்து தர வேண்டும். இரவு விழித்துப் படிப்பானே... காம்ப்ளான்... பால் எல்லாம் கலந்து தர வேண்டும்... 'அம்போ' என்று விட்டு விட்டுப் போவது சரியில்லை... எப்படியோ.. பல்லைக் கடித்துக் கொண்டு இருபத்தைந்து நாட்களைக் கழித்து விட்டுப் புறப்பட வேண்டியது தான்...

இங்கிருந்து நேரே அந்த சிங்காரவேலு சாரிடம் சென்று ஏதாவது நல்ல வேலை இருந்தால் தாருங்கள் என்று கேட்டுப் பார்க்கலாம்... என் படிப்புக்கேற்ற கௌரவமான வேலை... இப்படி ஏச்சையும் பேச்சையும் கேட்டுக் கொண்டு மண்ணாந்தை மாதிரி இருக்க முடியாது தான். ஏதோ... கொஞ்ச நாள் தலைமறைவாய் இருக்கலாம்... தங்குவதற்கு பாதுகாப்பாய் இருக்கிறதே என்று நினைத்தால்... இப்படியா... கீழ் பார்வை பார்ப்பது... வேலைக்கு வந்தவள் என்றால் அவ்வளவு இளப்பமா... என் வீட்டில்

எத்தனை வேலைக்காரர்கள். நாங்கள் இப்படியா நடத்தி னோம்... சே.. அத்தனை பணியாட்களையும் ஏவி... ராணி மாதிரி இருந்த நான் இப்போது ஒரு வேலைக்காரியாய்... என்ன விசித்திரமான மாற்றம்!

இனிமேல் என்னிடம் வேலை செய்பவர்களையும் அன்பாய் மரியாதையாய் நடத்த வேண்டும்தான்...

மனம் ஏதேதோ நினைத்தது.

எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு... ரோஹனுக்கு காம்ப்ளான் தர மாடிக்குச் சென்றாள் வசுதா...

அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பது கண்டு அருகில் அமர்ந்து கொண்டாள்.

"என்ன... ரோஹன்... எந்தக் கோட்டையைப் பிடிக்க இப்படி யோசிக்கிறாய்..." என்று கேலியாய் கேட்டாள்.

"சயன்ஸ் பாடத்தில் 'ப்ராஜெக்ட்' பண்ணச் சொல்லி மிஸ் சொன்னாங்க.. அதற்கு 'பிரைஸ்'ஸும் இருக்காம். என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன்... மூளைக்கு எட்ட மாட்டேன்கிறது..." என்றான் அவன்.

"பின்னே... மூளையை உயரத்தில் வைத்தால் எப்படி எட்டுமாம்" என்று பரிகாசம் செய்தாள் வசுதா.

"இரு நான் ஐடியா தருகிறேன்.. சயன்ஸ் என்றா சொன்ன... ம்ம்... ஓகே... உன் பாடப் புத்தகத்தைக் கொண்டு வா பார்ப்போம்... 'பிஸிக்ஸ்' 'பயாலஜி' இரண் டையும் கொண்டு வா.." என்றதும்..

உடனே விரைந்து சென்றான் ரோஹன். அவற்றை வாங்கிப் பார்த்துவிட்டு சொன்னாள்.

"ஐடியா... ப்ளாஷ் ஆச்சு... நான் சொல்கிற மாதிரி செய் ரோஹன்... நிச்சயம் பிரைஸ் உனக்குத் தான் பாரேன்.. நானும் உனக்கு 'ஹெல்ப்' பண்ணுகிறேன்.. போதுமா..."



மகிழ்ச்சியில் அவனது கண்கள் பளிச்சிட்டன...

''என்ன செய்யணும்'' என்று கேட்டான்.

''இப்ப உட்கார்ந்து விளக்க எனக்கு நேரமில்லை ரோஹன்... அத்தைக்கு மாத்திரை தர வேண்டும்.. முதல்ல என்ன வேண்டும் என்பதை 'லிஸ்ட்' போட்டு வைக்கிறேன்... நாளைப் பார்க்கலாம்... அதுவரைக்கும் படித்துக் கொண்டிரு.. என்ன...'' என்று சொல்லி விட்டுக் கீழே வந்தாள்.

ஹார்லிக்ஸும் மாத்திரையும் கொண்டு போய் சுற பகத்திற்கு கொடுத்தபோது அவர் கேட்டார்...

''எப்படிம்மா சமாளிக்கிறே... உன் பொறுமைக்கு சோதனை வைப்பார்களே... அதுவும் அந்த சுந்தரி... உன்னை வாட்டி எடுத்திருப்பாள்... பார்த்தாலே தெரி கிறது. பாவம்... ரொம்ப களைச்சுப் போயிருப்பே... போய் படுத்துக்கோ...''

''எனக்குக் கோபம் வந்தது ஆன்ட்டி... ஆனால் என் சித்தியின் ஆர்ப்பாட்டத்தையும்... அதட்டலையும் பார்த் திருக்கேன் ஆகையால்... இதெல்லாம் பெரிசாத் தெரிய வில்லை... இவர்களது பேச்சையும் பொருட்படுத்த வில்லை. நீங்க எழுந்து பொறுப்பேற்றுக் கொண்டால் போதும்... அதுக்காகக் காத்திருக்கிறேன்.. அப்புறம் 'குட்பை' சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதான். அதுவரைக்கும் பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கப் பார்க்கிறேன்... அதுவும் உங்களுக்காக.''

''உண்மைதான்.. வசு... உனக்கென்ன தலையெழுத்தா... இவர்களது வசவையும்.. இளக்காரப் பேச்சையும் கேட்க... 'நான் ஒண்ணும் வக்கில்லாதவள் இல்லே... ஒரு கோடீசு வரனோட ஒரே பொண்ணாக்கும்' என்று அவங்க கிட்ட

சொன்னா எப்படியிருக்கும்... முகமெல்லாம் அஷ்டக் கோணலாய் மாறும்... எனக்கும் அதைப் பார்க்கணும்னு ஆசை வக. ஆனா நீதான் சொல்ல மாட்டே..."

''அதற்கான காரணத்தையும் சொல்லியிருக்கேனே ஆன்ட்டி நான் யார்னு யாருக்கும் தெரியாம இருக்கிறது தான் நல்லது... அதுவும் முக்கியமாய் இவர்களுக்கு... இவர்களும் கோயமுத்தூர் தானே... எதுக்கு ரிஸ்க்... வேண்டாமே..."

''அதுவும் சரிதான்... எங்கேன்னு மோப்பம் பிடித்துக் கொண்டு வந்துட்டா கஷ்டம்... உனக்குத் தான் வேலை ஜாஸ்தி. எனக்கு கஷ்டமா இருக்கும்மா..." உண்மையான வருத்தத்துடன் சொன்னார் கற்பகம்.

''அய்ய... இதெல்லாம் எனக்குக் கஷ்டமா தெரியவில்லை... பார்க்கப் போனா புது அனுபவமாய் படுகிறது... எப்படி இருந்த நான் இந்த மாதிரி மாறிப்போனேன் என்று நினைக்கையில் எனக்கே ஆச்சர்யமாக இருக்கு ஆன்ட்டி. என்னாலும் முடியும் என்ற பெருமை எனக்கு... என்ன ஆதித்யாவும் உதயாவும் என்னை விரோதியாப் பார்க்கிறது தான் மனசுக்கு சங்கடமா இருக்கிறது..."

''விட்டுத் தள்ளும்மா அதை... உன் அருமை தெரியாதவங்க... அதைப் பத்தி யோசிக்காமல்... படுத்துத் தூங்கு. ஆமாம்... சாப்பிட்டாயா... இல்லையா... அறுப்பில் சாப்பிடாமல் இருந்து விடாதேம்மா..."

அவரது பாசப் பரிவில் நெகிழ்ந்தாள் வசுதா.

இந்த அன்பு உள்ளத்தைப் பிரிய வேண்டுமே என்று மனம் துடித்தது. ஆனாலும் போய்த்தானே ஆக வேண்டும்... ஆதித்யாவின் குரல் கேட்காத தொலைவிற்கு.



# 11

நிரஞ்சன் இப்போதெல்லாம் வீட்டில் தங்குவதே இல்லை.

ஏதோ வேலை இருப்பதுபோல காரணம் காட்டி ஓடிவிடுகிறான்.

வசுதாவுக்கு புரிந்தது... மல்லிகா குடும்பத்தைத் தவிர்க்கத் தான் இந்த ஓட்டம் என்று...

அவனும் சொன்னான்... விருந்தாளிகள் என்ற பெயரில் வந்திருக்கும் ஒட்டுண்ணிகள் புறப்பட்டுப் போகும் வரை அப்படித்தான் என்று.

அது மட்டுமா... 'ஜூ'வில் இருக்க வேண்டிய பிராணிகளாம். அவைகள் இருக்கும் இடத்தில் மனுஷன் தங்குவானா என்று முகம் சுளித்துச் சொன்னான்.

அதை விவரித்தபோது வசுதாவிற்கு சிரிப்பு வந்தது...

''மல்லிகா காட்டுப் பூனையாம்... எப்போதும் 'உர்' சத்தம். அவளோட அம்மா ஆள் விழுங்கி முதலையாம்... எப்ப விழுங்கி ஏப்பம் விடலாம் என்று இருக்கிறாளாம்... தந்தை பசுபதி வாலில்லா குரங்கு... சுந்தரியம்மா ஆட்டராமா... ஆடு என்றால் குதிப்பவராம்... இந்தப் பிராணிகளுடன் சேர்ந்து ஆதித்யாவும் போலார் கரடி என்றால் உதயா புத்தியில்லா செம்மறியாடு... இந்தக் குரூப்பில் நானும் சேர்ந்துக்கணுமா... ஜூட்..." என்றான் அவன்.

காலை ஏழு மணிக்கே எழுந்து வந்து காலை உணவை முடித்துக் கொண்டு அரக்க பரக்க அவன் ஓடுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

மதிய உணவிற்கு சுந்தரி வரவில்லை... ஜலதோஷமும் தலைவலியும் என்று படுக்கையை விட்டு எழவில்லை. சீதோஷ்ண மாற்றமாம்...

தங்களுக்குள் ரகசியம் பேசியபடி மல்லிகாவும் உதயாவும் சாப்பிட்டனர்.. நடுவே சிரிப்பு வேறு... எதிரே ஆதித்யாவும் பசுபதியும் தொழில் சம்பந்தமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர்.

ஆனால் வசுதா பரிமாறும்போது மட்டும் 'கப்சிப்' என்று ஆனான்... வசுதாவிற்கு எதுவும் தெரியக்கூடாது என்று தான்...

"நாளைக்கு என்ன ஐயிட்டம் பண்ணுவதாய் உத்தேசம்... புது ஐயிட்டமா இருக்கட்டும்... எல்லாத்தையும் 'நீட்'டா 'பேக்' பண்ணிடு... 'டப்பர் வேரில் வைத்தா கெடாமல் அப்படியே இருக்கும்... என்ன..." வசுதாவிடம் அதிகார தோரணையில் சொன்னாள் உதயா...

"சுந்தரி அத்தைக்குத்தான் உடம்பு சரியில்லையே... இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாமா... இந்த ப்ரோக்ராமை..." என்றான் ஆதித்யா.

"அட... நீ ஒண்ணு தம்பி... நாளைக்கு நமக்கு முன்னால் ரெடியாவது என் பொண்டாட்டி தான்... பாருங்க..." என்றார் பசுபதி.

"ஆமாம் அண்ணா... முடிவு பண்ணியதை எதுக்கு மாத்தணும்... அப்புறம் வேலை வந்து விட்டது... போக முடியாது என்பே. வேண்டவே வேண்டாம்... சீக்கிரம் புறப்பட்டுடலாம். அவ்வளவு சீக்கிரத்தில் எல்லாம் ரெடியாகி விடுமா..." என்று உதயா வசுதாவைப் பார்த்துக் கேட்டாள்.

"ரெடியாக வேண்டும்... தவிர... என்ன செய்ய வேண்டும் என்பதை நாமதான் சொல்லணும்... நாம் சொல்றதை தான் செய்யணும்... வேலையாட்களை எங்கே வைக்கணுமோ... அங்கே வைக்கணும். என்ன சொல்றீங்க தம்பி..." பசுபதி அகங்காரத்துடன் சொன்னார்.



ஆதித்யா எதுவும் பேசாமல் இருந்தான்... அவனது பார்வை வசுதாவின் மீதே இருந்தது.

இதை எப்படி எடுத்துக் கொள்கிறாள் என்று பார்க்கலாம். நிச்சயம் வேலைக்கு வந்தவளாக இருந்தால் சகித்துப் போவாள்... ஏதாவது உள்நோக்கத்துடன் வந்திருந்தால் என்னைக் கேவலமாய் பேசுகிறார்களே என்று கோபம் வரும்... என்னதான் காசுக்காக மோசம் பண்ண வந்தாலும் ஏச்சையும் பேச்சையும் தாங்கும் உள்ளம் வராதே... பொங்கி எழுவாள் தான்...

உண்மையில் வசுதாவின் மனம் உலைக்களமாய் கொதித்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தாள். அவளது முகம் கல் மாதிரி இருந்தது. ஆகா... ரொம்ப சாகசக்காரிதான். உணர்ச்சிகளை அடக்க நன்றாகக் கற்றுக் கொண்டிருக்கிறாள்.. நல்ல நடிப்பு... இன்னும் எத்தனை நாளைக்கு... பார்ப்போம் இவளது பொய்யும் புரட்டும் ஒரு நாள் வெளிச்சத்திற்கு வரத்தான் போகிறது... அதுவரையில் பொறுமை... ஆதித்யா உள்ளுக்குள் பொருமினான்.

இது மல்லிகாவுக்கு தெரியுமா... ஆதித்யா வசுதாவையேப் பார்த்துக் கொண்டிருப்பது கண்டு பற்களைக் கடித்தாள். வயிற்றில் அமிலம் சுரந்தது. உள்ளம் தகித்தது...

'அட சண்டாளி.. அதற்குள் ஆதியை வளைத்து விட்டாளே..' நெஞ்சில் எரிமலை வெடித்து தீப்பொறி சிதறினாற்போல கனன்றது... கண்களில் அனல் தெறித்தது.

'இதை இப்படியே விட்டுவிடக் கூடாது.. ஆதித்யா எனக்கே சொந்தம்... இந்த மாளிகை வீடு... எஸ்டேட்... எல்லாவற்றையும் பார்த்துவிட்டு மயங்கி ஆதியை கவரப்

பார்க்கிறாளே இந்த ஆதியும் கள் குடித்த நரி மாதிரி யல்லவா இருக்கிறார். ஊர் சுத்திப் பார்க்க இவளும் வரட்டும் என்று சொன்னது எதற்கு என்று இப்போது புரிகிறது இந்த தனுக்கு சுந்தரியோட ஊர்வலம் வர ஆசை போல.. இருக்கட்டும்... நான் யார் என்பதை இவளுக்குப் புரிய வைக்கிறேன்... இந்த வீட்டுக்கு நான்தான் எஜமானி என்பதை இவள் தெரிஞ்சுக்கணும்... உதயா போன் பண்ணி வரச் சொன்னதால் நமக்குத் தெரிந்தது. இல் லைன்னா... காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போன கதைதான்... இதுகள் எல்லாம் புத்தி கெட்ட ஜென்மங்கள்... பணக்காரர் வீட்டில் வேலைன்னு வர வேண்டியது... வீட்டில் கண்ணுக்கு லட்சணமா ஆம்பிளை இருந்துட்டா அவனை கைக்குள் போட்டுக் கொள்வது 'சே... ஈனப் பிறவிகள்.. முதல்ல இவளை விரட்டணும்...' அவளது இரத்தக் கொதிப்பை அறியாமல் உதயா பேசிக் கொண்டிருந்தாள்.

''அன்றைக்கு பண்ணினே பார்... வெந்தயக் கீரை புலவ்... அது அருமையாக இருந்தது... அதைப் பண்ணி விடு... வசுதா... அண்ணனுக்கும் அது பிடிக்கும்... இல்லையா அண்ணா.. மல்லிகா... நீயும் சாப்பிட்டு பார்.. ஸ்கேயும்...''

''வாயை மூடு...'' என்று கத்தி... கையை உதறிக் கொண்டு எழுந்து சென்றவளை எல்லோரும் திகைப் போடு பார்த்தனர்.

வசுதாவிற்கு அதைவிட திகைப்பு.. உதயாவா என்னைப் பாராட்டுவது... என் சமையலை மெச்சுவது... பரவா யில்லையே...

இதழோரம் லேசாய் புன்னகையும் எட்டிப் பார்த்தது



கற்பகத்திற்கு சாப்பாட்டைக் கொடுத்த பின்... ரோஹ னுக்கு எடுத்துக் கொண்டு மாடி ஏறினாள்...

''என்ன ரோஹன்... மும்முரமா எதையோ பண்ணிக் கொண்டு இருக்கே... பசி எடுக்கவில்லையா...'' டீபாயின் மீது தட்டை வைத்தவாறு கேட்டாள்.

சேப்பங்கிழங்கு வறுவலின் முறுகல் மணம் மூக்கைத் துளைத்தது.

''வாவ்... எனக்கு பிடித்த டிஷ்...'' என்றான் அவன் ''சீக்கிரம் சாப்பிடு... பார்க்கலாம்... அதுசரி.. இதெல்லாம் என்ன... இப்படி கசமுசவென்று பரப்பி வைத்துக் கொண்டு... என்ன பண்ணிக் கொண்டிருக்கிறே... ரோஹன்...'' அங்கிருந்த வயர்கள்... பாட்டரி... டார்ச் என்று ஏதேதோ கிடப்பதைப் பார்த்துவிட்டுக் கேட்டாள் வசுதா.

''நீங்க சொன்ன சயன்ஸ் ப்ராஜெக்ட்டுக்கு இதெல்லாம் 'யூஸ்' ஆகுமா என்று செக் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்க தந்த 'லிஸ்டில்' இருப்பது எல்லாமே கிடைத்த தான்னு செக் பண்ணிக் கொண்டு இருக்கிறேன்... 'ஆம்ப்ளிபையர்' தான் கிடைக்கல்லே... அப்புறம் செல் சார்ஜர் வேண்டும்... நிரஞ்சன் அண்ணா கிட்டே கேட்டால் கிடைக்கும்.... நாளைக்கே ஆரம்பித்து விடலாம் தானே...'' ஆவலுடன் கேட்டான் ரோஹன்.

''ஊகூம்... நாளைக்கு ஆகாது கண்ணா... நாளை மறுநாள் ஆரம்பிக்கலாம்... உனக்கு 'மெத்தட்' சொல்லித் தருகிறேன். அதன்படி நீயே செய்ய வேண்டும்... என்ன... சரி... முதலில் எழுந்து போய் கை கழுவி வா... சாப்பாடு ஆறிவிடும்... கமான்...'' அவள் சொன்னதும் எழுந்து போனான்.

அவன் சாப்பிடும்போது... அவன் சேகரித்த பொருள் களை ஒவ்வொன்றாய் சரி பார்த்தாள்.

''இது ரொம்ப பழசா தெரிகிறதோ... ரோஹன்... வேலைக்கு வருமா...''

''இது போதாது... இன்னும் கொஞ்சம் வேண்டும்...''

''ஆங்... இது பஃபெக்டா இருக்கு... குட்...''

''இது வேண்டாம் ரோஹன்... புதுசாவே வாங்கிடு வோம்...'' என்று ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்து 'கமெண்ட்ஸ்' தந்தாள்.

அவன் சாப்பிட்டதும் தட்டை எடுத்துக் கொண்டவள் ''இதையே வைத்துக் கொண்டு நேரத்தைப் போக்காதே ரோஹன்... 'எக்ஸாமு'க்கு படிக்கணும்... தெரியுமா... எனக்கு நீ பிராமிஸ் பண்ணியிருக்கே... 'ரேங்க்' வருவேன்னு... அதை மறந்துவிடாதே...'' என்று சொல்லிவிட்டுக் கீழே வந்தாள்.

மறுநாள் சீக்கிரமே எழுந்து உணவு வகைகளைத் தயாரிக்க வேண்டும் என்று... இரவே அதற்குத் தேவை யானதை ஆயத்தப் படுத்திக் கொண்டாள்.

வெந்தயக் கீரையை ஆய்ந்து வைத்து... வெங் காயத்தை அரிந்து டப்பர் வேரில் அடக்கி... கறிவேப் பிலை... கொத்தமல்லியை கழுவி சுத்தமாய் கவரில் போட்டு... தக்காளி... வெள்ளரி... காரட் எல்லாவற்றையும் சின்னதாய் நறுக்கி... அனைத்தையும் ஃபிரிஜ்ஜில் வைத்தாள்.

எல்லாம் முடிந்து படுக்கப் போகும்போது மணி பதி னொன்றை இன்னும் நிரஞ்சன் வரவில்லையே என்று யோசிக்கையில் அழைப்பு மணி ஒலித்தது. அவனே தான்.



உள்ளே நுழைந்ததும் ''படுத்து விட்டார்களா... திரு வாளர்.. திருமதி மற்றும் செல்வியும்... அம்மாடி... பிழைத் தேன்...'' என்று பெருமூச்சு விட்டான்.

''ஏன் லேட் நிரஞ்சன்... சாப்பிட்டாச்சா... இல்லையா...'' என்று அக்கறையுடன் விசாரித்தாள் வசுதா.

''ஓ... வெளியே... ஃபிரெண்ட்ஸுடன் அருமையான சாப்பாடு.''

''இப்படி வயிற்றைக் கெடுத்துக் கொள்கிறீர்களே நிரஞ்சன்'' உண்மையான கரிசனத்துடன் சொன்னதும்.

''அய்யோ... நீ வேறு வசுதா... இங்கே இருந்தால் தான் என் உடம்பு கெடும்.. எப்படின்னு கேட்கறேயா... அவர்களது டம்பாச்சாரப் பேச்சில் மண்டை வீங்கிடும்... இரத்த அழுத்தம் எகிறிடும்... 'டென்ஷனில்' தலைக் கெட்டு... வயிற்றில் அல்சர் வந்து விடும்... இப்போது வயித்து வலி மட்டும் தானே... விடு... சரி... எனக்கு தண்ணீர் மட்டும் போதும்... தாயேன்'' என்றான் அவன்.

''நீங்க சொல்ற அளவுக்கு அத்தனை மோசமா தெரிய வில்லையே நிரஞ்சன்.... ஏதோ வளவளன்னு பேசுகிறாள் களே தவிர...''

''இரு... இரு... இப்பத்தானே வந்திருக்கிறார்கள். இனிமே போகப் போகத் தெரியும்... அதுவரைக்கும் வேடிக்கைப் பார் வசுதா... இப்ப நான் தூங்கப் போகிறேன். குட்நைட்...'' அவன் தன் அறையை நோக்கி நடந்தான். வாசலை 'லாக்' செய்து விட்டு திரும்பி வருகையில்.. மாடிப் படியின் கைப்பிடியில் சாய்ந்தபடி நின்றிருந்த மல்லிகாவைப் பார்த்து திகைத்துப் போனாள்... இவள் ஏன் இன்னும் தூங்கவில்லை... வேவு பார்க்கிறாளா...

அவளது பார்வை குத்தீட்டியாய் தன் மேல் பாய்வதை உணர்ந்தாள்.

எதுவோ இருந்துவிட்டுப் போகட்டும்... இப்போது படுத்தால் தேவலை என்றிருக்கிறது. இவளிடம் நின்று பேசவும் நேரமில்லை என்று அவளைத் தாண்டிச் செல்ல யத்தனிக்கும்போது... மல்லிகா அதட்டலுடன் பேசினாள்.

"ஏய்... நில்லு... இப்படி அர்த்த ராத்திரியில் இளித்துப் பேசிக் கொண்டு இருக்கிறாயே... உனக்குத் துளியும் வெட்கம் இல்லையா... உன்னோட அசிங்கமான நோக்கம் என்னன்னு எனக்குப் புரிந்து போச்சு... அண்ணனையும் தம்பியையும் 'அட்ராக்ட்' பண்ணலாம்... யாரு மசிஞ்சாலும் சொத்தில் பங்கு என்கிற எண்ணம்... இல்லே... அது மட்டும் நடக்காது... வேலைக்காரிங்கற 'லெவல்' லேயே இரு... அளவுக்கு மீறினா அசிங்கம்... வெள்ளைத் தோலைக்காட்டி மயக்கிடலாம்னு நினைச்சேயாக்கும்... கண்றாவிடா... உன்னை வேலைக்கு சேர்த்தார்களே அதைச் சொல்லணும்..."

கடுகாய் பொரிந்த மல்லிகாவை இடைமறித்தாள் வதனா.

"ஹலோ... மைண்ட் யுவர் வோர்ட்ஸ்... இப்படி என்னைக் கண்டபடி பேசும் உரிமை உங்களுக்கு இல்லை... விருந்தாளியா வந்திருக்கிறீர்கள்... அந்த மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்... என் மனசு சுத்தம் என்று எனக்குத் தெரியும்..." 'நறுக்' கென்று குட்டுவது போலச் சொன்னாள்.

ஆனால் மல்லிகா விட்டால் தானே...

"ஆகா பார்த்தேனே... அதையும்... அப்போ ஆதி... இப்போ நிரஞ்சன்.. இதோ பார்... நான் வெறும் விருந்தாளி



இல்லே... ஆதிக்கு மனைவியாகப் போகிறவள்... இந்த வீட்டில் நல்லது கெட்டது எல்லாத்துக்கும் எனக்குப் பொறுப்பு உண்டு. யார் தப்பு செய்தாலும் தட்டிக் கேட்க எனக்கு உரிமையும் இருக்கு... தெரிஞ்சுக்கோ..." மிரட்டும் குரலில் பேசினாள் மல்லிகா...

கடவுளே... இவளது மனதில் இத்தனை கசடா... சே... சரியான குணக்கேடாகத் தெரிகிறாளே...

"என்ன... நான் சொன்னது உறைத்ததா" என்றவளை...

"எதற்கு வீணாய் பேசிக் கொண்டு... நான் வந்திருப்பது வேலைக்கு மட்டுமே... அதுவும் நிரந்தரமாக அல்ல... எனக்கு ஆதியை மயக்க எல்லாம் நேரம் இல்லை... பயப்படாதீங்க மல்லிகா. உங்க ஆதி பத்திரமா உங்ககிட்ட இருப்பார். ஆனா ஒண்ணு மல்லிகா... அதெப்படி நீங்க ரெண்டு பேரும் இப்படி பதினெட்டு பொருத்தங்களோடு அமைந்தீர்கள்... முன் கோபத்தில்... சிடுசிடுப்பில்... கடுவன் மூஞ்சியில்... சந்தேகப் புத்தியில்... ஊசி வார்த்தைகளில்... இன்னொருத்தர் மீது தப்புக் காண்பதில்... என்று அடுக்கிக் கொண்டே போகலாம்... அடடா... மேட் ஃபார் ஈச் அதர். என்கிற மாதிரி... என்ன பொருத்தம் இப் பொருத்தம்..." என்று மடக்கி விட்டு... அவளது மறுமொழிக்காகவும் காத்திராமல் தன் அறைக்குள் நுழைந்து தாழிட்டாள்..

கதவின் மேல் சாய்ந்தவள் மூச்சை இழுத்து விட்டாள்.. அய்யோ... வாயா அது... நாக்கினை சாட்டையாக அல்லவா சுழற்றி அடிக்கிறாள்.. மற்றவர்களுக்கு வலிக்குமே என்று நினைக்காமல்...

ஏதேதோ அசிங்கமாய் கற்பித்துக் கொண்டு... சே... அருவருப்பாய் இருக்கிறது... ஆயிரம் பூரான்கள் உடம்பில் ஊருவது போல...

நிரஞ்சன் சொன்னது நிஜம்... போகப் போகத் தெரியும் என்றானே... அது இன்றே தெரிந்து விட்டது...

அம்மாடி! இந்த வீட்டுக்கு ராணியாகி விட்டால்... ஆராஜகம்தான். அனைவரின் கதியும் அதோ கதிதான்... நரகம் கீழ் இறங்கி வந்து விடும்.

இனி அவளிடம் இருந்து கொஞ்சம் தள்ளியே இருக்க வேண்டும்... துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்பது போல... ஹையோ... இதுவும் நிரஞ்சன் சொன்னதுதான்... அவளையும் மறந்து சிரித்தாள்... வசுதா.

## 12

மங்களூர் ஒரு அழகான ஊர் என்பது அதைச் சுற்றிப் பார்க்கையில் தான் தெரிந்தது.

ஆதியின் இன்னோவா காரில் அனைவரும் புறப்பட்டனர்.

காலை உணவு வீட்டிலே ஆயிற்று.. மதியத்திற்கு... உதயா சொன்னபடி வெந்தயக்கீரை புலாவ்... மாங்காய் சித்ரான்னம்... தயிர் சாதம்... அப்பளம்... வடகம்... சிப்ஸ்... ஊறுகாய்... வெஜிடபிள் சாலட்... என்று அதிகாலையிலேயே எல்லாம் தயார் பண்ணி வைத்து விட்டாள் வசுதா.

வேலைகளை முடித்துவிட்டு... 'சில்' என்ற நீரில் அலுப்புப் போக குளித்து விட்டு வந்தாள்... அவளிடமிருந்த மைசூர் சந்தன சோப்பின் நறுமணம் 'கம்'மென்று வீசியது... பனியில் நனைந்த ரோஜாவைப் போல புதுப் பொலிவுடன் இருந்தாள்.

உடுத்த வேண்டிய ட்ரஸ்ஸை ஏற்கனவே எடுத்து வைத்திருந்தாள்... இத்தகைய பயணத்திற்கு சுரிதார் உடை... அரைத்து வைத்த சந்தன நிறத்தில்... அவளது



நிறத்திற்கு எடுப்பாக இருந்தது... மிகையில்லாத ஒப்பனை மட்டுமே... சன் ஸ்க்ரீன் லோஷனை மட்டும் தடவியிருந்தாள். வளைந்த இரு புருவங்களுக்கு நடுவே வட்ட பிந்தி...

அலங்காரப் பொம்மையாய் வந்த மல்லிகாவிற்கு உள்ளுக்குள் பொருமல்... சிம்பிளாய் இருந்தும் கண்களைப் பிடுங்கும் அழகாய் தெரிகிறாளே... சுண்டி விடும் நிறத்திற்கு சந்தன நிறம் என்னமாய் பொருந்துகிறது. இவள் சருமம் மட்டும் எப்படி இத்தனை மென்மையாய்... மினுமினுப்பாய் தெரிகிறது.

நானும் அடிக்கடி ப்யூட்டி பார்லர் போய்... மஸாஜ்... பேஷியல் செய்து கொள்கிறேன்... என் சருமத்திற்கு இந்தப் பொலிவும் மிருதுவும் இல்லையே...

இவளது வனப்புக்கு முன்னே என் முகம் அரிதாரம் பூசிய மாதிரி இருக்கு... சே... இவள் மாதிரி எனக்கு அழகு இருந்திருந்தால்... ஆதியை என் காலடியில் விழ வைத்திருப்பேன்...

எல்லாம் இந்த அம்மாவால்... அம்மா அழகாய் இருந்திருந்தால் நானும் அழகியாக பிறந்திருப்பேன். ப்ச்சு... அம்மாவைப் போலவே நிறம் மட்டாய்... கரளை கரளையான உடல் வாகுடன்... சுமாராய் இருக்கிறேன்... சரி... அப்பாவின் உயரத்தையாவது கொள்ளக் கூடாதா... அதுவும் இல்லை...

அவளையும் மீறி கண்கள் வசுதா பக்கம் தாவின. தங்க சிலைன்னு சொல்வார்களே... அது இவள் மாதிரி தான் இருக்குமோ... என்ன உயரம்... அடேயப்பா. கொடி மாதிரி உடம்பு வேறே... செதுக்கி வச்ச மாதிரி இருக்கு... கம்பத்துக்கு சேலைக் கட்டியிருந்தாலே திரும்பிப் பார்க்கும்

ஆண் ஜென்மங்கள். இவளைப் பார்த்து மயங்காமல் இருப்பார்களா... ஆதியைக் குற்றம் சொல்லவும் முடியாது தான். எனக்கு சரியான போட்டியாய் வந்திருக்கிறாள்.. பாவி.. எப்படி இவளை ஜெயிக்கப் போகிறேன்... தெரிய வில்லையே ஈசுவரா...

''எங்கேடீ பராக்குப் பார்க்கிறே... சட்டென்று ஏறு வண்டியில் சீக்கிரம் கிளம்பணுமாம்...! சுந்தரியின் கட்டைக் குரல் அவளைத் துள்ள வைத்தது. இறுகிய முகத்துடன் காருக்குள் ஏறி அமர்ந்தாள். உதயாவிற்கு வசுதாவின் தோற்றத்தைப் பார்க்கும் அளவு ஆர்வமோ பொறுமையோ இல்லை... தன் 'செல்'லில் யாருக்கோ எஸ்.எம்.எஸ். அனுப்பிக் கொண்டிருந்தாள்... பதில் வந்ததும் புன்னகை வேறு.

''என்ன... பொண்ணு... சாப்பிட்ற பதார்த்தங்களை எத்தியாச்சு தானே... ஆங்.. அதை மறந்துடாதே. எதுக்கும் ஒரு தடவை 'செக்' பண்ணிடு... இப்படித்தான்... நாங்க திருவண்ணாமலைக்குப் போறப்போ சாப்பாடு பாத்திரங்கள் வச்சிருந்த பையை மறந்து வச்சுட்டுப் புறப்பட்டு விட்டோம். உனக்கு ஞாபகம் இருக்கா சுந்தரி... அப்புறம் போற வழியில் ஏதோ மட்டமான ஓட்டலில் சாப்பிட்டு விட்டு... வயித்துப் போக்கு... வாந்தின்னு அவஸ்தைப் பட்டதாயிற்று. அன்னிலிருந்து சாப்பாடு விஷயத்தில் உஷார்தான் ஹி... ஹி...'' பசுபதியின் தொண தொணப் பில் தலைவலி பிள்ளையார் சுழி போட்டது.

ஆதித்யா காரை ஓட்ட ஆரம்பித்தான்.

''இந்த வண்டி அம்சமா இருக்கு. பெரிய குடும்பத் துக்கு ஏத்த வண்டி... எங்க... பேசாம... இந்த மாதிரி வண்டி வாங்கிட்டா என்ன... நாளைக்கு மாப்பிள்ளை.. பேரப்



பிள்ளைகள்னு ஆயிட்டா... இந்த மாதிரி வண்டி தான் வேண்டியிருக்கும்... என்ன சொல்றீங்க..!'' சுந்தரி வெகு அலட்டலாய் கூற...

''ஆமா.. ஆமா... நீ இப்படியே பீப்பா மாதிரி வீங்கிக் கொண்டே போனே... இந்த மாதிரி வண்டிதான் லாயக்கு. பின் சீட்டில் நீ மட்டும் உட்கார்ந்து வரலாம்..'' பசுபதி கிண்டலாய் சொன்னார்.

''ஏதாவது கேட்டா... எதையோ சொல்வது... தம்பி... இப்ப நாம எங்கே போறோம்...'' என்று ஆதியிடம் கேட்டாள் சுந்தரி.

''முதல்ல அருகில் இருக்கும் கோவில்களுக்கு.''

அதைக் கேட்டு முகம் சுளித்தாள் உதயா.

''அய்யோ.. கோவிலை விட்டா பார்க்கிறதுக்கு வேற இடம் இல்லையாக்கும்.. ஏன்னா... இப்படி அறுக்கறே... எத்தனை இடம் இருக்கு. பார்த்து ரசிக்க... பீச்.. பிலி குளாலேக் கார்டன்... கொஞ்சம் தள்ளி பிமூடுத்ரேக்கு போனா ஆயிரம் கால் பாகடி பார்க்கலாமே... அதை விட்டுட்டு... கோவில்.. கோவில்னு...'' என்றாள் கொஞ்சம் கடுப்புடன்.

''நீ பார்த்திருக்கிறாய் உதய்... ஆனா இவர்கள் பார்த்த தில்லையே... கத்ரி கோவில்... குட்ரோலி கோவில் பார்த்து விட்டு நேரே பேகல்ஃபோர்ட்க்கு போகலாம். அப்புறம் பீச்... இன்றைக்கு இவ்வளவுதான் முடியும்..'' என்றான் ஆதித்யா.

''ஆதி தம்பி சொல்வதும் சரிதான்.. ஒரு நாள்ல எல்லா இடத்தையும் பார்க்க முடியாதுதான். அலுப்புத் தட்டும். இன்னொரு நாள் மத்த இடங்களுக்கு போயிக்கலாம். அம்மா.. உதயா.. உனக்கு இப்ப லீவுதானே... பின்னே விடு...'' என்று பசுபதி சொன்னதும்...

''எனக்கு 'இன்டர்னல்' எக்ஸாமிற்கு படிக்க வேண்டி இருக்கு அங்கிள். சும்மா ஊர் சுத்த முடியாது... ஏதோ நீங்க வந்திருக்கீங்கன்னு இப்ப வந்தேன்... நாலு நாள்ல புறப் பட்டாகணும்... இங்கே என்னால் படிக்க முடியாது'' என்று கூறினாள் உதயா.

''இந்த எக்ஸாமோட படிப்பு முடிஞ்சதா உதயா... அப்போ எங்களோட ஊருக்கு வாயேன்..'' என்று மல்லிகா அழைப்பு விட...

சலிப்புடன் சொன்னாள் உதயா... ''அடுத்த மாசம் தியரி எக்ஸாம்... அப்புறம் பிராக்டிகல்னு வருகிறது... எங்கே வருவது...''

''என்ன தம்பி... இந்த வருஷத்தோடு உதயாவோட படிப்பு முடியுது இல்லே... மாப்பிள்ளை பார்க்க வேண் டியதுதானா.. நம்ம சொந்தத்தில் நல்ல பசங்க இருக் காங்க... சொத்து பத்தோட... என்ன... சொல்லட்டுமா...'' பசுபதி ஆவலுடன் கேட்டார்.

''நல்ல இடம் என்றால் பார்க்கலாம்தான்... படிப்பு முடிந்தது என்றால் அடுத்து கல்யாணம் தானே... என்ன சொல்றே.. உதய்...'' என்றான் ஆதித்யா.

இதை எதிர்பார்க்கவில்லை அவள்... திடீர் என்று கல்யாணம் என்றதும் முகம் வெளுத்துப் போனது.

''வந்து... இப்போ எதுக்கு இந்தப் பேச்சு... எக்ஸாம் முடியட்டுமே...'' என்றாள் சிறு தடுமாற்றத்துடன்.

''அதுவும் சரிதான்... முதல்ல உன் படிப்பு முடியட்டும். அப்புறம் பார்த்துக்கலாம்...''

அண்ணனின் வார்த்தைகளில் தெளிவடைந்தாள் உதயா. அத்தனையையும் கவனித்துக் கொண்டிருந்த வசுதாவிற்கு நெருடல்.



கல்யாணம் என்றதும் ஏன் முகம் மாறியது... ஏதோ கலக்கமோ.. பயமோ இருந்ததே. இப்போதைக்கு வேண் டாம் என்று வார்த்தையில் சொல்லாமல்... ஏன் தடுமாறு கிறாள்... சம்திங் ராங்..?

ஆனால் அடுத்த கணமே... இருக்கட்டுமே... இது அவளுடைய சொந்த விஷயம்... அதைப் பார்த்துக் கொள்ள அருமை அண்ணன் இருக்கிறார்... இது எனக்கு சம்பந்தமில்லாத விஷயம்...

முதன் முதலாய் மங்களூரை சுற்றிப் பார்க்கும் சந் தர்ப்பம் கிடைத்திருக்கிறது... அதை அனுபவிக்காமல்... வேண்டாத கவலைகளை ஏன் இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும். அந்த எண்ணத்தில் வெளியழகை திரும்ப ரசிக்க ஆரம்பித்தாள். மழை வரும் போல வானம் கறுத்துப் போயிருந்தது.. எந்த நேரத்தில் கொட்டுமோ...

மங்களூரில் திடீர் திடீர் என்று மழை வரும் என்றாரே கற்பகம் ஆன்ட்டீ... அது உண்மைதான்...

'சில்'லென்ற காற்று முகத்தை வருடித் தந்ததை ரசித்தாள்.

கத்ரி கோவிலுக்குள் நுழையும்போது மழை சடசட வென்று பெய்ய ஆரம்பித்தது. அழகான கோவில்... தரிசனம் முடிந்தும் வெளி வர முடியாதபடி கனமழை.

ஆதித்யா விரைந்து சென்று காரைக் கொண்டு வர எல் லோரும் அவசரத்துடன் ஏறினார்கள். அதற்குள் உடம்பு பாதி நனைந்து விட்டது.

''இந்த மழைக்கு சூடா காபியிருந்தால் இதமா இருக் கும்... என்று பசுபதி குரல் கொடுத்தபோதே...

வசுதா ப்ளாஸ்கில் கொண்டு வந்த காபியை பிளாஸ்டிக் கப்புகளில் ஊற்றி அனைவருக்கும் தந்தாள்.

"இதைத்தான் சமயோசித புத்திம்பாங்க... புத்தி சாலிம்மா நீ... எந்த நேரத்தில் எதைத் தரணும்னு யோசிச்சு சரியா செய்யறே... இப்படித்தான் இருக்கணும்..." வசுதாவை பாராட்டிவிட்டு காபியை வாங்கி 'சர்' என்று உறிஞ்சினார்...

இன்முகத்துடன் அதை ஏற்றுக் கொண்ட வசுதாவிற்கு மல்லிகாவின் முகத்தில் தெரிந்த கடுப்பைக் கண்டதும் சிரிப்பு வந்தது. பாவம்...

அவளுக்குப் பிடிக்காததெல்லாம் நடக்கிறது... ஆதித்யா முன் இப்படிப் புகழ்வது அவளுக்கு எரிச்சலைத் தந்தது என்பதை உணர்ந்தாள்...

சரி.. ஆதிக்கு எப்படி... அவனுக்கும் கோபம் வந்திருக்குமே... தனக்கு வேண்டிய இருவரின் மனநிலையை அறிந்து கொள்ளாமல் பசுபதி இப்படிப் புகழ்ந்து தள்ளுகிறாரே... அய்யோ... பாவம்தான்.

அடுத்து சாவு மகா கணபதி கோவிலுக்கு வந்தாயிற்று. துளு மன்னன், வீரபாகுவால் கட்டப்பட்டது என்று தெரிந்து கொண்டாள்... சக்தி வாய்ந்த கணபதி... இவர் முன் வைத்த கோரிக்கை நியாயமாக இருந்தால் நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கை. என விவரித்தான் ஆதித்யா. அதைக் கேட்டதும் வசுதா கண்களை மூடி பிரார்த்தித்தாள். "பிள்ளையாரப்பா... நான் வேண்டுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். என் சித்தியிடம் இருந்து என்னைக் காப்பாற்று. அவளது ரௌடித் தம்பியை என் வழிக்கு வராமல் செய்... எனக்கு நல் வழிகாட்டு..."

"ஆமாம்... இங்கே என்ன அர்ச்சனை ஏதும் கிடையாதா. கற்பூரம் காட்டறதில்லையா... சந்தனம் மட்டும் தர்றாங்க.." சுந்தரியின் கட்டைத்வனி அங்கிருப்பவர்களை திரும்பிப் பார்க்க வைத்தது.



"அதெல்லாம்... அங்கே... தமிழ்நாட்டில்... இங்கே வெறும் தீர்த்தமும்... சந்தனம்.. பூ தான்..." என்றாள் உதயா.

கோவிலை வலம் வந்து விட்டுக் கிளம்பினார்கள்.

குட்ரோலி கோகரண நாதேசுவர கோவில்! அழகான... கலையம்சமான கோவில்!

கோபுரமும்... அதில் வடித்த சிலைகளும் கண்களைக் கவர்ந்தன. மனதைத் தொட்டன.

கோவிலின் வாயிலில் இருந்த யானைச் சிலைகள்... மாலைகளை ஏந்திய வண்ணம் கம்பீரமாய் நின்றிருந்தது. அற்புதம்.

ஒவ்வொன்றையும் ரசித்தவாறு சென்றாள் வசுதா.

பாகீரதி என்ற ஆகாய கங்கையை தாங்கக் காத்திருக்கும் சிவனின் சிலையோ அதி அற்புதம்... தலைவிரி கோலத்தில் தலையை நிமிர்த்திக் கொண்டு நின்றிருந்த கோலம் சிலிர்ப்பைத் தந்தது.

அருகே சிறுவனம்... அதில் உண்மையோ என்று திகைக்கும்படி புலிகளின் நீர் அருந்தும் தோற்றம்... தோகை விரித்த மயில்... துள்ளித் திரியும் மான்கள்... தவம் செய்யும் கொக்குகள்... அச்சு அசலாய்... பொய்யை மெய்யாக்கி காட்டும் விந்தை!

கோவிலும் படுசுத்தமாய் இருந்தது அதிசயம்... துடைத்து விட்ட மாதிரி சுத்தம்.

"பசி வயித்தைக் கிள்ளுகிறது.. ஏதாவது நல்ல இடம் இருந்தா பார் தம்பி... ஒரு பிடி பிடிக்கலாம்.." சாப்பாட்டு நினைப்பிலேயே இருந்த பசுபதி சொன்னதும் மகள் எரிந்து விழுந்தாள்.

"எப்பவும் சாப்பாட்டு நினைப்புதான்.. நாம சாப்பிட வந்தோமா.. இடங்களைச் சுத்திப் பார்க்க வந்தோமா.. சாப்பாடுதான் முக்கியம்னா பேசாம வீட்டிலேயே இருந்திருக்கலாம் நீங்க.."

"என்னம்மா நீ... மனுஷன் வாழ்றதே.. இந்த ஒரு ஜாண் வயித்துக்காகத்தான்.. அதை வாட விடலாமா.. சொல்லு..." என்றார் தந்தை.

நல்ல பசுமையான சூழலின் நடுவே, சுத்தமான இடம் பார்த்து வண்டியை நிறுத்தினான் ஆதித்யா. சுற்றியும் மரங்கள். நெடுநெடு என்று வளர்ந்து நிற்கும் தென்னை.. பாக்கு மரங்கள்... போருக்குத் தயாரான ராணுவ சிப்பாய்களின் அணிவகுப்பு மாதிரி கம்பீரக் கூட்டம்...

எங்கும் பசுமை... பசுமைக்குக் குறைவில்லை.

நேத்ராவதி ஆறும்... குருபுர் ஆறும் மங்களூரை தொட்டு ஓடுவதால் நிலமகள் பெருமையுடன் பச்சைப் பட்டாடை உடுத்தியிருந்தாள்.

பச்சை பட்டிற்கு நீலக்கரை சேர்த்தாற்போல விரிந்த கடலின் அழகு... மங்களூருக்கு குறையேது..

இலைத்தட்டுகளில் உணவை வைத்து எல்லோருக்கும் தந்தாள் வசுதா.

எல்லோரும் ருசித்துச் சாப்பிடுகையில் அது அவளுக்கு பெருமையாக இருந்தது... பார்த்துப் பார்த்து பரிமாறினாள்.

"இதென்னம்மா... புது 'டைப்'பா இருக்கு.. கீரையைப் போட்டுப் பண்ணியிருக்கே.. அருமையா இருக்கு... இதுக்கு என்ன பேரும்மா சொன்னே... வெந்தயக் கீரை புலாவ்வா... இதை எப்படி பண்றதுன்னு என் பொண்டாட்டிக்கு



சொல்லிக் கொடும்மா.. ஏய் சுந்தரி... இந்தப் பொண்ணு கிட்டே கேட்டுத் தெரிஞ்சுக்கோ..." விரலை நக்கியவாறு சொன்னார் பசுபதி.

சுந்தரியின் முகம் கோபத்தில் கோணியது. இருக்காதா பின்னே... வேலைக்காரியை மெச்சி என்ன பேச்சு... ஏற்கனவே தளுக்கு மினுக்காய் இருக்கிறாள்.. இவளது புகழாரத்தில் இன்னும் சிலுப்பிக்கப் போகிறாள்.. இவருக்கு யார் கிட்ட எப்படிப் பேசணும்ங்கற விவஸ்தையே இல்லை... மரமண்டை... கணவனைத் திட்டித் தீர்த்தாள்.

"வெளிப்படையாக எல்லாம் நல்லாத்தான் இருக்கு... ஆனா உப்பு தூக்கலாட்டம் தெரியுது. எனக்கு பி.பி. வேறு இப்படி உப்பும் காரமாய் சாப்பிட்டா தலை கிறுகிறுத்து விழ வேண்டியதுதான்" என்று குறை கூறினாள்.

"இல்லையே அத்தை... நல்லா டேஸ்டா தானே இருக்கு..." என்று உதயா அப்பாவியாய் சொல்ல...

"உனக்கு ஹாஸ்டல் சாப்பாடு சாப்பிட்டு நாக்கு செத்துப் போயிருக்கு உதயா... அதான் எல்லாமே டேஸ்டா தெரியுது... விடு..." என்று குத்தலாய் பேசினாள்.

அந்த சமயத்தில் ஆதிக்கு திடீரென்று புரையேற பேச்சும் தடைப்பட்டது.

வசுதா ஓடிச் சென்று நீர் பாட்டிலைக் கொண்டு வந்து 'குடியுங்கள்' என்று கொடுக்க... அவன் வாங்கிக் குடித்தான்.

அவனது பார்வை அவளுக்கு நன்றி தெரிவித்தது. அதைப் பொருட்படுத்தாமல் பசுபதிக்கு ஊறுகாய் பரிமாறப் போனாள்.

அவளது கண்கள் தங்கையையும்... பின் மல்லிகாவை யும் பார்த்தன.

உதயாவின் கையிலும் நீர்பாட்டில்... சாப்பிட்டதும் குடிக்கவா...

மல்லிகா சிப்ஸை கொறித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் பரபரப்போ... பதட்டமோ அடையாம லிருக்க... வசுதா ஓடி வந்தது அவன் மனதை அசைத்தது. உடன் பிறந்தவளுக்கும்... உறவுக்காரிக்கும் இல்லாத துடிப்பு எங்கிருந்தோ வந்த யாரோ ஒருத்தியிடம் கண்டது வியப்புதான்... இது கடமையுணர்ச்சியால் இல்லை... மனுஷத்தன்மையால்... இயற்கையாய் வர வேண்டிய பண்பு...

அவனையும் அறியாமல் கண்கள் வசுதாவையே தொடர்ந்தன.

துப்பட்டாவை கீழே புரள விடாமல்... நாசூக்காய் ஒதுக்கி விட்டுக் கொண்டு... இன்முகத்துடன் பசுபதிக்கு நீரை ஊற்றித் தந்து கொண்டிருந்த வசுதாவை முதன் முதலாய் பார்ப்பதுபோல உற்று நோக்கினான்.

'சந்தன பொம்மையாய் வளைய வந்த அவளிடம் ஏதோ ஒரு வசீகரம் தெரிந்தது... மற்றப் பெண்களிடமிருந்து அவள் தனித்து நிற்க என்ன காரணம்... அவளது உயரமா... அழகா... தன்னம்பிக்கை தந்த கம்பீரமா... இல்லை படிப்பறிவால் வந்த தெளிவா... எது... அறிவும் அழகும் சேர்ந்து இருப்பது அபூர்வம் தான்... பின் எதற்காக ஒளிவும் மறைவும்... ஏன் பொய் சொல்ல வேண்டும்... இந்த வேலைக்கு ஏன் வரவேண்டும். இவளுடைய நடை... உடை பாவனையைப் பார்த்தால் தவறாய் நினைக்கவும் தோணவில்லையே... இவளிடம் பாசாங்கோ... குற்ற



உணர்வோ தென்படவில்லையே... தப்பு செய்பவர் நேருக்கு நேராய் பேச முடியாது... இவளிடம் நேர் கொண்ட பார்வை தெரிகிறது... என்னை அழிக்க வந்தவ ளாக இருந்தால்... இப்படிக் கரிசனம் காட்டுவாளா... ஒரு வேளை அதுவும் நடிப்பா...'

தலை 'விண்' என்று வலித்தது.

நெற்றியை அமுக்கிக் கொண்டான்.

''என்ன தம்பி... தலை வலியா... திடீர் மழை... திடீர் வெயில்னு மாறுகிறது இல்லையா... அதான்... என் மாத்திரையைக் கொண்டு வரவில்லையே... சரி... போற வழியில் ஏதாவது மருந்துக்கடை...'' அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே... அவனிடம் ஆஸ்பரின் மாத்திரையையும் நீரையும் நீட்டினாள் வசுதா.

''இந்த மாதிரி நேரத்தில் யாருக்காவது தலைவலி வரக்கூடும் என்று நினைத்து முன்னெச்சரிக்கையாய் கொண்டு வந்தேன்'' என்றாள் அமைதியாக.

மீண்டும் பரிவு.. அக்கறையுடன் கவனிப்பு...

தலை வலிக்கு காரணமானவளே தலைவலிக்கு மாத் திரை தருவதும் விநோதம் தான்.

பெருமூச்சு விட்டான்.

''தேவைப்பட்டால் அமிர்தாஞ்சனமும் இருக்கு.. தரட்டுமா'' என்றாள் அவள்.

''நோ... தாங்ஸ்'' என்றான் ஆதித்யா. அதற்கு மேல் அங்கு நிற்காமல் தன் வேலையை கவனிக்கப் போனாள்.

ஒரு தட்டில் கொஞ்சம் தயிர் சாதத்தையும் ஊறு காயையும் வைத்துக் கொள்வதை கவனித்தான் ஆதித்யா.

அந்தத் தட்டை ஒரு பக்கமாய் வைத்துவிட்டு ஹாட் பேக்கையும்... கேரியரையும் எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

அவளுக்கும் பசிக்குமே...

"ஏய்... உதய்... நீயும் மல்லிகாவும் அந்தப் பாத்திரங்களை எடுத்துப் போய் காரில் வையுங்கள். வசுதா சாப்பிடட்டும்" என்றான் ஆதி.

பேசியது அவனா... அவனால் இப்படியும் பேச முடியுமா... வெண்ணெயின் குழைவாய்... எனக்காக பரிந்து... பிரமிப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவள் விழிப்பதைப் பார்த்துவிட்டு "பசியுடன் இருக்க வேண்டாம் வசுதா.. முதலில் சாப்பிட்டு விடு... இல்லாவிட்டால் உனக்கும் மாத்திரைதான்" என்றான். அதுவும் புன்னகையுடன்!

அந்த அபூர்வமான புன்னகை அவளை அசத்தியது.

கனவா... இல்லை நிஜமா என்றும் தோன்றியது.

அனையும் மீறி அவளுள் ஆனந்தம் குமிழிட்டது.

என்னவோ உண்மை...

அந்த உணர்வில்... உம்மென்று வந்த உதயாவையோ... வெறுப்பு உமிழப் பார்த்த மல்லிகாவையோ அவள் கவனிக்கவில்லை.

## 13

பேகல் கோட்டை... கண்களை விரித்தாள் வசுதா. வாவ்! என்ன நீளம்! அரபிக்கடலின் ஓரமாய் வரலாற்று சின்னமாய் தலை நிமிர்ந்து இருந்தது.



கிட்டத்தட்ட நாற்பது ஏக்கர் பரப்பளவில் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது சுவர்...

புது மாதிரியான செங்கற்கள்...

உள் நுழைந்ததும் பூங்காவைப் போல அமைப்பு கண்களை கவ்வி இழுத்தன.

நுழைவாயிலில் இருந்த அனுமார் கோவில் மூடி இருந்தது.

ஆங்காங்கே வட்டமான மதில்கள்... அங்கிருந்து நீல நிறக் கடல்... பார்க்க மனதைக் கொள்ளைக் கொண்டது. காற்றின் வேகம் ஆளைத் தள்ளுவது போல இருந்தது. வெட்ட வெளி என்பதால் 'சிலீர்' என்று குளிர் காற்று மேனியைத் துளைத்தது... காற்றின் ஓசையை மீறி கடலின் ஓங்காரம்...

சாய்வுப் பாதையில் ஏறி மதில்மேல் நின்றாள் வசுதா.

மதில் சுவரின் அருகே நின்று கடலின் அழகை ரசித்தவளின் அருகே வந்து நின்றான் ஆதித்யா...

'ஜில்' என்ற காற்றின் ஓசையில் அவனது காலடி ஓசை காதில் விழவில்லை...

பிறை நெற்றியில் புரளும் கேசக் கற்றைகளை லாவகமாய் ஒதுக்கிக் கொண்டும்... காற்றாடியாய் பறக்கும் துப்பட்டாவை இழுத்துப் போர்த்திக் கொண்டும் நின்ற அவளையே சில கணங்கள் பார்த்தவன்... அவளை நோக்கி குனிந்து கேட்டான்.

"இதுதான் முதல் தடவையா... வசுதா... இங்கே வருவது..." அவனை எதிர்பார்க்காததால் அவளது கண்கள் வியப்பில் விரிந்தன.

இதென்ன... இந்த இடத்தின் மகிமையா... இத்தனை இனிமையாய் என்னிடம் பேசுகிறான்...

"ஆமாம்... மங்களூருக்கு வந்திருப்பதும் இது தான் முதல் தடவை..." என்று சொல்லிவிட்டுத் திரும்பக் கடலை ரசிக்க ஆரம்பித்தாள்...

அதிகம் பேசினாலும் வம்பு... பேச்சு எதில் போய் முடியுமோ வேண்டவே வேண்டாம் என்ற எண்ணம் தான்...

ஆனால் அவனோ நகரவும் இல்லை... அவனது பார்வை தன்னைத் துளைப்பதையும் அவளால் உணர முடிந்தது. இன்னும் ஏன் இங்கு நிற்கிறான்... மற்றவர்களுடன் நடக்க வேண்டியது தானே... என்று நினைத்தாலும் கோட்டையின் வரலாற்றை அறிந்து கொள்ளும் ஆர்வம் அவனிடம் பேச வைத்தது. காற்றில் பறந்த துப்பட்டா அவனது முகத்தை உரச... அதை இழுத்துப் போர்த்தியவாறு கேட்டாள்.

"இந்தக் கோட்டையைப் பற்றிச் சொல்லுங்களேன்..."

கேட்டதும் விவரிக்க ஆரம்பித்தான்... 'கைட்' போல... வசுதாவும் அதை சுவாரஸ்யமாய் கேட்க ஆரம்பித்தாள்.

"இந்த ஊர் பெயர் காசர் கோடு... ஆரம்பத்தில் கர்நாடகாவுடன் இருந்தது. இப்போ கேரளாவுக்குச் சொந்தம். கேரளாவில் மிகப் பெரிய... நீளமான கோட்டை இதுதான். ஹிரிய வெங்கடப்பா நாயக் இந்தக் கோட்டை கட்டுவதை ஆரம்பித்தார். சிவப்பா நாயக் இதை முடித்து வைத்தார். நாயக் வம்சத்தினர் எதிரிகளிடம் நாட்டைக் காக்க இந்த கோட்டையை அமைத்தது. அதுவும் கடல் வழியாய் வரும் பகைவர்களால் எந்தவித அபாயம் வரக்கூடாது என்று நோக்கத்தில் கட்டப்பட்டது இந்த அரண்... இந்த மேல்



இருக்கும் துவாரங்கள் தொலைவில் இருக்கும் எதிரிகளைத் தாக்க... கீழிருக்கும் துவாரங்கள் அருகே வந்துவிடும் பகைவர்களை தாக்கி அழிக்க...

இருவரும் கீழிறங்க ஆரம்பித்தனர்.

"நாயக் வம்ச ஆட்சி முடிந்து ஹைதர் அலியிடம் இந்த கோட்டை வந்தது... அப்புறம் திப்பு சுல்தானிடம்... திப்புசுல்தானுக்கு பிறகு இதைக் கிழக்கிந்திய கம்பெனி கைப்பற்றியது... சுதந்திரத்திற்குப் பிறகு கேரளாவுடன்... வசுதா... இங்கே வாயேன்..." என்று அவளது கரத்தைப் பற்றி ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று காட்டினான்.

"அங்கே பார்... பாறைக் கூட்டம் தெரிகிறதா... அலைகள் மோதி... நீர் முத்துச் சிதறலாய் விழுகிறதே... அந்த இடம்தான் நாயக் வம்சத்து பட்டத்து ராணிமார்கள் குளிக்கும் இடம்... அங்கே 'ஷவர்' மாதிரி தெறிக்கும் நீரில் உட்கார வைத்து சேடிகள் குளிப்பாட்டுவதாம்..."

அவளும் வெகு ஆர்வத்துடன் எட்டிப் பார்த்தாள்... கரும் பாறைகள் அமர்த்தலாய் நீரின் மத்தியில்... அலைகள் படுவேகமாய் பாறை மீது மோதி உருட்டி விடும் ஆவேசத்தில் வந்து... அதனை முட்டிப் பார்த்து முடியாமல் நீர் திவலைகளாய் சிதறும் ரம்யமானக் காட்சி!

உறுதியுடன் இருந்தால் எந்த வேகத்தாலும் அசைக்க முடியாது என்பதை சொல்லாமல் சொல்லும் கல் சின்னங்கள்...

"இதோ... இந்த வழியில் கீழிறங்கினால் நேரே கடல் தான்" என்று கீழிறங்கும் பாதையைக் காட்டினான் ஆதித்யா.

"போகலாமா..." ஆவலுடன் கேட்டாள் அவள்.

"ஊகும்... நேரம் ஆகிவிட்டது. மழைக் கொட்ட ஆரம்பித்தால் ஓட வேண்டியிருக்கும். ஏற்கனவே நனைந்தாகி விட்டது. மறுபடியும் நனைந்தால் உடம்புக்கு ஆகாது..." என்று மறுத்தான்...

முதன் முதலாய்... தன்னை மதித்து இனிமையாய் பேசுகிறான். ஏனோ... இதமாய் இருந்தது. யாரிடமும் பகை வேண்டாம் என்று நினைக்கிறதாலோ... இருக்கும்..

"இந்த இடம் பார்த்தாயா... இதுக்கு 'ப்ளட் பாயிண்ட்' என்று பெயர்.. பிடித்த எதிரிகளை இந்தப் பள்ளத்தில் தள்ளிக் கொல்வது வழக்கம்.."

கேட்டதும் மேனி நடுங்கியது... என்ன கோரமான இடம்... இரத்தக் கறை படிந்த அந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டும் போல இருந்தது. அவசரமாய் விரைந்து சென்றாள்.

"அட... ஆதி தம்பி... இங்கே தான் இருக்கீங்களா... என் பொண்டாட்டி பாதி வழியிலேயே உட்கார்ந்து விட்டாள். அவளால் நடக்க முடியலையாம். இந்தப் பொண்ணுங்க என்னடான்னா திடீர்னு காணாம போயிட்டாங்க.. நான் அவர்களைத் தேடுவதா... இவளை அழைத்துச் செல்றதான்னு தெரியல்லே... அதான் உங்களைத் தேடி வந்தேன்" பசுபதி மூச்சிரைக்கப் பேசினார்.

வசுதா சொன்னாள். "கவலைப்படாதீர்கள்.. நான் போய் அவர்களை அழைத்து வருகிறேன்.. நீங்க உங்க மனைவியை அழைத்துக் கொண்டு செல்லுங்கள்."

"அவர்களை அழைத்துக் கொண்டு நேரே கார் பார்க்கிங்குக்கு வந்துவிடு வசுதா" என்று சொல்லிவிட்டு பசுபதியுடன் சென்றான் ஆதித்யா.



வசுதா அவர்களைத் தேடிக் கொண்டு நடந்தாள்.

கண்களில் படவேயில்லை... எங்கு போனார்கள்... சரி.. சொல்லிவிட்டுப் போகக்கூடாதா..

ஒருவேளை இயற்கையின் அழைப்பால்... உடனே 'டாய்லெட்' இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றாள். படிகளில் இறங்கியவளின் கண்களில் 'டூரிஸம் அண்ட் இன்ஃபர்மேஷன் சென்டர்' என்ற பெயர் பலகை பட்டது. அதனை நோக்கி நடந்தாள்.

"இந்தக் கோட்டையைப் பற்றி தகவல் புத்தகம் ஏதாவது இருக்கிறதா" என்று கேட்டாள்...

புத்தகத்திற்கு பதில் காகிதத்தை நீட்டினார்கள். அதை ஆவலுடன் வாங்கி பார்க்கும்போது தான் பரிச்சயமான குரல்கள் கேட்டன...

மல்லிகாவும்... உதயாவும் இங்குதான் இருக்கிறார்கள்.

"அண்ணனிடம் இதைச் சொல்ல எனக்குப் பயமா இருக்கு மல்லி... எனக்குத் தெரியும்... நிச்சயம் அண்ணா ஒத்துக்க மாட்டார்... ஏன்னா... ஆனந்தோட அப்பா அரசியல்வாதி... அவர்களைக் கண்டாலே அண்ணாவுக்குப் பிடிக்காது. அதே கதைதான் அங்கும்... எங்களோட காதலை அவரோட அப்பாவும் ஏத்துக்கப் போறதில்லை... ஆனந்த்துக்கு ஒரு பெரிய புள்ளியின் மகளைப் பார்த்திருக்கிறாராம். தேர்தல் சமயம் நெருங்குவதால் அவரை பகைத்துக் கொள்ள விரும்ப மாட்டார் என்கிறார் ஆனந்த். எனக்கு மண்டை காய்கிறது மல்லி.. என்ன செய்யலாம்னு சொல்லேன்."

"இங்கும் ஒப்புதல் கிடைக்காது. அங்கும் இல்லை என்றால் இருப்பது ஒரே வழிதான் உதயா... இவர்களுக்கு

தெரியாமல் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொள்வதுதான். அப்புறம் இவர்களால் என்ன செய்ய முடியும்..."

"ஒருவேளை ஏத்துக்கலைன்னா..."

"விடு... உனக்கு அண்ணன் முக்கியமா.. இல்லே ஆனந்த் வேண்டுமா... சொல்லு..."

"அண்ணா வேண்டும் தான்.. ஆனா... ஆனந்த் இல்லாமல் என்னால் உயிர் வாழ முடியாது... மல்லி..."

"இதோ பாரு உதய்... நான் உனக்குத் தோழி மட்டும் இல்லை... வருங்கால அண்ணி... நான் உனக்குத் துணை இருக்கிறப்போ உனக்கு என்ன பயம்... கொஞ்ச நாள் உங்கண்ணா முறுக்கிக் கொள்வார். அப்புறம் நான் அவருக்கு மனைவியானதும் கொஞ்சம் கொஞ்சமா அவரது மனசை மாத்தி... அவரே உன்னைத் தேடி வரும்படி செய்ய மாட்டேனா... கவலையே வேண்டாம் உதய்... நான் இருக்கேன். ஆனந்தனோட அப்பாவும் இறங்கி வந்து விடுவார்... சீக்கிரமே ஒரு குழந்தை பிறக்கட்டும்.. அப்புறம் பார்.. 'என் பேராண்டி' என்று ஓடி வரமாட்டாரா..."

அதைக் கேட்டு முகம் சிவந்தாள் உதயா.

"ஆகா... வெட்கத்தைப் பாரேன்... ஆமாம்.. ஆனந்த் தோட அப்பா என்ன மந்திரியா..." என்று கேட்டாள் மல்லிகா.

"இல்லை... ஆனா இந்தத் தடவை அவருக்கு சான்ஸ் கிடைக்குமாம்... அவரை நினைத்தால் தான் பயமா இருக்கு மல்லி... ரொம்ப கோவக்காரராம்...."

"எல்லாம் நல்லபடியாக நடக்கும்... கவலையை விடு. முதல்ல ஆனந்த் கிட்டப் பேசி நான் சொன்ன ப்ளானுக்கு



சம்மதிக்க வை... அப்புறம் பார்.. கொம்பேறி கோபத்துடன் உட்கார்ந்தவர்கள் எல்லாம் எப்படி இறங்கி வருகிறார்கள் என்று... சரி.. வா போகலாம். நம்மளைத் தேடப் போகி றார்கள்.."

சட்டென்று தூணின் பின்னே மறைந்து கொண்டாள் வசுதா... அவளது மனம் துணுக்குற்றது.

இதென்ன துர்போதனை... ஏற்கனவே குழம்பித் தவிக்கும் உதயாவை இப்படி உசுப்பி விடுகிறாள் மல் லிகா. இது எங்கே போய் முடியப் போகிறது தெரிய வில்லையே...

அந்த ஆனந்த் யார்... அவன் நல்லவனா... இல்லை கெட்டவனா... அரசியல்வாதியின் மகன் என்கிறாளே உதயா... அவன் உத்தமனாய் இருப்பான் என்பது என்ன நிச்சயம்... பெரிய வீட்டுப் பையன்களைப் பற்றிக் கதை கதையாய் வருகிறதே... பெண்களுடன் உல்லாசமாய் திரிந்து விட்டுப் பின் கழண்டு கொள்வது அவர்களின் கைவந்த கலையாயிற்றே... இவனும் அந்த ரகமா... அப்படியானால் உதயாவின் எதிர்காலம்... அய்யோ...

அவளுக்கு தலைச் சுற்றுவதுபோல இருந்தது... வழிப் பயணத்தின் போதும் உள்ளுக்குள் வண்டின் குடைச்சல் இப்போது நமக்கென்ன என்று ஒதுங்க மனம் வர வில்லை... அநியாயமாய் ஒரு பெண்ணின் வாழ்வு சீர ழிந்து விடுமே என்ற ஆதங்கத்தாலா... அதனை அறிந் திருந்தும் அதைத் தடுக்காமல் இருந்தால்... பின்பு மனசாட்சியே குத்திக் கொன்று விடும் என்ற அச்சத்தாலா என்று தெரியவில்லை.

மல்லிகாவின் மீது கோபமும் எரிச்சலும் பெருகியது. தோழிக்கு செய்யும் உபதேசமா... நம்பியவளுக்கு செய்யும்

உதவியா... இல்லை... உலகத்தைப் புரிந்து கொள்ளாத மக்குப் பிராணியா...

இப்போது இயற்கையை ரசிக்க நாட்டமில்லை...

பிரயாணக் களைப்பில் அனைவரும் சோர்ந்து போன தால் காரில் அமைதிதான்.

பசுபதி கால்களை நீட்டிக் கொண்டு சீட்டில் சாய்ந்து வாயை பிளந்தபடி தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

சுந்தரியிடம் இருந்து 'கர் புர்' என்று குறட்டை சத்தம் உதயாவும் மல்லிகாவும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தபடி உறங்கிக் கொண்டிருந்தனர்.

ஆதித்யா கார் ஓட்டுவதில் மும்முரம் காட்ட... வசுதா அமைதியாக அமர்ந்திருந்தாள்.

மங்களூர் சிடிக்குள் வந்ததும் ஒரு பெரிய ஓட்டலின் முன் காரை நிறுத்தினான் ஆதித்யா.

"எழுந்திருங்கள்... காபி குடிக்கப் போகலாம்... உதயா எழுந்திரு..." என்று கூவி எழுப்ப... அவர்கள் பரபரப் புடன் இறங்கினர்.

வசுதாவிற்கு எதுவுமே வேண்டாம் போல் இருந்தது.

சுற்றிப் பார்த்தாள்... வரிசையாய் கடைகள். பெரிய பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்... சட்டென்று அவளுக்கு ப்ராஜெக்ட் நினைவு வந்தது. அந்த 'லிஸ்ட்' எங்கே இன்னும் ஏதேதோ வாங்க வேண்டும் என்று எழுதி வைத் திருந்தது.

கைப் பையைத் திறந்து தேடினாள். இருந்தது. கடையை நோக்கி நடந்தாள்.

அனைவரும் காரில் ஏறி அமர்ந்த பின்னும் வசுதாவைக் காணோம்.



ஆதித்யாவிற்கு பொறுமை கரைய ஆரம்பித்தது.

எங்கே போனாள்... சொல்லாமல் கொள்ளாமல்... எரிச்சலுடன் சுற்றிப் பார்த்தான்.

அதோ வருகிறாள்... கையில் கேரி 'பேக்'குடன்... லோஷன்... க்ரீம்... பாடிஸ்ப்ரே என்று வாங்கப் போனாளோ... அதற்கு இதுதான் நேரமா...

சீக்கிரம் வீடுபோய் சேரலாம் என்றால் இப்படியா பொழுது போக்குவது... பற்களைக் கடித்தான் அவன்.

அருகே வந்தவள் சின்ன புன்னகையுடன் "சாரி... லேட்டாகி விட்டது" என்றதும்.... அவன் முறைப்புடன் தன் சீட்டில் போய் அமர்ந்தான்.

அவளுக்கு வருத்தம்... சுமுகமாய் பழகினானே என்று மகிழ்ந்து போனோமே... மறுபடியும் வேதாளக் கதையா...

"சொல்லிவிட்டுப் போனால் என்ன... அப்படி என்ன அவசரம்... சோப்பு... சீப்பு... கண்ணாடி வாங்க..." என்று அவன் குத்தலாய் சொல்ல...

"ரோஹனுக்கு சயன்ஸ் ப்ராஜெக்ட் பண்ண வேண்டி தேவையானதை வாங்கி வந்தேன். ப்ராஜெக்ட் பத்தி எனக்குத் தெரியும் என்பதால் நானே பார்த்து வாங்க வேண்டி இருந்தது. அதை நாளைக்கே ஆரம்பிக்க வேண் டும். அதுதான்... அவசரமாய் போனேன். ஒவ்வொன்றும் வேறு வேறு கடையில் கிடைத்தது... தேடிப்போக தாமதம் ஆகிவிட்டது.. சாரி..."

"பளார்" என்று கன்னத்தில் அறை வாங்கிய மாதிரி இருந்தது ஆதிக்கு.

ரோஹனின் படிப்பு சம்பந்தமாய் தான் அக்கறையோடு செய்ய வேண்டியதை... எங்கிருந்தோ வந்த இவள்

செய்திருக்கிறாள்... அது தெரியாமல் அவளை ஏளனம் செய்தேனே...

'ரியர் வ்யூ மிரர்' வழியே அவளைப் பார்த்தான் ஆதித்யா... அவனது கண்களை சந்தித்தாள் வசுதா. அந்தக் கண்களில் இப்போது கோபம் இல்லை... என்னை மன்னித்துக் கொள்... கெஞ்சல் மட்டுமே...

வீடு வந்ததும் தூக்கக் கலக்கத்துடன் இறங்கினார்கள். படுக்கையில் விழுந்தால் போதும் என்றிருந்தது.

'டிக்கி'யை திறந்து கொண்டு போன சாமான்களை எடுக்க குனிந்தபோது...

"விலகு வசுதா... நீ போய் படு... இதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் பரிவோடு இதைத்தான் ப்ளோஹாட்... ப்ளோகோல்ட் என்பதா அவளுக்குச் சிரிப்பு வந்தது...

மெல்ல கற்பகம் ஆன்ட்டியின் அறைக்குள் எட்டிப் பார்த்தாள்...

எதையோ படித்துக் கொண்டிருந்த கற்பகம் அவளைப் பார்த்ததும் முகம் மலர்ந்து போனாள்.

"என்ன வசு.. எப்படி இருந்தது ஊர் சுற்றல்... பொழுது நன்றாய் கழிந்தது..." என்று கேட்டார்.

"ஓ! ஜாலியாக இருந்தது ஆன்ட்டி... நீங்க சாப்பிட்டீர்களா என்று கேட்க வந்தேன்..."

"எல்லாம் ஆச்சம்மா. ரோஹன்தான் ஓட்டலில் இருந்து பட்டர் மசாலாதோசை வாங்கி வந்து கொடுத்தான்... அவனும் சாப்பிட்டாச்சு... தூங்கிட்டானோ என்னவோ... மணி இப்ப என்ன வசு..."

"பதினொன்று.. நிரஞ்சன் இன்னும் வரவில்லையே..."



"எதுக்கு நீ கவலைப் பட்றே... அவனிடம் சொல்லியிருக்கிறேன்... ஒண்ணு சீக்கிரம் வா.. இல்லே... மாத்துக் கீ எடுத்துட்டுப் போயிடுன்னு.. நீ 'லாக்' பண்ணிவிட்டுப் போய் படுத்துக் கொள்... அவன் திறந்துப்பான்..."

"ஏதாவது வேண்டுமா ஆன்ட்டி..."

"எனக்கு எதுவும் வேண்டாம். கொஞ்ச நேரம் இந்த தேவி புராணத்தைப் படித்துவிட்டு படுத்துக் கொள்கிறேன்... ஒரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்திருப்பதால் தூக்கமும் வரமாட்டேன்கிறது. நீ போய் படுத்துக்கோ வசு" என்று கற்பகம் சொல்ல...

வசுதாவும் சென்றாள்...

கதவை பூட்டச் சென்றவளை ஆதித்யாவின் குரல் தடுத்தது.

"எதுக்கு 'லாக்' பண்ணுகிறாய் வசுதா.. இன்னும் நிரஞ்சன் வரவில்லையே..."

"அவரிடம் இன்னொரு 'கீ' இருக்கிறது... அத்தை 'லாக்' பண்ணச் சொன்னார்கள்..."

"வேண்டாம்... நான் பார்த்துக் கொள்கிறேன். எனக்கு தூக்கம் வரவில்லை. நிரஞ்சன் வந்ததும் நானே கதவு திறக்கிறேன்..."

என்னடா இது... இன்றைக்கு என் ராசி பலன் என்ன என்று பார்க்கவில்லையே... சந்தோஷமான நாள்... நல்ல நாள்... இப்படி போட்டிருக்குமா... என்ன... இப்படி அநியாயத்திற்கு அன்பைக் காட்டுகிறான்.

இது இன்றைக்கு மட்டுமா... இல்லைத் தொடருமா... பார்ப்போம்... யோசித்தவாறே தன் அறைக்குச் சென்றாள்.

ஆதிக்கு உண்மையிலேயே உறக்கம் வரவில்லை தான். மனம் என்னவோ செக்கு மாடாய் வசுதாவைச் சுற்றி வந்தது.

அவளது வருகைக்குப் பின் வீட்டில் நல்ல மாற்றம் தெரிகிறது.

வீடு படு சுத்தமாய்... எந்தப் பொருளும் இடம் பெயராமல் அந்தந்த இடத்தில் இருக்கிறது... சாப்பாடும் ருசியாய்... தினுசு தினசாய்... அத்தைக்கு அனுசரணையாய் நிரஞ்சனிடம் அன்பாய்... ரோஹன் மீது அக்கறையாய்... எப்படியெல்லாம் கடுமையாய் பேசினேன்... அப்போதும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாமல்... மலர்ந்த முகமாய் வளைய வருகிறாளே... அந்த பண்பு யாருக்கு வரும்...

இன்றைய பெண்களிடம் இருக்கும் முன் கோபமும்... பிடிவாதமும் இவளிடம் இல்லையே...

நான்தான் இவளைப் பற்றித் தவறாய் புரிந்து கொண்டிருக்கிறேனோ... அப்படித்தான் இருக்கும்...

இருக்க வேண்டும் என்று விரும்பியது உள்ளம்.

அவளை முழுவதுமாய் நம்ப விடாமல்... பானைத் துரும்பாய் சந்தேகம் உறுத்திக் கொண்டே இருந்தது.

பொய் சொல்லி ஏன் இந்த வேலையில் இருக்க வேண்டும். அவளிடம் ஏதாவது ரகசியம் ஒளிந்திருக்கிறதா...

ஆள் மாறாட்டம் என்பது பெருங்குற்றம் ஆயிற்றே... அதை எப்படி துணிவுடன் செய்தாள்...

ஆயிற்று... இன்னும் கொஞ்ச நாள் தான்... அத்தைக்கும் குணமாகி வருகிறது... அப்புறம்... அவள் புறப்பட்டுப் போய்த்தானே ஆக வேண்டும்... பின்பு... இப்படி தலைக்



கொடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. என்று எண்ணினான்.

அதே சமயம் வசுதா இல்லாத வீடு எப்படி இருக்கும் என்று கற்பனை செய்யவும் முடியவில்லை. அந்த நினைப்பில் நெஞ்சு வலித்ததோ... ஏன்... புரியாத புதிராக இருந்தது அவனுக்கு.

## 14

தான் வாங்கி வந்த பொருட்களை எல்லாம் ரோஹனின் முன்னால் பரப்பி வைத்தாள் வசுதா.

ரோஹனின் கண்களில் சந்தோஷ மினுமினுப்பு...

''எல்லாம் புதுசா...''

''யெஸ்... இந்த ப்ரோஜெக்ட்'டில் நீ பிரைஸ் வாங்கணும்... வாங்குவாய் என்பது நிச்சயம்... அதற்காக இவையெல்லாம் என் அன்பளிப்பு...''

ரோஹன் திக்குமுக்காடிப்போனான்...

''தாங்க்ஸ்... வசுதா...'' என்றவன் ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தான்.

சவுண்ட் கலெக்ஷன் டிஷ்... மைக்ரோ ஃபோன் ஆம்ப்ளிபையர் சிகார்டர்... புது பாட்டரி...

''ஹெட் ஃபோன் வீட்டில் இருக்கிறது என்றாயே... அது கிடைத்ததா ரோஹன்...'' என்று கேட்டாள்.

''இல்லை... நிரஞ்சன் அண்ணா கிட்டே தான் கேட்கணும்... அவர்தான் கிடைக்கிறதில்லையே...''

''சரி... தேடிப்பார்... இல்லைன்னா அதையும் புதுசா வாங்கிடலாம் ஓகே...''

அவனிடம் தயக்கம் தெரிந்தது.

"நிறைய செலவாகியிருக்கும்... இன்னும்..."

செல்லமாய் அவனது கேசத்தை கலைத்து விட்டு "இந்தத் தலைக்கு அதெல்லாம் வேண்டாம்... உங்கண்ணா எனக்கு தரும் 'சாலரி' பணம் அப்படியே அசையாமல் இருக்கு... அதைக் கொஞ்சம் அசைய வைக்கிறேன்... அவ்வளவுதான்."

அவன் பெருமையுடன் சொன்னான்.

"நிச்சயம் எனக்கு பிரைஸ் வரும்... வசுதா... அப்படி என்னோடது செலக்ட் ஆனால் ஸ்டேட் லெவல் சயன்ஸ் எக்ஸிபிஷனுக்கு சிபாரிசு செய்வாங்க எங்க பாதர்... எல்லா ஸ்கூல்ல இருந்தும் வருவதால் அங்கே 'காம்படீஷன் இருக்கும்... ஆக்சவலி... அதற்காகத்தான் இந்த 'ப்ராஜெக்ட்' விஷயமே... அதிலும் பரிசு வந்தால் எங்க ஸ்கூலுக்குத்தானே பெருமை."

"அதற்கு கண்டிஷன்ஸ் ஏதும் இல்லையா ரோஹன். இப்படித்தான் இருக்க வேண்டும்... இதுதான் செய்ய வேண்டும் இந்த மாதிரி..."

"சொந்தமா செய்யணும்... பாடத்தில் இருப்பதை வைத்து செய்யக்கூடாது... 'கிரியேடிவ்'வா இருக்கணும்..'

"நல்லவேளை... சொன்னாயே... உன் 'டெக்ஸ்ட் புக்' எடுத்து வா பாா்ப்போம்" என்றாள் வசுதா.

"நல்லவேளை... நான் சொல்லும் தீம் உன் 'சிலபஸில்' இல்லை... நீ செய்யப்போகும் 'ப்ராஜெக்ட்' பெயர் 'சவுண்ட் ஆம்ப்ளிபையர்' இதை வைத்து நீ உன் மூளையை உபயோகித்துச் செய்ய வேண்டும்.. ஐடியா மட்டுமே என்னுடையது... தேவைப்பட்டால் இது



விஷயமா 'இன்டர் நெட்டில் தேடு... உனக்கு இன்னும் 'கிளியரா' தகவல் கிடைக்கும். எங்கே 'சேர்ச்' பண்ண வேண்டும் என்று தெரியுமா ரோஹன்... கூகல் 'வெப்'ல்... ஏதாவது சந்தேகம் வந்தால் மட்டும் என்னிடம் வர வேண்டும்... ஓகே..." அவனைத் தட்டிக் கொடுத்து விட்டு எழுந்தாள்.

திரும்பியவள் திகைத்தாள்.

எப்போதிலிருந்து ஆதித்யா இங்கிருக்கிறான்... அவன் வந்தது கூடத் தெரியாமல்... அது சரி... எப்போதும் வர மாட்டானே... இதென்ன திடீர் வருகை... தம்பியிடம் ஏதாவது பேச வந்திருப்பானோ... குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவனும் எதுவும் பேசாமல் மார்பில் கைக்கட்டியவாறு நின்றிருப்பதைக் கண்டு... சரி... தம்பியிடம் ஏதோ சொல்ல வந்திருக்கிறான் என்று நினைத்து... ஒதுங்கிச் சென்றாள்.

"ஒரு நிமிஷம் வசுதா... ப்ராஜெக்ட் என்று சொன்னதைக் கேட்டேன். அது என்னவென்று தெரிந்து கொள்ளலாமா" என்று வினவினான் அவன்.

உண்மையான ஆர்வமா... இல்லை இவளுக்கு என்ன தெரியும் என்று சோதிக்கவா...

அவனும் தெரிந்து கொள்ளட்டும் என்று மெல்லிய குரலில் விவரித்தாள்... ரோஹன் காதில் விழாத வண்ணம்... அவனது கண்களில் வியப்பு தெரிந்தது.

அவள் சொல்லி முடித்ததும் "நீ எதுவரைக்கும் படித்திருக்கிறாய் வசுதா..." என்று கேட்டான்.

சட்டென்று "சயன்ஸ் பாடம் சொல்லித் தரும் அளவுக்கு..." என்று சொல்லிவிட்டு அங்கிருந்து செல்ல

எத்தனித்தவள் நின்று... ''நான் சொன்னது உங்களோட இருக்கட்டும்... அதாவது ப்ராஜெக்ட் விஷயத்தைச் சொல்கிறேன்... ரோஹன் அதை அவனே செய்தால் நல்லது. இது என் வேண்டுகோள்... ப்ளீஸ்...'' என்று கூறிவிட்டு விரைந்தாள்.

அவனது பார்வை அவளைத் தொடர்ந்தது... ரசனையுடன்... அவள் சென்றதும் தம்பியிடம் திரும்பினான்...

''ரோஹன்... இப்போதெல்லாம் பாடத்தில் விளக்கம் கேட்க என்னிடம் வருவதேயில்லையே... ஏன்...'' என்று கேட்க...

''வசுதாவிடமே கேட்டுக் கொள்கிறேன் அண்ணா... என்ன அருமையாய் விளக்குகிறாங்க தெரியுமா... இப்பவும் இந்த 'ப்ராஜெக்ட்' 'வொர்க்'க்கு அவங்கதான் இத்தனையும் வாங்கிக் கொடுத்து... ஐடியாவும் தந்திருக்காங்க... ஆனா ஹெட் ஃபோன் மட்டும் இல்லை... நம் வீட்டில் இருக்கிறது என்று சொன்னதால் வசுதா அதை வாங்கி வரவில்லை அண்ணா... எங்கே இருக்குன்னு தெரியுமா...'' என்று விசாரித்தான்.

''மேலே மாடியில்... தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாம் போட்டிருக்கோமே... அங்கே இருக்கிறதோ என்னவோ... வீட்டுக்கு டிஸ்டம்பர் அடிக்கிறபோது வேண்டாத சாமான்களோடு போயிருக்க வேண்டும்... தேடிப்பார்... அது சரி... பரீட்சைக்கு படிக்கிறாய் தானே... குட்... ஏதாவது 'டவுட்' இருந்தால் என்னிடம் கேள்...'' என்று ஆதித்யா அண்ணன் என்ற பொறுப்பில் சொல்ல...

''வேண்டாம் அண்ணா... வசுதாவிடம் கேட்டுக் கொள்கிறேன்...'' என்று மறுத்தான் தம்பி...



என்ன... வசுதா தாசனாக ஆகிவிட்டான் போலும்... சிரித்துக் கொண்டு சென்றான் அவன்.

காய்கறி.. பழங்கள் வாங்கிவர பையுடன் கிளம்பினாள் வசுதா.

'ரிலையன்ஸ் ஃபிரெஷ்'ஷில் நல்ல காய்கறிகள் கிடைக்கும் என்பதால் அங்கு சென்றாள்.

அப்போதுதான் பறித்து வந்தது போல தளதள வென்று இருந்தன. காய்களும் கனி வகைகளும்...

பை நிறைய வாங்கிக் கொண்டு வெளி வந்தவளின் கண்களில் எதிரே இருந்த டெலிஃபோன் பூத் பட்டது.

''அங்கிளிடம் பேசலாம்'' என்று தோன்ற அங்கே போய் எண்களை அழுத்தினாள்.

''அங்கிள்... வசுதா பேசுகிறேன்.''

''என்னம்மா... வசு... எப்படி இருக்கிறே...'' உண்மையான அக்கறையுடன் பெரியவர் கேட்டார்.

''ஐம் ஃபைன் அங்கிள்... அங்கே... எப்படி அங்கிள்.. ஏதாவது புதுத் தகவல் இருக்கிறதா...'' ஆவலுடன் விசாரித்தாள் விசுதா.

''எதுவும் இல்லைம்மா... உங்க சித்தி ஊர் திரும்பின மாதிரி தெரியல்லே... சரி... எப்போ புறப்பட்டு வருவே...''

''இப்போதைக்கு இல்லை... ஆனால் சீக்கிரம் புறப்பட்டு விடுவேன் அங்கிள்...''

''நேரே இங்கேதானே...''

''சொல்ல முடியாது அங்கிள்... சித்தி வந்தால் பிரச்சனை... அதான் யோசிக்கிறேன்... சரி... திரும்ப உங்களுக்கு போன் பண்ணுகிறேன்... பை அங்கிள்.''

பேசி விட்டு வந்தபோது மனம் பூப்போல லேசாக மாறியிருந்ததை உணர்ந்தாள்...

வீட்டிற்குள் வந்தபோது விருந்தினர்கள் ஹோம் தியேட்டரில் புதுத் தமிழ்படம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

உதயா மட்டும் அங்கில்லை.. தன் அறையினுள் என்னவோ செய்து கொண்டிருந்தாள்... ஹாஸ்டலுக்கு போகத் தயாராகிறாளோ... இங்கே இருந்தால் படிக்க முடியாது.. கவனம் சிதறும் என்பதால் இருக்கும்..

அதுவும் நல்லதுதான்... இங்கு இருந்தால் எதையாவது சொல்லி அவளது மனதைக் கெடுத்து விடுவாள்... அவளிடம் இருந்து கொஞ்சம் தள்ளியே இருக்கட்டும்...

''அம்மா... பொண்ணு... கொறிக்க, ஏதாவது இருந்தால் கொடேன்... வாய் நமநம என்கிறது'' என்று பசுபதி உரக்கச் சொன்னார்.

கொறிக்கவா... என்ன செய்யலாம்... யோசித்தவள்...

மளமளவென்று செய்ய ஆரம்பித்தாள்.

கடலை மாவையும் கொஞ்சம் அரிசி மாவையும் சேர்த்து ஒரு கிண்ணத்தில் போட்டாள். வெங்காயத்தை பொடியாய் நறுக்கி அதில் சேர்த்தாள். ஒரு சிட்டிகை சோடா கொஞ்சம் உப்பு... மிளகாய் தூள் அதில் கலந்து... கொத்தமல்லி தழையையும் போட்டு... அளவாய் நீர் கலந்து பிசைந்து வைத்துவிட்டு...

அடுப்பில் வாணலி வைத்து எண்ணெய் ஊற்றி சூடாக்கினாள். மாவை சிறு சிறு உருண்டைகளாய் உருட்டிப் போட்டு எடுத்தாள்...

மொறு மொறுவென்று பக்கோடா ரெடி... வெங்காய மணத்துடன்...



சின்ன தட்டுகளில் வைத்து விருந்தினர்களுக்கு கொடுத்தாள். வாய் மிஷினாய் அரைக்க ஆரம்பித்தது.

உதயாவிற்கு இன்னும் கோபம் தீரவில்லை... ''வைத்து விட்டுப் போ... அப்புறம் சாப்பிடுகிறேன்'' என்றாள் வெடுக்கென்று.

ரோஹனுக்கு நல்ல பசியோ என்னவோ...

பக்கோடாவைப் பார்த்ததும் ஆவலுடன் வாங்கிக் கொண்டான்.

''நானே கேட்க வேண்டும் என்று இருந்தேன் வசுதா... ஏதாவது சாப்பிட இருக்கா என்று...'' என்று சொல்லி பத்து நிமிஷத்தில் காலி செய்தான்...

''நாளைக்கு அண்ணாவிற்கு ஏதாவது கிஃப்ட் வாங்கித் தரணும்... என்ன கொடுக்கலாம்.. ஐடியா கொடுங்களேன்'' என்று சொன்னான் ரோஹன்.

''நாளைக்கு என்ன விசேஷம் ரோஹன்.... மதர்ஸ் டே விமன்ஸ் டே மாதிரி பிரதர்ஸ் டே யா...'' என்று பரிகாசத்துடன் கேட்டாள்.

''நாளைக்கு ஆதி அண்ணனின் பர்த்டே.... எப்பவும் சர்ப்பரைஸா வாங்கி வைத்துக் கொடுப்பேன்... இந்தத் தடவை என்ன வாங்குவது என்று தெரியவில்லை...

''உன் பட்ஜெட் என்னன்னு சொல்லு... நான் உனக்கு ஐடியா கொடுக்கிறேன்...''

''என்னிடம் முன்னூறு தான் இருக்கிறது... அதில் என்ன வாங்க முடியும் வசுதா...''

''ம்ம்... 'பாடிஸ்ப்ரே' வாங்கலாம்.. உங்க அண்ணன் 'ஜிம்'முக்கு போகிறார் என்றால் 'டிராக் ஸூட்..' இல்லை நல்ல டீ ஷர்ட் வாங்கலாமே...''

"டீ ஷர்ட் வாங்கித் தரட்டுமா... நீங்கதான் 'செலக்ட்' பண்ணித் தரணும்... ப்ளீஸ்..."

'அவ்வளவுதானே... 'டன்'... சரி... கிஃப்ட் விஷயம் ஓ.கே... மெனு என்ன செய்யலாம்... உங்கண்ணாவுக்கு பிடிச்ச ஐயிட்டம் என்னன்னு சொல்லு... பண்ணிட லாம்...!'

ரோஹன் சிரித்து விட்டுச் சொன்னான்.

"எங்கண்ணனுக்கு பிடிக்காதது எதுவும் இல்லை எல் லாமே பிடிக்கும்... எது சமைத்தாலும் சாப்பிடுவாங்க..."

"அப்போ மண்ணைச் சமைத்துப் போட்டாலுமா..." என்று கேலி செய்தாள் வசுதா.

"ஓ! செய்து பாருங்களேன்... அதில் கூட டேஸ்ட் பார்த்து சாப்பிடுவாங்களாக்கும் எங்க அண்ணா..." ஜம்ப மாய் சொன்னான் அவன்...

"சரி... அப்போ உங்க அண்ணாவுக்கு ஸ்பெஷல் மெனு.. செம்மண் குழம்பு... கரிசல் மண் கூட்டு... களிமண் ரசம்.. அப்புறம்..."

"சாதம்...? அதை விட்டுட்டீங்களா.." என்று அவனும் சேர்ந்து கொள்ள...

"அதானே... கடல் மண் சாதம் செய்து ஜமாய்த்து விடு கிறேன்... உங்கண்ணா சாப்பிடுகிறாரா என்று பார்க்கலாம்" என்றாள் பந்தயம் கட்டுவதுபோல...

"ஆக... என்னை ஒருவழி பண்ணி விட வேண்டும் என்பது உங்களோட ஆசை... அப்படித்தானே..." மீண் டும் ஆதித்யா..! அவனது குரல் கேட்டுத் திரும்பினாள். கேட்டிருப்பானோ... மலங்க விழித்தாள் அவள்... அதென்ன... பூனை அடி எடுத்து வைத்து மெல்ல



வருவது. எதற்காக... என்ன பேசுகிறாள் என்று கேட்க இருக்கும்... இப்போது பேசிய வேடிக்கைப் பேச்சை தமாஷாக எடுத்துக் கொண்டானா... இல்லை... அதிலும் குற்றம் பார்க்கிறானா... அவனது முகத்தை ஆராய்ந்தாள்... அவனது முக வசீகரம் அவளது கண்களைக் கட்டிப் போட்டது...

அவனது கண்களின் காந்த ஈர்ப்பு... எடுப்பான நாசி... அதன் கீழ் அளவாய் வெட்டப்பட்ட மீசை... அந்த உதடுகள்... செதுக்கினாற் போலத் தேகக்கட்டு... தன் உழைப்பில் உயர்ந்து வந்த மிடுக்கு... எல்லாமே அள வாய்... அழகாய் அமைந்ததால் அழகனாய் தெரிகிறானோ...

இந்தக் கறுப்பு நிற பேண்ட்டும்... சந்தன நிறச் சட்டை யும் என்னமாய் பொருந்துகிறது... எந்தப் பெண்ணும் கிளுகிளுத்துப்போவது நிச்சயம்தான்....

ஆனால் என்ன பிரயோசனம்... முகத்தில் சிரிப்பில் லையே... எப்போதும் 'உர்'ரென்று இருந்தால் யார் ரசிப் பார்கள்.... கொஞ்சம் சிரித்தால் என்ன குறைந்து போகு மாக்கும்... இல்லையே வசீகரம் கூடுமே.. அது தெரியாமல் அட.... என் மனதில் இருந்தது தெரிந்து விட்டதா... சிரித்து விட்டானே... என்ன ஆச்சரியம்...

அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஆதித்யாவிற்கு அவனையும் அறியாமல் சிரிப்பு வந்தது.

அவள் நின்றிருந்த கோலம் அவனுக்கு சிரிப்பை வரச் செய்தது. கண்கள் சாஸர் போல விரிந்து... அழகான இதழ்கள் மலர்ந்தே மொட்டாய் பிளந்திருக்க... கன்னங் களில் சிவப்புத் தெரிய... அசையாமல் சிலையாய் நின் றிருந்தாள்.

ரோஹன் தான் மௌனவலையை அறுத்தெறிந்தான்.

"என் அண்ணாவுக்கு கல்லைத் தின்றாலும் செரிக்கும் என்று நான்தான் பெருமையா சொன்னேன். அதுக்கு வசுதா வேடிக்கையா சொன்னதுதான் அண்ணா..." வசுதாவிற்குப் பரிந்து சொன்னான்.

சுயநிலைக்கு திரும்பினாள் வசுதா... "ஆ... ஆமாம்... அப்படித் தான்... எனக்கு வேலை இருக்கு... போகிறேன்" என்று அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள்.

ஏன் என்று தெரியவில்லை. இதயம் எக்ஸ்பிரஸ் வேகமாய் ஒலித்தது கேட்டது... ஏதோ சொல்லத் தெரியாத உணர்வு... உடம்பெல்லாம் அதிர்வது போல இருந்தது. காரணம் புரியவில்லை... அது புது அனுபவமாக இருந்தது வசுதாவிற்கு.

"அண்ணா... வசுதா ரொம்ப நல்லவங்க... இல்லே..." ரோஹன் அண்ணனிடம் சொன்னான்.

"அப்படித்தான் இருக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்..." சரி.. நான் வந்த விஷயம் வேற... உங்க பிரின்ஸிபால் எனக்கு ஃபோன் செய்து வரமுடியுமா என்று கேட்டார்கள். ஏதோ 'டொனேஷன்' விஷயமா பேச வேண்டும் என்று... நாளைக்கு பத்து மணிக்கு வருகிறேன் என்று அவரிடம் சொல்லிவிடு... ஆமாம்.. ஹெட்ஃபோன் கிடைத்ததா என்ன... இல்லை புதுசா வாங்கிக் கொடுக்கட்டுமா..." "முதல்ல தேடிப் பார்க்கிறேன்... கிடைக்காவிட்டால் நானே கேட்கிறேன்..."

"சரி... படி..." என்று சொல்லிச் சென்றான் ஆதித்யா.

சமையலறையில் மேடையை சுத்தம் செய்து கொண்டிருந்தாள் வசுதா.



இதயத்தின் துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கி இயல்பு நிலைக்குத் திரும்பியது.

ஆனால்... தனக்குள் ஏதோ ஒரு ரசாயன மாற்றம் நிகழ்ந்தாற் போலவும்... தோள்களில் திடீரென்று சிறகுகள் முளைத்து... ஆகாசத்தில் பறப்பது போலவும் இருந்தது.

ஆதித்யாவின் புன்னகைக்கு இத்தனை சக்தியா... மனக்கட்டுப்பாட்டுடன் இருக்கும் என்னையே வீழ்த்தி விட்டதே. உணர்ச்சி மிகுதியில் மென் விரல்களில் நடுக்கம் வந்தது. 'ஆ'வென்று வாய் பிளந்து அவனை கண் இமைக்காமல் பார்த்து நின்றோமே... என்ன நினைத்திருப்பான்... மனம் கூசிப்போனது...

எப்போதும் இல்லாத படபடப்பு... துடிதுடிப்பு இன்றைக்கு ஏன் வந்தது... இயல்பாய் இருக்க முடியவில்லையே... ஏன்... அவனது கோபப் பார்வையையும்... சிடுசிடுப்பையும் எதிர்கொள்ள முடிந்த என்னை... அவனது புன்னகையும்... சிரிப்பும் தடுமாற வைப்பது ஏன்...

நீரில் இருந்து துள்ளி விழுந்த மீனைப் போல மூச்சு முட்டியது. ஊகூம்... இது சரிப்படாது... சீக்கிரம் இங்கிருந்து போய் விட வேண்டியது தான்... ஆதித்யாவைப் பார்த்து தினமும் இப்படி ரயில் வண்டி வேகத்தில் இதயம் துடித்தால்... அவ்வளவுதான்.. ஒரு நாள் 'பிரேக்' விழும்... தன் வசம் இழந்து பிச்சி ஆவதற்குள் கிளம்பியே ஆக வேண்டும்... எண்ணங்கள் அவளை அலைக்கழித்தன. அன்று இரவு உணவை எடுத்துக் கொண்டு கற்பகம் அறைக்குச் சென்றபோது... கற்பகத்தின் அனுபவக் கண்கள் அவளை எக்ஸ்ரே பார்வைப் பார்த்தன.

"என்ன வசு... ஏதோ ஆழ்ந்த யோசனை போலிருக்கு. பேச மாட்டேன்கிறே... என்ன மௌன விரதமா..." என்று கேட்டார்.

ஒரு கணம் தயங்கி விட்டுப் பின் சொன்னாள் அவள்.

"உங்கள் கால் குணம் ஆகும் வரை இருக்க முடியாது என்று படுகிறது ஆன்ட்டி."

"ஏம்மா... யாராவது உன்னைக் குத்தலாய் பேசினார்களா என்ன... யார்... சந்தரியா... மல்லிகாவா... சொல்லும்மா."

"யாரும் இல்லை.. எனக்கே இருக்கப் பிடிக்கவில்லை."

"ஆதித்யா கடுமையாப் பேசியிருப்பான்.. அப்படித் தானே.."

"அய்யோ... அவர் ஏதும் பேசவில்லை ஆன்ட்டி... இப்போதெல்லாம் என்னிடம் அவர் சகஜமாய் பேசுகிறார் ஆன்ட்டி..."

"அப்ப... ஒரே ஒரு காரணம் தான் மிஞ்சி இருக்கு."

"நீ ஆதித்யாவை விரும்பறே அப்படித்தானே..." கற்பகம் சொன்னதும் வசுதாவின் கன்னங்களில் சிவப்பு ஏறின... அவருக்கு எப்படித் தெரிந்தது என்று மலைப் புடன் பார்த்தாள்.

"என்ன.. நான் சொல்வது நிஜம்தானே... உன் கண் களில் நல்லாவே தெரியுது வசு... நீ ஆதித்யாவைப் பார்க்கிறபோதெல்லாம் உன் கண்களில் தெரியும் விளக்கு வெளிச்சம்... உன் முகத்தில் தெரியும் மலர்ச்சி... நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்... மல்லிகைப் பூ வாசத்தையும்... காதலையும் ரொம்ப நாள் மூடி வைக்க முடியாதும்மா வசு..."

அவளுக்கு தலையை சுற்றுவது போல இருந்தது.



எப்போது நிகழ்ந்தது இந்த மாயம் என்று அவளுக்கே தெரியவில்லை... ஆரம்பத்தில் இயல்பாகத் தானே இருந் தது என் மனம்... ஒவ்வொரு இதழாய் விரியும் தாமரை மலர் போல... ஒவ்வொரு நாளாய் மாற்றம் கண்டதோ...

அவன் மீது இருந்த எரிச்சல் கூட தீர்த்துப் போய் விட்டதே... எப்போதிலிருந்து அவன் மீது ஈர்ப்பு வந்தது. இதென்ன விசித்திரம்... எதுவும் புரியாமல் அவள் தவித்தாள்.

அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த கற்பகம் நிதானமாய் கேட்டாள்.

"சரி... அப்படியே இங்கிருந்து போகணும்னு நீ நினைச்சாலும் அது உன்னால் சாத்தியமா வசு... ஆதித் யாவை மறந்துவிட்டு உன்னால் இருக்க முடியுமா..."

"தெரியவில்லையே ஆன்ட்டி... ஆனால் போகத்தான் வேண்டும்... வேறு வழியில்லை."

"ஏன் இல்லை வசு... என்றைக்கு உன்னைப் பார்த்தேனோ அன்றே நினைத்தேன்... இப்படிப்பட்ட பொண்ணுதான் இந்த வீட்டிற்கு வேண்டும் என்று நீயே மருமகளாக வரவேண்டும் என்று நினைத்து ஏங்கினேன். இப்பத்தான் என் மனசு குளிர்ந்திருக்கு. ம்மா... நான் வேண்டியது வீண் போகவில்லை."

"ஆனா ஒன்றை நீங்கள் மறந்து விட்டீர்களே... மல்லிகா ஆதிக்கு நிச்சயமானவள் என்று நீங்கள் தானே சொன்னது. அந்த நோக்கத்தில் தானே அவர்களும் இங்கு வந்திருப்பது. ஏன்.. ஆதித்யாவிற்கு கூட இதில் சம்மதம் இருக்கலாம் இல்லையா... அவர்களின் வாழ்க்கை சந்தோஷமா இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசையும்... நான் கிளம்புவதுதான் சரி.."

''என்னம்மா வசு... நீ சொல்வது ஆகாசத்தில் கோட்டை கட்டற மாதிரி இருக்கும்மா.. இங்கே அஸ்திவாரமே சரியில்லைங்கிறேன். யாரோ... எப்படியோ போகட்டும் என்று நினைக்கிற மனுஷி நீ இல்லேம்மா. உனக்கு ரோஹன் மீதும் நிரஞ்சன் மீதும் பாசம் இருக்கு. உதயா மீது கூட உனக்கு அன்பு இருக்கும்னு நினைக்கிறேன்... இதை உன் குடும்பமா நினைச்சு பார்க்கிறதால்தானே இந்த ஒட்டுதல்... இவங்களெல்லாம் சந்தோஷமா இருக்கணும்னு நீ விரும்பினா... நீ இருந்தேயாகணும்... தெரிந்ததா வசு...!''

இருந்தே யாகணுமா... எப்படி... இதே போல ஹவுஸ் கீப்பராகவா...

ஆதியும் மல்லிகாவும் கணவன் மனைவியாய் இழைவதை பார்த்துக் கொண்டா... இதயம் வலிக்குமே... அது முடியவே முடியாது...

''இல்லை ஆன்ட்டீ... நான் இங்கிருந்து புறப்படுவதுதான் அனைவருக்கும் நல்லதுன்னு நினைக்கிறேன். நாளைக்கு ஆதித்யாவிடம் சொல்லி விட்டுப் புறப்படுகிறேன்... இனியும் இங்கிருப்பது சரியில்லை...'' அதற்கு மேல் கற்பகம் எதுவும் பேசவில்லை... அவளது முகத்தில் தெரிந்த வாட்டம்... வசுதாவின் முடிவு அவளுக்கு வேதனையைத் தந்திருப்பதை உணர்த்தியது. அன்று இரவே தன் உடைமைகளை 'பேக்' பண்ணத் தொடங்கினாள். சூட்கேஸின் கனத்தை விட இதயம் தான் அதிகம் கனத்தது...

வரும்போது பளிங்கு நீராய் இருந்த நெஞ்சில்... காதல் எனும் கல் விழுந்து கலங்கிப் போனது கண்டு அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை...

உள்ளம் மட்டும் ஊமைக் குழந்தையாய் அழுதது...



# 15

தெய்வ சித்தம் என்பது யாரும் அறியாதது... மனிதன் எடுக்கும் முடிவுகள் எல்லாமே நடந்துவிட்டால்... அப்புறம் தெய்வத்திற்கு மதிப்பேது... அது நிதானமாய் தன் கால்களை நகர்த்தி... கடைசியில் 'செக்' வைக்கிறது.

அதனால் தான் நினைப்பது ஒன்று... நடப்பது ஒன்று என்று சொல்வது.

வசுதாவின் விஷயமும் அப்படித்தான்... நாளைக்கே புறப்பட்டு விடுவதாய் தீர்மானித்து... தயாராகி விட்டாள்...

புறப்பட வேண்டும் என்ற நிலையில் அவளிடம் ரோஹன் வந்தான்...

அவன் முகத்தில் தெரிந்த கலவரத்தைக் கண்டு ஏதோ முக்கியமான விஷயமாய் பேச வந்திருக்கிறான் என்று தெரிந்தது.

''வசுதா... என் அறைக்கு வருகிறீர்களா... ப்ளீஸ்... உங்களிடம் ஒன்று சொல்லணும்...'' என்றான்... கொஞ்சம் பதட்டமாகவே.

''என்ன அது... அவசரமான விஷயமா...'' என்றாள் வசுதா...

''இங்கே பேசுவதற்கில்லை... மேலே வாங்களேன்... சொல்கிறேன்'' என்று வற்புறுத்த...

அவனுடன் சென்றாள்.

அறைக்குள் நுழைந்ததும் கதவை மூடினான் ரோஹன். அவனது செயல் விநோதமாகத் தெரிந்தது வசுதாவிற்கு.

''உட்காருங்க.. சொல்கிறேன்...'' என்றவன் சிகரட்டை கொண்டு வந்து வைத்தான்.

"ரோஹன்... நீ எந்த அளவில் செய்திருக்கிறாய் என்று பார்க்க எனக்கு இப்போ அவகாசம் இல்லேப்பா... இதை நிதானமாய் கேட்கிறேனே..." என்றாள் அவசரமாக.

"இதைக் கேளுங்களேன்..."

முதலில் எந்த சத்தமும் வரவில்லை... பிறகு ஏதோ கீச் சத்தம்... படபட சத்தம் கேட்டது.

"என்ன ரோஹன்... எனக்கு..." என்று சொல்லும் போதே உரையாடல் பதிவாயிருந்தது வந்தது.

"....... கோட்டைக் கட்டியாச்சு.. நடக்கிறதோ இல்லையா தெரியவில்லை... தினமும் வகை வகையாய தின்னுட்டு... நாளுக்கு ஒரு படம் பார்க்கிறதுதான் மிச்சம்... இந்த வீட்டுக்கு நீ ராணியாகணும்னு கனவு காணறேன்... நடக்க மாட்டேன்கிறதே... உங்கப்பா.... திங்கறதை தவிர வேறே எதுவும் யோசிக்கிறதில்லை. ஆதிகிட்டே நேரா கேட்டு தெரிஞ்சுக்காம... நீயோ எப்பவும் சோம்பேறியா உட்கார்ந்து உடம்பை வளர்க்கறே.. ஆதி மனசை எப்படி இழுக்கறதுன்னு தெரியாம..." சுந்தரி என்பது நன்றாகவே தெரிந்தது வசுதாவிற்கு... எப்பவும் இருக்கிற தொண தொணப்புதானே என்று நினைத்தாள்.

"எம்மா.. சும்மா தொண தொணக்கிறே... நேரம் வந்தால் எல்லாம் நடக்கும்... விடு..." என்றது மகளின் குரல்.

"ஆகா... வருமே... நீ இப்படியே உட்கார்ந்திரு... ஆதி... தம்பி... தங்கைன்னு வாரி கொடுத்து விட்டு... தம்மனூண்டு சொத்தோட இருப்பான். அப்ப பண்ணிப் பேயாம்... என் அறிவுக் கொழுந்து... சீக்கிரம் உன் கல்யாணம் நடந்தா இங்கே உன் ஆட்சி நடக்கும்...



கணக்கு வழக்கு உன் கிட்டே தான்... பணத்தை பீரோ வில் பத்திரமா வெச்சுக்க முடியும்... இப்படி கூடப் பிறந்தவர்களுக்கு கொட்டியழ வேண்டாம் என்று பார்க்கிறேன். என்னவோ சினிமா வசனம் பேசறா..."

"அய்யோ... அம்மா... நீ புலம்பற மாதிரி எதுவும் நடக்காது. எல்லாம் யோசிச்சுதான் செய்யறேன்... என் பிளான் உனக்குத் தெரியாதும்மா... மெல்ல ஒவ்வொருத் தரையா 'கட்' பண்ணப் பார்க்கிறேன்... உதயா கிட்டே அண்ணனுக்குத் தெரியாமல் திருட்டுக் கல்யாணம் பண்ணிக்கோன்னு உபதேசம் பண்றேனே... ஏன்னு நினச்சே... அப்படி அவ ஓடிப்போய் கல்யாணம் பண் ணிட்டா ஆதி அவள் முகத்தில் விழிக்க மாட்டார்னுதான்.. அவ போயாச்சுன்னா தம்பிகளை விரட்டறது ரொம்ப சுலபம். நிரஞ்சனுக்கு கல்யாணம் ஆனதும் தனிக்குடித் தனம் போற மாதிரி ஏதாவது செய்ய மாட்டேனா... அப்புறம் பொடிசு... அந்த ரோஹன்.. அவனை ஹாஸ் டலில் சேர்த்து விடுவேன்... அப்பத்தான் நல்லா படிப் பான்னு சொல்ல வேண்டியது தான்... கற்பகம் அத்தை செத்த பாம்பு... வாயை மூடிக் கொண்டு இருன்னா இருந்துடும்... என்னை என்னன்னு நினைச்சேம்மா!"

"என் சமர்த்துப் பொண்ணே... இப்பத் தாண்டி எனக்கு நிம்மதி வந்தது. உன் அத்தை விசாலிக்கு ரொம்பக் கர்வம்.. என்னைவிட பணக்காரி யாரும் இல்லேங்கற ஜம்பம்... அவள் முன்னே நாம உசத்தியா வாழ்ந்து காட்டணும்... மல்லி... உங்கப்பாவா கூப்பிடுவது..."

"ஆமாம்மா.. கத்தறதுக்கு முன்னால போயிடுவோம்..."

அதன் பிறகு பேச்சில்லை மூச்சில்லை... ***கீச் கீச்*** என்ற பறவை சத்தம் மட்டுமே.

கேட்டுக் கொண்டிருந்த வசுதாவின் முகம் பேயறைந்தது போல ஆனது.

தாயைப் போலப் பிள்ளை... நூலைப் போல சேலைங்கறது எத்தனை சத்தியம்...

சுந்தரி எட்டடி என்றால் மல்லிகா பதினாறடி என்ன... நூறடி பாயவும் தயாராக இருக்கிறாளே... என்ன... கிரிமினல் புத்தி! ஒரு வீட்டை எரிக்க கொள்ளிக் கட்டை வேண்டாம்... ஆசிட் பாம் வேண்டாம்... இவர்களை விட்டால் போதும்... சுட்டுப் பொசுங்கி... சாம்பலாகி விடும். ஆதித்யா மல்லிகாவின் திருமணம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று விரும்பினேனே... அப்படி நடந்தால் இந்த வீட்டின் சந்தோஷத்தை... சுனாமியால் சுருட்டி வாயில் போட்டுக் கொள்வாள்...

என்னவொரு சதித்திட்டம்... கூனியும் சகுனியும் கெட்டார்கள்...

கற்பகம் ஆன்ட்டி சொன்னது உண்மைதான்... மல்லிகா இந்த வீட்டிற்கு வந்தால்... வீட்டின் அமைதியே பாழாகி விடும்...

"இப்ப என்ன சொல்றீங்க வசுதா..."

சட்டென்று நினைவு மீண்டு வந்தாள் அவள்.

"ரோஹன்... அவர்கள் தப்பாகவே பேசியிருந்தாலும் அதை நீ ஒட்டுக் கேட்டு... இப்படி ரிகார்டு பண்ணியிருக்கக் கூடாதுதான்... பாட விஷயமாக நான் வாங்கிக் கொடுத்ததை இப்படித் தப்பா பயன்படுத்துவது சரியல்ல. ரோஹன்... இது நாகரிகமும் கிடையாது..." கண்டிப்பாகவே சொன்னாள்.

"உண்மையில் மாடியறைக்கு நான் ஹெட் போனைத் தேடப் போனேன்... அங்கே குருவி கூடு கட்டியிருந்ததைப் பார்த்து விட்டு மைக்ரோ போனை ஆம்பிளி ஃபையருடன் பொருத்தி... அதனோட சத்தத்தைப் பதிவு செய்ய நினைத்து சரியான ஆங்கிளில் வைத்து இயக்கினேன். தாய் பறவை சத்தத்துக்கும்... குஞ்சுகளின் சத்தத்துக்கும் வேறுபாடு பார்க்கலாமேன்னு... கதவு திறந்திருந்ததால் அவர்களின் பேச்சும் பதிவாகி விட்டது. அவர்கள் பேசியது சரியாக என் காதில் விழவும் இல்லை வசுதா... நான் இதில் மும்முரமாக இருந்ததாலோ என்னவோ.. ஹெட்போனைத் தேடி எடுத்து காதில் மாட்டிக் கொண்டு... பதிவானதைக் கேட்டப்ப... தான் இவர்கள் பேசியது தெரிய வந்தது... எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் உங்களிடம் வந்தேன். இருந்தும்... இது நல்லதற்குதானே... மல்லிகாவைப் பற்றி நான் சொன்னது உண்மை என்று 'ப்ரூவ்' பண்றதுக்கு இது ஒண்ணே போதும் இல்லையா..."

"வேண்டாம் ரோஹன்... இதெல்லாம் சரியில்லை... முதலில் இதை அழித்து விடு.. இந்த விஷயம் நமக்குள்ளேயே இருக்கட்டும் கண்ணா... அவங்க நினைக்கிற மாதிரி எதுவும் நடக்காது... தைரியமா இரு... உங்களை யாராலும் பிரிக்க முடியாது. உன் அண்ணா அதற்கு விட மாட்டார்... இப்ப... நீ புறப்படு... ஸ்கூலுக்கு நேரமாச்சு இல்லையா..."

"அண்ணாவோட பார்த்டே..."

"அதை ராத்திரி பார்த்துக்கலாம். உங்க அண்ணாவும் வரவேண்டும் இல்லையா... கான்டில் லைட் டின்னர் தான் இன்றைக்கு சர்ப்பரைஸ் பார்ட்டி..."

"அந்த வல்ச்சர்களும் இருக்குமே..."

"அவர்களிடம் நயமா பேசி வெளியே அனுப்பி விடுகிறேன். இப்ப நீ கிளம்பு ராஜா... நீ ஸ்கூல் முடிந்து வந்ததும் ஷாப்பிங் போகலாம்..."

''எதுக்கு...''

''உங்க அண்ணாவுக்கு கிஃப்ட் வாங்கணும்னு சொன்னேயே.''

''ஓ! மறந்து விட்டேன்...''

அவள் கீழே இறங்கி வந்தாள்..

கற்பகம் மெல்லச் சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்து வருவதைப் பார்த்து ''என்ன இது... ஆன்ட்டீ... டாக்டர் சொல்லும் வரை நடக்க வேண்டாம் என்று சொன்னேனே...'' என்று ஓடிச் சென்று அவரைத் தாங்கிக் கொண்டாள்.

''என்ன செய்வது வசு... நீயும் புறப்பட்டுப் போனால் எனக்கு உதவ இங்கு யார் இருக்காங்க... ஒண்டியா சமாளிக்க வேண்டுமே... இந்தக் காக்கைக் கூட்டம் எப்போ கிளம்புகிறதோ... தெரியல்லே...''

அதைக் கேட்டு 'குபீர்' என்று சிரித்தாள் வசுதா.

''ஏன் சிரிக்கிறே வசு...''

''கொஞ்ச நேரத்துக்கு முன்தான் ரோஹன் கழுகுக் கூட்டம் என்றான்... இப்போ நீங்கள் காக்கைக் கூட்டம் என்கிறீர்கள்... யாருமே அவர்களை மனிதர்களாக மதிக்கவில்லையே என்றுதான்...''

''மனுஷங்களா நடந்தா மதிக்கலாம்.. அதான் இல்லையே. ஆமாம்... நீ புறப்படுவதாய் சொன்னேயே என்ன ஆச்சு...'' உண்மைக் காரணத்தைச் சொன்னால்... ஆன்ட்டீ ஆடிப் போவார்கள். பாவம்... இங்கே தாயும் மகளும் சேர்ந்து பெரிய சதித்திட்டத்தையே போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அரண்டு விடுவார். வேண்டாம்... இவருக்கு தெரிய வேண்டாம...



இந்த நேரத்தில் நான் இங்கே இருந்தேயாக வேண்டும்... உதயா விஷயத்தில் உஷாராய் இருக்க வேண்டும்... தாய் - மகள் எண்ணம் மண்ணைக் கவ்வ வேண்டும் என்றால்... இங்கிருந்து நான் கிளம்பக் கூடாது... என்ன ஆனாலும் சரி... இந்த இடத்தில் இருந்து நகரவும் கூடாது...

''என்னம்மா யோசனை... இருப்பதா... வேண்டாமா என்றா...''

''இல்லை... என் முடிவை மாற்றிக் கொண்டாகி விட்டது. ஏன் கோழையாய் பயந்து ஓட வேண்டும்... இருந்து சாதிக்கலாமே என்று முடிவு பண்ணிட்டேன் ஆன்ட்டீ...''

''என் வயித்தில் பாலை வாத்தேம்மா... என் விருப்பப் படியே ஆச்சு...''

''உங்க விருப்பப்படியே மல்லிகா இநத வீட்டுக்கு மருமகளாக மாட்டாள். பாருங்கள்.''

''பின்னே... நீயா...''

''அது சொல்ல முடியாது ஆன்ட்டீ... என் வேலை மல்லிகாவைத் தடுப்பது மட்டுமே... சரி... நீங்க போய் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்...'' என்று அவரை அழைத்துச் சென்று படுக்கையில் உட்கார வைத்தாள்.

ரோஹனிடம் சொன்னபடி... பசுபதி... சுந்தரியிடம் நைச்சியமாய் பேசினாள் வசுதா.

''சார்... எதுக்கு நீங்க வீட்டிலேயே அடைந்து கிடக்கிறீர்கள்.. ஊர் சுற்றிப் பார்க்க வேண்டாமா... எத்தனை இடங்கள் மங்களூரைச் சுற்றி இருக்கிறது. நீங்கள் தர்ம ஸ்தலம் பார்த்திருக்கிறீர்களா... அருமையான இடம் என்று

சொல்கிறார்கள். தர்ம ஸ்தலம் மஞ்சுநாத சுவாமியை வேண்டினால் நினைத்த காரியம் நிறைவேறுமாம். அப்புறம் கொல்லூர் மூகாம்பிகை.. சக்தி வாய்ந்த அம்மன் கோவில்... நம்ம எம்.ஜி.ஆர். கூட அடிக்கடி வந்து தரிசித்தாராம்... அருகிலேயே உடுப்பி இருக்கிறது... உடுப்பிக் கிருஷ்ணனை தரிசித்தால் உடம்பு வியாதி எல்லாம் போய் விடும் என்பார்கள்."

"எங்கள் மீது என்ன அப்படி திடீர் கரிசனம் உனக்கு" சந்தேகத்துடன் கேட்டாள் சுந்தரி...

"அய்யோ... பாவம்... நீங்கள் வீட்டில் போரடித்துப் போய் கிடக்கிறீர்களேன்னு சொன்னேன். ஒவ்வொரு கோவிலிலும் அருமையான சாப்பாடு வேறு. வேண்டாம் என்றால் விடுங்கள்... எனக்கென்ன..."

அருமையான சாப்பாடு என்றதும் பசுபதியின் நாக்கு எச்சில் மழையில் நனைந்தது...

"அந்தப் பொண்ணுதான் அத்தனை தூரம் சொல்றா இல்லே... எதுக்கு மறுக்கறே... ஆதி தம்பிகிட்டே சொன்னா ஏற்பாடு பண்ண மாட்டானா... நாம போகலாம் சுந்தரி... ரெடியாகு... போ..." என்றார்.

"அடடா... ஆதி சார் சக்லேஷ்புரத்திற்கு போன விஷயம் உங்களுக்குத் தெரியாதா... அங்கே காபித் தோட்டத்தில் ஏதோ பிரச்சனைன்னு பார்க்கப் போயிருக்கிறார்... எப்போ வருவார் என்று தெரியாதே..."

"இல்லே... ட்ரெயின் டிக்கெட் புக் பண்ணனுமே... அதான்..."

"அதற்கா... என்ன சார்... உங்களுக்கு இருக்கும் வசதிக்கு ஏ.ஸி. காரில் போகலாம். டிராவல்ஸில் 'புக்' பண்ணினா உடனே கார் வந்து நிற்கும்... அந்த ஏற்பாட்டை நான் செய்கிறேன்... போய் வர பணம் இல்லை என்றா தயங்குகிறீர்கள்..." மெல்ல ஊசி குத்தலாய் சொல்ல...



இனியும் மறுத்தால் கேவலம் என்று புறப்பட்டு விட்டார்கள்.

வாசலில் டாக்ஸி வந்து நின்றதும் பசுபதி குடும்பம் புறப்பட்டது. அதே நேரம் ரோஹனும் வந்து சேர்ந்தான். அவனுக்கு வியப்போ வியப்பு...

"தம்பி... தர்மஸ்தலம்... உடுப்பின்னு சுத்திட்டு வர்றோம். அண்ணனிடம் சொல்லிவிடு... என்ன..." பசுபதியின் கூவல் காற்றில் கரைந்தது.

அவர்களின் கார் கண்ணிலிருந்து மறைந்ததும் 'ஹே' என்று வசுதாவின் கையைத் தட்டினான் ரோஹன்.

"அப்பா.. நிம்மதி.. முதல்ல நிரஞ்சன் அண்ணாவுக்கு போன் பண்ணனும். இன்றைக்காவது சீக்கிரம் வரட்டும்..." என்றான் அவன்.

இருவரும் ஷாப்பிங் புறப்பட்டனர். ஷாப்பிங் சென்டரில் கலகலவென்று கூட்டம் அலையோடியது.

பன்மொழி கலப்பும் அங்குதான்.. கன்னடம்... துளு... கொங்கனி... ஆங்கிலம்... மலையாளம்... மராட்டி... அபூர்வமாய் தமிழ் என்று மொழிகளின் சங்கமம்...

எத்தனையோ வஸ்துகளை பார்த்து விட்டுத் திருப்தியடையாத ரோஹன்.

இரண்டு தேவதைகளின் மத்தியில் இதய வடிவத்தில் போட்டோ பிரேம்! பெரியதாய்...

"இது அழகா இருக்கு இல்லே..." என்று சொன்னான்.

"உனக்குப் பிடிச்சிருக்கா..."

''உம்... இந்த தேவதைகள் ப்யூட்டி ஃபுல்லா இருக்கு உங்களைப்போல...''

''ஏய்.... ஐஸாக்கும்... ஹச்... தும்மல் வந்து விட்டது பார்...''

''நிஜம்... பிராமிஸா...'' நெஞ்சைத் தொட்டு சொன்னான்.

''சரி... நம்பறேன்... இதுக்கு பில் போடச் சொல்லட்டுமா... எவ்வளவு... முன்னூற்று ஐம்பது... உன் பட்ஜெட் விட ஐம்பது ரூபாய் அதிகம்... அதை நான் கொடுக்கிறேன்....''

கிஃப்ட் பொருளை பளபள தாளில் சுற்றித் தரும் வரை காத்திருக்கையில்... கண்கள் கடையில் உள்ள பொருள்களையெல்லாம் சுற்றிப் பார்க்க... பார்வையில் மோன நிலையில் அமர்ந்திருக்கும் புத்தரின் சிலைபட்டது.

வெண்ணிறக் கல்லில் வடித்த சிலை.... சாந்தம் தவழும் வதனம்... அந்தச் சிலையை பார்க்கும் போதே மனதில் அமைந்து நுழைந்தது போல உணர்வு.

'பளிச்'சென்று யோசனை வந்தது. இதை வாங்கி ஏன் ஆதிக்குக் கொடுக்கக் கூடாது... பிறந்த நாள் பரிசாய்... உடனே அதையும் 'பேக்' பண்ணச் சொன்னாள்.

வெளியே வந்தபோது மணி ஆறு... ஆட்டோ ஏதாவது வருகிறதா என்று பார்த்துக் கொண்டிருந்தபோது தான் அது நடந்தது.

'பார்க்கிங்' பண்ணிய காரிலிருந்து கீழிறங்கிய மூன்று வயதுக் குழந்தை சரசரவென்று சாலை பக்கம் ஓடி வர... அதே நேரம் எதிர் திசையில் வேகமாய் வந்த கார் ஒன்று அருகே வந்துவிட....

கண் சிமிட்டும் நேரம்...கார் குழந்தையை உருட்டித் தள்ள வேண்டியது தான்.



'ராகுல்' என்று அலறினாள். குழந்தையின் தாய்.. கூடவே 'அய்யோ' என்று கூவல்...

வசுதா உடனே பாய்ந்தோடினாள். குழந்தையை தள்ளி விட்டு... அவளும் உருள...

காரின் முன் பகுதி அவளது தோளை உரசிச் சென்றது. தோள் பகுதியில் சதைப் பிய்ந்து ரத்தம் காட்ட கொஞ்சம் தள்ளிப் போய் நின்ற காரில் இருந்து இறங்கிய மனிதர் மன்னிப்புக் கேட்டார். குழந்தை திடீர் என்று வந்து விட்டது... தப்பு என்னிதில்லை என்று மன்றாடினார்... அவரை சமாதானம் செய்து அனுப்பி விட்டுக் குழந்தைப் பக்கம் திரும்பினாள்.

பயத்தில் குழந்தை அழ ஆரம்பித்துவிட.... தாய் அவனை இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

வயதான பெண்மணி... குழந்தையின் பாட்டி போலும் அருகில் வந்து கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''தாங்க்ஸ்ம்மா.... நினகே ஹேகே கிருதக்ஞதோ சோதுன்னு கொத்தில்லா...'' என்றாள் தழுதழுக்க..

''எனக்கு கன்னடம், துளு எதுவும் புரியாது...'' என்றாள் வசுதா.

''ஓ... தமிழா... பரவாயில்லை. நாங்களும் தமிழ்தான். சொந்த ஊர் கே.ஜி.எஃப். எங்க வீட்டுக் குழந்தையை காப்பாத்தினதுக்கு ரொம்ப நன்றிம்மா...'' என்றாள் மறுபடியும்.

அந்தக் குழந்தையின் தாய் வசுதாவின் அருகே வந்து ஆங்கிலத்தில் சொன்னாள்... ''நன்றி சகோதரி... என் நன்றியை எப்படிக் காட்டுவது என்று எனக்குத் தெரிய

வில்லை... என் உயிரைக் காப்பாற்றி இருக்கிறீர்கள் என்று தான் சொல்வேன். திருமணம் ஆகி ஐந்து வருடங்கள் குழந்தை இல்லாமல்... என்னென்னவோ 'ட்ரீட்மெண்ட்' எடுத்து அப்புறம் பிறந்தவன் என் ராகுல்... நீங்கள் செய்ததற்கு பிரதிபலனாய் என்ன செய்வது என்று தெரியவில்லை...''

வசுதாவும் அடக்கத்துடன் பதில் கூறினாள் ''அப்படி என்ன பெரிதாய் நான் செய்து விட்டேன். நத்திங்... இந்த மாதிரி செய்வது மனுஷத்துவம்.. இதைப் பெரிது படுத்தாதீர்கள்... ப்ளீஸ்...''

''உங்களுக்கு அடிப்பட்டிருக்கிறது போல... வாருங்களேன். டாக்டரிடம் போகலாம்'' என்று அழைத்தாள் ராகுலின் தாய்.

''பயப்படும்படியா அடி இல்லை.. சின்னக் காயம் தான். வீட்டுக்குப் போகும் வழியில் டாக்டரிடம் போய் டிரஸ்ஸிங் பண்ணிக் கொள்கிறேன். விடுங்கள். குழந்தை பயந்து போயிருக்கிறான். நீங்கள் புறப்படுங்கள்'' என்றாள் வசுதா.

''மறக்காமல் 'டெட்டனஸ்' போட்டுக் கொள்ளுங்கள் மிஸ்...''

''வசுதா.''

''இனிய பெயர்... என் பெயர் ஸ்வேதா... என் விசிட்டிங் கார்டு தருகிறேன்... கண்டிப்பாய் எங்க வீட்டுக்கு வர வேண்டும் வசுதா...''

சரி என்று தலையாட்டிவிட்டு ரோஹனும் அவனும் ஆட்டோவில் புறப்பட்டனர்.

வீட்டின் கதவு திறந்தே இருந்தது... ஆதித்யா வந்து விட்டாரா என்ன... வியப்புடன் உள்ளே சென்றவள் சோபா



வில் அமர்ந்து டி.வி. நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த நிரஞ்சனைப் பார்த்ததும் ஆச்சர்யம் பொங்கியது.

''ஹாய்... நிரஞ்சன்... வாட் எ சர்ப்பரைஸ்... என்ன... காத்துவாக்கில் செய்தி வந்ததாக்கும்... ஓடி வந்துட்டீங்க.'' பரிகாசத்துடன் கேட்டாள் வசுதா.

''இன்னிக்கு ஆதியின் பிறந்த நாள் ஆச்சே... அதான் வந்து விட்டேன்... ஆனா வீடே அமைதியாக இருக்கு... என்ன... விருந்தாளிகள் போய் விட்டார்களா.. அப்பா... நிம்மதி...'' என்றான் நிரஞ்சன்.

''ரொம்பவும் சந்தோஷப் பட வேண்டாம் அண்ணா... அவங்க இன்னும் இங்கேதான்... தற்சமயம் புயல் தர்மஸ்தலம் பக்கம் நகர்ந்திருக்கிறது... ஒரு ரவுண்ட் போய் விட்டு மறுபடியும் இந்த வீட்டில் மையம் கொண்டு விடும்...''

ரோஹன் கேலியாய் சொல்ல...

அனைவரும் சிரித்தனர்.

வசுதாவின் தோள் கட்டைப் பார்த்துவிட்டு கேள்வியுடன் நோக்கினான் நிரஞ்சன். நடந்ததை சுருக்கமாகச் சொல்லிவிட்டு ''எனக்கு நிறைய வேலைகள் இருக்கு நிரஞ்சன்... போகிறேன்... ஆன்ட்டி எழுந்து விட்டார்களா என்ன...'' என்று விசாரித்தாள்.

''நல்ல தூக்கம்... எழுப்ப வேண்டாம் என்று இருந்து விட்டேன். ஆமாம்... நம் பர்த்டே பேபி இன்னும் வரவில்லையே... என்ன ஸ்பெஷல் செய்திருக்கே... வசுதா...'' என்று நிரஞ்சன் ஆவலுடன் கேட்க...

''இன்னிக்கு ஸ்பெஷல் கேண்டில் லைட் டின்னராக்கும் நாமும் ஹெல்ப் ''பண்ணுவோமா அண்ணா...''

என்றான் தம்பி.

"ஓ. ஷ்யூர்... டெகரேஷன்... டேபிள் அரேன்ஜ்மென்ட்ஸ் எல்லாம் நாம பண்ணலாம்..."

"சரி... நான் போய் டின்னருக்கு ரெடி பண்ணுகிறேன்" என்று கிச்சனுக்குள் நுழைந்து கொண்டாள் வசுதா.

பொழுது இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது.

## 16

குளியல் அறையில் பயண அலுப்பு தீர குளித்துக் கொண்டிருந்தான் ஆதித்யா.

ரோஹனிடம் சைகை காட்டினாள் வசுதா. அண்ணனும் தம்பியும் மளமள வென்று செயல்பட்டனர்.

வசுதா தான் வாங்கி வந்த அன்பளிப்பை எடுத்துச் சென்று அவனது அறையில் வைத்து விட்டு வந்தாள்...

ஈரமான தலையை துவட்டிய பின் ஜிப்பா - பைஜா மாவை அணிந்து கொண்டு வெளிவந்தான்.

டைனிங் ஹாலில் இருட்டு...

ஏன் விளக்கு போடவில்லை.. வசுதா எங்கே... ஒருத்தரும் இல்லையா... புருவங்கள் மேலேற ஸ்விட்சை போடுவதற்காக செல்கையில் 'பளிச்'சென்று விளக்கு எரிந்தது.

வெளிச்சத்தில் அறையைப் பார்த்தவன் பிரமித்தான். ரோஹனும் நிரஞ்சனும் வண்ணக் காகிதங்களாலும்... பலூன்களாலும் டைனிங் ஹாலை அலங்கரித்திருந்தனர்... ஆங்காங்கே வண்ண மலர்கள்...



நிரஞ்சனும் ரோஹனும் 'ஹேப்பி பர்த் டே டூ யூ...' என்று பாட ஆரம்பிக்க... வசுதாவும் சேர்ந்து முணுமுணுத் தாள்.

முதலில் திகைத்து பின் மகிழ்வுடன் அதை ஏற்றுக் கொண்டான் ஆதித்யா.

"என் பர்த்டே.... அதைச் சுத்தமா மறந்து போனேன். தாங்க்யூ.... தாங்க்யூ..." என்றான் குதூகலத்துடன். நிரஞ்சன் அழகிய 'பொக்கே'யுடன் தன் அன்பளிப்பை நீட்டினான். ரோஹன் தான் வாங்கியதை அவனுக்குத் தர... ஆதித்யாவின் முகத்தில் தெரிந்த பெருமிதம்... பேரானந்தம்... கண்களில் தெரிந்த உற்சாகப் பளபளப்பு... உதடுகளில் பூத்த சிரிப்பு...

வசுதா மூச்சை இழுத்து விட்டாள்... எப்போதும் அவன் இப்படியே இருந்தால்... இன்னும் அழகனாய் தெரி வானோ... தம்பிகள் கொடுத்த அன்பளிப்பை ஆவலுடன் பிரித்துப் பார்த்தான் ஆதித்யா...

நிரஞ்சன் அண்ணனுக்காக விலையுயர்ந்த கைக்கடி காரம் வாங்கியிருந்தான்... ரோஹன் வாங்கியிருந்த அன்பளிப்பைப் பார்த்துவிட்டு 'ப்யூட்டிஃபுல் ரோஹன்... இந்த பிரேமில் யார் ஃபோட்டோவை வைப்பது... சொல்..." என்று கேட்டான் ஆதித்யா...

"வரப்போகும் அண்ணியின் போட்டோ அண்ணா..." என்றான் ரோஹன்... சிரித்துக் கொண்டு...

"அப்போ... வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டும் ரோஹன். அது வரைக்கும் இது காலியாக இருக்கும்... நிரஞ்சன்... ஐ அம் வெரி ஹாப்பி... எனக்கு கொடுத்த அன்பளிப்பை பார்த்து..."

பாசத்துடன் தன் இரு தம்பிகளையும் அணைத்துக் கொண்டான் அவன்.

சுவற்றில் சாய்ந்தவாறு தன் இரு கைகளையும் மார்பில் கட்டிக் கொண்டு நின்றிருந்த வசுதாவின் கண்கள் இந்த பாச மலர்களைப் பார்த்ததும் பனித்தன...

உள்ளம் மகிழ்ச்சியில் விம்மியது... எத்தகைய அற்புதமான... ஆனந்தமான.. அழகான காட்சி... இந்தப் பாசத்தை யாரால் பிரிக்க முடியும்... எத்தனை மல்லிகாக்கள் வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது... அந்த நம்பிக்கை வேரூன்ற... கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஒற்றைக் குழந்தையாய் பிறந்த தனக்கு பாசத்தைக் காட்ட உடன் பிறப்புகள் இல்லையே என்ற ஏக்கமும் வந்தது...

அதை விழுங்கி விட்டுக் குரல் கொடுத்தாள்.

''டின்னர் ரெடி... சாப்பிட வரலாமே...''

மின்னல் போல காட்சி மாறியது.

டேபிள் மீது பெரிய மெழுகு வர்த்தி ஏற்றப்பட்டு...

மின் விளக்கு அணைக்கப்பட்டது.

பதார்த்தங்கள் அழகாய் பீங்கான் வேரில் கொண்டு வந்து வைக்கப்பட்டன.

ரோஹனுக்கு சைகைக் காட்டியதும்... அவன் சிகார்டரை இயக்கினான்... மென்மையாய் இந்துஸ்தானி இசை வரத் தொடங்கியது.

இதை எதிர்பார்க்காத ஆதித்யா பிரமித்துப் போனான்...

''அட... இதெல்லாம் என்ன... ஸ்டார் ஹோட்டல் அட்மோஸ்பியர் வந்து விட்டது... பிரமாதம்...'' என்று பாராட்டினான்.



''அண்ணா... இந்த ஐடியா வசுதாவுடையதாக்கும்.. எப்படி இருக்கு...''

வசுதாவைப் பார்த்து புன்னகைத்தவன்... ''ஏற்பாடு பண்ணினால் மட்டும் போதாது ரோஹன்... சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டால் தான் சிறக்கும்...'' என்றான்...

ரோஹனிடம் பேசினாலும்... கண்கள் வசுதா மீதே இருந்தன... இதயத்தின் தாளம் தப்பியது போல இருந்தது. இனிய அலையாய் மேனிக்குள் ஏதோ படர்ந்தது.. பரவசமா... எதனால்... தன்னைப் பார்த்து புன்கைத்ததாலா... தன்னையும் விருந்துண்ண அழைத்ததாலா... தெரியவில்லையே. ''என்ன தயக்கம் வசுதா... அண்ணா தான் கூப்பிட்டாச்சே வந்து உட்கார்... சேர்ந்து சாப்பிடலாம்... நாம் நாமே பரிமாறிக் கொண்டால் போச்சு...'' நிரஞ்சன் வற்புறுத்த...

''ஆன்ட்டிக்கு கொடுக்க வேண்டும்.. அதான்'' என்றாள் அவள்.

''சாயங்காலம் என்னிடம் அத்தை சொல்லிக் கொண்டு இருந்தார்... மத்தியானம் சாப்பிட்டதே செரிக்கவில்லை... வயிற்றில் கடபுடான்னு சத்தம்... ராத்திரி எனக்கு பால் மாத்திரம் போதும்னு வசுதா கிட்டே சொல்லனும்னு... நீ உட்கார்ந்து சாப்பிடு...'' என்றான் நிரஞ்சன்.

அதற்கு மேல் மறுப்பது கூடாது என்று ரோஹன் அருகில் அமர்ந்து கொண்டாள்...

''இதென்ன பாயசம்'' ஆதித்யா கேட்டான்.

''கேரளா ஸ்பெஷல்... பாலடா...'' என்றாள் அதை அவனுக்கு கப்பில் ஊற்றித் தந்தவாறே...

அனைவருக்கும் 'கப்'பில் ஊற்றி தந்துவிட்டு தானும் கையில் எடுத்துக் கொண்டாள்.

"ஹாப்பி பர்த் டே டூ யூ... ஆதித்யா..." என்று வாழ்த்த...

"ஜகம்... ஆதி..." என்றான் அவன்... பாயசத்தை சுவைத்தபடி...

நிரஞ்சனும்... ரோஹனும் வியப்புடன் பார்ப்பதை அறிந்து அவளது முகம் சிவந்து போனது...

அய்யோ... அவர்கள் என்ன நினைப்பார்கள். என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு அண்ணா வழிகிறாரே என்று நினைத்தால்.

இருந்தும் மனசுக்குள் கிளுகிளுத்தது நிஜம்தான்.

அடுத்து தேங்காய் பால் சாதம்... குருமா... கட்லட்... பேபி கார்ன் மஞ்சூரியன்... மசாலா பப்பட்... தயிர் சாதம் என்று ஒவ்வொன்றையும் ருசி பார்த்தார்கள்.

"பர்த் டே ஸ்பெஷல் என்று வெளுத்துக் கட்டிட்டாய் வசுதா... இனிமேல் எதுவும் சாப்பிட முடியாது.. வயிறு நிறைந்து விட்டது... போதும்..." என்று எழுந்து விட்டான்.

அனைவரும் சாப்பிட்டு முடித்ததும் தட்டுகளையும் கப்புகளையும் எடுத்துக் கொண்டு போய் 'சிங்க்'கில் போட்டு விட்டு... பாத்திரங்களில் இருந்த மிகுந்ததை சின்னப் பாத்திரங்களில் போட்டு வைத்து... எல்லாவற்றையும் கழுவ ஆரம்பித்தாள்.

அவளையும் அறியாமல் வாய் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தது...

அது அவளுக்கே ஆச்சர்யமாக இருந்தது... எத்தனை நாளாயிற்று... இப்படி உல்லாசமாய் பாடி...

அப்பா போனதும் பாட்டும்... வேடிக்கைப் பேச்சும் மறந்து போனதுதான்... டாடியின் நினைவில் கலங்கி நின்றவளுக்கு எதுவுமே தேவையில்லை என்று ஆகி விட்டது...



இப்போதெல்லாம் டாடியின் நினைப்பும் வந்து வாட்டுவதில்லையே... ஏன்... இவர்களுடன் ஒன்றி விட்டதாலா... இவர்களில் ஒன்றாகி விட்டதாலா...

டாடி இல்லாத வாழ்க்கை நரகம் என்று தோன்றியது போய்... ஆதி வந்ததால் வசந்தம் வந்தது போல தெரிகிறதோ. எப்படி இந்த வீட்டை... இவர்களைப் பிரிந்து செல்ல எண்ணினேன். அவளால் நம்பவும் முடியவில்லை. சில மாதங்களுக்கு முன் இவர்கள் யார் என்றும் தெரியாது. ஆனால் இப்போது... இவர்களை விட்டுப் போக மனமில்லை. வாழ்க்கையில் தான் எத்தனை மாற்றங்கள்.. திருப்பங்கள்.. ஏன்... சில நாட்களுக்கு முன்னால் என்னைக் கண்டாலே கரித்துக் கொட்டிய ஆதித்யா... இன்று என்னிடம் இனிமையாகப் பேசுகிறார் என்றால்... அதை நம்பவும் முடியவில்லை... இந்த அன்பு நீடிக்குமா... பெருமூச்சு விட்டாள் வசுதா.

"களைப்பாக இருக்கிறதா வசுதா.." ஆதித்யாவின் குரல் கேட்டு அதிர்ந்து போய் திரும்பினாள்...

இங்கே வராதவன் ஆயிற்றே... ஆனால் வந்திருக்கிறான்... இன்றைக்கு என்னவெல்லாம் அதிசயமாய் நடக்கிறது.

வெள்ளை நிற பைஜாமா உடையில் வெகு கம்பீரமாய் அவன் நிற்பதைக் கண்டு இதயம் அசுர வேகத்தில் துடித்தது...

"இல்லை பெருமூச்சு விட்டாயே.. அதான் கேட்டேன்" என்றான் தொய்ந்து.

"ஏதோ நினைவு வந்தது... பெருமூச்சு விட்டேன்... வேறெதும் இல்லை..." என்றாள் பாத்திரங்களை அடுக்கியவாறு.

"தாங்க்ஸ் வசுதா..." என்றான் அவன்.

"எதற்கு... பெருமூச்சு விட்டதற்கா..." என்றாள் குறும்புடன்.

அதற்கு அவனும் சிரித்து விட்டுச் சொன்னான்.

"என் அம்மா இறந்த பின்பு என் பிறந்த நாளைக் கொண்டாடுவதையே விட்டு விட்டேன். ஆனால் இன்றைக்கு மறக்க முடியாதபடி செய்து விட்டாய்... தாங்க்யூ... வசுதா..."

'ஜில்'லென்று பனிச்சாரலில் நனைந்தது போல ஜிலுஜிலுவென்று இருந்தது அவளுக்கு. ஆதித்யா வாயிலிருந்து பாராட்டு!

"மறுபடியும் தாங்க்ஸ்... இது உன் அன்பளிப்புக்கு... புத்தர் சிலை! வொண்டர் ஃபுல்... ஆனால்... அதை ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு கொடுத்தாயோ என்று படுகிறது எனக்கு..."

"சேச்சே... அப்படியெல்லாம் இல்லை... புத்தர் அன்பே வடிவானவர் ஆயிற்றே... அன்பே நித்தியம்... அன்பே சாந்தம்... அன்பே ஆனந்தம் என்பது தானே... அதைப் புரிந்து கொண்டால் யாரிடமும் கோபமோ... சிடுசிடுப்போ வராது இல்லையா... புத்தர் சிலையைப் பார்த்ததும் அதுதான் நினைவுக்கு வந்தது... அதான் வாங்கினேன்" என்றாள் நமுட்டுச் சிரிப்புடன்...

அதைக் கேட்டு விட்டுச் சிரித்தான் ஆதி.

வாழைப் பழத்தில் ஊசி என்பது இதுதான் போல.

"எனக்கும் புரிந்து விட்டது... இனி அடியேனு கோபம் வராமல் இருக்க 'ட்ரை' பண்ணுகிறேன். ஆ... சொல்ல மறந்தேனே... நாளை சக்லேஷ்புரத்திற்குப் போக இருக்கிறேன்... ஒன்பது மணிக்கு கிளம்ப உத்தேசம்... விருப்பம் இருந்தால் வரலாம்" தேனில் முக்கி எடுத்த பலாச் சுளை போல நெஞ்சுக்குள் இனித்தது... என்னை விரும்பி அழைக்கிறான் என்றால்... இது புத்தரின் மகிமையா!



"என்ன பதிலைக் காணோம்..."

"வருகிறேன்..."

"குட்... நாளை காலை ஒன்பது மணி... என்ன..."

அவன் சென்ற பின்பும்... அவன் விட்டுச் சென்ற 'பாடி ஸ்ப்ரே' மணம் அங்கேயே சுற்றி அவளை மெய் மறக்கச் செய்தது.

'மஸ்க்' வாசனையா... இல்லே.. யூடிக்கோலனா... என்று தெரியாத ஒரு மணம்...

மறுநாள் எப்போது விடியும் என்று காத்திருந்தாள். ஆர்வத் துடிப்பில் சரியான உறக்கமும் இல்லை... அப்படியே கொஞ்சம் உறங்கினாலும் அதில் கனவுகள்... அந்தக் கனவில் ஆதி சிரித்தான்.

ஆதிக்கும் நம்பவே முடியவில்லை... இப்போதெல்லாம் வசுதாவைப் பார்த்தால் எரிச்சலோ... ஆத்திரமோ வருவதில்லையே... ஏன்...

அவளைப் பார்க்கும்போது உள்ளம் ஆனந்த மிகுதியில் விம்முகிறதே... அதுவும் ஏன்...

அவள் மெல்ல மெல்ல என் மனதில் குடியேற ஆரம்பித்து விட்டாளா... என்ன... அப்படியென்றால்... அவள் மீதிருந்த அவநம்பிக்கை போய் விட்டதா.. சந்தேகம் மாயமாகி விட்டதா... எப்படி... அது எப்போது... அவனுக்குப் புரியாத புதிராகத் தெரிந்தது.

அன்று இரவு படுக்கப் போகும் போதும் வசுதாவின் நினைவுதான்...

இருபுறமும் அடர்ந்த மலைப்பகுதி... நடுவே பாம்பாய் நெளிந்து வளைந்து செல்லும் பாதை...

ரம்யமாக இருந்தது... 'சில்'லென்ற காற்று கன்னத்தை வருடி காதில் ஏதோ ரகசியம் பேசியது...

கண்ணுக்கெட்டிய தூரம்... பசுமையான இயற்கை மட்டுமே...

வண்டியை லாவகமாக ஓட்டிக் கொண்டிருந்தான் ஆதித்யா...

டாடா சபாரி அவனது கரங்களில் சமர்த்துப் பிள்ளையாய் அடங்கி ஓடியது.

மங்களுருக்குள் சற்ற இன்னோவா... நீண்ட பயணத்திற்கு டாடா சபாரி தான் என்றான் ஆதித்யா.

வசுதாவின் கைகள் துறுதுறுத்தன... காரை ஓட்டி எத்தனை நாளாயிற்று...

அதுவும் இந்த மாதிரி நீண்ட சாலையில் 'விர்' என்று வேகமாய் கார் ஓட்டுவதும் ஜாலிதான்.

கொடைக்கானல் மலைக்கு எத்தனை தடவை கார் ஓட்டிக் கொண்டு தோழிகளுடன் சென்று இருக்கிறாள்.

அவளுடைய 'டிரைவிங்'கை தோழிகளும் பாராட்டியிருக்கிறார்களே... இந்த வண்டியை ஓட்டினால்... கொள்ளை இன்பம்தான்... மனசு ஏங்கியது.

'சர்' என்று பிரேக் போட்டான் ஆதித்யா.

''அங்கே பார் வசுதா... பெரிய மலைப் பாம்பு... சாலையைக் கடக்கிறது...'' என்று சுட்டிக் காட்டினான். எம்பிப் பார்த்தாள்.. ஆமாம்.. மலைப்பாம்புதான்.. எத்தனை நீளம்.. எத்தனை பெரிது...



சரசரவென்று வளைந்து நெளிந்து சென்று மறையும் வரைப் பார்த்தனர்.

''முன்பெல்லாம் நரி... முள்ளம்பன்றி... கீரி... ஆமை என்று என்னென்னவோ தென்படும்... இப்போது வாகனங்கள் பெருகி விட்டதால்... அவைகள் எல்லாம் ஒதுங்கி விட்டன...'' என்றான் அவன்.

''அவைகளுக்கும் பயம்... மனிதனின் அசுர வேகத்தில் அழிந்து விடுவோமோ என்ற பயம் போல... நீங்கள் திறமையாக கார் ஓட்டுகிறீர்கள்... சிறு வயதிலிருந்தே அனுபவமா...''

''அப்பாவிடம் கார் இருந்தது... முதலில் பிரிமியர் பத்மினி... அப்புறம் அம்பாஸிடர்... எங்க டிரைவர் தான் எனக்குக் கற்றுக் கொடுத்தது... முதன் முதலாய் கார் ஓட்டியபோது எனக்கு வயசு பன்னிரண்டு... கால் சரியா, எட்டாது... காலை நீட்டி வைத்து. ஆக்ஸிலேட்டரையும் பிரேக்கையும் அமுக்குவேன்'' என்று சிரித்தான்.

''இப்பவும் நினைவில் இருக்கிறது... ஒரு நாள் அப்பாவிற்கு தெரியாமல் காரை எடுத்துக் கொண்டு ஐந்து கிலோ மீட்டர் தூரம் போய் விட்டேன். அப்பா கார் எங்கே என்று கேட்டிருக்கிறார். அம்மா என்ன சொல்வது என்று தெரியாமல் முழிக்க... அவன் வரட்டும்... என்ன செய்கிறேன் பார் என்று கத்த ஆரம்பித்தார். எங்கேயாவது முட்டி மோதி காயம் பட்டு விடுமோ என்ற பயம் அவருக்கு... எனக்காக வாசலில் சேர் போட்டு காத்திருந்தார். பாவம்... நான் அநாயசமாய் ஓட்டி வந்து போர்டிகோவில் நிறுத்தினதைப் பார்த்து அசந்து போய் 'கம்'மென்று இருந்து விட்டார். அம்மாவிடம் என்னைப் பாராட்டிப் பேசினாராம். 'பலே கில்லாடி உன் பிள்ளை... பர்ஸ்ட் கிளாஸ்

டிரைவிங்... ஆனா அவன்கிட்டே சொல்லி வை, லைசன்ஸ் கிடைக்கும் வரை காரைத் தொடக் கூடாது என்று... என்றாராம். என் டாடி பாராட்டவே மாட்டார். அவர் மெச்சிப் பேசியது பெரிய விஷயம். வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி மாதிரி...''

இளமை நினைவுகளில் முகம் விகசிக்க அவன் சொல்வதை ஆர்வத்துடன் கேட்டாள் வசுதா.

''கார் டிரைவிங் என்றால் எனக்கும் ஆசைதான்.'' என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அவனோ அவள் சொன்னதை வேறு விதமாய் எடுத்துக் கொண்டான்.

''அது ஒன்றும் பிரம்ம வித்தை இல்லை வசுதா.. ஈஸியா கற்றுக் கொள்ளலாம்.. சமயம் கிடைத்தால் நானே உனக்குக் கற்றுத் தருகிறேன்... இந்த மாதிரி பெரிய காரை உன்னால் 'ஹாண்டில்' பண்ண முடியாது. முதலில் சின்னக் காரை ஓட்டக் கற்றுக் கொள்வது நல்லது. இந்த கார் எல்லாம் லேடீஸுக்கு சரிப்படாது...''

அதைக் கேட்டு வசுதாவிற்கு சிரிப்பு வந்தது. இதைத் தான் 'மேல் ஈகோ' என்பதா.

அப்பாவின் ஸ்கார்ப்பியோவை ஓட்டியதை சொன்னால்... என்ன சொல்வான்...

''ஆமாம் வசுதா... இந்த வேலைக்கு வருமுன் எங்கே வேலை பார்த்தாய்....''

எதிர்பாராத கேள்வியை அவன் கேட்டதும் என்ன சொல்வது என்ற திகைப்பு... யோசித்து அல்லவா சொல்ல வேண்டும். அது உண்மைக்குப் புறம்பாக இருக்கக் கூடாது. பொய் சொல்லவும் விருப்பம் இல்லை.



''என் முதல் வேலை இது... இதற்கு முன் படிப்பு என்று இருந்து விட்டேன்... என் வீட்டின் நிலைமை நான் வேலை செய்ய வேண்டி வந்துவிட்டது. டாடி இறந்ததும் வேலை தேட ஆரம்பித்தேன்...'' இது பொய்யில்லை தான்.

''அது சரி... வசுதா.. உனக்கு நெருங்கிய உறவு... சொந்தம்.. நண்பர்கள் என்று யாரும் இல்லையா... யாரும் உனக்குப் போன் செய்வதில்லையே. நீ இங்கு வேலை செய்வது அவர்களுக்குத் தெரியாதா என்ன...''

''என் அப்பாவைத் தவிர எனக்கு சொல்லிக் கொள்ளும் படியா எந்த உறவும் கிடையாது... யாரும் இல்லாத அனாதை என்று வைத்துக் கொள்ளுங்களேன்...'' மூக்கை சுருக்கிக் கொண்டு சிரித்தாள்.

அவனுக்குள் 'சுருக்' என்று வலி.

நீ அனாதை இல்லை... நான் இருக்கிறேன் என்று சொல்ல வேண்டும் போல ஒரு தவிப்பு...

அது சரியா என்று தெரியவில்லை...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாய் தெரிந்தது... அவளை முழுவதுமாய் நம்ப ஆரம்பித்து விட்டது மனம்... அந்த நம்பிக்கை நீர்த்துப் போகக் கூடாது என்பது தான் ஆசை.

''எவ்வளவு தூரம் இருக்கிறது இன்னும்...'' என்று வினவினாள் வசுதா.

''கிட்டத்தட்ட நாற்பது கி.மீ. இருக்கிறது... என்னை ஆதி என்று கூப்பிடலாமே வசு...''

வசுதா 'வசு' ஆகி விட்டதே...

இருந்தும் வேண்டும் என்றே சொன்னாள்.

''நீங்கள் சம்பளம் தரும் முதலாளி. நான் உங்களிடம் வேலை செய்பவள்... அந்த லிமிட்டை தாண்டக் கூடாது இல்லையா...''

''ஓ! ஆனால் எந்த முதலாளியாவது தன்னிடம் வேலை செய்பவளை காரில் அழைத்துச் செல்வானா... இல்லை.. அவள்தான் 'பாஸு'க்கு அன்பளிப்புத் தருவதுண்டா...'' பரிகாசத்துடன் கேட்டான் அவன்.

''இருந்தாலும்...''

''நோ மோர் ஆர்க்யூமெண்ட்ஸ்... நான் சொன்ன மாதிரி என்னை ஆதி என்றே அழைக்கலாம்... என்ன...''

''ஓகே... ஆதி... அப்படியே அழைக்கிறேன் ஆதி... இப்போ ஆதி... கொஞ்சம் ரோடைப் பார்த்து ஓட்டுவீர்களா ஆதி... இப்ப திருப்தியா ஆதி...'' என்றாள் குறும்பாய்.

''அய்யோ... போதும்.. இனி கேட்கவே மாட்டேன்'' என்று ஆக்ஸிலேட்டரை அமுக்கினான் கார் வேகம் பிடித்தது.

பசுமையான இலைகளின் நடுவே தெரிந்த பவள நிறக் காபி பழங்கள்... சிவந்த அலகுடைய பசுங்கிளியை நினைவு படுத்தின... விரிந்து கிடந்த காபி தோட்டத்தை ரசித்துக் கொண்டு ஆதித்யாவுடன் நடப்பதும் சுகமான அனுபவமாகத் தெரிந்தது வசுதாவிற்கு. அவனும் அவளை ஒவ்வொரு இடமாய் அழைத்துச் சென்று காட்டினான்... அவள் விவரணையை ஆர்வத்துடன் கேட்டாள்.

காபிக் கொட்டைகளில் எத்தனை ரகம்... எதுவெல் லாம் ஏற்றுமதிக்குரியது... எந்த மாதிரி இடங்களில் அதிகம் விளையும்... 'இன்ஸ்டன்ட்' காபி தயாரிக்கும்



முறை என்று எல்லாவற்றையும் விளக்கிக் கொண்டிருந் தான். தன் தந்தை காலத்தில் இருந்த நிலைமையையும் இப்போதைய மாற்றத்தையும் அவன் சொல்ல அதை ஆர்வத்துடன் கேட்டாள் வசுதா...

காபி செடிகளின் ஊடே வானுயர நின்ற மரங்களில் மிளகுக் கொடிகள் சுற்றிப் படர்ந்திருப்பதையும் கண்டாள்.

''இவற்றைக் கவனித்துக் கொள்ள பொறுப்பான ஆட்கள் இருக்கிறார்கள்... அதனால் இங்கு வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே 'விசிட்' பண்ணிவிட்டு போகி றேன்... இது எங்க குடும்பத் தொழில் மாதிரி... உதயா இன்ஸ்டன்ட் காபி அப்பா ஆரம்பித்தது தான்... அது மாதிரி எத்தனையோ பிராண்ட் வந்து விட்டாலும்... மார்க் கெட்டில் உதயா இன்ஸ்டன்ட்டுக்கு எப்போதும் தனி யிடம் தான். இதை நான் பெருமைக்காக சொல்ல வில்லை...''

''இன்னும் வேறு ஏதும் புதிதாய் அறிமுகப்படுத்த வில்லையா ஆதி... நான் என் வெளிநாட்டிலிருந்து வந்த தோழியைப் பார்க்கப் போயிருந்தேன். லண்டனிலிருந்து தான் கொண்டு வந்த சின்னப் பாக்கெட்டிலிருந்து பொடியை டம்ளரில் போட்டு கொதி நீரை ஊற்றினதும் காபி ரெடி... எங்கேயாவது வெளியூர் போகிறபோது அதைத்தான் எடுத்துச் செல்வதாம்... முக்கியமா... ஆபீஸ் டூர் போகிறவர்களுக்கு இந்த மாதிரி காபி கைக் கொடுக் குமே... ஒரு வேளை வேறு யாராவது இதை மார்க்கெட் டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்களா ஆதி...''

''இல்லை வசு... ஆனால் இது நல்ல ஐடியாவாகத் தெரிகிறது... குட் சஜஷன்... இது பற்றி யோசிக்கிறேன். இப்போ எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது... முடிந்து

விட்டு வந்து விடுகிறேன்.. அதுவரைக்கும் இங்கேயே சுற்றிப் பாரேன் வசு..'' என்று சொல்லிவிட்டுச் சென்றான். அவள் கொஞ்ச நேரம் அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்தாள். பின்பு வரவேற்பில் இருந்த ஆங்கில மாத இதழ்களைப் புரட்டினாள்...

அரை மணி நேரம் கழிந்தது. அப்போது ஒரு பையன் அவளுக்கு காபி கொண்டு வந்து தந்தான்...

இங்கு வேலை செய்யும் சிறுவனா... சைல்ட் லேபர் குற்றம் ஆயிற்றே... எப்படி ஆதி ஒப்புக் கொண்டார்... யோசனையுடன் அவனிடம் தமிழில் ''என்ன படிக்கிறாய்'' என்று கேட்டாள். அவன் விழிப்பதைக் கண்டு ஆங்கிலத்தில் கேட்க... 'சிக்ஸ்த் ஸ்டாண்டர்ட்' என்று மட்டும் சொன்னான். காபியை வாங்கி உறிஞ்சியவள்... அதன் அருமையான சுவையை ரசித்தாள்.

குடித்து முடித்ததும்... ''உன் வீடு எங்கே'' என்று ஆங்கிலத்தில் கேட்க... அவனும் சுட்டிக் காட்டினான்...

அதே நேரம் ஆதித்யாவும் அங்கு வந்து சேர்ந்தான்.

''காபி வந்துவிட்டதா... அதானே பார்த்தேன்... இன்னும் கொடுத்தனுப்பவில்லையே என்று'' என்றான் ஆதித்யா.

''காபி பிரமாதமாய் இருந்தது. இது உங்களது தயாரிப்பா.''

''காபி பண்ணையில் வந்துவிட்டு வேறே காபி வாங்குவதா... இது இங்கு விளைந்த நிறம்... மணம்... குணம் நிறைந்த எ.ஒன் காபியாக்கும்... அதுவும் நான் அழைத்து வந்த 'கெஸ்ட்' என்றால் கெஞ்சம்மா... அதான் இவனோட அம்மா விடவே மாட்டாள்' என்றவன்...



சிறுவனிடம் திரும்பி துளுவில் ஏதோ சொன்னான்... அவன் சென்றதும் வசுதாவிடம் சொன்னான்...

''காபி அருமையாக இருந்தது என்று நீ சொன்னதாய் சொல்லச் சொன்னேன்... அவங்க கதை ரொம்பவும் சோகம். தெரியுமா... இவனோட அப்பா இந்தப் பண்ணையில் வேலை பார்த்தவர். ட்யூட்டியில் இருந்தபோது... பாம்பு கடித்து இறந்து போனார்... கல்யாணம் ஆகி எட்டே மாதம் ஆகியிருந்தது... மனைவி வயிற்றில் குழந்தை உருவாகி இருப்பது கூடத் தெரிந்து கொள்ளவில்லை... பாவம்... கணவன் இல்லை என்றதும் அவளை வளைக்க யார் யாரோ சுற்றி வந்தார்கள்... என்னிடம் வந்து அழுதாள்... ஏதாவது வேலை கொடுங்கள். மானமா பிழைத்துக் கொள்கிறேன் என்று... அவளுக்குப் படிப்பு கம்மி என்பதால் இங்கே கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்யும் வேலைதான் கொடுக்க முடிந்தது. அந்தக் குழந்தைதான் இவன்... இவன் படித்துத் தாயைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல ஸ்கூலில் சேர்த்திருக்கிறேன். ஸ்கூல் ஃபீஸ் யூனிஃபார்ம் எல்லாம் என் பொறுப்பில் எடுத்துக் கொண்டேன். அந்த நன்றியை எப்படிக் காட்டுவது என்று தான்... நான் யாரையாவது அழைத்து வந்தால் காபி... டீ... ஜூஸ்... வறுத்துக் கடலை என்று கொடுத்தனுப்புவாள்... இங்கேயே அவளுக்கு சின்னதாய் சர்வண்ட் குவாட்டர்ஸ் கட்டிக் கொடுத்திருக்கிறேன். துணைக்கு ஒரு வயதான கிழவன் இருக்கிறான்... அதனால் பயமில்லை...''

அவன் சொன்னதைக் கேட்டு மலைத்தாள்...

வேலை செய்தவன் என்று அலட்சியமாய் நினைக்காமல்... இறந்து போன ஊழியனின் குடும்பத்துக்கு வழி காட்டி. அவனது பிள்ளையை படிக்க வைத்து... என்ன

பெரிய மனசு ஆதிக்கு... எத்தனை முதலாளிகளுக்கு இந்த நல்ல மனசு வரும்... எனக்கென்ன வந்தது என்று ஒதுங்கிக் கொள்பவர்கள் தான் உண்டு... ஆனால் ஆதி அவர்களைப் போல் இல்லாமல்... மனிதாபிமானத்தோடு நடந்து கொள்கிறாரே...

அந்த நிமிடத்தில் அவளது உள்ளத்தில் விசுவரூபமாய் உயர்ந்து போனான் ஆதித்யா...

மறுபடியும் ஓடிவந்தான் அந்தச் சிறுவன்... அவன் கையில் நெருக்கமாய் தொடுக்கப்பட்ட மங்களூர் மல்லிகைச் சரம்... துளுவில் ஏதோ சொன்னான்... அதை மொழி பெயர்த்து சொன்னான் ஆதித்யா...

"கெஞ்சம்மாவே கட்டிய பூச்சரமாம்... கொடுத்தனுப்பி இருக்கிறாள் வாங்கிக் கொள்."

அதனை வாங்கி முகர்ந்தாள்... 'கம்'மென்ற வாசனை கிறங்க வைத்தது... அவளது அன்பு உள்ளத்தை கரைய வைத்தது.

"ஆதி... அவர்களைப் பார்த்து நன்றி சொல்ல நினைக்கிறேன்... செய்யலாம் தானே."

"போகலாமே... அவளுக்கும் அது சந்தோஷத்தைத் தரும்" என்று அழைத்துச் சென்றான்.

அவர்களுக்கு முன்னாலேயே ஓடிப்போய் அவர்கள் வரும் விஷயத்தை கட்டியம் கூறினான் அந்தப் பொடிப் பயல்.

கெஞ்சம்மா வாசலில் நின்றிருந்தாள்... அவர்களை வரவேற்க...

வசுதா நன்றி கூற வந்திருக்கிறாள் என்று துளுவில் அவன் பதிலுக்கு ஏதோ சொன்னான்.



"நன்றி கூற வந்திருப்பதைப் பார்க்கும்போது உன் நல்ல மனசு புரியுதாம்..."

மேலும் அவள் ஏதோ கூற... அவன் மறுப்பது தெரிந்தது.

ஆனால் கெஞ்சம்மா அதைப் பொருட்படுத்தாமல் உள்ளே சென்று விட்டாள்.

சின்ன ஓடு வீடுதான். அதை சுத்தமாய் நேர்த்தியாய் வைத்திருந்தாள் கெஞ்சம்மா. வீட்டின் முன்புறம் கனகாம்பரம்... மங்களூர் மல்லி... டிசம்பர் பூ என்று விதவிதமான மலர் செடிகள்... மண் வளம் நன்றாக இருந்ததால்... செடிகள் பசுமையாய் செழிப்பாய் வளர்ந்திருந்தன.

வேக வைத்த சர்க்கரை வள்ளிக் கிழங்கை பிளாஸ்டிக் தட்டில் வைத்துக் கொண்டு வந்து தந்தாள்...

இருக்கிற பசியில் அது மிகவும் சுவையாக இருந்தது...

அருந்த நீரையும் கொடுத்தவள் ஆதியிடம் சிரித்தவாறு துளுவில் ஏதோ சொன்னாள்.

அதைக் கேட்டு நகைத்துவிட்டு பதிலுக்கு அவனும் ஏதோ பேசினான்.

இருவரின் உரையாடலையும் கவனித்தவளுக்கு ஒன்றும் புரியவில்லை..

வசுதாவைப் பார்த்து புன்னகையுடன் எதையோ சொல்ல, அவள் கேள்வியுடன் அவனைப் பார்த்தாள்.

"ஒன்றுமில்லை அடுத்த தடவை நீ வருகிறபோது திருமணமாகி... குழந்தையோடு இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறாள்..."

அவன் பதிலுக்கு சிரித்து விட்டுப் புறப்பட்டான்.

''அவள் பேசியது என்னென்னவோ... நீங்கள் சொன்னது கொஞ்சம்... முழுவதும் சொல்ல மாட்டீர்களா ஆதி...'' என்றாள் கெஞ்சலாய்.

''சொன்னால் கோவிக்க மாட்டாய் தானே...''

''ஊகும்... சொல்லுங்கள்...''

''என்னுடைய வருங்கால மனைவி அழகாக இருக்கிறாளாம். ரொம்பப் பொருத்தமான ஜோடியாம்... இது நாள் வரை எந்தப் பெண்ணையும் அழைத்து வராத நான் இன்றைக்கு உன்னை அழைத்து வந்திருப்பதால்... நீதான் என் வரப்போகின்ற மனைவி என்று புரிந்து விட்டதாம்... ''உங்க நல்ல மனசுக்கு... நீங்க ரெண்டு பேரும் குழந்தைக் குட்டிகளுடன் சந்தோஷமா இருப்போமாம். இதை நான் சொல்லவில்லை... அந்தக் கெஞ்சம்மா சொன்னதுதான்...''

கேட்பதற்கு மிக இனிமையாக இருந்தாலும்... ஆதி மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் எப்படி ஒப்புக் கொள்வது... யோசித்தாள்.

''அப்படி இல்லை என்று நீங்கள் மறுக்கவில்லையா என்ன... நான் புறப்பட்டுப் போக இருக்கிறேன் என்பதையும் சொல்லவில்லையா.. ஆதி... நீ... என்ன பதில் சொன்னீர்கள்...'' என்று அவள் வினவ.

''நானா... அதை மறுக்கவும் இல்லை... ஒப்புக் கொள்ளவும் இல்லை... அவளது சந்தோஷத்தை ஏன் கெடுக்க வேண்டும் என்று... நடந்தாலும் நடக்கலாம் என்று சொன்னேன்...'' என்றான் ஒரு மந்தஹாசப் புன்னகையுடன்.

அவளுக்கு மூச்சு முட்டுவது போல இருந்தது.

ஆதியின் மனதில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியவில்லையே...



ஒரு வேளை... வேண்டும் என்றே விளையாடுகிறானா. என்னைச் சீண்டிப் பார்க்கிறானா... என் வாயிலிருந்து என்ன வருகிறது என்று தெரிந்து கொள்ளவா... இந்த விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்... என் உள்ளத்தைக் காட்டிக் கொள்ளவும் கூடாது...

அவனது பேச்சில் கிளுகிளுத்துப் போய்... என் காதலைக் காட்டிக் கொண்டால்... அவன் கைக்கொட்டி சிரித்து உன்னையா... காதலா ப்பூ... என்று சொல்லி விட்டால்... சொன்னாலும் வியப்பில்லை தான்.

வேண்டாம்... என்னை முழுவதுமாய் நம்பி விட்டான் என்று என்ன நிச்சயம்...

என்னை சோதிக்க இப்படியும் நடிக்கலாம்... அவனது வார்த்தைகளை நிஜம் என்று நம்பி ஏமாறக் கூடாது. ஏதோ... நேற்று அவனது பிறந்தநாள் ஏற்பாட்டைச் சிறப்பாகச் செய்ததற்கு நன்றியாய் கூட என்னை அழைத்து வந்திருக்கலாம்... நேற்றையக் குழைவான பேச்சு கூட அதனால் இருக்கலாம்.

அதை மறந்துவிட்டு என்னன்னவோ நினைத்து குதிக்கிறது இந்த மடமனம்...

எது எப்படியோ போகட்டும்.

இன்றைய நாள் இனிய நாள்... மறக்க முடியாத நாள்... இன்றைய நினைவுகளை பொக்கிஷமாய் நெஞ்சப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டி வைத்துக் கொண்டால் அது போதும்...

காலமெல்லாம் இந்த நினைவில் வாழ்ந்து விடுவேன்.. ஏதேதோ நினைவுகளில் மூழ்கி... மௌனமாகிப் போனவளை புருவங்கள் ஏறப் பார்த்தான் ஆதி... அங்கே காற்று மட்டுமே பேசியது.

## 17

உதயாவின் உள்ளம் நெருப்பாய் கனன்றது... முகம் கோபத்தினால் சிவந் திருந்தது.

இருக்காதா பின்னே... இந்த அண்ணனுக்கு விவஸ்தை வேண்டாம்... யாரோ ஒருத்தி... அதுவும் அவனிடம் கை நீட்டிச் சம்பளம் வாங்குபவள்... அவளுடன் இப்படி ஊர் சுற்றி வருகிறானே... கேவலம்...

இங்கே அவனுக்கென்று நிச்சயமான மல்லிகாதான் வந்திருக்கிறாளே... அவளை அழைத்துக் கொண்டு போவதுதானே. அதை விட்டுவிட்டு... கண்டவளுடன் செல்வதா... ஒரு தாரதம் வேண்டாம்.

அண்ணனைச் சொல்லிக் குற்றமில்லை... இவள் என்ன மந்திரம் போட்டாளோ... யாருக்குத் தெரியும்...

சே... எப்படி மிடுக்காய் இருந்தவன் இப்படி ஆகி விட்டானே. ஆரம்பத்தில் என்னைக் கண்டித்தவன்... வேலைக்கு வந்தவளிடம் என்ன சரிக்குச் சரியா வாயாடுவது என்று அதட்டினவன்.. இப்போது காரில் தன்னுடன் உட்கார வைத்து ஊர்வலம் வருவது என்றால்... ஏதோ சொக்குப் பொடிப் போட்டிருக்க வேண்டும்...

சரி.. இந்த மல்லிகா எங்கே போய் தொலைந்தாள். இவர்கள் இருவரையும் இப்படிக் கொட்டமடிக்க விட்டு விட்டு... இப்படி பேக்கு மாதிரி இருந்தால்... நடப்பதே வேறாகி விடும்... அதான்... அத்தை சொல்வார்களே... காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனான்னு... அது மாதிரிதான்... காத்திருந்தவள் புருஷனை நேற்று வந்தவள் அடித்துக் கொண்டு போகப் போகிறாள்.



ஹையோ... இந்த அத்தையாவது எழுந்து நடக்கக் கூடாதா... அவர் வேலை செய்ய ஆரம்பித்தால் போதுமே... வசுதாவை விரட்டி விடலாம் தான்.

இந்த அண்ணா வரட்டும்... உறைக்கிற மாதிரி கேட்கிறேன்...

நேற்று வர முடியாமல் போனதே என்று இன்று வந்தால் இருவருமே இல்லை... அத்தையிடம் கேட்டால் எனக்கு எதுவும் தெரியாது என்கிறார். அவரையும் நம்புவதற்கில்லை... அவருக்கு ஆரம்பத்திலிருந்தே மல்லிகாவைப் பிடிக்காதே...

சரி... இந்த நிரஞ்சனைக் கேட்கலாம் என்று ஆளைத் தேடினால்... அவன் கண்ணில் படுவதே இல்லை...

இந்த ரோஹன் பிசாசு... அவனுக்கும் ரொம்பத் திமிர்தான். மல்லிகாவைப் பார்த்தால் முகம் சுளிக்கிறான்.. வசுதாவிடம் இளித்துப் பேசுகிறான்... ஆனாலும் ரொம்பத்தான் கொழுப்பு. கொதிக்கும் உள்ளத்தை அடக்க வழி தெரியாமல் அங்கும் இங்கும் நடைபயின்று கொண்டிருந்தாள் அவள்.

வாசலில் கார் வந்து நிற்பதை அறிந்து எட்டிப் பார்த்தாள்.

மலர்ந்த முகத்துடன் இறங்கிய வசுதாவையும்... ஏதோ சொல்லிச் சிரித்தபடி வெளிவந்த ஆதித்யாவையும் பார்த்து பற்களை நறநறத்தாள்.

புஸ் புஸ் என்று அனல் தெறிக்கும் பெருமூச்சு வெளிவர... அவர்களையே உறுத்துப் பார்த்தபடி நின்றாள்.

''ஏய்... உதயா... வருகிறேன்னு ஒரு ஃபோனும் பண்ணவில்லை... என்ன... திடீர் என்று வந்து நிற்கிறே... என்ன விஷயம்...'' என்று 'கூலா'ய் விசாரித்த அண்

ணனைப் பார்க்கையில் பற்றிக் கொண்டு வந்தது. போன் செய்திருந்தால் மட்டும் தங்கைக்காகக் காத்திருப்பானாக்கும்... உள்ளுக்குள் பொருமினாள்.

''நேற்று உன் பிறந்த நாளுக்கு வர முடியாமல் போனது. கிளாஸ் டெஸ்ட் இருந்தது. இன்று வந்து வாழ்த்தி விட்டுப் போகலாம்னு பார்த்தால்... நீ இப்படி கண்டபடி ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறாயேண்ணா...'' அவளது பார்வை வெட்டுவது போல வசுதாவின் மீது பாய்ந்து திரும்பியது.

''தப்பு உன்னுடையது உதயா... நீ வருவது பற்றிச் சொல்லவில்லை... சக்லேஷ்புரத்தில் அவசரமான வேலை இருந்தது... வசுவை நம் எஸ்டேட்டைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் சென்றேன்... அவளும் பார்த்ததில்லையே...'' என்றான் அமைதியாக.

வசுவாமே... வசு... கதை அப்படிப் போகிறதே... ஏய் மல்லி... உன் முதுகுக்குப் பின்னால் மோசம் நடக்குதடி. ஊகூம்... உன் கண்ணெதிரேயே கண்றாவியெல்லாம் நடக்கிறது. நீ எங்கே தொலைந்தே.

ஒரு சாதாரண வேலைக்காரிக்கு இருக்கும் சாதுர்யமும் சாமர்த்தியமும் உனக்கு இல்லையே... வெறும் தின்னிக் கழுதையாகவே இரு... அண்ணனை எப்படிக் கவரணும் என்று தெரியாத சரியான அசமந்தமே... பற்களைக் கடித்துக் கடித்து... எங்கே பொலபொலவென்று உதிர்ந்து விடுமோ என்ற பயம்.

''அண்ணா... உனக்காக என்ன வாங்கி வந்திருக்கிறேன் என்று பாரேன்...'' அவனது கைப்பற்றி இழுத்துச் சென்றாள் உதயா.



உதயாவின் உதாசீனத்தையும் முகச் சுளிப்பையும் வசுதா பொருட்படுத்தவில்லை... அது தெரிந்த விஷயம் தானே...

இரவு உணவை தயார் செய்து கொண்டிருந்தபோது ரோஷன் அவனிடம் வந்தான்.

''ஒரு குட் நியூஸ்... என்னன்னு சொல்லுங்களேன்!'' என்று புதிர் போட்டான்.

''ம்ம்... இன்னிக்கு டி.வி. சானலில் ஹாரி போட்டர் ஃபிலிம் அதுதானே...''

''இல்லை... 'கெஸ்' பண்ணுங்களேன்.''

''உங்க ஸ்கூலில் பிக்னிக்கு அழைத்துப் போகிறார்கள்...''

''அதில்லை... இது எல்லாத்தையும் விட குட் நியூஸாக்கும்...''

''என்ன அது... ம்... யெஸ்.. நீ பண்ணின ப்ராஜெக்ட்டுக்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது. கரெக்ட்...''

அவனது முகத்தில் பிரகாசம். ''உங்களுக்கு யார் சொன்னார்கள்... அத்தைதானே...'' என்றான்.

''வந்ததும் சொல்லி விட்டார்கள்... 'ஸ்கூலிலிருந்து வந்ததிலிருந்து அதையே சொல்லிச் சொல்லி... என் காதை ஓட்டையாக்கிவிட்டான் வசு' என்றார் அத்தை... புலம்பித் தீர்த்து விட்டாயாம்'' என்றாள் பரிகாசமாய்.

''அதெல்லாம் இல்லை... பொய் சொல்றாங்க அத்தை. நீங்க இருந்திருந்தா...''

''என் காதை ஓட்டையாக்கியிருப்பாயாக்கும்.''

''என்ன வசுதா...''

''சும்மா தமாஷ் பண்ணினேன் ரோஹன்... உனக்கு பரிசு வந்தால் எனக்கு அது சந்தோஷம் தானே...''

''எங்க டீச்சர் என்னுவடயதைப் பார்த்து ஒரேடியாய் புகழ்ந்துட்டாங்க தெரியுமா... யார் கொடுத்த ஐடியான்னு கேட்டாங்க... உங்களைப் பத்திச் சொன்னேன். அவங்க உங்களையும் பாராட்டினாங்க...''

கைகளை ஏப்ரானில் துடைத்து விட்டு... அவனது கன்னத்தை வருடித் தந்தாள் அவள்.

''கிரெடிட் கோஸ் டு யூ ரோஹன். நான் சொன்னதை அப்படியே உள் வாங்கி... கரெக்டா அதைச் செய்து காட்டியிருக்கே பார்... அந்த உன் திறமைக்கு... உன் முயற்சிக்கு கிடைத்திருக்கிறது... ஆகையால் பாராட்டு எல்லாம் உனக்குத்தான்.''

அதைக் கேட்டு மகிழ்ச்சியுடன் கன்றாய் துள்ளிச் சென்றான் ரோஹன்.

இரவு உணவு பரிமாறும்போது கவனித்தாள். உதயாவின் முகம் சரியில்லை... தட்டில் இருந்த சாப்பாட்டில் கோலம் வரைந்து கொண்டிருந்தாள்.

இன்னும் கோபம் தீரவில்லை.

இல்லை... மல்லிகா இல்லை என்றா...

மாலையில் அண்ணனிடம் பேசும்போது சரியாகத் தானே இருந்தாள்.

கடைசியில் அவள் சாப்பிடாமலே எழுந்து சென்றதையும் கவனித்தாள்.

ஏதோ அவளை வாட்டுகிறது... என்ன அது...

உண்மையில் உதயாவின் உள்ளம் குழம்பித் தவித்தது. காதலன் சொன்ன செய்தி அப்படி...



அவனது தந்தை தான் பார்த்து வைத்திருக்கும் பெண்ணுடன் திருமணம் நிச்சயிக்க நாள் பார்க்கிறாராம். இதை எப்படித் தடுப்பது... உன் அண்ணன் வந்து பேசுவாரா... என்று சொன்னதன் எதிரொலி... உதயாவின் முகத்தில் பவர் கட் ஆகி இருந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள்.

இதைப் பற்றி அண்ணனிடம் பேசவும் துணிவில்லை. படிக்கப் போனாயா... இல்லே காதல் செய்யப் போனாயா என்று எரிந்து விழுந்தால்...

மேலும் அண்ணா ஒப்புவதும் கஷ்டம்தான்.. அரசியல் வாதி என்றாலே ஆகாது... அவர்களிடம் பொய்யும் புரட்டும் தான் இருக்கும்... நாணயம் என்பது இல்லவே இல்லை என்று நினைப்பவன்... எப்படி ஒத்துக் கொள்வான்... நிச்சயமாக மாட்டான்.

இந்த நேரம் பார்த்து மல்லிகாவும் இல்லை... கோவில்... குளம் என்று சுத்தப் போயிருக்கிறாளே... கிழவி மாதிரி. இப்போ அது ரொம்பத் தேவைதான். வருங்கால அண்ணியாம். கொஞ்சமும் பொறுப்பு இல்லை... யாருக்கு வந்த விருந்தோ என்றிருந்தால் எப்படி...

ஏதேதோ நினைத்து நிலைக்கொள்ளாமல் தவித்தாள்.

கடவுளே... நான் ஆனந்தை இழக்கக் கூடாது... அவரில்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கவும் முடியாது... ஏதாவது அதிசயத்தை நடத்திக் காட்டேன்... வேண்டியது நெஞ்சம்.

மறுநாள் காலை பத்து மணிக்கெல்லாம் வந்து விட்டது மல்லிகாவின் குடும்பம்.

''அப்பாடா... என்ன கூட்டம்... என்ன கூட்டம்.. எங்கிருந்து தான் வருகிறார்களோ... ஒவ்வொரு கோவிலி

னும் ஜன நெரிசல்... இடித்து... பிடித்து தரிசனம் பண்ணுவதில் உம் பாடு... என் பாடுதான்'' என்று புலம்பித் தீர்த்தாள் சுந்தரி.

''ஆனா அருமையான சாப்பாடு... தம்பி... ஒட்டலுக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை... அதுவும் தர்ம ஸ்தலத்தில் போட்ற சாப்பாடு... அடடா... என்ன ருசி... இப்போ நினைச்சாலும் நாக்கு ஊறுது... அங்கேயே தங்கி விடலாமான்னுகூட தோணுச்சு தம்பி...'' பசுபதி சாப்பாட்டு ராமனாய் பேச...

''போதும்ப்பா.... எப்பவும் சாப்பாடு பத்திதான் உங்களுக்கு... கோவில்... ஊர்... கும்பிட்ட கடவுளைப் பத்தி எதுவும் பேச மாட்டீங்களா... சுத்த போர்ப்பா நீங்க...'' என்று சலித்துக் கொண்டாள் மல்லிகா.

''அட நீ ஒன்னும்மா... உங்கம்மா சாப்பாட்டை சாப்பிட்டு நாக்கு செத்துப் போயிருக்கு... இப்படி நாலு இடத்தை சுத்திப் பார்த்தா வாய்க்கு ருசியா கிடைக்கும் இல்லே... திரும்ப ஊருக்குப் போனா உங்கம்மாவோட சமையல் தான்... உப்பு சப்பாய் வேற வழியில்லையே...''

''அப்படியா... ஊருக்கு வாங்க... அதுவும் கிடைக்கப் போறது இல்லே... வெறும் கஞ்சிதான்...'' என்று பயமுறுத்தினாள் சுந்தரி...

உதயா மல்லிகாவிற்கு ஏதோ சைகைக் காட்ட... இருவரும் எழுந்து உதயாவின் அறைக்குச் சென்றனர்... என்ன ரகசியம் இருக்கும்... மறுபடியும் காதல் விஷயமா... மீண்டும் மல்லிகாவிடம் ஆலோசனைதான். இன்னும் என்ன சொல்லி உசுப்பி விடப் போகிறாளோ... இந்த மல்லிகா... மல்லிகாவின் சுய நலத்தால் உதயாவின் வாழ்க்கை நாசமாகி விடுமோ... வசுதாவின் நெஞ்சு



உதயாவை நினைத்து பதறியது. உதயா எப்படியோ போகட்டும் என்று உதறித்தள்ள மனம் வரவில்லை... அள்ளித் தெளித்த அவசரக் கோலமாய் அவளது வாழ்க்கை ஆகக்கூடாது என்ற ஆதங்கமா... இந்த வீட்டில் உள்ளவர்களுக்கு அது வேதனை தருமே என்ற சங்கடத்தாலா...

முக்கியமாய் ஆதிக்கு... வேதனை மட்டுமல்ல... தலை குனிவும் தான்...

பார்க்கலாம்... எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு வந்தே தீரும். கடவுள் ஏதாவது ஒரு ஜன்னலைத் திறந்து வைப்பார்... அது நிச்சயம்...

சிந்தையில் எண்ணங்கள் ஓட... வேலைகளை முடித்தவள். அனைவருக்கும் பாதாம் பால் கலந்து கொண்டு போனாள்...

உதயாவிற்கு கொடுக்க அறைக்குள் சென்றவள்... அவளைக் காணாமல் திரும்ப முயலும்போது... எங்கேயோ முனகும் சத்தம்...கொஞ்ச நேரம் அடித்துப் பார்த்து ஓய்ந்து விட்டது.

எங்கே போயிருக்கிறாள் உதயா... மறுபடியும் 'செல்' ஒலிக்கிறதே... எடுப்பதா வேண்டாமா... ஒரு வேளை அந்தக் காதலனாக இருந்தால்...

அதை எடுத்து அழுத்தி காதில் வைத்தாள்.

''ஏய்... உதய்.. என்ன தூங்கிக் கொண்டு இருந்தாயா... ஒரு முக்கியமான விஷயம் பேச இப்ப அவசரமாகக் கூப்பிட்டது... நம் ப்ரோக்கிராமில் ஒரு சேன்ஜ்... கோவிலில் வேண்டாம்... ரிஜிஸ்டர் ஆபீஸில் முடித்தால் அது லீகலா இருக்கும் என்று என் ஃபிரெண்ட்ஸ் சொல்கிறார்கள். அதுவும் சரின்னு எனக்குப் படுகிறது... நீ என்ன செய்யறே... நேரா பாபா மந்திர் கிட்ட வந்து விடு... நான்

உனக்காக அங்கே 'வெயிட்' பண்றேன்... ஒன்பது மணி... மறந்துடாதே உதய். கட்டின துணியோட வா போதும்... யாருக்கும் சந்தேகம் வராம பாத்துக்கோ. ஓகே,"

எதிர்பார்த்ததுதான்... இருந்தும் மனசுக்குள் 'குபீர்' என்றது. வசுதாவிற்கு.

சம்பந்தமில்லாத எனக்கே வியர்த்துக் கொட்டி... நெஞ்சில் பதட்டம் ஏற்படுகிறதே...

பாவம்... ஆதிக்குத் தெரிந்தால்... ஒரேடியாய் துவண்டு போய் விடுவாரே...

தன் அருமைத் தங்கைக்கு தடபுடலாய் திருமணம் நடத்த வேண்டும்... ஊரார் மெச்சும்படி... நல்ல மாப் பிள்ளையாய் பார்த்து... சீர் வரிசைகளுடன் கல்யாணம் பண்ணி புகுந்த வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு அண்ணன் ஆசைப்படுவதும் இயற்கைதான்... ஆனால் தங்கை அதைப் புரிந்து கொள்ளவில்லையே...

காதலனுடன் ஓடுவதில் அல்லவா குறியாக இருக் கிறாள்... அதுவும் கண்டவர்களின் பேச்சைக் கேட்டு...

இவளை எப்படித் தடுப்பது... யோசிக்க வேண்டும்... மூளையைக் கசக்கிக் கொண்டாள் அவள்.

'செல்'லை எடுத்த இடத்திலே வைத்து விட்டு... ஆறிப் போன பாலை திரும்ப சூடு பண்ணும் நோக்கத் துடன் அதை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்... கைகள்தான் இயந்திரமாய் இயங்கியது.

மனம் என்ன செய்வது... என்ன செய்வது என்று யோசித்துக் குழம்பியது...

காய்ச்சிய பாலை டம்ளரில் ஊற்றினாள்.

அது சரி... காலையில் எட்டு எட்டரைக்குத்தான் எழுந்திருப்பது வழக்கம். உதயாவுக்கு... ஒன்பது மணிக்கு



என்றானே ஆனந்த்... எல்லோர் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டுச் செல்ல காலைப் பொழுது சரியென்றாலும் வேகமாய் எழுந்திருந்து... எப்படி... ப்ச்சு... ஓடிப்போவது என்று முடிவானதும்... எல்லாவற்றிற்கும் தயார்தான்... தூங்கி விட்டால்...

தூங்கி விட்டால்... 'பளிச்'சென்று மூளைக்குள் பொறி பறந்தது... கையிலிருந்த பாலையும் பார்த்தாள்... ஏன் கூடாது... அவளுடைய நன்மைக்காக... இந்தக் குடும் பத்தின் கௌரவத்திற்காக எதுவும் செய்யலாம் தான். நேரே கற்பகத்தின் அறைக்குள் சென்று அலமாரிக்குள் எதையோ தேடினாள்... ஆ.. கிடைத்து விட்டது.

கற்பகம் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவ ளுக்கு வசுதா வந்ததும் தெரியாது... தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு சென்றதும் தெரியாது...

காய்ச்சிய பாலில் தான் கொண்டு வந்ததைப் போட்டு நன்றாகக் கலக்கினாள்.

உதயா மல்லிகாவின் அறையிலிருந்த வெளிவருவதை பார்த்துவிட்டு... அவள் தன் அறைக்குள் செல்லும் வரை காத்திருந்தாள்... சிறிது நேரத்திற்கு பின் அவள் அறைக்குச் சென்றாள்...

"பால் கொண்டு வந்திருக்கிறேன் உதயா..." என்றாள்.

"அப்புறமா குடிக்கிறேன்... வைத்து விட்டுப் போங்க..." என்றாள் அவள் அசட்டையாக.

"குடித்துவிட்டுத் தந்தால்... டம்ளரைக் கழுவி வைத்து விட்டுப் போய் படுத்துக் கொள்வேன்... இல்லா விட்டால் இங்கே எறும்பு மொய்க்கும்."

''ப்ச்க... விடமாட்டீங்களே.. கொடுங்க... குடித்துத் தொலைக்கிறேன்...'' என்று வாங்கி மடமடவென்று குடித்தாள்...

அப்பாடா கண் முன்னால் குடித்துவிட்டாள் என்ற நிம்மதி வசுதாவிற்கு... இனித் தூக்க மாத்திரை வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

இரவெல்லாம் பலமான யோசனை... நாளை ஆனந்தை சந்தித்து என்ன பேசுவது... அவன் செய்ய இருக்கும் தப்பை எப்படி உணர்த்துவது என்ற சிந்தனையில் சரியாகத் தூக்கமும் வரவில்லை. விடியும் வரை பொறுமையாகக் காத்திருந்தாள் வசுதா.

## 18

மெல்ல உதயாவின் அறையினுள் எட்டிப்பார்த்தாள் வசுதா... எதிர்பார்த்த படியே... ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள் உதயா.

''சாரி... உதயா... உன் நல்லதுக்குத்தான் இப்படிச் செய்தேன்... அதைப் பின்னால் நீ உணருவாய்... இப்போது என்னை மன்னித்து விடும்மா...'' என்று மனதுக்குள் முணுமுணுத்தவாறு அங்கிருந்து கிளம்பினாள்.

பாபா மந்திரை கண்டுபிடித்து செல்லுவதில் அப்படியேதும் கஷ்டம் இல்லை...

ஆனால் ஏக டென்ஷன்...

ஆனந்த் எப்படிப்பட்டவனோ... போக்கிரியாக இருந்து விட்டால்... தகராறு செய்தால்... எப்படிச் சமாளிப்பது..



பெரிய இடத்துப் பிள்ளையாமே.. ஆணவத்தோடு பேசினாலும் பேசலாம்... அலட்சியமாக நடத்தினாலும் நடத்தலாம்... உன்னைச் சும்மா விடப்போவதில்லை என்று கூட மிரட்டலாம். என்ன செய்தாலும் தைரியத்தை இழக்கக்கூடாது... 'பாபா மந்திர் பந்தாயித்து...' ஆட்டோ டிரைவரின் குரலில் விழித்தாள்.

இறங்கிப் பணம் கொடுத்துவிட்டு.. சுற்றிலும் பார்வையைச் செலுத்தினாள்.

ஆனந்தை எங்கே தேடுவது...

அங்கே ஒரு இளைஞன் நின்றுகொண்டிருந்தான்... கொஞ்சம் தவிப்புடன்.. யாரையோ எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறானே. ஆனந்தாக இருப்பானோ... அவன்தான்... கைக் கடிகாரத்தை பார்த்துக் கொள்கிறான்... உதயாவை எதிர்பார்த்துதான்...

ஆனால்.. பெரிய வீட்டுப் பிள்ளைமாதிரி இல்லையே.. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன் மாதிரியல்லவா தெரிகிறான். பெரிய புள்ளியின் மகன் என்று உதயா சொன்னதாய் நினைவு... இவன்.. ஆளும் சுமாராகத்தான் இருக்கிறான். போய் விசாரிக்கலாமா என்று யோசிக்கும் போது அவன் அருகே ஸ்கூட்டர் ஒன்று வந்து நிற்க... அவன் ஏறிச் சென்றுவிட்டான்.

ப்பூ... இதுக்குத்தானா அவன் காத்துக் கொண்டிருந்தது. ஏமாற்றத்துடன் நினைத்தாள் வசுதா. பார்க்கிற இளைஞர்கள் எல்லோருமே ஆனந்த் மாதிரியல்லவா தெரிகிறார்கள்.

அப்போதுதான் வெகு அருகாமையில் 'ஆனந்த்' என்று யாரோ அழைப்பது கேட்க.. 'சட்'டென்று திரும்பினாள். வாட்ட சாட்டமாய் ஒரு இளைஞன்... மாநிறத்தில் களை

யாய் இருந்தான்... அவனை நோக்கி வந்தவன் அவனது நண்பனாக இருக்க வேண்டும்.

''என்னடா... இன்னும் உன் ஆள் வரவில்லையா... மணி ஒன்பதே கால் ஆகிறது... சரி... 'செல்'லுக்கு ட்ரை பண்ணேன்.. எனக்கென்னவோ.. கைக்கொடுத்துவிடு வாளோன்னு படுகிறது...'' ஆங்கிலத்தில் பேசினான் நண்பன்.

''இல்லைடா... என் உதயா அப்படிப்பட்டவள் இல்லை பரத்... இந்த ஐடியா கொடுத்ததே அவள்தான். அதனால் நிச்சயம் வந்துவிடுவாள். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது...''

'இவனேதான் ஆனந்த்.. தாங்க் காட்.'

''சரி... ப்ளான் 'சேன்ஜ்' ஆகிய விஷயத்தை சொன்னாய் தானே... ஒருவேளை கோவிலுக்குப் போய் உனக்காக காத் திருக்கிறாளா.. திரும்ப 'செல்'லுக்கு 'டிரை'ப்பண்ணிப் பாரேன்...'' என்று நண்பன் சொல்லவும்...

''ஊகும்... ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வைத்திருக்கிறாள் பரத்... ஆனால் நிச்சயம் வந்தே தீருவாள்...' என்றான் ஆனந்த்.

அந்த நேரத்தில் அவனருகே சென்றாள் வசுதா.

''உதயா வரமாட்டாள் மிஸ்டர் ஆனந்த்.. அதைச் சொல்லத்தான் வந்திருக்கிறேன்'' என்றாள் அழுத்தமாய்... இருவரின் முகத்திலும் திகைப்பு.. யார் இவள் என்றா.. இருவரும் செயலற்று சிலையாகி நின்றார்கள்.. உதயா வரமாட்டாள் என்ற செய்தியைக் கேட்டா...

''நீங்க.. நீங்க யார்.. உங்களுக்கு எப்படி...'' தடுமாற்றத் துடன் கேட்டான் ஆனந்த்.



''என் பெயர் வசுதா... அவர்கள் வீட்டில் வேலைக்கு என்று வந்திருப்பவள்... அவர்கள் எல்லோரையும் கவ னித்துக் கொள்வது நான்தான்... ஆகையால்தான் ஒவ் வொருத்தர் நலனிலும் எனக்கு அக்கறை உண்டு. நேற்று இரவு எதேச்சையாய் அவளது 'செல்'லில் நீங்க பேசியதை நான் கேட்க வேண்டியதாயிற்று... அவள் எங்கேயோ போயிருந்ததால் 'செல்'லை நான் தான் எடுத்தேன்... உங்க 'ப்ளான்' என்ன என்று தெரிந்து... அதைத் தடுக்க வேண்டும் என்று நினைத்தே...'' அவளும் ஆங்கிலத்தில் விளக்கினாள். கோபத்தில் அவனது முகம் செவ.. செவ என்றாகியது.

''மைகாட்! நீங்கள் யார் இதில் தலையிட... உங் களுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்...'' என்று கத்தி னான்.

அவர்களைக் கடந்து சென்ற ஒருவர் அவர்களைத் திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றார்.

''கூல் டவுன் ஆனந்த்... கொஞ்சம் யோசித்துப் பாருங் களேன்.. அவர்கள் வீட்டில் உதயா ஒரே பெண்... பெற்றோர்கள் இல்லாமல்... அண்ணனின் கவனிப்பில் வளர்ந்தவள்.. உதயாவின் அண்ணா ஆதி.. தங்கை மேல் உயிரையே வைத்திருக்கிறார். அவருக்கும் ஆசை இருக் காதா... தன் தங்கைக்கு 'கிராண்டா' கல்யாணம் நடத்த வேண்டும் என்று... இப்படி ஓடிப் போய் திருமணம் செய்து கொண்டீர்களானால் யாருக்குத் தலைகுனிவு.. ம்ம்... ஆதித்யா அவமானத்தில் குன்றிவிடுவார்.. இதோ பாருங் கள் ஆனந்த்... நீங்க காதலிப்பது தப்பு என்று சொல்ல வில்லை.. பெரியவர்கள் சம்மதத்துடன்... அவர்களுடைய

ஆசியுடன் கல்யாணம் நடக்கட்டும் என்றுதான் சொல்கிறேன்...''

''அது நடக்கவே நடக்காது.. எங்கள் வீட்டில் எங்கப்பா வச்சதுதான் சட்டம்... என் கல்யாண விஷயத்தில் முரட்டு பிடிவாதம் பிடிக்கிறார். அவர் இந்த விஷயத்தில் சம்மதிப்பார் என்று எதிர்பார்ப்பது மடத்தனம்... இது எங்கள் வாழ்க்கைப் பிரச்சனை.. நீங்கள் இதில் தலையிட்டு என் குழப்புகிறீர்கள்...''

''சரி ஆனந்த்.. இது ஒரு பொண்ணோட வாழ்க்கை என்பதால் தான் தலையிட்டேன்... ஆண்பிள்ளைகள் எப்படி நடந்தாலும் பாதிப்பில்லை... ஆனால் பெண்கள் விஷயத்தில்... அப்படியில்லை. இன்னாருடைய தங்கை ஓடிப்போய் யாரையோ கல்யாணம் செய்து கொண்டாள் என்று கேவலமாய் பேசுவார்கள்... அது யாருக்கு அவமானம் சொல்லுங்கள்...பொறுமையாக இருந்து.. பெரியவர்களின் சம்மதம் பெற்று கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.. யாரும் உங்களைத் தடுக்கமாட்டார்கள்... உங்கள் காதல் உண்மையாக இருந்தால் நிச்சயம் ஜெயிக்கும்.. நம்பிக்கை வையுங்கள்...'' நிதானமாய் எடுத்துச் சொன்னாள் வசுதா.

''ஜெயிக்குமா... எப்படி.. இரண்டு பக்கமும் எதிர்ப்பு இருக்கும் போது.. எப்படி நடக்கும்.. ஏதோ பேச வேண்டும் என்பதற்காக பூசி மெழுகாதீர்கள். ஆமாம் உதயா ஏன் வரவில்லை... உங்களை அனுப்பிவிட்டு அவள் என்ன ஜாலியாக தூங்குகிறாளாக்கும்...'' என்றான் கோபமாக.

''உண்மையில் அவள் தூங்கிக் கொண்டுதான் இருக்கிறாள்...''



''வாட்! தூங்கிக் கொண்டிருக்கிறாளா... ஸ்டுபிட்...''

''பொறுமை ஆனந்த்... உதயா மீது தப்பில்லை... நான்தான் அவளுக்கு பாலில் தூக்க மாத்திரையைப் போட்டுக் கொடுத்தேன்.. அவள் நிச்சிந்தையாய் தூங்கிக் கொண்டிருக்கிறாள்.''

''ஓ... காட்.. திஸ் இஸ் டூ மச்.. எங்க 'ப்ளான்' எல்லாம் 'அப்செட்' ஆகி... இப்படி எங்க விஷயத்தில் மூக்கை நுழைத்து குளறுபடி செய்திருக்கிறீர்களே... இது உங்களுக்கு அநாகரீகமாய் படவில்லை.''

''சத்தியமாக இல்லை. ஆனந்த்... நான் உதயாவோட 'வெல் விஷர்..' அவள் தப்பு வழியில் போகிறாள் என்று தெரிந்தும் அதைப் பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது.. உங்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைக்க வேண்டும் என்பது தான் என் ஆசை.. முதலில் எனக்கும் பயம் இருந்தது... உதயாவின் காதலர் நல்லவரா... கெட்டவரா என்று தெரியவில்லை... என்றுதான். உங்களைப் பார்த்த பிறகு.. உதயா மீது உங்களுக்கு இருக்கும் தீவிரக்காதலை பார்த்த பிறகு என் பயம் போய்விட்டது.. உங்கள் விலாசத்தைத் தாருங்கள் ஆனந்த்... நானே வந்து உங்கள் வீட்டில் பேசுகிறேன்...''

''இதைத்தான் வம்பை விலைக்கு வாங்குவது என்பது.. எங்கப்பாவைப் பற்றித் தெரியாமல் நீங்க பேசறீங்க...''

''உங்கப்பாவைப் பற்றித் தெரிந்து தான் பேசுகிறேன்... நான் பேசுகிற விதத்தில் பேசி அவரை சம்மதிக்க வைக்கிறேன் ஆனந்த்.. முதலில் உங்க அட்ரஸ்ஸைக் கொடுங்கள்...'' என்று நம்பிக்கையுடன் அவள் சொல்ல...

''ஏதோ களேபரம் நடக்கப்போகிறது என்று படுகிறது...'' என்றவன்.. வேண்டா வெறுப்புடன் தனது விசிட்டிங் கார்டைத் தந்தான்.

''ஏதோ நீங்க கேட்டீர்களே என்று தருகிறேன்.. எனக்கு சர்வ நிச்சயமாகத் தெரியும். என் அப்பா நிச்சயம் ஒத்துக்க மாட்டார்னு. அப்படி ஏதாவது நடக்கட்டும்.. அதற்கு பிறகு யார் தடுத்தாலும் சரி.. நானும் உதயாவும் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிப்போம்... அதுமட்டும் உறுதி...'' சொல்லும்போதே அதை செய்யக் கூடியவன்தான் என்று தெரிந்தது.

''எனக்கும் சந்தோஷமாக இருக்கிறது ஆனந்த்... உதயாவை கடைசிவரை சந்தோஷமா வைத்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது. கடவுள் மீது பாரத்தைப்போட்டு இதை சுமுகமாய் முடிக்கப் பார்ப்போம்.. என்ன.. அப்புறம் ஒரு சின்ன வேண்டுகோள்... உங்க வீட்டுக்கு நான் வரும் விஷயம் உதயாவிற்கு தெரிய வேண்டாம்.. ப்ளீஸ்...'' என்று சொன்னாள் வசுதா.

''முதலில் நீங்க சொன்னதை செய்து காட்டுங்க.. அப்புறம் நீங்க சொன்னமாதிரி நடக்கிறேன்...'' இன்னும் கோபம் குறையாமல்.. நண்பனின் பைக்கில் ஏறிச் சென்று விட்டான்.

ஒரு வழியாய் சமாளித்து விட்டாயிற்று...

அடுத்து.. ஆனந்தின் பெற்றவர்களை... எப்படி... பார்க்கலாம்...

ஏற்கனவே மூளை சூடாகி கிடக்கிறது... நல்லெண்ணெய் தேய்த்து குளித்துவிட்டு பிறகு யோசிப்போம்.



ஒரு ஆட்டோவை நிறுத்தி அதில் ஏறிக் கொண்டாள்.

உதயாவிற்கு முழிப்பு வந்தபோது மணி பத்து!

தலைக்குள் இரும்புக் குண்டைத் திணித்தாற்போல கனம்.. தலை வெடித்து விடும்போல வலிவேறு... என்ன ஆயிற்று எனக்கு... இமைகள் வேறு கனக்கிறது...

மணி எத்தனை... பத்து! அய்யோ... அத்தனை நேரமா தூங்கினேனா... தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கையில்.. மை காட்! மல்லிகாவிடம்...

அப்போதுதான் 'சுளிர்' என்று சாட்டையடி விழுந்தாற்போல உறைத்தது.

''அய்யோ... ஆனந்த் எனக்காக கோவிலில் காத்திருப்பாரே... அது தெரியாமல் இப்படித் தூங்கிக் கொண்டு இருந்தேனே... இந்தனை நேரம் பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் போயிருப்பார்.. கடைசிநேரம் கழுத்தறுத்து விட்டேன் என்ற கொதிப்பும் வந்திருக்கும்.. போச்சு.. எல்லாம் போச்சு.. இனி எதிர்காலமே சூன்யம்தான்'' தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள் உதயா.

''குட் மார்னிங்!'' குரல்கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் அவள். வசுதா புன்னகையுடன் நின்றிருந்தாள்.

''முதலில் இதைக் குடி... உதயா'' என்று டம்ளரை நீட்டினாள் அவள்.

''என்ன இது'' வாங்காமலே கேட்டாள் உதயா.

''சுக்கு மல்லி காபி.. தலைவலிக்கு நல்லது... சுறுசுறுப்பும் வரும்.''

''எனக்குத் தலைவலி என்று உனக்கு எப்படித் தெரியும்...'' சந்தேகமாய் கேட்டாள் அவள்.

''எப்பவும் எழுந்திருந்து படிப்பவள் இன்று எழுந் திருக்கவில்லையே என்று நினைத்தேன்.. நீயும் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தாயா... அது தான் கொண்டு வந்தேன்...''

ஓகோ... சக்கு மல்லி காபி தயாராக இருந்ததாக்கும் என்று இடக்காக கேட்க வேண்டும் என்று எண்ணினாலும் அது முடியவில்லை... இப்போது எதுவும் பேசும் நிலை யில் அவள் இல்லை...

சக்கு மல்லி காபியை வாங்கி முழுங்கினாள்.

அது தொண்டைக்குள் காரமாய் இறங்கியது.

டம்ளரை வாங்கிக் கொண்டு வசுதா நகர்ந்ததும்... அவள் எழுந்து குளியல் அறைக்குள் சென்றாள்.

'ஜில்' என்று நீரை முகத்தில் தெளித்துக் கொண்டதும்.. தலை பாரம் கொஞ்சம் குறைந்தாற்போல தோன்றியது.

முதலில் ஆனந்த்துக்கு ஃபோன் பண்ணவேண்டும்... நிச்சயம் கோபத்தின் உச்சியில் இருப்பான்... அவனை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தவித்தாள்.

தன் 'செல்'லை எடுத்து அவனது எண்களை அழுத் தினாள்... ஊகூம்... நாட் ரீச்சபிள் என்ற பதில் தான் வந்தது... அவனும் போன் செய்யவில்லையே...

எப்படிச் செய்வான். காத்திருந்தவனுக்குத்தானே வேதனை தெரியும்... எல்லாம் என் தப்பு.. அலாரம் இட்டுப் பிர யோசனமில்லை.

அது அடித்திருக்கும்.. கும்பகர்ணியாய் தூங்கியதில் அது கேட்டிருக்காது.. பாழாய்போன தூக்கத்தால் வந்த வினை... அழவேண்டும் போல துக்கம் நெஞ்சில்



அடைத்தது. ஏன் எல்லாமே எனக்கு எதிராக நடக்கிறது.. நான் என்ன பாவம் செய்தேன்...

திட்டமிட்டபடி எல்லாம் நடந்திருந்தால்... இத்தனை நேரம் நான் மிஸஸ் ஆனந்த் ஆகியிருப்பேன்... இப்போது அது கனவாய் போய்விட்டது. எல்லாம் என் தலைவிதி.

இனி ஆனந்த் முகத்தில் எப்படி விழிப்பேன்... நம்ப வைத்து கழுத்தறுத்து விட்டாளே என்று நினைப்பானே... என் மீது வெறுப்புக் கூட வந்திருக்கும். அந்த வெறுப்பில் மனம் கசந்துபோய்.. அப்பா சொன்னதற்கு தலையாட்டி விட்டால்.. அப்பா ஆசைப்பட்ட பெண்ணை மணக்க சம்மதித்துவிட்டால்.. என் கதி.. கடவுளே... யானை தன் தலைமீது தானே மண் வாரி இறைத்துக் கொண்ட கதையாகிவிட்டதே. முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அந்த நேரம் பார்த்து மல்லிகா வந்தாள்.

''என்னடீ... உதய்... இத்தனை நேரம் ஆனந்தோட குஷாலாய் இருப்பேன்னு நினைச்சேன். இங்கே அழுது கொண்டு இருக்கேயே... ஏன்.. போகவில்லையா... என்ன... கடைசி நேரத்தில் பயமா... சரியான மக்கு... இப்படி அநியாயமாய் காரியத்தைக் கெடுத்துவிட் டாயேடீ... உன் காதல் அவ்வளவுதான் போல..'' என்று பொரிந்து தள்ளினாள்.

அவளுக்கு படு எரிச்சல்.. எத்தனை அழகாய் பிளான் போட்டும் 'ப்ளாப்' ஆகி விட்டதே...

இந்தக் கழுதைக்கு எத்தனை உபதேசம் செய்தேன்... எல்லாத்தையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு இப்போது 'பேக்கு' மாதிரி உட்கார்ந்திருக்கிறாள்.. மடச்சி... எல்லாம்

கழுதைக்கு உபதேசம் போல ஆனது.. இருந்தும்... எரிச்சலை அடக்கியவாறு பேசினாள்.

"அடபோடி.. இவளே... நான் எத்தனை சந்தோஷமாய் இருந்தேன் தெரியுமா.. இனிமே நம்ம உதயாவுக்கு ஆனந்தம் தான்.. புருஷனோட சந்தோஷமா இருப்பாள்.. என்று ஏதேதோ நினைத்து மகிழ்ச்சியா இருந்தேன்... இப்படி சொதப்பிட்டியேடி உதய்... உன்னை புத்தி சாலின்னு நினைச்சேன்... இப்பத் தெரிகிறது டீ.. நீ ஒரு வடிக்கட்டின மக்கு முண்டம்னு..."

"நிறுத்து மல்லிகா... நானே நொந்து போயிருக்கிறேன். நீ வேறு குத்திக் காட்டிக் கொண்டு.. இப்ப ஆனந்த்துக்கு என்ன பதில் சொல்வதுன்னு தெரியாமல் முழித்துக் கொண்டிருக்கேன்..." என்று அழும் குரலில் சொன்னாள் உதயா...

"என்ன சொல்வதா.. ஆனந்த்.. ஆனந்த்... கடைசி நிமிஷத்தில் எனக்கு பயம் வந்துவிட்டது. கோழையாகிப் போனேன்... அதுதான் வராமல் ஹாயா தூங்கிவிட் டேன்னு சொல்லு..." எரிகின்ற தீயில் எண்ணெய்யை வார்ப்பதுபோலப் பேசினாள் மல்லிகா.

"விளையாடாதே மல்லிகா.. எனக்குத் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல இருக்கிறது... என் அவஸ்தையைப் புரிந்து கொள்ளாமல்.. ஏதோ வேடிக்கைப் பேச்சு பேசுகிறாயே... நான் இப்பவே ஆனந்தை சந்திக் கணும்.. இதை வேண்டும் என்றே செய்யவில்லை... என்னையும் மறந்து தூங்கிவிட்டேன் என்று சொல் லணும்..." கண்ணீர் மல்க அவள் சொல்லவும்...

"ஓகோ.. உடனே அவர் இன்னொரு தேதியைக் குறிப்பார் என்ற எண்ணமாக்கும். போடி... பைத்தியம்



அருமையா கிடைச்ச சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டு இப்படி மடசாம்பிராணியா உட்கார்ந்திருக்கே... பாரு... அதைச் சொல்லணும்.. இனி உன் விஷயத்தில் நான் தலையிடப் போவதும் இல்லை.. நீயாச்சு.. உன் ஆனந்த் ஆச்சு... உனக்கு ஐடியா கொடுத்து நான் மூக்கறுப்பட்டது போதும்.." என்று சென்று விட்டாள் மல்லிகா.

'செல்'லில் ஆனந்த் நம்பரை மீண்டும் அழுத்தினாள் ஆனந்த் கிடைப்பானா என்ற நப்பாசையில்.. இல்லவே இல்லை... என் தலைவிதி என்று தலையில் படீர் படீர் என்று அடித்துக் கொண்டாள் உதயா.

அங்கே மல்லிகாவும் தலையில் அடித்துக் கொண்டு புலம்பினாள்.

போட்ட 'ப்ளான்' இப்படியா மண்ணைக் கவ்வணும்... எல்லாமே தலைகீழ் ஆனது மாதிரி ஆகிவிட்டதே... சரியான வடிக்கட்டின மூட்டாள்... இப்படியா தூங்கு மூஞ்சியாக இருந்து காரியத்தைக் கெடுப்பாள்... அழட்டும்... நல்லா அழட்டும்...

மத்தியானம் உணவு உண்ண உதயா வரவில்லை. மல்லிகாவின் முகமோ தொங்கிப் போயிருந்தது...

அதைப்பார்த்த வசுதாவிற்கு பழைய பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது.

"நினைச்சது ஒன்னு... நடந்தது ஒன்னு... அதனால முழிக்குதே அம்மா பொண்ணு..." அந்த வரிகள் இப்போது மல்லிகாவுக்கு கன கச்சிதமாய் பொருந்துகிறதே.. சபாஷ்!

வசுதாவிற்கு 'குபீர்' என்று சிரிப்பு பிறீட்டு வர... சமை யலறைக்குள் நுழைந்து கொண்டாள்...

அங்கே அவளால் மனம் விட்டுச் சிரிக்க முடிந்தது.

## 19

பெரிய நிலத்தை ஆக்கிரமித்து கொண்டு நிமிர்ந்து... கர்வத்துடன் இருந்த அந்த மாளிகை வீட்டைப் பார்த்து அசந்து போனாள் வசுதா... சின்ன அரண்மனையைப் போல் அல்லவா இருக்கிறது.

ஆனந்த் தந்தை பெரிய பணக்காரர் என்று தெரிந்திருந்தாலும்... இந்த அளவில் மிகப் பெரி..ய்..ய்...ய பணக்காரர் என்று அறியவில்லை.

அரசியல்வாதியாயிற்றே... கணக்கு வழக்கில்லாமல் சொத்து இருக்கத்தான் செய்யும்...

அவர் தனக்கு சமமான சம்பந்தம் பார்த்ததில் ஆச்சர்யமே இல்லை.

ஆதியும் வசதியுடையவன் தான்... பணக்காரன் தான்.. இருந்தும் இந்த அளவில் இல்லையே...

சரி.. சாதித்துக் காட்டுகிறேன் என்று வந்து விட்டோமே.. வந்த காரியம் பலிக்குமா... தெரியவில்லையே...

முதலில் அந்த மகாதேவன் பேசுவாரா... முடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டால்...

கடவுளே... எப்போதும் எனக்குத் துணையிருப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.. ஒரு நல்ல காரியத்தை செய்ய வந்திருக்கிறேன்... நீதான் நடத்திக் கொடுக்க வேண்டும்.. மனமுருக வேண்டினாள் வசுதா.

வாசலில் இருந்த 'செக்யூரிட்டி' அவளை நிறுத்தி விசாரிக்க.. அவள் மகாதேவனைப் பார்க்க வேண்டி வந்ததாய் சொன்னாள்...



வராந்தாவில் மூன்று பேர் காத்திருந்தனர்... அவர்களுடன் வசுதாவும் சேர்ந்து கொண்டாள்.

மகாதேவனின் பி.ஏ. போலும் ஒரு காகிதத்தை கொடுத்து பெயர்... வந்த காரணத்தை எழுதித்தரச் சொன்னார்.

வசுதா பெயரை எழுதி... 'பர்சனல்' என்று குறிப்பிட்டாள்.

இருபது நிமிடங்களுக்குப்பின் அவளுக்கு அனுமதிக் கிடைத்தது.

கெடுபிடிகளைப் பார்த்து உள்ளம் படபடவென்று அடித்துக் கொண்டது.

சொல்ல வேண்டியதை ஆணித்தரமாய் எடுத்துச் சொல்ல முடியுமா என்ற சந்தேகமும் எழுந்தது.

உள்ளே அமர்ந்திருந்தவரின் தோற்றம் கொஞ்சம் தயக்கத்தை ஏற்படுத்தியது.

நெற்றியில் விபூதி பட்டை... நடுவே வட்டமாய் குங்குமம். வெள்ளை வேட்டி... கதர் சட்டை... தோளில் கரைப் போட்ட துண்டு... கட்சி துண்டு போலும்..

ஆள் கனகம்பீரமாய்.. அந்தக் காலத்து ஜமீன்தார்போல இருந்தார்.

''யாரம்மாநீ... 'பர்சனல்'னு எழுதியிருக்கே... தமிழா... கன்னடமா... இல்லே துளுவா...'' என்று மிடுக்காய் கேட்டார்.

''தமிழ் தெரியும்... உங்களிடம் முக்கியமான விஷயம் பேச வந்தேன் சார்...''

''காதல் விவகாரம்.. அப்படித்தானே'' என்று காட்டமாய் கேட்டார்.

'ஆம்' என்று தலையசைத்துவிட்டு... அதை விளக்க முயன்றபோது.. அவர் கை அமர்த்தினார்.

கண்களில் சீற்றம் தெரியப்பார்த்தவர்... கோபத்தை வார்த்தைகளில் காட்டினார்.

''இதோ பார்... காதல் ஊதல் என்று இங்கு வந்து கண்ணைக் கசக்கி காரியத்தை சாதிக்கலாம் என்று நினைத்தால் நடக்கறதே வேறு.. என் மகன் பணக்கார வீட்டுப் பிள்ளை.. கொஞ்சம் அப்படி இப்படி நடந்திருக்கலாம்... அதுக்காக இந்த வீட்டுக்கு மருமகளாகி விடலாம் என்ற கனவெல்லாம் காணாதே...'' சூடு கண்ட சோளப் பொரியாய் தெறித்து வந்தன வார்த்தைகள்.

''சார்.. சார்.. கொஞ்சம் இருங்கள்.. நீங்க என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்க நினைக்கிற மாதிரி நான் ஒன்றும் உங்கள் மகனின் காதலி இல்லை.. நான் வந்த விஷயம் வேற.. உங்கப்பிள்ளை விரும்புவது வேறொரு பெண்ணை.. அவள் பெயர் உதயா...''

''சரி.. அதற்கு என்ன செய்யணுங்கறே... கூப்பிட்டு ஆரத்தி எடுக்கணுமா...'' கெத்தாளமாய் கேட்டார் அவர்.

வசுதாவை பேசவும் விடவில்லை.

''இதோ பாரும்மா... இந்தக் காதல் கத்தரிக்காய் இதில் எல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை... எனக்கு வரும் மருமகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் தான் முடிவு செய்வேன்... கட்டுடா தாலின்னா கட்டிட்டுப் போறான். எனக்குச் சமமான அந்தஸ்து... செல்வாக்கு இருக்கிற குடும்பத்திலிருந்து பொண்ணு பார்த்திருக்



கேன்... இப்பப் புதுசாய் பிரச்சனையை எழுப்பாதே... போயிடு...''

அவரது வார்த்தைகளில் பணக்கார ஜம்பமும்.. ஆணவமும் தெரிந்தது.

''அந்தப் பெண்ணும் வசதியுள்ள குடும்பம் தான்... 'உதயா காபி' என்று கேள்விப்பட்டிருப்பீர்களே... மிஸ்டர் ஆதித்யாவின் தங்கை சார்...''

''இருக்கட்டும்... என் சொத்துக்கு முன்னால் வெறும் சுண்டைக்காய் தான்.. என் சொத்துக் கணக்கு உனக்குத் தெரியுமா... கடல் மாதிரி சொத்து.. ஒருவேளை... அது தெரிந்து கொண்டுதான் என் பிள்ளையை வளைத்துப் போட்டாளா அந்தப் பொண்ணு... ஆமாம்... அவளுக்கு வக்காலத்து வாங்கறேயே... அவளுக்கு நீ என்ன உறவா...''

''இல்லை'' என்று சொன்னால் நீயார் இதில் தலையிட என்பாரோ... என்று யோசித்தவள் 'பளிச்'சென்று தலைக்குள் வந்ததை சொன்னாள்.

''அவளுக்கு அண்ணி என்று வைத்துக் கொள்ளுங்களேன்'' என்றாள்.

''வச்சுக்கணுமா.. அப்ப.. நீயும் காதல் கேசாக்கும்... சரியாப் போச்சு.. கண்றாவியா இருக்கு.. கேட்கவே... நீ என்ன சொன்னாலும் இங்கே எடுபடாது.. நீ போகலாம்...'' என்றார் கறாராக.

''நீங்கள் இப்படி நிர்தாட்சண்யமாய் பேசுவது சரியில்லை... சார்... அநியாயமாய் ஒரு பெண்ணோட வாழ்க்கையில்...''

''செக்யூரிட்டியைக் கூப்பிட்டு உன்னை வலுக் கட்டாயமாய் தள்ளும்படி வைக்காதே.. கெட் அவுட்...''

அதற்கு மேலும் அங்கு இருக்க என்ன பைத்தியமா அவளுக்கு...

ஆனந்த் சொன்னமாதிரி... இந்த ஆள் எதற்கும் அசையாதவர்தான்... மலை விழுங்கி மகாதேவன் போல...

ஆனந்த் ஆத்திரப்பட்டதில் தவறே இல்லை.. நாம் தான் தப்புக் கணக்குப் போட்டு விட்டோம்.

இனி இவரிடம் பேசுவது பாறையில் போய் முட்டிக் கொள்வது மாதிரிதான்... இனிமேல் எதுவும் செய்ய முடியாது.

ஆனந்த் சொன்னமாதிரி... யோசனையில் இருந்தவள் எதிரே வந்தவரை பார்க்கவில்லை.

அவர் மீது மோதிவிட்டு ''சாரி.. கவனிக்கவில்லை...'' என்றாள்.

''அட நீயாம்மா.. எப்படி இருக்கே... கைக்காயம் ஆறியதா...'' என்று அந்தப் பெண்மணிக் கேட்டதும் தான் அவளுக்கு 'பளிச்'சிட்டது.

அன்றைக்கு ஷாப்பிங் சென்டர் முன் காப்பாற்றிய குழந்தையின் பாட்டி!

இங்கே எப்படி... இவர்தான் ஆனந்தின் தாயோ... ஆமாம்... கொஞ்சம் சாயலும் தெரிகின்றதே...

''என்னம்மா விஷயம்... இங்கே யாரைப் பார்க்க வந்தே... எங்களையா...''

வந்த காரணத்தை அவள் சொல்லி முடித்ததும் அந்த அம்மாளின் முகத்தில் மாற்றம்...



உதயாவைப் பற்றி அவர் அக்கறையாக கேட்டுத் தெரிந்து கொண்டார்.

''என்னோடு வாம்மா...'' என்று அழைத்துச் சென்றார் நேரே கணவரிடம்.

மறுபடியும் வந்தாயா என்று சுட்டெரிப்பது போல பார்த்தார் மகாதேவன்.

''இதோ பாருங்க... இந்தப் பொண்ணு மட்டும் வந்து காப்பாத்தியிருக்கா விட்டால்... நம் பேரப்பிள்ளை இப்போ இருந்திருக்க மாட்டான்... அன்னிக்கு தெய்வம் மாதிரி வந்து ஒரு பொண்ணு தன் உயிரைப் பணயம் வச்சு நம்ம பேரனைக் காப்பாத்தினான்னு சொன்னேனே.. அது இந்தப் பொண்ணுதான். நம்ம வம்ச தீபத்தை அணையாமல் காப்பாத்தின இவளுக்கு நாம நன்றிக்கடன் பட்டிருக் கோங்க... உனக்கு எப்படிம்மா நன்றி சொல்வது என்று கேட்டதுக்கு.. உதவறது மனுஷத்தன்மைன்னு பெருந்தன் மையா பேசினா... தெரியுமா. இப்ப நமக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு... முடியாதுன்னு சொல்லாமல் ஒப்புக் கொள்ளுங்க...''

''வாயை மூடு... நன்றி காட்டணும்னா ஒரு லட்சமோ எவ்வளவோ கொடுத்து அனுப்பு.. என் பிள்ளை விஷயத் தில் தலையிடாதே.. ஆமாம்...'' என்று உறுமினார் மகாதேவன்.

''அவன் எனக்கும் பிள்ளைதான்.. அதைத் தெரிஞ்சுக் குங்க.. முதல்ல... எனக்கு என் பிள்ளையோட சந்தோஷம் தான் முக்கியம்... அவனுக்குப் பிடிச்ச பொண்ணை கட்டிக் கொள்ளட்டும்... உங்களுக்கு நீங்கப் பார்த்த பொண்ணு தான் மருமகளாய் வரணும்னு இருந்தா உங்க சின்ன வீடு

பெத்து வச்சிருக்கே.. அதுக்கு பாருங்க அந்தப் பெண்ணை.. எங்களை எங்க போக்கில் விட்டுங்க... தயவு செய்து..." என்று உறுதியாய் சொன்னாள் அந்த அம்மாள்.

"எப்படியோ போய் தொலைங்க" என்று சீறினார் மகாதேவன்.

"நீ கவலைப்படாமல் போம்மா... நாளைக்கே நாங்க வந்து பொண்ணைப் பார்க்கிறோம்.. போதுமா..."

"நன்றிம்மா" அவரது கரங்களைப் பிடித்துக் கொண்டு சொன்னாள் வசுதா.

"எதுக்கும்மா... எனக்கும் என் பிள்ளையோட சந்தோஷத்தில் அக்கறை இருக்காதா.. சொல்லு... என் மருமக எப்படி இருக்கான்னு தெரிஞ்சுக்க ஆசையா இருக்கேன்... சரியா மூன்று மணிக்கு வந்திடுவோம் இல்லே..."

வசுதா கிளம்பு முன் அவளுக்கு வெற்றிலை.. பாக்கு... பட்டு ரவிக்கை வைத்துக் கொடுத்தாள்.

வசுதாவால் நம்பவும் முடியவில்லை... தான் நினைத்து வந்த காரியம் காய்தான் என்று மனம் வெதும்பித் திரும்ப இருக்கையில்.. இப்படி ஒரு திருப்பமா.. எதிர்பார்க்கவே இல்லை.

அன்று நடந்த சம்பவத்திற்கும் இன்றையப் பிரச்சனைக்கும் முடிச்சுப்போட்ட தெய்வத்தை தான் சொல்லவேண்டும்... எதுவும் காரண காரியமின்றி நடக்காது என்பது இது தானோ... இதெல்லாம் இறைவனின் திருவிளையாடல் தான்.

நெஞ்சத்தில் சந்தோஷம் தளும்பி வழிய... வந்த காரியம் வெற்றிப் பெற்ற களிப்பில் வெளி வந்தாள் வசுதா.



அவளுக்காகவே காத்திருந்த மாதிரி ஆனந்த் ஓடிவந்து அவள்முன் நின்றான்.

"தாங்க்ஸ் உங்களுக்கு... உங்களை என்னவோ நினைத்தேன்... ஆனா.. சொன்னபடியே சாதித்துவிட்டீர்களே மேடம்... எங்கப்பாவை யாராலும் மடக்கிவிட முடியாதுன்னு நினைத்தேன்... நீங்க ஜெயிச்சுக் காட்டிட்டீங்க.. ஹேட்ஸ் ஆஃப் டு யூ..." குதூகலத்துடன் சொன்னான் ஆனந்த்.

"நான் எதுவும் செய்யவில்லை ஆனந்த்... ஆனா.. சரியான சமயத்தில் உங்கம்மா வந்து எல்லாவற்றையும் மாற்றிவிட்டார்கள்.. உங்கப்பாவை மசிய வைத்ததும் அவர்தான். அவருக்குத்தான் நீ நன்றி சொல்ல வேண்டும்.

"எப்படியோ.. ஆரம்பித்து வைத்தது நீங்கள்.. நல்லபடியாகவும் முடிந்ததே.. அதுபோதும்.. இந்த சந்தோஷமான விஷயத்தை உதயாகிட்டே சொல்லவேண்டும்."

"இருங்கள் ஆனந்த்... உதயாவிற்கு இது சஸ்பென்ஸ் ஆக இருக்கட்டும்... நீங்கள் வருவதை அவள் எதிர்பார்க்கமாட்டாள் இல்லையா.. சர்ப்ரைஸ்ஸாகவும் இருக்கும். என்ன... சொல்லமாட்டீர்கள் தானே..."

"ஓகே.. டன்.. அதுவும் உங்களுக்காக..." என்று ஒப்புக் கொண்டான் அவன்.

அதிசயமாய் வீடு 'கப்சிப்' என்று இருந்தது.. விருந்தாளிகளின் அறையிலும் எந்த சத்தமும் இல்லை.

தூங்குகிறார்களோ... இருக்காதே...

இந்த நேரத்தில் தொலைக்காட்சிப் பெட்டிமுன் உட்கார்ந்து எந்தப் படத்தையாவது பார்க்கவேண்டுமே.. ஒருவேளை அவர்களுக்கு அதுவும் அலுத்துவிட்டதோ...

கற்பகம் ஆன்ட்டியிடம் இருந்து விஷயம் வந்தது.

"நீ இங்கு இல்லாமல் போனேயே வசு... திடீர் என்று போன் வந்தது... சுந்தரியின் தம்பிக்கு நெஞ்சுவலி வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்காங்கன்னு சேதிக் கேட்டதும்... உடனே அழுது ஆர்பாட்டம் பண்ணி.. உடனே புறப்படணும்னு நச்சரித்து... புலம்ப ஆரம்பிச்சுட்டா.. அப்பாவுக்கும் மகளுக்கும் இங்கிருந்து போகப் பிடிக்கவில்லை. அரைமனதோடு புறப்பட்டுப் போனார்கள்.. அப்பாடான்னு ஆச்சு எனக்கு..."

வசுதாவிற்கும் அவர்கள் கிளம்பிச் சென்றதும் நல்லதற்கு என்று பட்டது.

நாளை உதயாளை பெண் கேட்டு ஆனந்த் வீட்டார் வரும் வேளையில்... இந்த அலப்பல் கூட்டம் இல்லாமல் இருப்பதே தேவலை... முக்கியமாய் மல்லிகா.

இந்த விஷயத்தை ஆதியிடம் சொல்ல வேண்டும்.. ஆனால் எப்போது வருவானோ... தெரியவில்லையே.

வசுதாவுக்கு இன்னொரு பயம் இருந்தது. ஆதி இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக்கொள்வானா என்பது தான்.

இரவு பதினொரு மணியாகியும் ஆதி வந்தபாடில்லை. அவனிடம் இருந்து போன் வந்தது.

அவசரவேலையாய் மடிகேரே போகவேண்டி வந்ததால் இரவு வாமுடியாது என்று சொன்னான்.

ஆதியில்லாமல் பெண்பார்க்கும் படலமா... ஆதி இதை ஏற்றுக் கொள்வானா...

ஆனந்துக்கு போன் செய்து நாளை மறுநாள் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடலாமா என்றும் தோன்



றியது. ஆனால் சுபஸ்ய சீக்கிரம் என்பார்களே.. எதையும் தள்ளிப்போடவும் கூடாது... அதுவும் அந்த மகாதேவன் இருக்கும் மனநிலையில்... விஷயத்தை உதயாவிடம் சொல்லாமல்... மூடி மறைத்து செய்வதிலும் 'திரில்' இருக்கத்தான் செய்தது.

ஆனந்தைப் பார்த்ததும் அவளது முகம் மாறுவதை.. சந்தோஷத்தில் நிலைகொள்ளாமல் தத்தளிப்பதையும் ரசிக்கும் ஆவல் அவளுள் ஊடுருவியது.

வீட்டிற்குப் பெரியவர் ஆயிற்றே என்று கற்பகத்திடம் இந்த சந்தோஷ சமாச்சாரத்தை சொன்னாள்.

கற்பகத்திற்கு மலைப்பு... உதயாவா... நம் உதயாவா... அந்த அளவு வளர்ந்துவிட்டாள் என்று தோன்றாமல் போனதே... இன்னும் சின்னப்பெண் என்றே நினைத்து நடத்தினோமே... பெரியவர்களுக்கு பிள்ளைகள் எப்போதும் குழந்தைகள் தான்.. அந்தந்த வயசுக்கேற்ற மாற்றங்கள் வந்தாலும்.. அவர்கள் வளர்ந்த குழந்தைகள் தான். கற்பகம் அப்படித்தான் நினைத்தாள்.

அவருக்கு 'அத்தை பின்னி விடுகிறீர்களா' என்று சிணுங்கும் டீன் ஏஜ் உதயாவாகவேத் தெரிந்தாள்.

சின்னப் பெண் என்று நினைத்தவளுக்கு காதலா என்ற வியப்பு... நல்லவேளை... கல்யாணத்திற்கு வந்ததே என்ற சந்தோஷம்.

உதயாவின் ஓடிப்போகும் திட்டத்தைச் சொல்லி அத்தையின் உள்ளத்தை வருந்தச் செய்ய வசுதாவிற்கு மனமில்லை...

"ஆதி இல்லையே என்று தள்ளிப்போடவேண்டாம் வசு.. முதல்ல அவங்க வந்து பார்க்கட்டும்... அப்புறம்

மத்ததை ஆதி வந்தப்புறம் பார்த்துக்கலாம்'' என்றார் கற்பகம்.

''நீங்கள் சொன்னா சரி ஆன்ட்டீ... ஆனால் இந்த விஷயம் உதயாவிற்கு தெரிய வேண்டாம்... நானும் சொல்ல வில்லை. அவளுக்கு இது 'சர்ப்ரைஸ்'ஸாக இருக்கட்டும் என்ற எண்ணம்தான்...''

''என்னவோம்மா.. இந்த வீட்டிற்காக நீ பொறுப் பெடுத்து செய்வதை பார்க்கிறப்போ... எனக்கு இன்னும் ஏதேதோ மனசில் நப்பாசை வருகிறது.. ஆதி உன்னை...''

''அய்யோ ஆன்ட்டீ.. ப்ளீஸ்.. இப்ப வேண்டாமே... நாளைக்கு வருகிறவர்களை சரியா வரவேற்று... கவனித்து அனுப்ப வேண்டும்... சாஸ்திர சம்பிரதாயம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.. நீங்கதான் அதை எடுத்துச் சொல்ல வேண்டும்.. அந்தமாதிரியே எல்லாவற்றையும் தயார் பண்ணுகிறேன்...''

சொன்னபடியே எல்லாவற்றையும் தயாராக வைத்து விட்டாள் வசுதா.

சொன்ன நேரத்திற்கு சொன்னபடி ஆனந்த் வீட்டார் வந்து விட்டனர்.

ஆனந்த் தந்தை வரவில்லை.. இன்னும் கோபம் தீர வில்லையோ...

ஆனந்தும்... அவன் தாயாரும்.. அண்ணன்.. அண்ணி யும்... குழந்தை ராகுலுடன் வந்திருந்தனர்.

நிரஞ்சன் வீட்டில் இருந்தான். அவனிடமும் அவர்கள் வரும் விஷயத்தை சொல்லியிருந்தாள் வசுதா.

'லிவிங் ரூமில்' சந்தன ஊதுபத்தியின் நறுமணம் இதமாய் பரவியிருந்தது... வாசலில் பூத்து சிரித்த மலர்



களின் வாசனையும் சேர்ந்து.. ரம்யமான சூழ்நிலை அங்கே நிலவியிருந்தது...

ஆனந்தின் கண்கள் தேடலுடன் அலைந்தன... நிரஞ் சனையும் ரோஹனையும் அவர்களுக்கு அறிமுகப்படுத் தினாள்.

''முதல்ல என் மருமகளைப் பார்க்கணும்மா...'' என்று அவசரப்பட்டார் ஆனந்தின் தாய்.

''இதோ'' என்று விரைந்தாள் வசுதா.

அறைக்குள் நகத்தைக் கடித்துக் கொண்டு சூன்யப் பார்வையுடன் அமர்ந்திருந்தாள் உதயா.

''உதயா'' என்று மெல்ல அழைத்தாள் வசுதா.

திரும்பிப்பார்த்தாள்.

''உன்னைப் பெண் கேட்டு யாரோ வந்திருக்கிறார்கள். உன்னைத்தான் மணப்பேன்னு ஒத்தைக்காலில் நிற்கிறாராம் மாப்பிள்ளைப் பையன்.. உனக்கும் அவரைப் பார்த்தால் பிடித்துவிடும் உதயா.. அத்தனை அழகு... இப்ப என்ன செய்யறே... எழுந்துபோய் முகம் கழுவிக் கொண்டு.. லேசா மேக்-அப் போட்டுக் கொண்டு வருகிறே... இந்த சுரிதாரே போதும்.. நன்றாக இருக்கிறது...''

உதயா கோபத்துடன் அவளை வெறித்தாள்.

''நான் யாரையும் வந்து பார்க்கிறதா இல்லை... என்னை யாரும் பார்க்கவும் வேண்டாம்... முதல்ல அவங்களை இங்கிருந்து போகச் சொல்லுங்க...''

''இதோ பார் உதயா... முதல்ல அவங்களை பார்த்து விட்டு அப்புறம் உன் முடிவை சொல்.. நல்ல வசதியான குடும்பம்... ஆள் பார்க்க 'ஹான்ட்ஸம்' பார்த்தவுடன்

சொக்கிடுவே பாரேன்...'' வேண்டும் என்றே சீண்டினாள் வசுதா.

''ஒரு தடவை சொன்னா உனக்குத் தெரியாது.. உன் 'லிமிட்' என்னவோ... அத்தோடு இரு.. உன் பேச்சுக்கு அடங்கி நடக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை.. சே.. சரியான டார்ச்சர்...'' ஆத்திரத்துடன் கூவினாள் உதயா.

வசுதா விடவில்லை.

''இப்போ நீ வரப்போகிறாயா.. இல்லையா.. நீ வராமல் இருந்தால்.. வந்தவர்களை அவமானம் செய்த மாதிரி ஆகிவிடும்.. அது உங்க அண்ணனுக்கு கேவலமாகிவிடும் உதயா.. நிரஞ்சனும் காத்திருக்கிறார்.. அவருக்கும் தானே அவமானம்.. உன்னைப் பார்க்காமல் அவர்கள் போனால் இந்த வீட்டுப் பெண்ணுக்கு ரொம்பவும் திமிர் என்று முத்திரை விழுந்துவிடும்.. வேண்டாம் உதயா.. பேருக்கு வந்து பொம்மையாட்டம் நில்.. அவர்கள் போனதும் உனக்கு இதில் விருப்பம் இல்லைன்னு சொல்லிவிடலாம்...''

''சே.. என்ன கழுத்தறுப்பு இது...'' என்று எழுந்து குளிய லறைக்குள் சென்றாள்.

வேண்டா வெறுப்புடன் 'உம்' என்று முகத்தை வைத்துக் கொண்டு வந்து நின்றாள் உதயா... அவளுக்கு யாரையும் பார்க்கப் பிடிக்கவும் இல்லை.

வந்தவர்களிடம் தனக்கு விருப்பம் இல்லை என்பதைக் காட்டிக் கொள்ளும் முயற்சி.

ஆனந்தின் தாய்க்கு உதயாவைப் பிடித்துவிட்டது என்பதை அவரது சிரித்த முகமே சொன்னது.

''உதயா.. உனக்கு மாப்பிள்ளை பிடித்திருக்கா.. பார்த்து சொல்லேன்'' அவளது காதருகே கிசுகிசுத்தாள் வசுதா.



உதயா அசையாமல் சிலைமாதிரி நின்றிருந்தாள். தரையை உற்றுப் பார்த்தவாறு...

''உன்னைப் பார்க்க வந்திருப்பவரின் பெயர் ஆனந்தாம். உதயாவைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன் என்று பிடிவாதமாய் இருக்கிறாராம்...''

உதயா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

ஆனந்தா.. என் ஆனந்தா... ஆமாம்.. அவரேதான்.

ஆனந்த் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

உதயாவிற்கு பரவசத்தில் மெய்சிலிர்த்தது.

இன்ப அதிர்ச்சி அவளைத் திக்கு முக்காட வைத்தது.

ஆனந்த் இங்கே எப்படி.. எனக்குப் போனும் பண்ண வில்லையே.. இல்லை... இது பிரமையா...

ஆனந்த் அவளைப்பார்த்து கண்ணடித்தான்...

ஊகூம்.. இது நிஜமே.. உடம்பில் புல்லரிப்பு!

அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த வசுதாவின் நெஞ்சம் விம்மியது.

''அம்மாடி.. உதயா.. இங்கே வந்து உட்கார்...'' என்று அவளை அன்புடன் அருகில் அமர்த்திக் கொண்டார் ஆனந்தின் தாய்.

''ஆனந்த் உன்னை விரும்புகிறான் என்பது எனக்கு நேற்று தான் தெரியும்மா... அதுவும் வசுதா சொல்லித் தான்... அவள்தான் ஆனந்தோட அப்பாக்கிட்டே கெஞ்சி கேட்டுக் கொண்டாள்.. ஆனால் அவர் சம்மதிக்கிற மாதிரி தெரியல்லே... அப்புறம் என்னிடம் சொல்லி... இதற்கு சம்மதம் வாங்கினாள்.. இதெல்லாம் வசுதாவால் தான்

என்று சொல்லணும்மா.. இல்லேன்னா.. இந்த ஏற்பாடு நடந்திருக்காது..."

உதயாவின் முகத்தில் பிரமிப்பு... வசுதாவா... அவளுக்கு என் காதல் விஷயம் எப்படித் தெரியும்...

"என் பிள்ளை பொறுமையிழந்து கொண்டிருக்கிறான்... உன்னிடம் தனியாகப் பேசணுமோ என்வோ போம்மா... போய் பேசு..." என்று ஆனந்தின் தாய் சொல்ல...

அதுக்கே காத்திருந்தவன் போல எழுந்தான் ஆனந்த்... அவர்களுக்கு ஜாமூனும்... சுடச்சுட பேபி கார்ன் பஜ்ஜியும் கொண்டு வந்து வைத்தாள் வசுதா.

மொறுமொறுவென்று வெகு சுவையாக இருந்த பஜ்ஜியை ருசி பார்த்த ஆனந்தின் அண்ணி அது செய்யும் முறையைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

நிரஞ்சனும் ஆனந்தின் அண்ணன் மோகனும் பரஸ்பரம் விசாரித்துக் கொண்டனர்.

"எம்மா வசுதா... இந்த வீட்டில் பெரியவர்கள் யாரும் இருக்கிறார்களா.. அவர்களிடம் பேசணுமே..." ஆனந்தின் தாய் வினவியதும்.

கற்பகத்திடம் அழைத்துச் சென்றாள் வசுதா.

கற்பகத்திடம் நலம் விசாரித்துவிட்டு.. ஆதித்யாவின் குடும்ப விவரங்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார் ஆனந்தின் தாய்.

"உதயாவின் அண்ணனை சீக்கிரமே சந்தித்துப் பேசணும். உதயாவோட தேர்வு முடிந்ததும் கல்யாணத்தை முடிச்சிடலாம்.. இனிமேலும் சிறுசுகளைப் பிரிச்சு வைக்கறதும் வேண்டாம்..." என்றார் பெரிய மனதுடன்...



அவர்கள் சென்றதும்.. தட்டுகளையும் டம்ளர்களையும் எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் சென்றாள் வசுதா...

"வசுதா...." உதயாவின் குரலில் திரும்பிப் பார்த்தாள்.

"உங்களைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது.. உங்களை எடுத்தெறிந்து பேசியிருக்கேன்... உதாசீனப்படுத்தியிருக்கிறேன்... அதையெல்லாம் மனசில் வைத்துக் கொள்ளாமல்.. எனக்காக.. என்னோட நல்வாழ்க்கைக்காக கஷ்டப்பட்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிற போது.. எனக்கு உடம்பெல்லாம் குன்றிப்போகிறது. ஆனந்த் என்னிடம் எல்லாவற்றையும் சொன்னார். நீங்கள் அவர்கள் வீட்டுக் குழந்தையைக் காப்பாற்றினீர்களாம். அதையும் சொன்னார். உங்க முன்னால் நான் ரொம்பவும் சின்னவளாகி விட்டேன் வசுதா... எங்களை சேர்த்து வைத்ததற்கு எத்தனை தடவை நன்றி சொன்னாலும் போதாதுதான். உங்களை இந்த ஜென்மத்துக்கும் மறக்க மாட்டேன்" தழுதழுக்கும் குரலில் சொன்னாள் உதயா.

"போச்சுடா... எதற்கு இதைப் பெரிதுபடுத்தி பேசறே உதயா... ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்வது சகஜம். இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. என் இடத்தில் யார் இருந்தாலும் இப்படித்தான் செய்திருப்பார்கள்..."

"வேறு யார் இருந்தாலும் எனக்கெதுக்கு வம்பு என்று ஒதுங்கி போயிருப்பாங்க... எனக்கு சம்பந்தமில்லாத விஷயத்தில் ஏன் தலையிடணும் என்று பேசாமல் இருந்திருப்பாங்க.. ஆனா நீங்க.. நான் உங்களை கேவலமா நடத்தியும் அதை மனசில் வைத்துக் கொள்ளாமல்.. என் நன்மைக்காக இத்தனை பாடுப்பட்டிருக்கீங்களே.. ரியலி... யூ ஆர் கிரேட் வசுதா... உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை..."

''என்ன உதயா இது.. எனக்கு உடன்பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை... நான் பார்க்கிற.. பழகற எல்லோரையும் எனக்கு வேண்டியவர்களாகத்தான் நினைக்கிறேன். உன்னையும் என் சகோதரியாகத்தான் பார்க்கிறேன் உதயா.. அப்போ.. நீ நன்றாக இருக்க வேண்டும் என்று ஆசைதானே வரும்.. அதான்.. நீயும் ஆனந்த்தும் சேரவேண்டும் என்று எண்ணி அதற்காக பாடுபட்டேன்.. இதோ... அது நடந்துவிட்டது. இனி நான் சந்தோஷமாக இங்கிருந்து கிளம்புவேன்... உன்னுடைய இனிய மண வாழ்க்கைக்கு இப்போதே என் வாழ்த்துக்கள்.. உதயா...''

அதைக் கேட்டதும் ஓடிப்போய் அவளை அணைத்துக் கொண்டாள் உதயா.. அவள் மனம் நெகிழ்ந்திருப்பதை கலங்கியிருந்த கண்கள் உணர்த்தின.

''வேண்டாம் வசுதா.. போகிறேன் என்று மட்டும் சொல்லாதீர்கள்... நீங்கள் போகக் கூடாது. நீங்கள் இங்குதான் இருக்க வேண்டும்..'' என்றாள் உணர்ச்சி வசப்பட்டு...

சிரித்தாள் வசுதா...

''இங்கேயே எப்படி இருக்க முடியும் உதயா... கற்பகம் ஆன்ட்டீ எழுந்து வேலை செய்ய ஆரம்பித்ததும் எனக்கு இங்கே என்ன வேலை.. சும்மாவே தங்க முடியுமா என்ன.. எந்த உரிமையில் இருப்பது.. ம்ம்...''

'பளிச்'சென்று உதயாவிடமிருந்து பதில் வந்தது.

''என் அண்ணி என்ற உரிமையோடு.. என்ன வசுதா... முட்டாள்தனமா பேசுகிறேனே என்று நினைக்கிறீர்களா. ஊஹூம்.. சரியாகத்தான் பேசுகிறேன்... எங்களிடம் பாசத்துடன்.. அன்புடன் இருக்கும் ஒருத்திதான் எங்களுக்கு அண்ணியாக வரவேண்டும் என்ற ஆசை எனக்கு...



எங்கள் மீது அக்கறையும் இருக்க வேண்டும்.. அத்தனைப் பண்பும் உங்களிடம் இருக்கிறது வசுதா... என்னடா நேத்துவரை மல்லிகாவை அண்ணியா நினைத்து அவளை சுற்றி வந்தவள்... இன்று இப்படி 'பல்டி' அடித்து பேசுகிறாளே என்று பார்க்கிறீர்களா.. ஒரு காரியத்தை செயல்படுத்துவதில் உங்களுடைய அணுகுமுறையே வேறு... மல்லிகாவின் போக்கே வேறு... அவள் பேச்சக் கேட்டு நடந்திருந்தால் எத்தனை அசிங்கப்பட்டிருப்பேன். இன்றைக்கு இன்முகமாய் பேசினார்களே... ஆனந்தின் வீட்டினர்... அவர்கள் என்னிடம் முகம் கொடுத்துப்பேசியிருப்பார்களா.. இல்லவே இல்லை.. மல்லிகா என் தோழிதான்.. ஆனால்.. இந்த வீட்டிற்கு மருமகளாகும் தகுதி அவளுக்கு இல்லை வசுதா.. என் கல்யாணத்திற்கு உதவினீர்கள் என்பதற்காக இதைச் சொல்லவில்லை... என்னை நம்புங்கள் வசுதா.. எங்களுக்கு அண்ணியாக வர உங்களுக்கு சம்மதமா...''

உதயாவின் பேச்சைக் கேட்டு மனம் குளிர்ந்தாலும்.. அவளது வாயால் அண்ணி என்று அழைக்கப்பட்டதை எண்ணி உள்ளுக்குள் கிளுகிளுப்பு அடைந்தாலும்.. அறிவு விழித்துப் பார்த்து எச்சரித்தது.

உதயாவிடம் நிதானமாய் எடுத்துச் சொன்னாள்.

''இல்லை உதயா.. உணர்ச்சி வேகத்தில் என்ன பேசுகிறோம் என்று புரியாமல் பேசுகிறாய்.. உன் அண்ணியாக வருவதற்கு ஒரு முக்கியத் தகுதி வேண்டும்.. அதை மறந்து விட்டாயே... உன் அண்ணன் மனதில் இடம் பிடித்திருக்க வேண்டும்... திருமணம் என்பது அவரவர் சொந்த விஷயம் உதயா.. அதில் நாம் தலையிட முடியாது. அவரவர் மனதுக்குப் பிடித்த வாழ்க்கைத் துணையைத்

தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்குத்தான்... அது உனக்கும் இப்போது புரிந்திருக்குமே... சரி... இரண்டு நாளா உனக்கு சரியான தூக்கம் இல்லை.. இன்றைக்கு சீக்கிரமே சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கு.. அப்போதான் 'ஸ்வீட் ட்ரீம்ஸ்' வரும்..." என்றாள் குறும்புச் சிரிப்புடன்..

வசுதாவின் கன்னத்தில் முத்தமிட்டு.. 'குட் நைட்' என்று சொல்லிவிட்டு இளங்கன்றாய் துள்ளிச் சென்றாள்.

வசுதாவிற்கு சிரிப்பு வந்தது.

அன்று ரோஹன்.. நேற்று கற்பகம் ஆன்ட்டி...

இன்று உதயா..

ஆனால் அது நடக்கும் விஷயமா... ஆதியின் இதய சிம்மாசனத்தில் ராணியாய் வீற்றிருப்பவள் யாரோ... அவளுக்குத் தான் அண்ணியாகும் உரிமை...

இருந்தும்...

'அண்ணி...' அந்த வார்த்தை தேனாய் இனிக்கத்தான் செய்தது...

உதயாவை ஆனந்த் வீட்டார் ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்று அறிந்தால் ஆதித்யா சந்தோஷப்படுவானா..

ஆனந்தின் தந்தை தானே பிரச்சனை...

மற்றபடி அனைவரும் நல்லவர்கள்தானே... உதயா மீது அன்பைப் பொழிபவர்கள் ஆயிற்றே.. ஏன்.. இந்தத் திருமணம் முடிந்தால்... உதயாவின் குணத்தைப் பார்த்து விட்டு அந்த மகாதேவனும் மனம் மாறலாம்...

கற்பகமும் அதையேத்தான் சொன்னார்.



"எல்லாருமே நல்ல மனம் படைத்தவர்களாக இருந்து விட முடியுமா.. வீட்டில் யாராவது ஒருத்தர் இப்படிப் பிரச்சனை எழுப்புபவராகத்தான் இருப்பார்கள்.. உதயாவிற்கு நல்ல மாமியார்.. அன்பான புருஷன் அமைந்திருப்பது அவளோட அதிர்ஷ்டம்தான்... ஏன் ஓரகத்தியும் மச்சினரும் கூட நல்லவர்களாகத் தெரிகிறார்கள்... அதுபோதும்மா.. பாரேன்... ஆதியும் இதற்கு ஒப்புக் கொள்வான்.. தங்கையோட விருப்பத்துக்கு தடையும் சொல்லமாட்டான்..."

ஆனால்...

விஷயம் அறிந்து ஆதித்யா மகிழ்ச்சியடையவும் இல்லை... வசுதாவைப் பாராட்டவும் இல்லை.. மாறாய்.. பாம்பாய் சீறினான்... தேளாய் கொட்டினான். மரங்கொத்தியாய் கொத்திப் பிடுங்கினான்.

"நீ யார் இந்த விஷயத்தில் தலையிட.... என் தங்கை கல்யாணத்தை முடிவு செய்ய உனக்கு யார் உரிமை கொடுத்தது.. வேலைக்காரியாய் மட்டுமே இருக்கப்பார்.. இல்லே இங்கிருந்து போய்விடு.. ஆமாம்.. இந்த வேலைக்கு அவர்கள் எவ்வளவு கூலி கொடுத்தார்கள்.. எத்தனை லட்சம் வாங்கினே.. ம்ம்..."

கண்கள் கோவைப்பழமாய் சிந்திருக்க.. அவன் சினத்தோடு பேச...

வசுதா விக்கித்துப் போனாள்... அவளது இதயம் சுக்கு நூறாய் சிதறிப்போனது.

## 20

'ஓ' வென்று கொட்டும் மழையை வெறித்தவாறு நின்றிருந்தாள் வசுதா..

பாவம்... வானத்துக்கு என்ன துக்கமோ... இப்படிக் கொட்டித் தீர்க்கிறது... என்னால் முடியவில்லையே...

ஆதித்யாவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள்.. அமிலத்துளிகளாய்.. இதயத்தை சுட்டுப் பொசுக்கி விட்டதோ...

பின் எப்படி உயிருடன் இருக்கிறேன்... நடைப்பிணமாகவா... மீண்டும் மீண்டும் அவனது வார்த்தைகள்.. தீக்கங்குகளாய் அவளைச் சுட்டன...

கண்களை மூடிக் கொண்டாள்... நெஞ்சில் வேதனை பாரமாய் அழுத்தியது.

'நீ யார் இதில் தலையிட...' கூர்வாளால் நெஞ்சைத் துளைத்தாற்போல வலித்தது.

'உண்மைதானே... நான் யார்... இவர்களின் குடும்ப விஷயத்தில் தலையிட.... எனக்கு என்ன உரிமை இருக்கிறது'' எங்கிருந்தோ வந்தவள் நான்...

'என் தங்கை கல்யாணத்தை முடிவு செய்ய உனக்கு யார் உரிமை கொடுத்தது...' சம்மட்டியால் மனதை அடித்தாற்போல இம்சை... அதுவும் உண்மைதான்.. இவர்களுக்கு நான் என்ன சொந்தமா.. பந்தமா... மூன்றாவது மனுஷி.. இழுத்துப் போட்டு செய்வதால் உரிமை வந்துவிடுமா...

'வேலைக்காரியாய் மட்டுமே இருக்கப்பார்... இல்லை.. இங்கிருந்து போய் விடு..' இதயத்தை நகக்கினாற்போல வேதனை...

அய்யோ.. அதை எப்படி மறந்தேன்.. இரண்டு.. மூன்று தடவை என்னிடம் சிரித்துப் பேசினாரே என்றதும்... என் நிலைமையை மறந்துபோனது என் தப்புதான்... வேலைக்



காரி ஒருநாளும் வீட்டுக்காரியாக முடியாது என்பதை ஏன் மறந்தேன்...

'இந்த வேலைக்கு அவர்கள் எவ்வளவு கூலி கொடுத்தார்கள்.. எத்தனை லட்சம் வாங்கினே...' மார்பினுள் தீப்பந்தத்தை சொருகியதுபோல ஒரு அவஸ்தை... அவர்கள்... ஆனந்த் வீட்டாரிடம் கூலி வாங்கி இந்த கல்யாணத்தை முடிக்க நான் தரகர் என்று நினைத்தானா... அதுவும் லட்ச லட்சமாய் பணம்.. சே.. என்ன ஒரு கீழ்பார்வை இது...

இனியும் இங்கிருப்பது சரியில்லை... எப்போது ஆதித்யா இவ்வளவு மட்டமாய் அவளை நினைத்தானோ.. அதற்கு பின்னும் இங்கு தங்குவது அவமானம்...

ஒரு பெண்ணோட வாழ்க்கையை மலர வைத்த ஆத்மதிருப்தி.. அதுபோதும்.. எண்ணங்கள் சுழன்று அடித்தன.

அவளது முக வாட்டத்தைப் பார்த்துவிட்டு கற்பகம் அவளிடம் கேட்டாள்.

''ஏம்மா.. ஏன் ஒரு மாதிரியாக இருக்கே... ஆதி ஏதாவது சொன்னானா''

''ப்ச்க... ஆதித்யாவிற்கு இந்தக் கல்யாணத்தில் சம்மதம் இல்லை என்று தெரிகிறது ஆன்ட்டி.. அவர் தங்கைக்கு மாப்பிள்ளை அவர்தானே பார்க்க வேண்டும். நானும் இங்கிருந்து போய்விடலாம் என்று பார்க்கிறேன். ஒரு வாரத்தில் உங்களுக்கு சரியாகிவிடும் இல்லையா....'' என்றாள் வசுதா.

''ஏம்மா இந்த திடீர் முடிவு.. இங்கே உனக்கு என்ன குறை.. திரும்ப ஊருக்கே போறதாய் தீர்மானமா... அங்கே

உன் சித்தி சரியில்லை என்றாயே வசு...'' கற்பகம் வினவினாள்.

''அவர்கள் இன்னும் ஊர்திரும்பவில்லையாம்.. அப் படியே வந்து விட்டாலும்.. வேறு வேலைத் தேடிக் கொண்டு போய்விடலாம் என்ற எண்ணம்.. எத்தனை நாள் இங்கே இருப்பது...''

''கேட்கவே மனசுக்கு கஷ்டமா இருக்கும்மா வசு... உன்னை வேற்றாளாக பார்க்க முடியவில்லை. ஏதோ வருடக் கணக்கில் எங்களுடன் இருந்தமாதிரி தோன்று கிறது.. நீ போறேன் என்று சொல்லும் போது மனசு தாள வில்லை...''

சிரித்தாள் வசுதா... ''அய்யோ ஆன்ட்டி... ஒருநாள் நான் போய்த்தானே ஆகவேண்டும்.. எனக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறது.. எதிர்காலம் இருக்கிறது... இங்கேயே இருந்து அதை இருட்டடைப்பு செய்ய முடியுமா ஆன்ட்டி... சொல்லுங்கள்...''

''உண்மைதான் வசு... நான் முட்டாள்... நீ சாதாரண வசு என்று நினைத்துப் பேசுகிறேன்... வெறும் வேலை செய்ய வந்தவளாய் இங்கு எத்தனை நாள் உழைத்துக் கொண்டு இருப்பே.. உனக்கு அது தலையெழுத்தும் இல்லையே. நீ புறப்படு வசு... உன் அருமையை எல்லோரும் தெரிந்து கொண்டாலும்... ஒருத்தன் மட்டும் கல்லுளிமங்கன் மாதிரி புரிந்து கொள்ளாமல் இருக்கிறான்... அவனும் உணரட்டும்...'' கற்பகத்தின் வார்த்தைகளில் கொஞ்சம் வருத்தமும் கொஞ்சம் கோபமும் கலந்திருந்ததை வசுதா உணர்ந்தாள்.

வசுதா செல்கிறாளே என்ற வருத்தம்...



அவளைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறானே ஆதி என்ற கோபம்...

புறப்படுகிறேன் என்று சொல்லிவிட்டாலும்.. எங்கே என்ற கேள்வி எழுந்து அவளைக் குழப்பியது.

ஊருக்கு என்று வெகு எளிதாய் சொல்லிவிட்டாலும் உள்ளுக்குள் கொஞ்சம் உதறல் இருக்கத்தான் செய்தது. அங்கே ஆள் விழுங்கி பூதங்களாய் சித்தியும்.. அவளது தம்பியும் இருப்பார்களோ.. என்ற பயம்.

சிவராம் அங்கிளின் நண்பர் சிங்காரவேலுவிடம் போய் கேட்டுப் பார்க்கலாமா...

முதலில் அவரது கம்பெனி கார்டு எங்கே என்று பார்க்க வேண்டும்.. ஒருவேளை இனித் தேவையில்லை என்று வீசியெறிந்து விட்டேனோ...

தன் கைப்பையை துளாவினாள். அதில் இல்லை... ப்ச்சு... தொலைந்து விட்டது என்று வருந்தினாள்.

படிக்காமல் பாதியில் விட்ட நாவலைப் புரட்டியபோது அதில் இருந்தது.

உதயாவின் 'செல்'லை இரவல் வாங்கி நம்பரை அழுத்தினாள்.

அவரே பேசியது.. ''இப்போது எந்த வேலையும் காலி இல்லையேம்மா... ஒண்ணு செய்.. ஒரு ஆறுமாதம் கழித்து என்னைக் 'கான்டாக்ட்' பண்ணு.. அப்போ வேலை இருக்கும் வாய்ப்புண்டு.. ஏன்னா.. வேலை செய்யற பொண்ணு ஒருத்தி கல்யாணம் செய்து கொண்டு அமெரிக்காவுக்குப் போகிறாள். அந்த வேலையில் நீ சேரலாம்மா.. எதுக்கும் உன் பயோடேட்டாவை அனுப்பி

வைம்மா'' என்று அவர் சொல்லிவிட... அவளுக்கு ஏமாற்றம்.

எங்கே போவது.. யாரைத்தேடிப் போவது.. உயிர்த் தோழிகள் என்று யாரும் இல்லையே... எல்லாமே 'ஹாய்.. ஹலோ' என்ற அளவில் தானே சிநேகம்... உறவுகளின் அருமை இப்போதுதான் புரிகிறது... அப்பா பக்கமும் நெருக்கம் இல்லை.. அம்மா இறந்த பின்பு அந்தப் பக்க உறவும் அறுந்துவிட்டது.

ஏதோ திக்குத் தெரியாத வனாந்திரத்தில் தன்னந் தனியாய் நிற்பதுபோல.. யாரும் இல்லாத தனித்தீவில் ஒண்டியாய் இருப்பது போல ஒரு வெறுமை உணர்வு அவளை ஆட்டுவித்தது...

கையிலிருந்து 'விசிட்டிங் கார்டும்' எங்கோ போய் விழுந்தது.

ஒருவாரம்.. அதற்குள் ஏதாவது வழி கிடைக்காதா... பார்க்கலாம்...

அதுவரையில் ஆதித்யாவின் பாராமுகத்தை சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். வேறுவழியில்லை..

இரண்டு நாட்கள் கழிந்தன...

அன்று நிரஞ்சன் அவளிடம் வந்தான்...

''அய்யாவுக்கு ஏதோ கோபம் போலத் தெரிகிறது. எதற்கெடுத்தாலும் எரிந்து விழுகிறான்.. சம்திங் ராங் வித் ஹிம் வசு... எப்போதும் சக்லேஷ்புர்க்கு போகிறவன் இன்று என்னைப் போகச் சொல்கிறான்.. அதுவும் 'ஆர்டர்' வேறு 'டாடா சபாரி'யை எடுத்து போ என்று.. யார் அதில் போவார்கள்.. அது இங்கேயே இருக்கட்டும்.. நான்



'ஜம்'மென்று 'பைக்'கில் போகப்போகிறேன்.. ஆகா.. காற்றைக் கிழித்துக் கொண்டு 'விர்' என்று போவதில் இருக்கும் மஜா காரில் வரவே வராது...''

''உங்கண்ணா எதுவும் சொல்லமாட்டாரா நிரஞ்சன்.''

''அப்புறம் சமாளித்துக் கொள்வேன்... இப்போதைக்கு 'பைக்' சவாரியின் 'திரில்' தான் வேண்டும்.. சரி... வயிறு 'கபகப' என்கிறது வசு... சாப்பாடு ரெடி என்றால் மூக்குப் பிடிக்கச் சாப்பிட இந்த சாப்பாட்டு ராமனும் ரெடி'' என்றான் வேடிக்கையாக...

வசுதா சிரித்தவாறு அவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்.

ரோஹனைப் பிடிக்க முடியவில்லை. கடைசி தேர்வும் முடிந்து விட்டது என்ற குஷி...

''எக்ஸாம் எல்லாம் சூப்பராய் எழுதியிருக்கிறேன்.. வசுதா நிச்சயம் 'ரேங்க்' வரும்.. ரிசல்ட் அடுத்த மாதமாம்.. வந்ததும் பார்ட்டி.. ஓகே..'' என்றான் வெகு உற்சாகமாய்...

அப்போது நான் இங்கே இருக்கமாட்டேன் ரோஹன் என்று சொல்லி அவனுடைய ஜாலி 'மூட்'டை கெடுக்க விரும்பாமல்.. அவனது கேசத்தை செல்லமாய் கலைத்து ''ஷ்யூர் கண்ணா..'' என்றாள்.

''இனிமே ஜாலி வசுதா.. ஹாயா கார்டூன்... போகோ பார்க்கலாம்... கிரிக்கெட் விளையாடலாம்.. நேரம் கழித்து எழுந்திருக்கலாம்.. இல்லே...'' என்றான் குதூகலத்துடன்.. சொன்னதுடன் இல்லாமல்.. டி.வி.யை ஆன் செய்து பார்க்கவும் தொடங்கி விட்டான்.

கற்பகம் மெல்ல நடக்க ஆரம்பித்து.. சாப்பாட்டு மேஜை வரை வர முடிந்தது.

அனைவரும் சாப்பிட்டு விட்டு.. வசுதாவும் சாப்பிட ஆரம்பிக்கும் போதுதான் போன் அழைக்க வேண்டுமா.. விரைந்து சென்று எடுத்தாள்.

''ஹலோ... இது மிஸ்டர் நிரஞ்சனின் வீடு தானே'' ஆங்கிலத்தில் கேட்டது ஒரு குரல்...

''ஆமாம்... ஆனால் நிரஞ்சன் இங்கே இல்லையே... அவர் வேலை விஷயமாய் 'சக்லேஷ்புர்' போயிருக்கிறார். ஏதாவது சொல்ல வேண்டுமா.. சொல்லுங்கள்.. அவரிடம் தெரிவிக்கிறேன்..'' என்றாள் வசுதா.

''சரி... அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கிறது. 'எமர்ஜென்ஸி'யில் இருக்கிறார்... நினைவில்லாமல் கிடக்கிறார்.. அந்தத் தகவலைச் சொல்லத்தான் உங்களுக்கு.. போன் செய்தோம்.. உடனே புறப்பட்டு வாருங்கள்.. ப்ளீஸ்.''

செய்தியைக் கேட்டதும் ''அய்யோ'' என்று அலறினாள் வசுதா.

''என்னாச்சம்மா வசு.. என்ன விஷயம்'' என்று பதைத்துப் போய் கேட்டாள் கற்பகம்.

''மேடம்... சீக்கிரம் வாருங்கள்.. அவங்க க்ரூப் ரத்தம் தேவைப்படுகிறது... அதற்கு நீங்கதான் ஏற்பாடு பண்ண வேண்டும்.. மெடிசன்ஸ் வாங்கித்தானும்... தவிர.. தலையில் அடிப்பட்டிருப்பதால்.. ஓ.டிக்கு அழைத்துச் சென்று 'சூர்' போடவேண்டியிருக்கிறது. அவர் அருகே சொந்தக்காரர் யாராவது இருக்கவேண்டும்.. எங்கள் ஹாஸ்பிடல் பெங்களூர் போகும் வழியில் இருக்கிறது.. லாண்ட் மார்க்.. போன் நம்பர் எல்லாம் தருகிறேன்..



உடனே வாருங்கள்'' அட்ரஸ்.. லாண்ட் மார்க்.. போன் நம்பரைக் குறித்துக் கொண்டு ''அவருக்கு ஆபத்தில்லையே'' என்று கேட்டாள்.

''இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது மேடம்... நிலைமை கொஞ்சம் சீரியஸ் என்றுதான் சொல்லவேண்டும்.. உடனே வரப்பாருங்கள்'' தொடர்பு துண்டிக்கப் பட்டது.

''என்ன விஷயம்னு சொல்லக்கூடாதா வசுதா...'' கலவரத்துடன் கற்பகம் கேட்க...

''நிரஞ்சனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கிறதாம்.. ஹாஸ்பிடலில் நினைவின்றி இருக்கிறாராம்.. அங்கிருந்து தான் செய்தி வந்திருக்கிறது... உடனே கிளம்பணும் ஆன்ட்டீ.. ஆதிக்கு உடனே போன் பண்ணிச் சொல்ல வேண்டும்.. கடவுளே.. எனக்கு உடம்பெல்லாம் நடுங்குகிறதே..'' என்றவள்... டைரியை எடுத்து ஆதியின் எண்களைத் தேடி.. அழுத்தினாள்.

விஷயத்தைக் கேட்டு ஆதியும் பதறினான்.

நிரஞ்சன் காரில் போகவில்லை என்று அறிந்ததும் அவனுக்கு கோபம் வந்தது...

''ஆன்ட்டீ.. நான் உதயாவோட 'செல்'லை எடுத்துக் கொண்டு போகிறேன்.. வழியில் ஹாஸ்பிடலுக்கு போன் செய்து விசாரிக்க வேண்டும்.. உதயாவிடம் சொல்லி விடுங்கள்.. ரோஹனுக்கு எதுவும் தெரியவேண்டாம்..'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

மனம் கிடந்து தவித்தது.. 'நிரஞ்சனுக்கு எதுவும் ஆகக்கூடாது... 'ஹி இஸ் ஆல்ரைட்' என்று டாக்டர்

சொல்லிவிட்டால்... அதுபோதும்... பிள்ளையாரப்பா.. உடனே உன் கோவிலுக்கு வந்து சேவிக்கிறேன்..' என்று உள்ளம் உருக வேண்டினாள்...

கழியும் ஒவ்வொரு நிமிடமும் பொன்னாய் தெரிந்தது அவளுக்கு.. டாக்ஸியை அழைக்கலாமா என்று யோசித் தவள்... அது வந்து அழைத்துச் செல்ல தாமதம் ஆகுமே என்று தவிர்த்தாள். ஆட்டோவும் சரிப்படாது... என்ன செய்வது என்று எண்ணமிடு... வீட்டிலேயே கார் இருக் கிறதே... 'டாடா சபாரி'... அதை மறந்து போனோமே.. என்று தன் மறதியை கடிந்துகொண்டு அதன் சாவியை எடுத்து வந்தாள்...

"அம்மா.. வசு.. போனதும் போன் பண்றேயா... பிள்ளை எப்படி இருக்கிறானோ என்று இங்கே தவித்துக் கொண்டு இருப்பேன்..." புறப்பட்டுக் கொண்டிருந்த வசுதாவிடம் கண்கலங்க சொன்னாள்...

'டாடா சபாரி'யை ஓட்டும் ஆனந்தம் இல்லவே இல்லை. ஹாஸ்பிடல் போய் சேர்ந்தால் போதும் என்ற தவிப்பு மட்டுமே இருந்தது.. அதிவேகமாய் காரை ஓட்டி இரண்டரை மணி நேரத்தில் ஹாஸ்பிடலை அடைந்தாள்.

ஆதித்யா அவளுக்கு முன்னாலே வந்து சேர்ந்துவிட் டான்.

'இன்டென்ஸிவ் கேர் யூனிட்' இருக்கும் இடத்தை தேடி.. அங்கு சென்றவன்.. கண்ணில் பட்ட நர்ஸிடம் தம்பியின் பெயரைச் சொல்லி விசாரித்தான்.

இன்னும் அபாயக் கட்டத்தை தாண்டவில்லை என்று சொன்ன அந்த நர்ஸ்... ஒரு நீள மருந்துப்பட்டியலை



எடுத்து நீட்டினாள். கீழேயே பார்மஸி இருக்கிறது. போய் உடனே வாங்கி வாருங்கள் என்றாள்.

நெஞ்சில் வேதனை பாரமாய் அழுத்த மாடியிலிருந்து இறங்கி வந்தான் ஆதித்யா...

'பார்மஸி' போர்டு எங்கே என்று கண்களால் தேடிய போதுதான் அவனது கண்ணில் பட்டது ஒரு காட்சி... தன் கண்களையே நம்ப முடியாத காட்சி!

'டாடா சபாரி'யை ரிவர்ஸில் கொண்டு போய் இரு கார்களின் நடுவே லாவகமாய் 'பார்க்' செய்து கொண்டிருந் தாள் வசுதா... அவனுடைய புருவங்கள் மேலேறிப் பின்னிக் கொண்டன...

## 21

ஆபரேஷன் தியேட்டரின் கதவு திறந்து, எப்போது டாக்டர் வெளிவரு வார் என்று காத்துக் கிடந்தனர் ஆதித் யாவும்.. வசுதாவும்...

டாக்டர் என்ன சொல்லப்போகிறாரோ என்ற பயத்தில் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள் வசுதா.

விபத்து எப்படி நடந்தது... எதில் மோதி அடிப்பட்டு விழுந்தான் நிரஞ்சன் என்ற சரியான விபரம் தெரிய வில்லை...

யாரோ ஒரு டாக்ஸி டிரைவர் கொண்டு வந்து சேர்த்த தாய் மட்டும் சொன்னார்கள்.. 'பாஸஞ்ஜரை' விட்டு விட்டு வரபோயிருப்பதாயும்.. முன்னெச்சரிக்கையாய்

அவனுடைய லைசன்ஸ்ஸை வாங்கி வைத்திருப்ப தாயும் அவர்கள் சொன்னார்கள்.. ஆக்ஸிடெண்ட் கேஸா யிற்றே...

இங்கே நிரஞ்சனைக் கொண்டு வந்து சேர்த்த அந்த டிரைவருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று தோன் றியது ஆதித்யாவுக்கு.

அந்த நேரத்தில்.. அவர்களை நோக்கி வந்தான் ஒருவன்.. நாற்பது வயது இருக்கும் அவனுக்கு.

''அடிப்பட்டு இங்கே சேர்க்கப்பட்டிருக்கிறாரே.. அவ ருக்கு நீங்கள் சொந்தமா...'' என்று மலையாளத்தில் அவன் கேட்டான்.

ஆதித்யாவும் அதற்கு மலையாளத்திலேயே பதில் சொன்னான்.

''ஆமாம்.. அவன் தம்பிதான்.''

உடனே தன் 'பாக்கெட்'டிலிருந்து கைக்குட்டையால் சுற்றிய சின்ன முடிச்சை எடுத்துத் தந்தான்.

அதைப் பிரித்துப் பார்த்தபோது.. அதில் நிரஞ்சனின் வாட்ச்.. செயின்.. மோதிரம்.. பர்ஸ்.. லைஸன்ஸ் எல்லாம் இருந்தன.

நிரஞ்சன் அடிப்பட்டுக் கிடந்ததைப் பார்த்துவிட்டு தன் காரை நிறுத்தியதாகவும்.. தன் காரில் இருந்த பயணிகளின் உதவியுடன் அவனை டாக்ஸியில் ஏற்றி அருகில் இருந்த இந்த மருத்துவமனையில் சேர்த்ததாயும்.. பழுதுபட்டிருந்த வண்டியை 'மெக்கானிக் ஷாப்'பில் விட்டு வந்ததாயும் கூறினான்.



''ஹாஸ்பிடல் நிர்வாகிகள் தன் லைஸன்ஸை வாங்கி வைத்திருக்கிறார்கள்.. அதை நீங்கள்தான் கேட்டு வாங்கித் தரணும் சார்'' என்று வேண்டிக் கொண்டான்.

அவனுக்கு நன்றி கூறிய ஆதித்யா.. தன் பர்ஸிலிருந்து ஆயிரம் ரூபாய் தாள் ஒன்றை எடுத்துக் கொடுக்க...

அதை வாங்க மறுத்துவிட்டான் அந்த டிரைவர்.. ''மனித நேயத்திற்கு தயவு செய்து விலைக் காட்டா தீர்கள்'' என்று அவன் சொன்னது 'பளீர்' என்று கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது...

இந்தக் காலத்தில் இப்படியும் புண்ணியவான்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்... இன்னும் தர்மம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று நினைத்து வியந்து போனான் ஆதி...

அவனுடைய கையைப் பற்றி நன்றி கூறிய ஆதித்யா.. அவனை தன் தோளுடன் சேர்த்து அணைத்துக் கொண் டான்...

ஹாஸ்பிடல் நிர்வாகிகளிடம் சென்று.. அவனது லைஸன்ஸையும் வாங்கிக் கொடுத்தான்.

இருவரின் உரையாடல் முழுவதும் புரியாவிட்டாலும் ஏதோ தெரிந்த வார்த்தைகளை வைத்து இதுதான் என்று ஊகித்துக் கொண்டாள் வசுதா.

ஆதியைக் கேட்க.. அவன் முகம் கொடுத்துப் பேசினால் தானே.. இன்னும் 'உம்' மென்றே இருந்தான்.. டாக்டர் வெளிவந்தார்.

விழுந்த வேகத்தில் 'ஹெல்மேட்' கழண்டிருக்க வேண் டும்.. இல்லை... நிரஞ்சன் அதைக் கழற்றியிருக்க வேண்டும்...

காதுக்கு மேல்புறம்.. தலையில் அரை இன்ச் அளவில் சதை பிய்ந்து.. நிறைய இரத்தம் போயிருக்கிறது அவரை இங்கு கொண்டு வந்தபோது முகம் எல்லாம் இரத்தம்.. கையில்.. விலாப்பகுதியில் பிராக்சர்.. இப்போது தலையில் தையல் போட்டிருக்கிறது.. இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது..'ஸ்கேன்' செய்து பார்த்த பிறகுதான் 'கன்டிஷன்' என்ன என்று சொல்ல முடியும்.. டாக்டரின் வார்த்தைகள் பயத்தைக் குறைக்கவில்லை.. அவரது வாயிலிருந்து உயிருக்கு ஆபத்தில்லை என்று வரவில்லையே என்ற கலக்கம் தான் ஏற்பட்டது.

ஆதி தொய்ந்து போய் அமர்ந்திருந்தான். அவனது கண்களில் வேதனை தெரிந்தது.

வசுதாவிற்கு தாளவில்லை... அவனை தன்மீது சாய்த்துக் கொண்டு.. அவனது கேசத்தை கோதி.. ஆறுதல் சொல்ல வேண்டும் போல உள்ளம் துடித்தது..

ஆனால் அருகே செல்லவும் துணிவில்லை.

நான்கு மணி நேரம் மௌனமாகவே கழிந்தது... எதையும் சாப்பிடும் மனநிலை இல்லை.. பசியும் எடுக்கவில்லை...

நர்ஸ் வந்து அழைத்தாள்.

''பேஷண்ட்டுக்கு நினைவு திரும்பியாச்சு...'' என்று சொல்ல...

ஆதித்யா விரைந்தான்.. வசுதா அவனைத் தொடர்ந்து சென்றாள்.

இன்னும் அரைமயக்கத்தில் இருந்தான் நிரஞ்சன். தலையில் கட்டுப் போட்டிருந்தது.



அவனருகே குனிந்து ''நிரஞ்சன்.. இங்கே பார்...'' என்று மெல்ல அழைக்க...

கஷ்டப்பட்டுக் கண்களைத் திறந்தான் நிரஞ்சன்.

''அண்ணா.. தலை.. வலிக்கிறதே... முடியவில்லையே...'' என்று முனகினான்.

''ஒன்றுமில்லேடா... தலையில் லேசாய் காயம் பட்டிருக்கு.. அவ்வளவுதான்'' தொண்டை அடைத்தது ஆதிக்கு... நிரஞ்சனின் பார்வை வசுதாவின் பக்கம் திரும்பியது. அவளைப் பார்த்துப் புன்னகைத்தவன்... ''வசுதா... நான்...'' அதற்குமேல் பேசமுடியாமல் கண்களை மூடிக் கொண்டான். மருந்தின் வீரியமோ... மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

டாக்டர் சொன்னார்... 'அவனது ஞாபக சக்தியில் எந்தக் குறையும் இல்லை என்பதால்.. மூளையில் சேதம் ஏதும் இல்லை என்று தெரிகிறது. இருந்தாலும் 'ஸ்கேன்' பண்ணிப் பார்த்துவிடலாம்.. பின்னாளில் எந்த விளைவும் வரக்கூடாது என்பதால்...'

பாறையாய் அமுத்திக் கொண்டிருந்த 'டென்ஷன்' சட்டென்று விலகினாற்போல இருந்தது.

அப்பாடா... இனி ஆபத்தில்லை என்று தெரிந்துவிட்டது. இனி வீட்டிற்கு போன் செய்து சொல்லலாம்... என்று 'செல்'லில் தகவலை தெரிவித்தாள் வசுதா.

பேஷண்ட்டைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று டாக்டர் சொன்ன படியால்.. இனி ஆதித்யா பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையுடன் அவள் கிளம்பினாள்.

அவனிடம் சொல்லிக் கொள்ளவும் இல்லை.

வீட்டிற்குள் அவள் நுழைந்ததும் ரோஹன் ஓடி வந்தான். "நிரஞ்சன் அண்ணா எப்படி இருக்காங்க வசுதா.. அண்ணாவை நான் பார்க்கணும்..." என்று கண்ணீர் மல்கச் சொன்னான்.

"அவருக்கு பயம்படும்படியா எதுவும் இல்லைடா... ஹி இஸ் ஆல் ரைட் நவ்.. இப்போ அவரைப் பார்க்க அனுமதிக்கவும் மாட்டார்கள்.. நாளைக்கு போவாயாம்..." என்று அவனைத் தட்டிக் கொடுத்தாள்.

உதயாவும் பதட்டத்துடன் வந்தாள். "என்னை எழுப்பியிருக்கக் கூடாதா வசு... நிரஞ்சனைப் பார்க்க நானும் வந்திருப்பேன் இல்லையா.. அவன் எப்படி இருக்கிறான் வசு.. ரொம்பவும் அடிப்பட்டிருக்கா... கடவுளே.. அங்கே அவன் வலியில் துடித்துக் கொண்டிருக்கும்போது இங்கே நான் ஹாயாக தூங்கிக் கொண்டிருந்தேனே..." என்று அழுகைக் குரலில் புலம்பினாள்.

"பயப்பட ஏதுமில்லை... தலையில் கொஞ்சம் அடிப்பட்டிருக்கிறது... கையில் பிராக்சர்.. அதெல்லாம் சரியாகி விடும் உதயா.. பயப்படாதே..." என்று அவளுக்குத் தைரியம் சொல்லிவிட்டு நேரே கற்பகத்திடம் சென்று.. டாக்டர் சொன்னதையெல்லாம் கூறினாள்.

"நான் வேண்டாத தெய்வம் இல்லை வசு... கெட்ட நேரமோ.. இல்லே யார் திருஷ்டியோ.. இப்படி ஆச்சு... ஆனா.. சின்ன காயத்தோடு போச்சே.. தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதுன்னு சொல்ற மாதிரி.. சரி.. நிரஞ்சனைப் பார்த்தாய் தானே...." என்று கற்பகம் வினவ...

"பார்த்துவிட்டுத் தான் புறப்பட்டேன் ஆன்ட்டி... ஆதியிடம் பேசினான்.. என்னைப் பார்த்து புன்னகைத்தான்..



அதைப் பார்த்துவிட்டுதான் டாக்டர் சொன்னது... பயப்படத்தேவையில்லை என்று.. காபி சாப்பிட்டீர்களா ஆன்ட்டி.. இல்லையா.. இதோ கொண்டு வருகிறேன்.. இருங்கள். எனக்கும் இப்போ சூடா காபி வேண்டியிருக்கிறது... தலை வெடிக்கிற மாதிரி வலி தலைவலி மாத்திரை போட்டுக் கொள்ள வேண்டும்" நெற்றியை அழுத்தியவாறு சொன்னாள்.. வசுதா.

"நீங்க போய் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளுங்கள் வசுதா... நான் காபி கலந்து கொண்டு வருகிறேன்" என்று சொன்ன உதயாவை வியப்புடன் பார்த்தாள் அவள்.

அவளிடம் இப்போது நல்ல மாற்றம் தெரிந்தது. கோபமோ.. சிடு சிடுப்போ எதுவும் இல்லை... எப்போதும் சிரித்த முகம் தான்.. இப்போது பொறுப்பும் வந்து விட்டது.. என்பது தான் ஆச்சர்யம்.

உதயாவை நினைத்து மனசுக்குள் சிரித்தவாறே குளியல் அறையில் 'ஜில்'லென்று தண்ணீரால் முகத்தை கழுவிக் கொண்டு வந்தாள்...

தலைவலிக்கு இதமாக இருந்தது.

உதயா கொண்டு வந்த ஸ்டராங் காபியைக் குடித்து விட்டு.. 'தாங்க்ஸ் உதயா...' என்றாள்.

"நீங்கள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்... தலைவலி சரியாகிவிடும்.." என்று சொல்லிவிட்டு கதவை சாத்தி விட்டுச் சென்றாள்...

உண்மைதான்.. சற்று நேரம் கண்ணயர்ந்த பின் தலை வலி மாயமாகி இருந்தது.

இரவு நல்ல சமையலாய் செய்ய வேண்டும்... மதியமும் சரியான சாப்பாடு இல்லை... என்று நினைத்து

சமயலறைக்குள் வந்தவளுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. 'ஹாட்பாக்'கில் சுடச்சுட சப்பாத்தியும்.. பீங்கான் கிண்ணத்தில் டாலும் தயாராக இருந்தது.

உதயாவாகத்தான் இருக்கும்.. என்று நினைக்கும் போதே.

"ஆச்சர்யம்.. இல்லே வசுதா.. நான்தான் செய்தது.. நீங்க அலுப்போடு இருந்ததால்.. நீங்க தூக்கத்தில் இருக்கும்போதே செய்துமுடித்துவிட்டேன். அத்தையும் ரோஹனும் சாப்பிட்டாச்சு... சூடாக இருக்கிறப்பவே சாப்பிட்டு விடுங்கள் வசு..."

உதயாவின் அன்பில் நெகிழ்ந்து போனாள் வசுதா... எல்லோரும் அன்பாய் இருக்க.. ஆதி மட்டும் ஏன் வெறுப்பை உமிழ்கிறான்.. கடைசி வரையில் மாறாமலே இருந்து விடுவானா.. உள்ளம் ஏங்கியது.

ஆதித்யா வந்தபோது மணி பத்து.. தயாராய் எடுத்து வைத்திருந்த உணவை அவனே போட்டுக் கொண்டு சாப்பிட்டான்.

வசுதாவிடம் "உன்னிடம் பேசவேண்டி இருக்கிறது. என் அறைக்கு வா..." என்றான்.

இந்த ராத்திரி வேளையில் பேச என்ன இருக்கிறது. மறுபடியும் ஏதாவது குற்றம் கண்டுபிடித்து அதற்காக இந்த விசாரணையா... அப்படி என்ன தவறு செய்தேன்... தெரியவில்லையே.. குழப்பத்தில் எத்தனை யோசித்தாலும் மூளைக்கு வரவில்லை.

அறையினுள் நுழைந்த அவளைத் துளைப்பது போல பார்த்தவன்... "உண்மையை சொல்.. நீ யார்... எதற்காக இந்த வேலைக்கு வந்தாய்..." என்றான் கோபமாய்...



அந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவும் இல்லை.. உதயா விஷயமாக ஏதாவது கேட்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு அவனது கேள்வி தடுமாற்றத்தைத் தந்தது.

வார்த்தைகள் தட்டுத் தடுமாறி வந்தன.

"நான்.. நான்தான்.. சொன்னேனே.. நான் அனாதை... வேலைக்கு.. வரவேண்டிய.. சூழ்நிலை.. என்று.."

"ஓகோ... ஏழை அனாதைக்கு கார் ஓட்டக் கூட வருமா என்ன... அதுவும் விலையுயர்ந்த பெரிய காரை.. யாரிடம் கதையளக்கிறாய்.. உண்மையைச் சொல்லிவிடு.. யார் நீ.. இங்கு பொய் சொல்லி வரக் காரணம் என்ன..."

அப்போது தான் 'மடேர்' என்று அடிவிழுந்த மாதிரி உறைத்தது.

அய்யோ... அதை எப்படி மறந்தேன்.. பதற்றத்தில் எல்லாவற்றையும் மறந்து விட்டேனே... நிரஞ்சனைப் போய் பார்த்தால் போதும் என்ற அவசரத்தில்... ஆதிக்கு சந்தேகம் வரும் என்பதும் தோன்றாமல் போனதே.. அதுவும் டாடா சபாரி! கடவுளே! அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த ஆதி மறுபடியும் அழுத்திக் கேட்டான்...

"இதோபார்... உன் வண்டவாளம் எல்லாம் தெரிந்து விட்டது. இந்த வீட்டுக்கு வரவேண்டிய பெண்மணி உடம்பு சரியில்லாததால் வாமுடியாமல் போய்விட்டது என்ற செய்தி எனக்கு உடனே கிடைத்துவிட்டது. அதற்குள் பொய் சொல்லி நீ நுழைந்துவிட்டாய்.. ஏதோ நோக்கத்துடன்தான் நீ வந்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் எனக்கு அப்போதே வந்தது.. உன் மீது கண் வைத்திருந்தேன்.. உன்னைக் கையும் களவுமாய் பிடிக்க வேண்

டும் என்று காத்திருந்தேன். உனக்குச் சமையலும் வரவில்லை.. வேலை செய்யவும் தெரியவில்லை... என் சந்தேகம் இன்னும் வலுத்தது.. என் எதிரிகளில் யாரோ உன்னை இங்கு அனுப்பி இருக்க வேண்டும் என்று நினைத்தது சரியாகி விட்டது..ஆகா.. என்ன நடிப்பு... உன்னுடைய நடிப்பைப் பார்த்து நானும் ஏமாந்து போனேன் பார்... அதைச் சொல்ல வேண்டும்.. நான் நினைத்தது பொய்.. நீ ஏமாற்றுக்காரி இல்லை... உன்னை நம்பலாம் என்று எண்ணியது மட்டும் இல்லாமல்... உன் மீது.. சே.. சொல்லவும் பிடிக்கவில்லை.. அத்தனையும் நாடகம் என்று தெரிகிறது.. உன்னைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கிறது.. என்ன சொன்னே.. கார் டிரைவிங் என்றால் ஆசை என்றா.. இன்று.. பெரிய காரை.. பழக்கப்பட்டவள் மாதிரி ஓட்டி வந்தாயே.. எப்படி.. காட்! பொய்.. அடுக்கடுக்காகப் பொய்.. உன் பொய்முகம் இன்றைக்கு நன்றாகவே தெரிந்துவிட்டது... இப்படியெல்லாம் நடந்து கொள்ள உனக்கு வெட்கமாக இல்லை...'' உறுமும் குரலில் கேட்டான் ஆதி.

வசுதா பொறுமை இழந்தாள்...

''ஸ்டாப் இட்.. ஆதி.. நான் ஒன்றும் நீங்க நினைக்கிற மாதிரி கீழ்த்தரமானவளோ.. ஏமாற்றுக்காரியோ அல்ல.. நானும் ஒரு கௌரவமான நல்ல குடும்பத்தவள்தான்... ஒரு செல்வந்தரோட ஒரே பெண் நான்.. தெரிந்து கொள்ளுங்கள்.. ஏதோ கொஞ்ச நாள் தலைமறைவா இருக்க வேண்டிய சூழ்நிலை.. அதனால்தான் இங்கே தங்கினேன்... இந்த வேலையிலும் சேர்ந்தேன்.. அதற்காக இப்படி அபாண்டமாய் பழியை சுமத்தாதீர்கள்...''



''இது நான் நம்ப வேண்டும்.. ம்ம்.. சிக்கினால் எப்படித் தப்பித்துக் கொள்ளலாம் என்று கூட கற்று வைத்திருக்கே... ஆனால்.. இனிமேலும் நீ சொல்வதை நம்புவதற்கு நான் ஒன்றும் கிறுக்கன் இல்லை.. நீ யார் என்று சொல்லட்டுமா... 'ஆனந்த் காபி வொர்க்ஸி'ன் கைக்கூலி...''

''கொஞ்சம் 'லாஜிக்' பேசுங்க ஆதி.. உங்களுக்கு மோசம் பண்ண வேண்டும் என்றால்.. உங்க அலுவலகத்தில் சேர்ந்திருக்கலாமே... ஏன் இங்கே வந்து வேலைகளை இழுத்துப்போட்டு கஷ்டப்பட வேண்டும்... மோசம் செய்வதற்கு வழிகளா இல்லை...''

''ஓ.. இருக்கிறதே.. ஆனால் நீ தேர்ந்தெடுத்திருப்பது அருமையான வழி.. மார்க்கெட்டில்... 'ஆனந்த் காபி' உதயா காபிக்கு அப்புறம்தான்... ஜனங்கள்ட்ட உதயா காபிதான் நம்பர் ஒன்.. ஏன்னா.. எங்களுடையது ரொம்ப வருடங்களாய் ஸ்டெடியா மார்க்கெட்டில் இருப்பதால்.. அதை எப்படி முறியபடிப்பது என்று அந்த அரசியல்வாதி மகாதேவன் 'ப்ளான்' போட்டு நடத்தியிருக்கிறான்... அதற்காக உன்னை இங்கு அனுப்பி வைத்திருக்கிறான்.. இங்கு வேலைக்கு சேருகிற மாதிரி வந்து.. ஒவ்வொருத்தரையா கைக்குள் போட்டுக் கொண்டு.. நீ எது சொன்னாலும் 'பூம் பூம்' மாடு மாதிரி தலையாட்ட வைத்து.. உன் காரியத்தை சாதிச்சிருக்கே.. உதயா கூட உன் பேச்சைக் கேட்டு ஆடுகிறாள் என்றால்... நீ எந்த அளவு கில்லாடி என்று வியக்கிறேன்.. தெரியுமா.. ஆமாம்.. இது உன் திட்டமா.. இல்லே... அந்த மகாதேவன் போட்டுக் கொடுத்ததா...''

"என்ன உளறுகிறீர்கள் ஆதி.. மகாதேவனுக்கும் ஆனந்த் காபிக்கும் என்ன சம்பந்தம்.."

அவளையே கோபத்துடன் உறுத்துப் பார்த்தான் ஆதி..

"உன் தப்பை... குற்றத்தை இன்னும் ஒப்புக் கொள்ள மறுக்கிறாய் பார்.. தப்பே செய்யாத மாதிரி நடிக்கிறே பார்.. உன்னை.. சே.. 'ஆனந்த் காபி'யின் ஓனர் யார் என்று உனக்கு தெரியாதாக்கும்... சாட்சாத் மகாதேவன்... தான் ஆனந்த் காபி வொர்க்ஸின் ஓனர் என்று அறியாமல் இத்தனை செய்தாயாக்கும்.. யார் காதில் அம்மணி பூ சுத்துகிறாய்.. அதுவும் முழம்.. முழமாய்... என்னை 'பிஸினஸ்' விஷயத்தில் எதிர்ப்பதை விட... இப்படி உதயாவை மருமகளாக்கிக் கொண்டு.. என்னை.. என் பிஸினஸை விலைபேசலாம் என்று திட்டம் போட்டு அந்த ஆள் அனுப்பியிருக்கிறான்.. நீ.. அவன் போட்ட எலும்புத் துண்டுக்கு ஆசைப்பட்டு.. இங்கே வந்து அழகாய் 'டிராமா' செய்திருக்கே... உன் எண்ணப்படியே.. உதயாவையும் ஆனந்தையும் சேர்த்து வைத்து.. கல்யாண ஏற்பாடும் பண்ணி விட்டே... சபாஷ்.. சாணக்கியன் தோற்றான்.." வார்த்தைகளில் வெறுப்பை உமிழ்ந்தான்.

வசுதாவிற்கு அவன் பேசியது எல்லாமே திகைப்பைத் தந்தது...

ஆரம்பத்திலிருந்தே தன்னை அவன் நம்பவில்லை... இப்போதா நம்பப்போகிறான்... இனி என்ன சொன்னாலும் அவன் காதில் நுழையப் போவதில்லை.

அது இருக்கட்டும்.. 'ஆனந்த் காபி வொர்க்ஸ்' மகாதேவனின் நிறுவனமாமே.. இதுவரைக்கும் அது தெரியாமல் போனது என் கெட்ட நேரம்...

காக்கா உட்கார.. பனம் பழம் விழ என்பது மாதிரி நான் செய்த ஒவ்வொரு காரியமும் எனக்கு எதிராகவே திரும்பிவிட்டது. அதுவும் ஆதித்யாவின் கண்ணோட்டத்தில்.. இருக்கட்டும்.. இப்போது எது சொன்னாலும் பொய்யாகத் தெரியும்...

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டம்.. அவசரக்காரனுக்கு அதைவிட படுமட்டம்தான்.

அவனது ஆத்திரமும் கோபமும் அடங்கட்டும்.. அறிவு விழிக்கட்டும்.. எல்லா உண்மைகளும் விளங்கும்... இப்போது எதுவும் பேசாமல் இருப்பதே நல்லது.

"இனி நான் என்ன சொன்னாலும் நீங்கள் நம்பப் போவதில்லை... என் மீது குற்றவாளி என்ற முத்திரையை குத்தியாகிவிட்டது.. இனி பேசுவதும் வீண்.. சரி.. உங்கள் விசாரணை முடிந்ததா.. நான் போகலாம் தானே.. நாளைக்கே இங்கிருந்து புறப்படுகிறேன்... என் சூட்கேஸை 'செக்' செய்ய விரும்பினால் அதற்கும் தயார்..."

நிதானமாய்.. அதே சமயம் வெகு அழுத்தமாய் சொல்லி விட்டு அங்கிருந்து விரைந்தாள் வசுதா. 'பட்'டென்று மூடப்பட்ட கதவை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் ஆதித்யா.

தன் அறைக்குள் சென்றதும் முதல் வேலையாய் சூட்கேஸில் இருந்து தனது 'செல்'லை எடுத்து... சார்ஜரைப் போட்டு உயிரூட்டினாள்.

மளமள வென்று எல்லாவற்றையும் 'பேக்' செய்தாள்.. சொல்லத் தெரியாத வேதனை நெஞ்சினுள் அழுத்தியது எதற்காக என்று தெரியவில்லை....

ஆதி தன்னை கன்னாபின்னா என்று பேசியதற்காகவா.. பழகிய இந்த வீட்டையும்.. இங்கிருப்பவர்களையும் பிரியப்போகிறோமே என்பதற்காகவா... ஆதி தன்னைத் தப்புத் தப்பாகப் புரிந்துகொண்டு இருக்கிறானே என்றா.. இல்லை.. இத்தனை பேசியும் இந்த முட்டாள் மனம் அவனையே நினைக்கிறதே என்றா.. தெரியவில்லை...

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.. அவளால் ஆதியை வெறுக்க முடியவே முடியாது...

அவன் மீது கோபம் வந்தது. எரிச்சல் வந்தது... ஆனால் வெறுப்பு.. வரமாட்டேன்கிறதே...

சே.. காதல் கூட ஒரு விசித்திர நோய்தான்..

மறுநாள் முதல் வேலையாய் சிவராம் அங்கிளுக்கு போன் செய்தாள்.

அவளது குரலைக் கேட்டதும் அவருக்கு வந்த சந்தோஷம்...

"அம்மாடி.. ஒரு போன் செய்து பேசக் கூடாதா.. இருபது நாளாய் உன்னிடம் பேசுவதற்கு வழி தெரியாமல் தவித்துக் கொண்டு இருந்தேன் தெரியுமா.. நல்ல வேளையாய்.. நீயே இப்ப பேசினே.. ஒரு முக்கியமான தகவல் சொல்ல வேண்டியிருக்கிறது. உன் சித்தியும் தம்பியும் சமீபத்தில் நடந்ததே.. அந்த விமான விபத்தில் இறந்து விட்டார்கள் என்று செய்தி வந்தது வசுதா... சொத்துப் பத்திரத்தில் நீ கையெழுத்துப் போட வேண்டியிருக்கிறது... உன் அப்பாவோட உயில்படி.. நீ தான் நேர் வாரிசு.. உடனே புறப்பட்டு வாம்மா.. லேட் பண்ணாதே.. லீகல் விஷயம். உடனடியா செய்யணும்..."



அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போனாள் வசுதா. இதைத்தான் விதியின் விளையாட்டு என்கிறார்களா... கடவுளின் லீலை என்பதும் இதுதானா...

நேற்று இருந்தவர்கள் இன்று இல்லை.. யாருடைய வாழ்க்கையும் நிரந்தரம் இல்லை...

அதற்குள் ஆடும் ஆட்டம் என்ன... பேசும் வார்த்தைகள் என்ன...

பணம்.. பணம் என்று அடித்துக் கொண்டார்களே.. போகும்போது எதை எடுத்துச் சென்றார்கள்.. இல்லை என்ன சாதித்தார்கள்.. எதுவும் இல்லை.. இருக்கும் நிலம்.. சொத்து எல்லாமே எனக்கு எனக்கு என்று வாரி எடுத்துக் கொண்டவர்களுக்கு.. ஆறடி நிலம் கூட இல்லாமல் போனது பரிதாபம்.. அவர்களை நினைத்து வருந்தினாலும்... ஏதோ விடுதலை கிடைத்துவிட்ட மகிழ்ச்சி வந்தது.. சிறைப்பறவையைக் கூண்டிலிருந்து திறந்து விட்டதும்.. சிறகடித்துப் பறக்கும் போது உண்டாகுமே சுதந்திர உணர்வு அதுதான் அவளுக்கு ஏற்பட்டது.

இனி எந்த வித அச்சமின்றி வீடு திரும்பலாம்... சூழ்ச்சி செய்ய சித்தியோ.. அவள் தம்பியோ இல்லை... வாழ்க்கையில் தான் எத்தனைப் போராட்டங்கள்.. அதனை எதிர்கொண்டு போராடும்போது தான் மனம் உறுதி பெறுகிறது...

அன்று இரவு அவளுக்கு சரியாக தூக்கமும் இல்லை.. கெட்ட கனவுகள் அவளை வாட்டி எடுத்தன.

இறந்துபோன சித்தியின் கோர முகம் அவளை விழித்துப் பார்த்தது.. கூடவே அவளது தம்பியின் இளிக்கும் முகம்.. அவளைப் பயமுறுத்தியது.

வியர்த்து விறுவிறுக்க எழுந்து உட்கார்ந்து கொண்டாள். நித்திரை தொலைந்தே போனது.

அவள் புறப்படுகிறாள் என்ற செய்தி கேட்டு அனைவருக்கும் அதிர்ச்சி...

தாயைப் போல அன்பு காட்டிய கற்பகம் கண் கலங்கிவிட்டாள்...

"ஆதி பேசினான் என்பதற்காக புறப்படுகிறாயாம்மா.. எங்களுக்காக இங்கே இருக்கக் கூடாதா..." என்று கெஞ்சினாள்.

உதயா "இப்படி திடீர் என்று புறப்படுகிறீர்களே வசுதா... இது நியாயமா.. இத்தனை நாள் இருந்துவிட்டு.. எங்க திருமணப் பேச்சு ஆரம்பமான நேரத்தில் விட்டுட்டுப் போனா எப்படி.. இருங்களேன் வசுதா..." என்று வேண்டினாள்.

உன் திருமணத்திற்கு உதவப்போய்.. அதனால் வந்த வினைதான் என்று சொல்லவும் முடியாதே... பாவம்.. உதயா என்ன செய்வாள்.. ஆதியின் முரட்டுப் பிடிவாதமும்.. மூர்க்கத்தனமும்தான் அவனுக்கு எதிரிகள்.. அதனால்தான் அவன் ஏதேதோ கற்பனை செய்து கொண்டு.. இல்லாததும் பொல்லாததுமாய் பேசுகிறான்.. பேசட்டும்.. நான் எந்தத் தப்பும் செய்யவில்லை என்பது என் மனசாட்சிக்கும் தெய்வத்திற்கும் தெரியும்.. அதுபோதும்...

காதலர்களை சேர்த்து வைப்பது குற்றமா என்ன.. அப்படியே அவன் நினைத்தாலும் கவலையில்லை... இந்தக் கல்யாணம் நடந்தால் அதுவே போதும். இதில் என் பங்கு முடிந்துவிட்டது. இனி ஆனந்த் வீட்டில் கவனித்துக்



கொள்வார்கள்... என்ன.. இந்தக் கல்யாணத்தைப் பார்க்க முடியாதே என்ற வருத்தம்தான்.. இருந்துவிட்டுப் போகட்டும்.. என் கடமை பணி செய்து விட்டுப் புறப்படுவதே.. இதோ புறப்பட்டாச்சு...

ரோஹன் தான் 'உம்'மென்று பேசாமல் இருந்தான். அவனது கன்னத்தை வருடி தந்து.. "நான் ஊருக்குப் போவது உங்களுக்கெல்லாம் வேதனை தரும் என்று புரிகிறது கண்ணா.. ஆனால் போய்த்தான் ஆகவேண்டும்.. அங்கே எனக்கு முக்கிய வேலைகள் இருக்கிறதுப்பா.. போய் கவனிக்க வேண்டும். என்ன.. ரோஹன் இப்படி 'உம்' என்று இருந்தால்.. எனக்கு கஷ்டமா இருக்காதா... கொஞ்சநாள் தான் இப்படி இருக்கும். அப்புறம் உங்களோட படிப்பு.. வேலைன்னு மூழ்கிவிட்டால்.. வசுதா என்று ஒருத்தி இருந்ததும் மறந்துவிடும் பாரேன்..." என்றாள் பாதி வேடிக்கையாக.

"மாட்டோம்.. உங்களை என்னிக்கும் மறக்கமாட்டோம் இல்லையா உதய்..." என்றான் ரோஹன்...

"இதென்ன பேச்சு வசு.. உங்களையாவது மறப்பதாவது என் திருமணம் சீரும் சிறப்புமா நடக்கக் காரணமே நீங்கதான்... நானும் ஆனந்தும் கடைசி வரைக்கும் உங்களை நினைப்போம்.. அது மட்டும் உறுதி.. நீங்கள் இல்லாமல் எங்கள் திருமணம் நடக்கும் என்று நினைக்கிறீர்களா வசு.. ஊகூம்... நிச்சயம் நடக்காது.. தெரிந்து கொள்ளுங்கள்..." மிரட்டலாக சொன்னாள் உதயா.

"ஆகா.. அதையும் பார்க்கலாம்.. ஆனந்த் முகத்தைப் பார்த்ததும் எல்லாமே மறந்து விட்போகிறது.. அப்புறம்.. ஆனந்த்.. ஆனந்த்.. ஹனிமூனுக்கு எங்கே.. சிம்லாவா..

சிங்கப்பூரான்னு கேட்டு.. உடனே போவதற்கு 'பேக்' பண்ண ஆரம்பித்து விடுவாய்.. பிறகு ஹனிமூனில் ஜோடிப் பறவைகளாய் சிறகடித்துப் பறந்து கொண்டிருப்பீர்கள்.. இனி வசுதாவாவது.. நினைவில் இருப்பதாவது.." பரிகாசத்துடன் வசுதா சொல்லவும்...

அவள் நினைத்த மாதிரியே உதயாவின் முகம் சிவப்பு ரோஜாவாய் மாறியது.

"அய்யோ... என்ன இது வசுதா." என்றாள் நாணத்துடன்.

எப்படியோ அனைவரையும் சமாளித்துவிட்டு அவள் புறப்பட்டு விட்டாள்...

டாக்ஸி வந்ததும் அனைவரிடமும் விடைப் பெற்றுக் கொண்டு அதில் அமர்ந்தாள் வசுதா.

டாக்ஸி நகர்ந்ததும் கண்கள் கசிந்தன.

'குட் பை டு மங்களூர்... குட் பை டு ஸ்வீட் மெமோரிஸ்... குட் பை டு ஆதித்யா..' உள்ளம் தழுதழுத்தது. எட்டிப்பார்த்த கண்ணீரை 'சட்'டென்று துடைத்துக் கொண்டாள்.

இனி இந்த வீட்டிற்கும் எனக்கும் இருந்த உறவுச் சங்கிலி அறுந்துவிட்டது.. இவர்களுக்கும் எனக்கும் இருந்த பந்தமும் முடிந்துவிட்டது...

என் பாதை கிளை பிரிந்து விட்டது.. இனி ஆதித்யாவையும் பார்க்கப்போவதில்லை.. அந்த வேதனை பந்தாக உருண்டு வந்து தொண்டையை அடைத்தது.

இதுதான் வாழ்க்கை... இதுதான் பயணம்... மறுக்கவோ.. தடுக்கவோ யாரால் முடியும்... பெருமூச்சு விட்டாள்.



போகும் வழியில் நிரஞ்சனைப் பார்த்துவிட்டுச் சொல்ல வேண்டும் என்று தோன்றியதால் டாக்ஸியை நேரே ஹாஸ்பிடலுக்கு செல்லச் சொன்னாள்.

நிரஞ்சனின் நிலைமையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது... சின்ன வயது என்பதால் சீக்கிரமே எலும்புகள் கூடி... பழைய நிலைக்கு வந்துவிடுவான் என்று டாக்டர் உறுதி கூறியதில் அவளுக்கு நிம்மதி.. நிரஞ்சன் தூங்கிக் கொண்டு இருந்தான்...

அவனை எழுப்பவும் விரும்பாமல்.. அவனது கரத்தை அன்புடன் வருடித் தந்து "குட் பை.. மை டியர் ஃபிரெண்ட் சீக்கிரமே உன் உடம்பு குணமாகி.. பழைய நிரஞ்சனாக உற்சாகத்துடன் இருக்க என் வாழ்த்துக்கள்..." என்று மனதில் முணுமுணுத்து விடைப்பெற்றுக் கொண்டாள்...

பயணம் தொடர்ந்தது....

## 22

விடியலைக் கண்டு பறவைகள் பூபாளம் பாட ஆரம்பிக்கும் இனிமையான காலைப் பொழுது...

சூரியன் தன் கிரணங்களை பரப்பியவாறு மேல் எழும்ப ஆரம்பித்தான்...

சொர்ணம் மெல்ல எட்டிப்பார்த்தாள்.

வசுதா இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள்...

தூங்கட்டும்.. பிள்ளை.. பாவம்.. அந்தச் சித்தியால் எவ்வளவு கஷ்டப்பட்டுட்டாங்க.. மனுஷியா அவ

நடுநாயகமாய் தன் பெற்றவர்களின் படத்தை மாட்டி.. சந்தன மாலையும் சூட்டினாள்.

"டாடி... என்னை மன்னித்து விடுங்கள்.. என் டாடி தப்பு செய்து விட்டாரே என்று எண்ணி மறுகினேன்.. ஆனால் நீங்கள் சூழ்நிலைக் கைதியாகிப் போனதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். நீங்க எப்பவும் என் டியர் டாடிதான்..." படத்தில் சிரித்துக் கொண்டிருந்த தந்தையிடம் மானசீகமாய் பேசினாள் மகள்.

கோவைக்கு வந்ததும் வசுதா சென்றது சிவராம் அங்கிளைப் பார்க்கத்தான்.

அப்போதுதான் சிவராம் சொன்னது.

"உங்கப்பா மீது எந்தத் தப்பும் இல்லை வசுதா... அந்த விலாசினி சூழ்ச்சி செய்து அவனை தன் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டாள்.. அவ லேசுப்பட்டவ இல்லேம்மா.. இந்த விஷயத்தை சொல்லவும் நா கூசுகிறது. தனக்கு பிறந்த நாள் என்று அவனை அழைத்துப் போய்.. டிரிங்க்ஸ் கொடுத்து.. புத்தி மயங்கச் செய்து.. தன்னோடு இருக்கிற மாதிரி போட்டோவும் எடுத்து வைத்து.. அதைக் காட்டி 'ப்ளாக் மெயில்' பண்ணி.. பயம் காட்டி தனக்குத் தாலி கட்ட வைத்துவிட்டாள் என்றால்.. அவ எப்படிப்பட்டவள் என்று பார்த்துக்கொள். இந்த விஷயத்தை வெளியில் சொன்னால்... உன் போட்டோ சந்தி சிரிக்கும். அதை உன் பெண்ணிற்கும் காட்ட வேண்டி வரும் என்று அச்சுறுத்தி அவனை ஊமையாக்கிட்டா.. அதான் செத்த பாம்பாட்டம் இருந்தான் உன் அப்பா.. அவனைப் போய் தப்பா நினைத்தேனேன்னு வருத்தமா இருக்கு..."



"இந்த விஷயம் எப்படி உங்களுக்கு தெரிந்தது அங்கிள்..." ஆவலுடன் கேட்டாள் வசுதா.

"பேப்பரில்.. விபத்து செய்தியில் வந்த இறந்தவர்களின் லிஸ்டில் விலாசினி.. நித்யானந்தின் இளைய மனைவி என்று வந்திருந்ததைப் பார்த்து விட்டு... உன் அப்பாவோட கம்பெனி மேனேஜர் வந்து லீகல் ப்ராஸெஸ் விஷயமாய் பேசினார். அப்போது அவர் சொன்னதுதான் இது... சூரியனைப் பிடித்த கிரஹணம் மாதிரி வீட்டைப் பிடித்திருந்த பீடை ஒழிந்தது. இனிமேல் எந்தக் கவலையும் இல்லைம்மா வசுதா.. அப்பா ஸ்தானத்தில் இருந்து உனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாக பார்ப்பது என் பொறுப்பும்மா.. இல்லே.. நீயே யாரையாவது பார்த்து வச்சிருந்தா சொல்லு.. முடிச்சிடலாம்.." என்று சொல்லி விட்டுச் சிரித்தார் சிவராம்.

ஆதித்யாவின் நினைவு வந்ததை அவளால் தவிர்க்க முடியவில்லை... அதைக் கஷ்டப்பட்டு ஒதுக்கிவிட்டு சொன்னாள்.

"அப்படி ஒன்றும் இல்லை அங்கிள். ஆனால் இப்போது எனக்குத் திருமணம் வேண்டாம்... நான் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது.. அப்பாவோட சொத்தில் அவர் பெயரில் ஒரு டிரஸ்ட் ஆரம்பிக்க வேண்டும்.. எத்தனையோ தர்மகாரியங்களை செய்ய வேண்டும். இதுதான் என்னோட இப்போதைய கனவுகள்.. இலட்சியங்கள்.. அதற்கு நீங்கதான் எனக்கு துணையா இருந்து வழிக்காட்ட வேண்டும். செய்வீர்களா அங்கிள்.." கண்கள் மலர அவள் கேட்டாள்.

அவளை வியப்புடன் பார்த்தார் சிவராம்...

சில மாதங்களுக்கு முன் படபடப்புடன் தன் முன் அமர்ந்து எனக்கு வேலை வாங்கித் தர முடியுமா.. முடியாதா என்று கேட்ட வசுதாவா.. இத்தனை அமைதியாய்.. பக்குவமாய் பேசுவது... ஒரு சில மாதங்களில் இத்தனை மாற்றமா.. பரவாயில்லையே என்று உள்ளுக்குள் எண்ணியவர்.. அதை வெளிப்படையாகவும் சொன்னார்.

''எனக்கே ஆச்சர்யமாய் இருக்கும்மா வசு.. வெளியுலகம் பற்றி அவ்வளவாக புரிந்து கொள்ளாமல் விளையாட்டுப் பெண்ணாய் இருந்த நீயா இப்படிப் பக்குவமடைந்தவளாட்டம் பேசறே.. அடடா.. நித்தியானந்தம் இருந்திருந்தால் இந்நேரம் பூரித்துப்போயிருப்பான்.. இந்த இரண்டு.. மூன்று மாதங்களில் உன்னிடம் எத்தனை மாற்றம்.. என்னால் நம்பவும் முடியல்லேம்மா....''

அதைக் கேட்டு சிரித்தாள் வசுதா.

''வாழ்க்கையில் நமக்கு வரும் அனுபவங்கள்தான் நம்மை மாற்றுகின்றன அங்கிள்... மங்களூரில் நான் வேலை செய்தபோதுதான் உணர்ந்து கொண்டேன்.. வேலை செய்பவர்களின் கஷ்டத்தை.. ஒரு சாதாரண மனுஷியாய் இருக்கும்போதுதான் என்னால் நிறையக் கற்றுக் கொள்ள முடிந்தது.. வெறும் பணம் மட்டும் வாழ்வாகாது.. அன்பும் ஆதரவும் தான் வாழ்க்கைக்கு முக்கியம் என்பதையும் புரிந்து கொண்டேன்'' கடைசி வார்த்தைகளை உரைத்த போது தொண்டை அடைத்தது.

ஆதியின் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கியது நடக்கவில்லையே.

சே.. அவனை மறக்க வேண்டும் என்று நினைத்தாலும் அது முடியவில்லை.. இன்னும் வளர்ந்து விசுவரூபமாய் நிற்கிறானே..



காலையில் விழிக்கும்போதும் அவனது நினைவு...

இரவில் கண்களை மூடும்போதும் அவனது நினைவு...

எந்நேரமும் அவனது நினைவு என்னை ஆக்கிரமித்திருப்பது போல.. என் நினைவு ஒரு வினாடியாவது அவனுக்கு இருக்குமா.. அவனுக்கு எங்கே இருக்கும். அவனுக்குதான் மல்லிகா இருக்கிறாளே.. நினைக்கையில் நெஞ்சு எரிந்தது... பொறாமைத் தீயில்..

கோவைக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. முழுசாய் அறுபத்து நான்கு நாட்கள்...

மங்களூரில் என்னென்ன நடந்திருக்கும்...

உதயாவிற்கு திருமணம் நடந்திருக்குமா.. ஆதி அதற்கு ஒப்புக் கொண்டிருப்பானா.. ரோஹனுக்கு ரிஸல்ட் வந்திருக்கும்.. ரேங்கில் வந்திருப்பானா...

நிரஞ்சனுக்கு காயங்கள் ஆறியிருக்கும்.. பழைய நிரஞ்சனாக திடமாகி இருப்பான்.

கற்பகம் ஆன்ட்டி நன்றாக நடக்க ஆரம்பித்திருப்பார்.

ஆதி.. மல்லிகா.. ஆதியின் நிச்சயதார்த்தம் கூட முடிந்திருக்கும்.. கண்களில் நீர் கோர்த்தது...

இதயம் வலித்ததற்காக அழுகின்றனவா கண்கள்.. தலையை உதறிக் கொண்டாள் வசுதா...

மறக்க வேண்டும்.. மற.. மற நெஞ்சே.. மறந்துவிடு..

ஆனால் கேட்கமாட்டேன்கிறதே.. செக்கு மாடாய் அவனையே சுற்றி வருகிறதே...

அவனுடன் பேசியதை.. அவனுடன் கழித்தப் பொழுதுகளை எண்ணி எண்ணி உருகுகிறதே...

பேகல் கோட்டை வளாகத்தில் அவனுடன் உரையாடியவாறு நடந்தது...

சக்லேஷ்புர்க்கு வேடிக்கையாய் பேசிக் கொண்டு பயணித்தது... எல்லாமே ஞாபகத்தில் வந்து அவளை இம்சித்தது.

''சின்னம்மா..உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க...'' சொர்ணம் வந்து சொன்னாள்.

''யார் அது.. கேட்டாயா.''

''இல்லேம்மா.. இரண்டு பொம்பளைங்க.. வந்திருப்பது.''

''சரி.. உட்கார வை. வருகிறேன்...''

லேசாய் ஏமாற்றம் உதித்ததோ.. ஆதியை எதிர்பார்த்ததோ உள்ளம்...

அவன் வரமாட்டான் என்று தெரிந்தும் ஏன் எதிர்பார்க்க வேண்டும்.. அவனைப் பொறுத்தவரை.. வசுதா ஒரு ஏமாற்றுக்காரி.. பொய் பித்தலாட்டக்காரி.. நம்பிக்கை துரோகி.. எப்படிப் பார்க்க வருவான்...

'ஷவரி'ன் கீழ் நின்றவளின் கண்களிலிருந்து வழிந்த சூடான நீரும் ஷவர் நீருடன் கலந்து ஓடியது.

டூந்துவாலைச் சுற்றிக் கொண்டு வந்தவள்... என்ன உடை உடுத்துவது என்று ஆய்ந்தாள்.

'வாட்ரோப்' முழுக்க விதவிதமான உடைகள்... சுடிதார்... சேலைகள்.. காக்ரா.. ஜீன்ஸ்.. டாப்ஸ்.. என்று விதவிதமாய்.. ரகரகமாய்...



தன் பிறந்த நாளுக்கு அப்பா வாங்கித் தந்த ஜீன்ஸை ஆசையுடன் தடவிப்பார்த்தாள்.

''உன்னை என் பொண்ணா பார்க்கலைடா.. என் பிள்ளையாத்தான் பார்க்கிறேன்.. நீ எனக்கு ஆண்பிள்ளையும் கூட... எனக்கப்புறம் என் சாம்ராஜ்ஜியத்தைக் கட்டி ஆளப்போறது நீதானே...''

''டாடி.. டாடி.. நான் பெண்ணாக பிறக்காமல்... உங்களுக்கு மகனாக பிறந்திருக்கக்கூடாதா.. இப்போதும் என்ன.. உங்கள் மகன்தான்.. நீங்கள் ஆசைப்பட்ட மகன்தான்... இனிமேல் எதுவும் எனக்குத் தேவையில்லை.. யாரும் வேண்டாம்.. உங்கள் மகனாக இருந்து.. உங்கள் கனவை நிறைவேற்றுவேன்.. நித்தியானந்தின் மகன் என்று மெச்சும்படி உங்கள் கம்பெனியை நடத்துவேன்...''

ஆதியில்லாத சோகத்தில் உள்ளம் ஏதேதோ நினைத்து துடித்தது.. பிரிவின் வேதனை அவளை அப்படிப் பேச வைத்தது.

ஜீன்ஸை கையில் எடுத்துப் பார்த்தாள்.

பழைய வசுதாவாய் எந்தக் கவலையும் இல்லாமல் பட்டாம்பூச்சியாய் திரிந்தது ஞாபகத்திற்கு வந்தது...

இப்போதோ.. சே.. உடையில் ஒட்டியிருக்கும் கடல்கரை மணலை உதறி விடுவதுபோல.. வதைக்கும் நினைவுகளை உதற முடியுமானால்...

உடனே தலையை சிலுப்பிக் கொண்டாள்...

இப்போதும் ஏன் முடியாது.. மனம் வைத்தால் அது முடியும்... ஆதியின் நினைவுகளை வலுக்கட்டாயமாய் தள்ளிவிடு... நீ நித்யானந்தின் மகன்தான்... இல்லை..

மகன்தான். பழைய வசுதாவாகும் விருப்பில் அந்த ஜீன்ஸை உடுத்தினாள்...

'சிக்' என்றிருந்த மேனிக்கு அந்த உடை வெகு அழகாய் பொருந்தியது... மங்களூரில் உழைத்த உழைப்பு மேனியில் நன்றாகத் தெரிந்தது... 'டயட்' இன்றி.. 'ஜிம்'முக்குப் போகமலே மாடலைப் போன்ற மேனியழகு... அழகான வளைவுகளுடன்...

நீல நிற ஜீன்ஸுக்கு ஏற்றமாதிரி வெள்ளையில் அழகான பிங்கும் நீலமும் கலந்த எம்ப்ராய்ட்ரி வேலை செய்த 'டாப்'....

கூந்தலை வாரி 'கிளிப்'பில் அடக்கினாள்.. முகத்தில் லோஷனைத்தடவி.. லேசாய் லிப்ஸ்டிக்கைத் தடவி னாள்.

தன் அழகை கண்ணாடியில் ரசித்தாள்.

யெஸ்.. இதோ.. பழைய வசுதா.. எதற்கும் கலங்காத... எந்தக் கவலையும் இல்லாத.. வானம்பாடியாய்.. கானம் பாடிப் பறந்த வசுதா.. புள்ளிமானாய் துள்ளித்திரிந்த வசுதா.. ரெடி...

இடையில் நடந்ததெல்லாம் வெறும் கனவு... மாயை.. எல்லாம் சரி.. இந்தக் கண்களில் மட்டும் ஒளியில் லையே..ஏன்.. வாய் சிரித்தாலும் கண்களில் இல்லையே.. வேதனை மட்டுமே தெரிகிறதே...

சின்ன பெருமூச்சுடன் 'டியோ'வை மேனியில் தெளித்துக் கொண்டு கீழிறங்கி வந்தாள்.



கீழே.. ஹாலில் அமர்ந்திருந்த இரு பெண்மணிகளும் மரியாதையைக் காட்ட எழுந்து நின்று 'வணக்கம் மேடம்' என்றனர்.

''உட்காருங்கள்.. சொர்ணம். இவர்களுக்கு காபி... ஜூஸ் ஏதாவது கொடுத்தாயா'' என்று கேட்டாள்.

''ஓ! கொடுத்தாச்சம்மா...'' என்றாள் சொர்ணம்.

''நாங்க 'அன்பு இல்லம்' அனாதை ஆசிரமத்திலிருந்து வந்திருக்கோம்.. எங்க ஆசிரமத்தை இன்னும் விரிவு படுத்த வேண்டி.. உங்களை மாதிரி செல்வந்தர்களிடம் இருந்து நன்கொடை வசூல் பண்ணிக் கொண்டு இருக்கிறோம்.. உங்க 'டிரஸ்டி'லிருந்து 'டோனேஷன்' தர வேண்டும் என்பது எங்களது வேண்டுகோள்'' என்றாள் வந்திருந்த பெண்களின் ஒருத்தி...

'அன்பு இல்லம்' பற்றிய விவரங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டாள் வசுதா.

நிச்சயம் தருவதாய் வாக்களித்து.. அது சம்பந்தமாய் தன் லாயர் தொடர்பு கொள்வார் என்று சொல்லி அவர் களை அனுப்பி வைத்தாள்.

அவர்கள் சென்ற பின்பு சிவராமிற்கு போன் செய்து நன்கொடை தருவதைப் பற்றிப் பேசினாள்...

''அந்த ஆசிரமத்தைப் பற்றி விசாரித்து விட்டு.. எவ்வளவு அதிகத் தொகையாய் கொடுக்கலாம் என்று பாருங்கள்.. இரண்டு லட்சம் போதுமா.. ஓகே.. விசாரித்து விட்டுச் சொல்லுங்கள் அங்கிள்...''

அந்த ஆசிரமத்தைப் பார்த்து வர வேண்டும்.. இனிமேல் அப்பா அம்மாவோட இறந்த நாளில் இந்த

மாதிரி அனாதை ஆசிரமங்களுக்குச் சென்று அங்கிருப்ப வர்களுக்கு வயிறு நிறைய சாப்பாடும்.. உடுத்த உடையும் தரவேண்டும்.

ஏன்.. என் பிறந்த நாள் அன்றைக்கும் கூட அப்படியே செய்யலாமே.. கேக்.. விலையுயர்ந்த ஆடை... ஹோட் டலில் பார்ட்டி என்றெல்லாம் வீண் செலவு செய்வதை விட... அந்த நாளின் சந்தோஷத்தை முதியோர் இல் லத்தில் இருப்பவர்களுடனோ.. அனாதைக் குழந்தை களுடனோ பகிர்ந்து கொள்ளலாமே.. ஆம்.. இனி மேல் அப்படித் தான் செய்யவேண்டும்.. நினைப்பே மனசுக்கு இதமாக இருந்தது.. இன்னும் செய்ய ஆரம்பித் தால்...

அடடா.. அதில் கிடைக்கும் ஆத்மதிருப்தியே வெகு அலாதி தான்.

அந்த நேரத்தில் 'செல்' ஒலித்தது.

கம்பெனி மேனேஜர் தான் பேசியது.. ஏதோ 'கான் ராக்ட்' விஷயமாய் பேசி முடிவெடுக்க வேண்டும்.. வர முடியுமா..' என்று கேட்டார்.

என்ன கான்ராக்ட்... அது பற்றிய 'டீடெயில்ஸ்' எல்லா வற்றையும் கேட்டுக் கொண்டாள்...

''சரி.. இன்னும் கொஞ்ச நேரத்தில் அங்கு வருகிறேன்.. அதற்குள் என்ன செய்ய வேண்டுமோ, அதை முடித்து.. தயாராக வைத்திருங்கள்.. குருமூர்த்தி சார்...''

'செல்'லை அணைத்துவிட்டு நிமிர்ந்தவள் அப்படியே சிலையாகிப் போனாள்...



அங்கு நின்றிருந்தது... ஆதியா...

ஆம் ஆதித்யாவே தான்...

கைகளை மார்பில் கட்டிக்கொண்டு அவளையேப் பார்த்த வண்ணம் நின்றிருந்தான் ஆதித்யா...

இதயம் தாறுமாறாய் ஒலித்ததுபோல இருந்தது வசுதாவிற்கு.

## 23

ஆதித்யாவைக் கண்டதும் அதிர்ச்சியில் தடுமாறியவள் பின் சுதாரித்துக் கொண்டாள்.

''ஹலோ.. ஆதித்யா... வாட் எ சர்ப்ரைஸ்... நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்க்கவே இல்லை.. அதென்ன திடீர் வருகை.. கோயமுத்தூரில் ஏதாவது வேலை விஷயமா வந்தீர்களோ.. ஓ.. மறந்துவிட்டேனே.. உங்க மல்லிகா இங்கேதானே இருக்கிறாள்.. அவளைப் பார்க்க வந்தீர்களா என்ன...'' சொல்லும்போதே நெஞ்சினுள் நெருஞ்சி முள் குத்தியது போல வலித்தது.

அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கண் களில் திகைப்பு இன்னும் மாறாமலே இருந்தது.

மங்களூரில் இருந்த வசுதாவிற்கும்.. இங்கே இருக்கும் வசுதாவிற்கும் எத்தனை வித்தியாசம்...

அவன் தேடி வந்த வசுதா ஒரு சாதாரணப் பெண்.. எளிமையான மங்கை...

இந்த நாகரீகமான.. மாடர்ன் வசுதா.. புதியவள்.. தனக்கு அறிமுகம் இல்லாத அந்நியள்.. லட்சத்தில் புரளுபவள்... கோடீசுவரி...

திரும்பிவிடலாமா என்று தோன்றியது அவனுக்கு...

ஆனால் அவளிடம் பேசித்தான் ஆக வேண்டும்...

"ஆதி..எத்தனை நேரம் இப்படியே நின்று கொண்டு இருப்பீர்கள்.. ப்ளீஸ்.. அமருங்கள்... என் கழுத்து வலிக்கிறது..."

அவனும் அமர்ந்து கொண்டான்... தன் பார்வையை அகற்றாமலே...

"ம்ம்.. சொல்லுங்கள் ஆதி.. என்ன விஷயமாய் கோயமுத்தூருக்கு வந்திருக்கிறீர்கள்.. நிரஞ்சன் எப்படி இருக்கிறான்.. கைக்கட்டு அவிழ்த்தாகிவிட்டதா.. ரோஹன் ரிஸல்ட் வந்திருக்குமே.. ரேங்க் வந்ததா.. உதயா.. கற்பகம் ஆன்ட்டி எல்லோரும் நலமா... 'ஆன்ட்டி'யின் கால் இப்போ எப்படி இருக்கிறது.. முழுதும் குணமாகி விட்டதா..."

வசுதாவிற்கு தன்னைப்பற்றி எண்ணுகையில் ரொம்பவும் பெருமையாக இருந்தது.

அவனைப் பார்த்ததும் வந்த தடுமாற்றம் மறைந்து.. இப்படி இயல்பாய் பேச முடிகிறதே...

"என் வசுதா.. எல்லோரையும் விசாரித்த நீ.. நான் எப்படி இருக்கிறேன் என்று கேட்கவில்லையே..." அவனது குரல் கரகரத்தது.

அவள் தன் கண்களைத் தாழ்த்தினாள். அவளது பார்வை விரல்களின் மேல் படர்ந்தது.



வேலை ஏதும் செய்யாததால் இப்போது கைகள் மிருதுவாய்.. விரல்களும் மென்மையாய் இருந்தன... அழகாய்.. அளவாய் வெட்டப்பட்ட நகங்கள் வண்ணப் பூச்சில் மினிர்ந்தன.

அதை அவனும் கவனித்தான்.

"என்னைப் பார்க்கவும் உனக்குப் பிடிக்காது தான்.. வசுதா... உன் கோபம் நியாயமானதுதான்.. உன்னைப் பற்றிச் சரியாக தெரிந்துகொள்ளாமல் கண்மூடித்தனமான கோபத்தில் ஏதேதோ பேசி உன்மனதை புண்படுத்தி விட்டேன்.. அதற்கு மன்னிப்புக் கேட்கத்தான் நான் வந்தது..."

அவ்வளவுதானா.. அதற்கு மட்டும்தானா... உள்ளம் முனகியது...

"என்னை மன்னிப்பாயா வசுதா.." குரலில் வேதனை தெரிய அவன் கேட்டான்.

அவனை ஏறிட்டுப் பார்த்தாள் வசுதா.. அவளது இதயத்தை திருகுவது போல வலித்தது.

அவனிடம் தெரிந்த மாற்றம் அவளைத் துடிக்க வைத்தது. பல நாட்கள் உறக்கம் இல்லாதவன் போல கண்களைச் சுற்றிக் கரும்படலம்.. பட்டினியில் கிடந்தாற்போல உடல் இளைத்து.. கண்களில் சூன்யம் தெரிய.... காற்று இல்லாத பலூன் போல தொய்ந்து போனான்.

ஏன்.. எதனால்..

நிச்சயம் என்னைப் பாராமல் என்று ஏமாற்றிக் கொள்ளப் போவதில்லை... அது பொய்...

''உன்னிடம் எவ்வளவோ பேசவேண்டும் என்று ஓடோடி வந்தேன்... ஆனால் எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை.. வசுதா.. என் வீட்டிற்கு வர வேண்டிய ஒருத்தியின் இடத்தில் நீ பொய் சொல்லி வந்திருக்கிறாயே என்ற கோபம்.. ஏதோ மோசம் செய்ய வந்திருக்கிறாய் என்ற சந்தேகம்... இரண்டும் சேர்ந்து என்னை ஆட்டிவைத்தது உண்மை.... நீ அப்படிப் பட்டவள் இல்லை என்று உன் மீது எனக்கு நல்ல அபிப்ராயம் வந்த வேளையில்.. உதயாவின் கல்யாண விஷயத்தில் தலையிட்டு மறுபடியும் என் கோபத்தையும் சந்தேகத்தையும் கிளறினாய்.. நானே உன்னை நம்பி ஏமாந்து போனேனே என்று என் மீது எனக்கு எரிச்சல்.. அந்த எரிச்சலில் தான் உன்னை வார்த்தைகளால் குத்தியெடுத்தேன்.. ஆனாலும்.. நம் உதயாவும் உண்மையாகவே காதலித்தார்கள் என்ற விஷயம் அத்தை சொன்ன பின்பு தான் தெரிந்தது... அவர்களுக்காக நீ செய்த முயற்சிகளையெல்லாம் உதயா எடுத்து சொன்ன போது தான்.. உன்னைக் கண்டபடி பேசியதற்கு வேதனைப் பட்டேன்.. வெட்கப்பட்டேன்.. உன்னைக் கைக் கூலி பணம் வாங்கிக் கொண்டு சூழ்ச்சி செய்யும் துரோகி என்றெல்லாம் பேசி உன் மனதைக் காயப்படுத்தி விட்டேனே என்று நொந்தேன்.. அது மட்டும் அல்ல... அந்த மகாதேவன் என்னைப்பார்க்க வேண்டும் என்றார்.. அவரைச் சந்தித்தப்பிறகுதான் எல்லாமே விளங்கியது. அவருக்கு இந்தத் திருமணத்தில் விருப்பமே இல்லை. வீட்டினருடைய வற்புறுத்தலுக்காக சம்மதித்தார் என்று. ஆக.. அவருக்கும் உனக்கும் பரிச்சயமே இல்லை.



உதயாவின் கல்யாண விஷயமாய்தான் அவரை முதலில் பார்த்துப் பேசியது என்று தெரிந்து கொண்டேன்.. உன்னை அவர்கள் வீட்டில் பாராட்டி புகழ்ந்தது பார்த்து எனக்கு ஆச்சர்யமாக இருந்தது...''

''இதில் என்ன ஆச்சர்யம்.. எல்லோருக்கும் என்னைப் பிடித்திருந்ததால்தான் எல்லோரும் நான் செய்ததை மெச்சிக் கொண்டார்கள்.. பிடிக்காதவர்களால் அது முடியாது தான்'' கிண்டலாய் சொன்னாள் வசுதா.

''நிஜம்தான்... அனைவரும் உன்னைப் புரிந்து கொண்டதுபோல நான் உன்னைப் புரிந்து கொள்ளாமற் போனது என் முட்டாள்தனம்தான்.. அடுத்தடுத்து அமைந்த சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் அதற்குக் காரணம் வசுதா... ஏழை.. அனாதை என்றாளே... நம்பினேனே.. பணக்கார வீட்டில் பிறந்தவளைப்போல பெரிய காரை 'ஈஸியாக' ஓட்டிக் கொண்டு வருகிறாளே... எல்லா விஷயத்திலும் பொய்யா என்று கொதித்தேன்.. அதனால் தான் உதயா விஷயத்தில் நீ தலையிட்டது கூட ஏதோ உள்நோக்கத்துடன் என்று எண்ணினேன்... காமாலைக் கண் மாதிரி ஆரம்பத்தில் ஏற்பட்ட சந்தேகம் மாறாமலே தொடர்ந்ததுக்குக் காரணம்.. ஒவ்வொரு சந்தர்ப்பமும் உனக்கு எதிராகவே அமைந்தது தான் வசு... ப்ளீஸ்.. புரிந்து கொள்வாயா...''

''இப்போதும் அந்த சந்தேகத்துடன் வரவில்லை தானே ஆதி...''

''இல்லவே இல்லை வசு.. இனியும் வராது.. உன் மீதிருந்த தப்பு எண்ணங்கள் எப்போதோ போய் விட்டது. ஒவ்வொருத்தரும் உனக்காக.. உனக்குப் பரிந்து

என்னுடன் சண்டை போட்டார்கள் தெரியுமா.. ஏன்.. ஆனந்த் கூடத்தான்... அவர்கள் வீட்டுக் குழந்தையைக் காப்பாற்றியதையும்.. அவருடைய அப்பாவிடம் சென்று வாதாடியதையும் சொல்லி.. வசுதா மீது எந்தத் தப்பும் இல்லை.. ப்ளீஸ்... அவரை ஒதுக்காதீர்கள் என்றான். எங்கள் வீட்டு வருங்கால மாப்பிள்ளை..."

அதைக்கேட்டதும் வசுதாவின் முகம் மலர்ந்துபோனது.

"அப்படியென்றால்.. நீங்கள் சம்மதித்து விட்டீர்களா ஆதி.."

"சம்மதித்ததால்தான் ஆனந்தை மாப்பிள்ளை என்றேன்.. ஆனந்த்... பிளிளைபிக்கும்.. இந்தக் கல்யாணத் திற்கும் எந்த சம்பந்தமில்லை என்றான் பார்... அதில் புரிந்து கொண்டேன்... அவன் அரசியல்வாதியின் பிள்ளையில்லை என்று... உன்னைப்பற்றி வெகு உயர் வாகப் பேசினான் தெரியுமா... உதயாவும் அவனும் ஓடிப் போய் ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து கொள்ள இருந்ததை நிறுத்தினாயாம்.. இது ஆதித்யாவிற்கு தலைகுனிவாக இருக்கும் என்று வாதாடினாயாம்... பெரியவர்கள் சம்மதத் துடன் திருமணம் நடக்கவேண்டும் என்று சொன்னதாய் அவன் சொன்னதும்..."

"உங்களுடைய கோபத்தில் ஐம்பது சதவீதம் குறைந் திருக்கும்.. அப்படித்தானே..."

"ஊகும்... இன்னும் அதிகமாய்... கற்பகம் அத்தை என்னைக் கோபித்துக் கொண்டார் தெரியுமா..."

"அந்தப் பொண்ணு ஆரம்பித்திலேயே என்னிடம் எல்லா உண்மையையும் சொல்லிட்டாப்பா... அவள்



எதையும் மறைக்கவில்லை..." என்று சொல்லி நீ இந்த ஊருக்கு வந்த காரணத்தையும் விளக்கினார்... நிரஞ்சனும் தன் பங்குக்கு... வசுதா எத்தனையோ தடவை கூவி னாள்... நீங்கள் தேடிவந்த ஆள் இல்லைன்னு... நான்தான் வலுக்கட்டாயமாய் அவளை இழுத்து வந்தேன் என்று சொன்னான்... அப்போதுதான் ரோஹனின் விஷயத் தையும் சொன்னார் அத்தை... அவனது விஷயத்தில் நீ எப்படி தலையிட்டு சரி பண்ணி.. வழிக்குக் கொண்டு வந்தாய் என்றும் எடுத்துச் சொன்னார். எல்லாமே எனக்குத் தெரியாமல் நடந்திருக்கிறது..."

"தெரிந்திருந்தால் மட்டும் என்ன செய்திருப்பீர்கள் ஆதி... நீயார் இதில் தலையிட... வேலைக்காரி மாதிரி இரு.. உனக்கு என்ன உரிமை என்று கர்ஜித்திருப் பீர்கள்..." அவன் குரலை 'மிமிக்' செய்து அவள் சொல்ல...

"வேண்டாம் வசுதா.. அதையெல்லாம் ஞாபகப்படுத்தி என்னை வேதனைப்படுத்தாதே.. இப்போ இங்கு வந் திருக்கும் ஆதியே வேறு.. உன்னைப் புரிந்து கொண்டு உன்னிடம் மன்னிப்புக் கேட்டுச் செல்ல விரும்பும் ஆதியாக வந்திருக்கிறேன்.. எனக்கு இருக்கும் ஒரே வருத்தம்... என்னிடம் நீ யார் என்ற உண்மையை சொல்லியிருக்க லாமே என்பதுதான்..."

"என்னை நம்பியிருப்பீர்கள் என்பது என்ன நிச்சயம் ஆதி... அதான் காமாலைக்கண் என்று நீங்களே சொல்லி விட்டீர்களே... ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்பு கிறேன் ஆதி.. நான் யார் என்பதை மட்டும் மறைத்தேனே தவிர.. நான் பொய் சொல்லவேயில்லை. நான் அனாதை...

ஏழை என்றது நிஜம்.. உங்கள் வீட்டிற்கு நான் வந்த போது எனக்கு இந்த சொத்தெல்லாம் கிடையாது. அப்பாவும் இறந்து விட்டதால் நான் அனாதை தான்.. அப்புறம்.. கார் டிரைவிங் என்றால் எனக்கும் ஆசை என்றுதான் சொன்னேனே தவிர... கார் டிரைவிங் கற்றுக் கொள்ள ஆசை என்று சொல்லவில்லையே... நீங்களாக தப்பர்த்தம் செய்து கொண்டால் எப்படி.. நான் கூட நினைத்தேன்.. யாரையும் நம்பாத நீங்கள் எப்படி மல்லிகாவை நம்ப முடிந்தது என்று...''

''மல்லிகாவைப் பற்றிப் பேசவும் பிடிக்கவில்லை வசுதா... அவள் மனதில் அத்தனை குப்பை எண்ணங்களா என்று தோன்றுகிறது.. ரோஹன் ரிகார்டரில் பதிவானதைப் போட்டுக் காட்டியபோதுதான் நினைத்துக் கொண்டேன்... நல்லவளைப் போய் மோசக்காரி என்று எண்ணிய நான் ஒரு மோசக்காரியை நல்லவளாய் நினைத்தேனே... எத்தகைய மடையன் என்று.. உதயாவிற்கும் அது அதிர்ச்சிதான்.. எத்தகைய மோசவலையிலிருந்து தப்பித்தோம் என்று சொன்னாள்.. அண்ணா.. பார்த்தாயா... மல்லிகாவிற்கும் வசுதாவிற்கும் உள்ள வித்தியாசத்தை.. வசுதா. நம் குடும்பத்தை சேர்க்கப் பார்க்கிறாள்.. மல்லிகா நம்மை சிதைக்கப்பார்க்கிறாள்.. இப்போது புரிந்ததா... யார் நல்லவங்க.. யார் கெட்டவங்க என்று... எல்லோரும் புத்தி சொல்லும்படி ஆகிவிட்டது என் நிலைமை.. ம்ம்.. சொல்ல மறந்து விட்டேனே.. ரோஹன் உன்னிடம் சொல்லச் சொன்னான்... அவன் ஸ்கூலில் முதலாக வந்திருக்கிறானாம்... ஸ்டேட் ரேங்கில் நாலாவது இடம். உதயா சொல்லச் சொன்னாள்... நீ



இல்லாமல் அவர்கள் கல்யாணம் நடக்காதாம்... அப்புறம் ஆனந்த் வீட்டில் சொல்லியனுப்பி இருக்கிறார்கள்... நீ எப்போது வருகிறாயோ... அப்போது திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று... அதையும் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன்...''

''அவர்களுக்காக மட்டும் நான் வரவேண்டுமா ஆதி...'' என்று கேட்டாள் அவள்.

இல்லை என்று தலையசைத்தான் அவன்.

''நீ போன பின்பு எனக்குப் பைத்தியம் பிடித்த மாதிரி இருந்தது... வசுதா.. நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது என்று புரிந்தாலும் ஏதோ வரட்டு கோபம் என்னைத் தடுத்தது.. எல்லோரும் உன்னைப் பற்றி சொன்னதும் தான் என்னுடைய தப்பை உணர்ந்தேன்.. என்னைத் தேடி வந்த தேவதையை தொலைத்து விட்டேனே என்று என்னையே கடிந்து கொண்டேன். அப்போதே ஓடிவந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்... என் காதலைச் சொல்ல வேண்டும் என்ற துடிப்பு வந்தாலும்... உன் முகத்தில் எப்படி விழிப்பது என்ற தயக்கம் என்னைத் தடுத்து நிறுத்தியது வசுதா.. உதயாவின் பிடிவாதம் தான் என்னை இங்கே உந்தித் தள்ளியது. அதைச் சாக்காக வைத்து உன்னைப் பார்க்க வந்தேன்.. வசு... எனக்காகவும் நீ வரவேண்டும்... வருவாயா வசு...'' குரலில் தாபம் தெரிய வினவினான் ஆதி...

உடனே சரி என்று சொல்ல வேண்டும் என்று எழுந்த துடிப்பை கொஞ்சம் அடக்கிவிட்டு.. கேட்டாள்.

''அதுசரி ஆதி.. நான் உங்களை விரும்புகிறேனா என்று நீங்கள் கேட்கவில்லையே...''

அதைக் கேட்டதும் அவன் பேச்சிழந்தது போல இருந்தான்...

"அதைக் கேட்காமல்.. 'வரவேண்டும்' என்று சொன்னால் எப்படி... எதற்கும் ஒரு முறை இருக்கிறது இல்லையா..." என்றாள் வேண்டும் என்றே...

"சரி.. வசுதா... நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது தான்... நான் உன்னைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசிவிட்டேன்.. நான் தேடி வந்த வசுதாவே வேறு. என் குடும்பத்துடன் ஒன்றிய.. எல்லோரிடமும் அன்பைக் கொட்டிய வசுதா... என் மனதைக் கொள்ளைக் கொண்ட வசுதா... அந்த எளிமையான தேவதையைத் தேடி அழைத்துப் போகத்தான் நான் வந்தது. செல்வத்தில் புரளும் சீமாட்டி வசுதாவை அல்ல.. வருகிறேன்..."

"ஆதி நான் சொன்னதை..."

"குட் பை... வசுதா..."

அவன் செல்வதையே பார்த்து நின்றாள் வசுதா.

"மறுபடியும் அவசர புத்தியா ஆதி" என்று முணு முணுத்தாள்.. வருத்தத்துடன்.

## 24

ஆதித்யா சோபாவில் கண்களை மூடியவாறு சாய்ந்திருந்தான்... நீண்ட பயணத்தால் உடம்பு சோர்ந்து போயிருந்து... ஏமாற்றத்தில் மனம் துவண்டு விட்டது. மீண்டும் ண்டும் வசுதா சொன்ன வார்த்தைகள்.



'நான் உங்களை விரும்புகிறேனா என்று கேட்கவில்லையே.' அந்தக் கேள்வி அவனை சம்மட்டியாய் அறைந்தது.

என்னைக் காதலிக்கிறாள் என்று நினைத்தது பொய்யோ... இல்லை... செல்வத்தில் புரள ஆரம்பித்ததும் பழைய உணர்வுகள் மரத்துப் போய் விட்டதா.

ஊகூம்... அவளை வார்த்தைகளால் குதறிப் போட்டதற்கு இப்போது... இப்படிப் பழி வாங்குகிறாள் போலும்.

எப்படியெல்லாம் ஏசினேன்... பழித்தேன்... குற்றம் சாட்டினேன்... சே!

உடலில் உள்ள சக்தியெல்லாம் வடிந்து விட்டது போல தொய்ந்து போனான் ஆதி.

நிரஞ்சன் ஹாண்பவுச்சுடன் அங்கே வந்தான்... மெல்ல நடந்தவாறு... அண்ணனைப் பார்த்ததும் வியப்புடன் கேட்டான்...

"என்னண்ணா... எப்போ வந்தே... ஒண்ணும் சொல்லாமல் உட்கார்ந்திருக்கே..."

"ப்ச்சு... என்ன சொல்ல வேண்டும்..." சலிப்புடன் கேட்டான் அண்ணன்.

"வசுதாவைப் பார்த்தாயா... பேசினாயா... இங்கே வரும்படி அழைத்தாயா..."

"ம்..."

அந்த நேரத்தில் அங்கு வந்த ரோஹன்... உற்சாகத்துடன் "அண்ணா... வசுதா..." என்று ஆரம்பிக்க,

"ஷட் அப்... வசுதா வரவில்லை... வரமாட்டாள் போதுமா... இப்போ எல்லோரும் என்னைத் தனியே

விடுகிறீர்களா... லீவ் மீ அலோன்...'' என்று கத்தினான் ஆதி.

அந்தச் சத்தத்தைக் கேட்டதும் உதயா ஓடி வந்தாள்.

''என்னாச்சு...'' என்று ஜாடையில் கேட்டாள் உதயா...

நிரஞ்சன் சைகையில் சொன்னான். 'காதல் படுத்தும் பாடு!'

''ஓ.கே... அண்ணா ரெஸ்ட் எடுத்துக் கொள்ளட்டும். வாங்க... போகலாம்'' என்று சொன்னான் நிரஞ்சன்.

காதல் என்பது நோய் என்று சொன்னவர்கள் யாரோ... அவர் அதை அனுபவித்துவிட்டுத்தான் சொல்லியிருக்க வேண்டும்.

அது தேகத்தை மட்டுமா வாட்டி வதைக்கிறது... மனதையும் சேர்த்துத்தான்...

எத்தனை நேரம் அப்படிக் கிடந்தானோ தெரியாது.

''ஆதி... காலையில் சரியாக சாப்பிட்டிருக்க மாட்டே... வாப்பா... வந்து சாப்பிடு..'' என்று அழைத்தார் கற்பகம்.

''ப்ச்... எனக்கு எதுவும் வேண்டாம்...''

''அண்ணா... நீ சாப்பிட வருகிறாயா இல்லையா. பாவம் அத்தை... உனக்காக என்னென்னவோ செய்து வைத்திருக்காங்க... வந்து ஒரு பிடிபிடிப்பியா... இப்ப நீ சாப்பிட வரலைன்னா... நாங்களும் சாப்பிட மாட்டோம்... அத்தை... எங்களுக்கும் வேண்டாம்'' என்று கண்ணடித் தான் நிரஞ்சன்.



''அய்யோ... ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கே.. நீ சாப்பிட்டே ஆகணும் நிரஞ்சன்... ஆதியும் வருவான் பார்த்துக் கொண்டிரு...'' என்றாள் வேண்டும் என்றே...

எமோஷனல் பிளாக் மெயில் நன்றாக வேலை செய்தது..

டைனிங் டேபிள் அருகே வந்து அமர்ந்தான்.

மேஜையின் மீது பரப்பி வைத்திருந்த பதார்த்தங் களைப் பார்க்கையில் வசுதாவின் நினைவு.

இப்படித்தான் அழகாய்... ரசனையாய் வைத்திருப் பாள்... பார்க்கும் போதே சாப்பிடத் தோன்றும்.. உதயாவும் அதைக் கற்றுக் கொண்டு விட்டாள் போலும்.

சே... இப்பவும் அவள் ஞாபகம்... ஒவ்வொரு பதார்த்த மாய் எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடும்போது வசுதாவின் நினைவில் தத்தளித்தான். பிறந்த நாளுக்குச் செய்த அதே மெனு... அதே சுவை... அதே கைமணம்... வசுதாவே செய்தது போல பிரமை... என்ன பரிமாற அவள் தான் இல்லை.

ஆனால் இந்தப் பாயசம்... என்னவோ பேர் சொன் னாளே... பலாடாவா... இதை அவளால் தான் செய்ய முடி யும்... அதெப்படி... அத்தைக்கு.. அப்போதுதான் கவனித் தான்.

அந்தப் பாயசக் கிண்ணத்தின் கீழ் ஒரு பேப்பர்... மடித்த வாக்கில்...

அதை அவசரமாய் பிரித்துப் பார்த்தான்...

''ஹலோ ஆதி... பலாடா நன்றாக இருக்கிறதுதானே.

இப்படிக்கு உங்கள் எளிமையான தேவதை...''

அவ்வளவுதான்... சார்ஜ் பண்ணிய பாட்டரியைப் போல உடம்புக்குள் சக்தி ஓட... கையை உதறிக் கொண்டு எழுந்தான்....

சமையலறைக்குள் விரைந்து சென்றவனுக்கு மலைப்பு...

வசுதா புன்னகையுடன் நின்றிருந்தாள்... அவனது தேவதையாய்... சந்தன சுரிதாரில்...

'வசு' அவனது உதடுகள் அசைந்தன... ஆனால் சத்தம் வெளிவரவில்லை.

''நானே தான்...''

''எப்படி.. எப்படி அத்தனை சீக்கிரத்தில் வந்தே...''

''தேவதை பறந்துதானே வரும்... புஷ்பக விமானத்தில் வந்தேன்...'' என்று சொல்லிச் சிரித்தாள்.

''உண்மைதான் நான் சொல்வது... நீங்க காரில் வந்தீர்கள்... நான் ஆகாய மார்க்கத்தில்... அதாவது 'பிளேனில்' வந்தேன்... உங்களுக்கு முன் இருக்க வேண்டி...''

''அப்போ.. எல்லோருக்கும் தெரியும்... நீ இங்கிருப்பது... இதில் எல்லோரும் கூட்டாக்கும்...''

அவள் குறும்பாய்ச் சிரித்தாள்.. ''கொஞ்சம் தவிக்க விடலாம் என்ற எண்ணம்தான்...''

அவன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்.

''நீ சொன்னது...''



''எது... என் விருப்பத்தைக் கேட்கவில்லையே என்பதா.''

''ஆமாம்... அதைக் கேட்காதது உங்கள் தப்புதானே... கேட்டிருந்தால் என் பதிலை சொல்லியிருப்பேனே... 'ஐ லவ் யூ'' என்றாள்... நமுட்டுச் சிரிப்புடன் அவன் விழிப் பதைப் பார்த்து விட்டுச் சிரித்தாள்.

''உங்கள் வசுதாவைப் பற்றி இன்னும் புரிந்து கொள்ளவில்லையே... ஆதி... அவளுக்கு சொத்து சுகம் எதுவும் முக்கியமில்லை... குடும்பமும்... உறவுகளும் மட்டும்தான் தேவை... என் சொத்துக்களை தரும காரியங் களுக்கு எழுதி வைத்து விட்டேன்... இப்போ உங்கள் முன் நிற்பது சாதாரண... ஏழை வசுதா... உங்கள் அன்பு மட்டுமே போதும் என்று ஓடி வந்து விட்ட எளிய வசுதா... இப்போ ஏற்றுக் கொள்வீர்கள்தானே...'' என்றாள் ஆசை யாய்...

''என்னால் நம்ப முடியவில்லை வசு... என் வசுதா மறுபடியும் வந்து விட்டாள் என்பதை...'' தவிப்புடன் சொன்னான் ஆதி...

''இங்கிருந்து போகச் சொன்னாலும் இனிபோக மாட்டேன் தெரியுமா... இந்தக் குடும்பத்துடன் அந்த அளவு ஒன்றி விட்டேன்... தெரியுமா ஆதி... பாசத்தைப் பொழியும் அத்தை... அன்பைக் காட்டும் நிரஞ்சனும்... சோஹனும்... ஒட்டுதலாய் இருக்கும் உதயா... இது போதும் ஆதி...''

''ஒன்றை விட்டு விட்டாயே... காதலைக் காட்டும் கணவன் என்பதை...''

''அதுதான் சொல்லாமலே தெரியுமே... நாம் சேர்ந்து இருக்கப் போகிறோம் என்று நினைக்கிறபோதே சந்தோஷமா இருக்கிறது... எனக்குக் கூட்டுக் குடும்பம் என்றால் ரொம்பப் பிடிக்கும் ஆதி... நாம் எல்லோரும் எப்போதும் சேர்ந்தே இருக்க வேண்டும் ஆதி...''

''செய்யலாம் தான்... ஆனால்... அது ஹனிமூனுக்கு சரிப்படாதே வசு டியர்...'' என்று அவன் சொல்ல...

''ச்சீய்'' வெட்கத்தில் முகம் பட்டு ரோஜாவாய் மாறியது. அந்த அழகைப் பார்த்து சொக்கிய ஆதி அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவளது கன்னத்துடன் தன் கன்னத்தை இழைத்தவனை,

''வசு... வசு டார்லிங்'' என்றான் கிசுகிசுப்பாய்.

''ம்ம்...''

''இப்ப என்ன நினைக்கிறேன் என்று சொல்லு...''

''என்னவா... ம்ம்... இந்த 'எலக்ஷனில்' யார் ஆட்சிக்கு வருவார்கள் என்று...''

''இதுதானே வேண்டாம் என்பது...''

''ஓ! அதில்லையா... இந்த வருஷத்திலாவது பணவீக்கம் குறையுமா என்று நினைக்கிறீர்கள் அப்படித் தானே...'' என்று வேண்டும் என்றே சீண்டினாள்.

''அட தேவுடா...''

''பின்னே நீங்களே சொல்லி விடுங்களேன் ப்ளீஸ்...''



''இது கனவா... இல்லை நனவா என்று தெரியவில்லையே... ஒரே மயக்கமா இருக்கிறதே... இது எப்போது தெளியும் என்று...''

''கொஞ்சம் இருங்கள்... தெளிய வைக்கிறேன்'' என்று... அருகில் இருந்த 'பைப்' நீரைப் பிடித்து அவனது முகத்தில் தெளித்தாள். அவன் தன் அணைப்பை விலக்கி... 'ஏய்.. உன்னை...' என்று கூவியவாறு முகத்தைத் துடைத்துக் கொண்டு... அவளைப் பிடிக்க முயல... அவள் கலகலவென்று சிரித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தாள்.

அதற்காகவே காத்திருந்தது போல நிரஞ்சன்... டேபிளில் இருந்த பூத்த ரோஜாவை எடுத்து ''என் அருமை அண்ணிக்கு என் வாழ்த்துக்கள்.'' என்று அவளிடம் நீட்டினான்.

''தாங்க்யூ... என் மைத்துனரே... ப்யூட்டி ஃபுல் ரோஸ்'' என்றாள் களிப்போடு.

''எங்க அண்ணி மாதிரி'' என்றான் ரோஹன் குஷியுடன்.

''ஓகோ... இப்பவே அண்ணிக்கு ஐஸாக்கும்... ''எங்க அண்ணி ஒண்ணும் இந்த ஐஸுக்கெல்லாம் கரைந்திட மாட்டாங்கப்பா... அவங்க டாடா ஸ்ஃகு மாதிரியாக்கும். பாரேன். நம்ம அண்ணாவை கூட வளைச்சுட்டாங்க... இல்லையா அத்தை... ஆமாம்... இங்கே இருந்த அத்தை எங்கே... காணோம்...'' என்றாள் உதயா.

''ஆமாம் அத்தை எங்கே...'' என்று வசுதா விசாரிக்க...

"அம்மாடி! நான் இங்கே பஞ்சாங்கத்தைப் பார்த்துகிட்டு இருக்கேன்... சமீபத்தில் நல்ல முகூர்த்தம் ஏதாவது இருக்கான்னு..." என்றது எங்கிருந்தோ இருந்து அத்தையின் குரல்.

"அய்யோ... அத்தை... கொஞ்ச நாள் அண்ணியுடன் இருக்க விடுங்களேன்... எனக்கு உடனே திருமணம் செய்து அனுப்ப வேண்டாம்... ப்ளீஸ்" என்றாள் உதயா... கெஞ்சலுடன்.

"உனக்கு யார் பார்க்கிறார்கள்... நம்ம ஆதிக்கும் வசுதாவிற்கும் தான்... சீக்கிரமே பண்ணினால் தானே... உன் கல்யாணத்தை அண்ணியாய் இருந்து நடத்திக் கொடுக்க முடியும்... என்ன சொல்றே ஆதி..." என்று அத்தை எட்டிப் பார்த்துக் கேட்க...

பதிலே வரவில்லை... எப்படி வரும்... காதலுக்குரிய இலக்கணம்....

'அண்ணலும் நோக்கினான்... அவளும் நோக்கினாள்.'

அதைப் படித்துக் கொண்டிருந்தனர் ஆதித்யாவும் வசுதாவும்... மௌன மொழியில்!